# மூன்றாம் பிறைகள்

ஸ்டெல்லா புரூஸ்

**கலைஞன் பதிப்பகம்**
10, கண்ணதாசன் சாலை
தியாகராய நகர்
சென்னை-600 017

**Price Rs. 30**

Moonram Piraighal

by
Stella Bruce ©

First Edition : December 1989

Published by
Kalaignaan Pathipagam
10. Kannadhasan Salai
T.Nagar, Madras-600 017

Printed at,
Thamizhosai Achagam
84, Habibullah Road, T.Nagar,
Madras-17

7535

2796011

'மூன்றாம் பிறைகள்' ஸ்டெல்லா புரூஸின் நான்காவது நாவல்.

நேராக புத்தகமாக வெளிவருவது இதன் தனிச்சிறப்பாகும்.

இலக்கியம் நடுநிலை வகிக்கக் கூடுவதில்லை. ஆசிரியரின் பரிவும், பார்வையும் மூன்றாம் பிறையின் புதிய பரிணாமத்தைக் கொடுக்கிறது.

ஸ்டெல்லா புரூஸ் வாசகர் உலகில் பிரபலமானவர். இந்த நாவலைப் படித்த் பிறகு நண்பர்களுக்கு சிபார்சு செய்யுங்கள். ஏனெனில் இது நேராக புத்தக வடிவில் வெளிவருகிறது.

## ஆசிரியரின் பிற நூல்கள்

| | |
|---|---|
| காதல் கதையின் கடைசிப் பக்கம் | 10.50 |
| அது ஒரு நிலாக் காலம் | 20.00 |
| சூரியன் மிக அருகில் | 11.00 |
| வெகு தூரத்தில் மனம் | 18.00 |

7535
2796011

# மூன்றாம் பிறைகள்

இந்திய அரசாங்கத்தின் மிக முக்கியமான பிரமுகர் புதுடெல்லியில் காலமாகி விட்டார் என்ற செய்தி ஒளி வேகத்தில் வெடித்துச் சிதறிய சிதறலில் சென்னை நகரிலும் இயக்கங்கள் நிலை குலைந்து ஸ்தம்பித்தன. நெருப்பின் புகைமூட்டம் போன்ற வன்முறைக் கும்பல்கள் ஆங்காங்கு வீதிகளில் பரவியதில் பல நிறுவனங்களின் கண்ணாடிக் காட்சி அமைப்புகள் நொறுங்கி அழிந்தன. சாலைகளின் போக்குவரத்து வாகனங்கள் மூடக்கப்பட்டன. சில நாசம் செய்யப்பட்டன. சொந்த ஊர்திகளில் செல்வதுகூட பாதுகாப்பற்ற நிலையாக மாற்றப்பட்டிருந்தன. அச்சமும் நிச்சயமின்மையும் எங்கும் கலந்தன. பாரிமுனை அரண்மனைக்கார வீதியில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் தேவேந்திரன் நிலைமை கொஞ்சம் சீர் பெறுமாயென்று நடுப்பகல் வரைக்கும் காத்திருந்து பார்த்துவிட்டு; வீட்டுக்கு இனி நடந்தே செல்ல வேண்டியதுதான் என்ற தீர்மானத்திற்கு வந்தான். ஸ்கூட்டரை பூட்டி அலுவலக கட்டடத்தின் உள் வளாகத்திலேயே விட்டுவிட்டு வாசலில் நின்று வீதியின் இரண்டு பக்கமும் பார்த்தான். சிறு சிறு அணிகளாக பீதியுடன் அவரவர் குடியிருப்புகளை நோக்கிக் கிளம்பிக் கொண்டிருந்த ஆண்களின் பெண்களின் பின்னணியில் நகர வாழ்க்கையே பதுங்கிப் போயிருந்தது.

"என்னங்க தேவேந்திரன், வீட்டுக்குக் கிளம்பீட்டிங்களா?" பசுபதி உள்ளிருந்து ஓடி வந்து கேட்டான்.

"வேறென்ன பண்றது இங்கேயே இருந்து?"

"இதோ-இங்கேயே லாக் பண்ணி நிறுத்தி வச்சுட்டேன்."

"வீடு வரைக்கும் நடந்து போயிடுவீர்களா?"

"எப்படியாவது போய்த்தானே ஆகணும். நடக்க முடியலைன்னா உருண்டுக்கிட்டாவது போக வேண்டியது தான்..."

"அப்ப ஒரு நிமிஷம் இருக்கீங்களா-உள்ளே போய் சொல்லிவிட்டு நானும் வந்துடறேன்..."

"ஜல்தியா வரணும்."

"ஒரே நிமிஷம்."

பசுபதி உள்ளே ஓடினான். தேவேந்திரன் அலுவலக வாசலில் எரிச்சலுடன் காத்திருந்தான். அவனுடைய மனம் சஞ்சலித்துக் கொண்டே இருந்தது. வீட்டுத் தொலைபேசி நேற்றில் இருந்தே பழுதாகிப் போயிருந்தது. குழந்தைகள் பள்ளியில் இருந்து எப்படி வீடு திரும்பினார்களோ? சிறிது உடம்பு சரியில்லாமல் இருந்த செல்வராணி டாக்டரிடம் போனாளோ என்னவோ? சந்துருவிற்கு இன்று மாலை பெண் பார்க்கப் போகிற விஷயம் என்ன ஆயிற்றோ?

"போலாமா?" - பசுபதி வந்து விட்டான்.

"அங்கே பார்; அந்த ஸ்கூட்டர்காரர் வயசானவர். அவரைக்கூட கீழே இறங்கி தள்ளிட்டுப் போகச் சொல்றானுங்க..."



"இதையெல்லாம் கேக்கறதுக்குத்தான் ஆள் இல்லை."

"ஒருத்தன் செத்துடக்கூடாது. உடனே பஸ் ஓடாது ரயில் ஓடாது. ஸ்கூல் கிடையாது. ஆபிஸ் கிடையாது. மார்க்கெட் கிடையாது. ஹோட்டல் கிடையாது. ரெண்டு நாளைக்கு எவனும் வீட்டைவிட்டு நகரக்கூடாது... சே..."

"சரி; எப்படிங்க தேவேந்திரன் நடந்து போகலாம்?"

"எப்படியாவது நடய்யா..."

"எப்படி நடந்தாத்தான் என்னன்னு கேக்கறீங்களா?"

"பின்னே என்ன; ஸ்கூட்டரை விட்டுட்டு வீட்டுக்கு நடந்தே போடான்னு சொன்னா என்ன அர்த்தம்... நெனைச்சாலே வயிறு எரியுது..."

"ரொம்பத்தான் மூட் அவுட்டாகி இருக்கீங்க..."

"என் ஸ்கூட்டரை நான் ஓட்டிட்டு போகக் கூடாதுன்னு சொன்னா-மூடு அவுட் ஆகாமே என்னய்யா செய்யும்?"

"ஒண்ணு செஞ்சிருக்கலாம் நீங்க செத்த தலைவரோட படத்தை ஸ்கூட்டர்ல மாட்டி; அதுக்கு ஒரு மாலையை போட்டுட்டு கிளம்பியிருந்தீங்கன்னா-பசங்க விட்டுருப்பாங்க... நாலைஞ்சு பேர் அந்த மாதிரி மாட்டிட்டு ரொம்ப ஈஸியா போயிட்டாங்க..."

"ஆமா-எனக்கென்ன தலையெழுத்தா; கண்டவன் படத்தையும் மாட்டிட்டுப் போறதுக்கு...?"

"ரெண்டு நாளைக்கு டி.வி. காரன்; ரேடியோகாரன் வேற அழுது கழுத்தை அறுப்பானுங்க..."

''சும்மாவே அவனுங்க கழுத்தை அறுக்கிற வனுங்க...!''

''எவனாவது செத்தா இந்த மாதிரி ஆர்ப்பாட்டம் பண்றது வேற எந்தத் தேசத்திலும் கிடையாது பசுபதி. இன்னும் நாம் அந்தக் காட்டுமிராண்டித் தனமான நிலையில் இருந்து இம்மிகூட முன்னேறலை...''

''மெதுவா பேசுங்க தேவேந்திரன். காதில் விழுந்து எவனாவது வந்து சைக்கில் செயினால ஒரு வாங்கு வாங்கிடப் போறான்...''

''வாங்கினா வாங்கிட்டு போறான் போ....''

''வாங்கினா வாங்கிட்டுப் போறானா... எனக்கு ஒண்ணும் கிடையாதுங்க தேவேந்திரன்,..கட்டை பிரம்மச்சாரி. நான் செத்தா தூக்கிப் போடறதுக்குக்கூட ஆள் கிடையாது. நீங்க பாவம் பிள்ளைகுட்டிக்காரர். யாரோ ஒருத்தர் செத்ததுக்கு-அநியாயமா உங்களுக்கு ஏதாவது ஆச்சுன்னா...?''

''அப்படி ஏதாவது ஆச்சுன்னாகூட தேவலை பசுபதி. நெனைச்சா-சனியன் ஏண்டா பிறந்தோம்னு இருக்கு...''.

''ஹூம்; நீங்களே இப்படி சொன்னா நாங்கள்ளாம் எங்கே போறது?''

''அட போய்யா... உனக்கென்ன தெரியும் நான் படற பாடு...''

''அப்ப வாழ்க்கையில யாருமே பரிபூர்ண சந்தோஷமா இருக்கவே முடியாதா?''

''ஏன் இருக்க முடியாது...? தாராளமா இருக்கலாம். ஆனா அப்படி இருக்கிறதுக்குத்தான் யாரும் யாரையும் விடறது கிடையாது. இன்னிக்கி எங்க அப்பா



செத்துட்டார்னா அதுக்கு நான் அழறது நியாயம். நீயும் சேர்ந்து என்கூட அழணும்னு சொன்னா-அது நியாயமா; நீயே சொல்லு...''

''அதெப்படி?''

''இப்ப அப்பிடித்தானே நடக்குது...''யாரோ ஒத்தர் செத்துட்டார் என்கிறதுக்காக நான் என்னோட சொந்த ஸ்கூட்டரையே விட்டுட்டு நடந்து போகணும்னு சொன்னா - போலீஸ் என்னத்துக்கு இருக்கு? கவர்ன்மெண்ட்னு ஒண்ணு என்னத்துக்கு இருக்கு?''

''இப்படி ஃபோர்ட் ஸ்டேஷன் வரைக்கும் போய்-அப்படியே நேரா நடந்துரலாமா?''

''எப்படியாவது போலாம்னுதான் அப்பவே சொல்லிட்டேனே பசுபதி; என்னத்துக்கு அப்புறம் திருப்பித் திருப்பிக் கேக்கறே...?''

''ஸாரிங்க...''

சிறிது நேரம் தேவேந்திரன் மௌனமாக நடந்தான். நடந்தே பழக்கமில்லாததால் வியர்த்துக் கொட்டியது. வாய்க்குள்ளேயே என்னவோ முணங்கிக் கொண்டான். வாகனங்கள் அற்ற சாலைகளின் சந்திப்புகள் வெறிச்சோடிக் கிடந்தன.

''இந்தத் தை மாதம் தனிக்குடித்தனம் போனாலும் போயிடுவேன்னு சொல்லிட்டு இருந்தீங்களே தேவேந்திரன் - என்ன ஆச்சு அது?'' பசுபதி நினைவு வந்து கேட்டான்.

''அநேகமா அது நடக்காதுன்னுதான் நினைக்கிறேன்.''

''ஏன்; பத்து நாளைக்கு முன்னாடி கூட சொல்லிட்டு இருந்தீங்களே...?''

"பத்து நாளைக்கு முன்னாடி அப்படித்தான் நினைச்சிட்டு இருந்தேன்..." தேவேந்திரன் கொஞ்சம் இழுத்தபடியே சொன்னான்.

"உங்க அப்பா அதுக்கு ஒத்துக்கலையா?"

"இல்லை இல்லை...விஷயம் எங்க அப்பா வரைக்கும் போறதுக்கான டெவலப்மெண்ட்டே ஆகலையே..."

"அப்படியா?"

"என் ரெண்டாவது தம்பி சந்துரு இருக்கானே-அவனோட கல்யாணத்துக்கு எங்க வீட்ல பெண் பாக்கிறாங்க..."

"அன்னிக்கே சொன்னீங்க..."

"அவனுக்குக் கல்யாணமரியிட்டா நாங்க இப்ப எல்லோருமா சேர்ந்து இருக்திறதுக்கு எங்களோட இந்த வீடு கொஞ்சம் இடம் போதாது.".

"வீடு-உங்க சொந்த வீடுதானே?"

"சொந்த வீடுதான். அதுக்காக இடம் போதா விட்டாலும் அங்கேயே அடைஞ்சு கிடக்கனும்னு சட்டமா?'

"அப்படி யார் சொல்ல முடியும்?"

"அதனால எங்க சந்துருவுக்குக் கல்யாணம் முடிஞ்சதும்; அதுதான் சாக்குன்னு சொல்லிட்டு தனிக் குடித்தனம் போயிடலாம்னு நானும் என் வொய்ப்பும் ப்ளான் போட்டோம். ஆனா எங்க ப்ளான் நடக்காது போல..."

"ஏன் சார்?"

"என் தம்பி சந்துருவுக்கு எங்களைவிட இன்னும் கொஞ்சம் வசதி அதிகமா இருக்கிற இடத்திலிருந்து ஒரு



பெண் வந்திருக்கு - ஒரு கண்டிஸனோடு..."

"என்ன கண்டிஸன்?"

"அந்தப் பெண்ணைப் பிடிச்சு; கல்யாணத்துக்குச் சம்மதம்னா என் தம்பி அவங்க வீட்டோட மாப்பிள்ளையா இருக்கறதுக்கு முதல்ல நாங்க சம்மதிக்கணுமாம். அதுக்குச் சம்மதம் இருந்தாத்தான் பெண் பார்க்கவே வரணுமாம்."

"அப்புறம் என்ன ஆச்சு?"

"இந்தக் கண்டிஸனுக்கு எங்க அப்பா ஒரு நாளும் ஒத்துக்க மாட்டார்னுதான் நெனைச்சோம்.

"அதானே - பயங்கரமான ஆளாச்சே உங்கப்பா..."

"அவரும் முதல்ல இந்த சம்பந்தமெல்லாம் நமக்குச் சரிப்படாதுன்னு ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டார். திடீர்னு என்ன நெனைச்சாரோ; ஒரு வாரம் யோசிச்சுப் பார்த்திட்டு மனுஷன் சரின்னு சொல்லி பல்டி அடிச்சிட்டார்..."

"ஆச்சர்யமா இருக்கு சார்!"

"எரிச்சலா இருக்கு எனக்கு. என்னவோ இவரே அந்த வீட்டோட மாப்பிள்ளையா போகப் போறாப் பலத்தான் பல்லைக் காட்டிக் காட்டி பேசிட்டிருக்கார்."

"அப்படி ஒரு வீட்டோட மாப்பிள்ளையா போய் இருக்கிறதுக்கு உங்க தம்பியும் சம்மதிச்சிட்டாரா?"

"ஒண்ணு சொல்றேன் பசுபதி. எங்க வீட்ல ஒரு விஷயத்தைப் பத்தி எங்க அப்பா ஒரு அபிப்பிராயம் சொல்லியாச்சுன்னா அதுக்கு அப்பீலே கிடையாது."

"இல்லையே. வாழப் போறது உங்க தம்பியாச்சே..."

"நீ ஒண்ணு. விஷயம் புரியாத ஆளா இருக்கே. பெரிய பணக்காரனோட வீட்டுக்கு வீட்டோட மாப்பிள்ளையா போய் இருக்கிறதுக்கு கசக்குமாக்கும்? எனக்கும் அப்படி ஒரு சான்ஸ் அத்தக் காலத்தில் வந்திருந்தா நானும்தான் சரின்னு சொல்லியிருப்பேன்..."

"அந்தப் பொண்ணைப் போய் பார்த்துட்டு வந்துட்டாங்களா?"

"இன்னிக்கி ஈவினிங் நாலு மணிக்கு அந்தப் பொண்ணைப் போய் பாக்கறதா ப்ளான். இந்த நிலைமையில் போய் பார்ப்பாங்களோ இல்லையோ...தெரியலை."

"அதான் உலகப் பெரியவர் போயிட்டாரே... பெண்ணைப் பார்க்க முடியுமா; இல்லை பிள்ளையைப் பார்க்கப் போகத்தான் முடியுமா?"

"பார்; எவனோ ஒரு தனிநபர் சாகிறது எத்தனை தனி நபரோட வீட்டில் எத்தனை விதமான பாதிப்புகளைக் குடுக்கறதுன்னு..."

"அதைச் சொல்லுங்க. ஒரு தனிநபர் சுதந்திரத்துக்கு சட்டம் இங்கே என்ன பாதுகாப்புத் தருதுன்னு?"

"இந்தப் பெண்ணே பிடிச்சு; கல்யாணம் முடிஞ்சாச்சுன்னா என் தம்பி சந்துரு மாமனார் வீட்டோட போய் இருந்துடுவான். அப்புறம் நான் எந்தச் சாக்கை வச்சுக்கிட்டு தனிக்குடித்தனம் போக முடியும் சொல்லு இந்த எரிச்சல்ல ஏற்கனவே ரெண்டுநாளா எனக்கு மூடு அவுட். இந்த லட்சணத்ல வீட்டுக்கு நடந்து வேற போடான்னு சொன்னா- எவனுக்குத்தான் ஆத்திரம் வராது..."

"நான் கேக்கறேன்னு தப்பா எடுத்துக்காதீங்க தேவேந்திரன். தெரியாமேதான் கேக்கறேன். பெத்த...



அப்பா அம்மாகூட ஜாயிண்ட் ஃபேமிலியா இருக்கிறது அப்படியொரு பெரிய கஷ்டமா?"

"கல்யாணம் பண்ணிக்காத பிரம்மச்சாரியா இருக்கிறதாலே உனக்குத் தெரியலை பசுபதி. அது யாராக இருந்தாலும் சரி; கல்யாணமாகாமே இருக்கிற வரைக்கும் தான்-அப்பாவும் அம்மாவும். கல்யாணம் ஆயாச்சுன்னா அடுத்த நிமிஷமே மனசு மாறிப் போயிடுது..."

"அப்படியா சொல்றீங்க?"

"இந்த அம்மாக்களையாவது ஒரு வகையில் சேர்த்துக்கலாம். ஆனா அப்பாக்கள் இருக்காளுங்களே- அவனுங்களை எந்த வகையிலும் சேர்த்துக்க முடியாது. யம்மா- வயசாக வயசாக அவனுங்க பண்ற அக்ரமம் இருக்கு பார்- அதை வால்யூம் வால்யூமா எழுதலாம்... அவ்வளவு அக்ரமம் இருக்கு! அதுவும் வயசான காலத்தில் தன் பெண்டாட்டிகளை அவனுங்க படுத்தற பாடு இருக்கே- அதை எழுத உட்கார்ந்தா லேசில் முடியாது. அதுபாட்டுக்கு அனுமார் வால்மாதிரி நீண்டுக்கிட்டே போகும்."

"டி.வி.யில் காட்டினா- ஒரு வருஷத்துக்குக் காட்டலாம்னு சொல்கிறீங்க?"

"நீ ஒண்ணு...! ஏழெட்டு வருஷம் காட்டலாம்..."

"பாருங்க தேவேந்திரன்; பேசிட்டே நடந்ததில் நடந்த மாதிரியே தெரியலை. அதுக்குள்ளே அண்ணா ஸ்கொயர் வந்துட்டோம்..."

"உனக்கென்னப்பா, ஆல் இண்டியா ரேடியோ தாண்டினா கட் பண்ணிப் போயிடுவே... நான் அப்புறம் [illegible] நடக்கணுமே..."

"மந்தைவெளியில் செயின்ட் மேரி ரோடுதானே- உங்க வீடு?"

"ஆமா..."

"அப்ப நானும் உங்க வீடு வரைக்கும் வந்துட்டுத் திரும்பட்டுமா?"

"வேணாம் வேணாம். நானே போயிடுவேன்...பார்; எப்படி எனக்கு வேர்த்துக் கொட்டுதுன்னு..."

"அப்ப ஒன்னு செய்யலாமாங்க தேவேந்திரன்?"

"என்ன?"

"ஒரு பதினைஞ்சு நிமிஷம் பீச்ல உக்காந்து ரெஸ்ட் எடுத்துக்கிட்டு அப்புறமா நடக்கலாம்!"

"வெயிலா இருக்கே பசுபதி..."

"அந்தப் புல்வெளியில் நல்ல மரத்தடியா பார்த்து உக்காந்துப்போம்..."

"அப்படியா சொல்றே?"-தேவேந்திரன் இரட்டை மனத்துடன் கேட்டான்.

"யோசிக்காமே வாங்க. கொஞ்ச நேரம் உக்கார லாம்!"

"சரி வா. வீட்ல போயும் என்ன பண்ணப் போறோம்?"

இருவரும் போய் சிறிய மரத்தின் கீழ் உட்கார்ந்தார்கள். புல்பரப்பு இதமாக இருந்தது. கைகளை தலையின் பின்புறம் பின்னியபடி தேவேந்திரன் கால்களை நீட்டிப் படுத்தான். அப்பாடா என்றிருந்தது. கடற்புரத்தில் இருந்து மெல்லிய காற்று வந்து கொண்டிருந்தது. நீண்ட கடற்கரைச் சாலை வாகனக் குறுக்கீடுகள் இன்றி மந்தகாசமான சித்திரம் போல் காட்சி அளித்தது.



மந்தைவெளி செயின்ட் மேரி தெருவில் இருக்கும் தன்னுடைய வீட்டில் தேவேந்திரன் நுழைந்தபோது மணி நான்கு இருபதாகி இருந்தது. ஹாலில் விளையாடிக் கொண்டிருந்த அவனின் மகனும் மகளும், 'அப்பா வந்தாச்சு அப்பா வந்தாச்சு' என்று உரக்கக் கத்தியபடி அவனை நோக்கி ஓடி வந்தார்கள். மறு விநாடியே ஹாலில் தேவேந்திரனின் மனைவி செல்வராணியும் தோன்றினாள்.

"அப்பா அப்பா, நாங்கள்ளாம் டி.வி.யில் பாக்யராஜ் பார்த்தோமே..."

"ரஜினிகூட காட்டினாங்கப்பா..."

"என்னங்க- ஸ்கூட்டர் இல்லாமே இப்படி நடந்து வர்றீங்க?

"ஹூம்; ஸ்கூட்டரை காயலான் கடையில போட்டுட்டேன். அதனாலே நடந்து வரேன். இவ ஒருத்தி..."

"இல்லையே. உங்க தம்பிங்க ரெண்டு பேரும் அவங்க அவங்க ஸ்கூட்டர்ல அப்போவே வந்துட்டாங் களே... அதனாலே கேட்டேன்..."

"அவனுங்க வருவானுங்க. பக்கத்ல ஆபிஸ். எங்க பேரிஸ் கார்னர் ஏரியான்னா சும்மான்னு நெனைச்சியா- வார் நடந்த இடம் மாதிரி இருக்கு போய் பாரு..."

"டி.வி.யிலதான் பாத்தோமே..."

"அதுசரி; வீட்ல எங்கே யாரையும் காணோம்?"

"அந்த இந்திரா நகர் பொண்ணைப் பாக்கறதுக்கு பத்து நிமிஷம் முன்னாடிதான் கிளம்பிப் போனாங்க..."

''ஹூம்; அடாது மழை பெஞ்சாலும் விடாது போயிடுங்கள் போலிருக்கு! ஒரு பொண்ணைப் பாக்கிறதுக்கு இப்படி எல்லா சனியன்களுமா போகணும்?''

''உங்க முதல் தம்பியும் குழந்தையும் போகலை. குழந்தையை அழைச்சுக்கிட்டு அவர் அடுத்த தெரு ப்ரண்ட் வீட்டுக்குப் போயிருக்கார். ரேவதி மட்டும் அவங்ககூட இந்திரா நகர் போயிருக்கா...''

தேவேந்திரன் களைப்புடன் சோபாவில் சாய்ந்து உட்கார்ந்தான். தொலைக்காட்சிப் பெட்டியில் இறந்த பிரமுகரின் பூதவுடலைக் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

''ராணி; முதல்ல அந்த டி.வி. சனியனை ஆஃப் பண்ணித் தொலை. தலைவலி· எனக்கு மண்டையைப் பிளக்குது...''

செல்வராணி போய் தொலைக்காட்சி இயக்கத்தை அணைத்தாள்.

''சூடா காப்பி கொண்டு வந்து தரட்டுமே?''

''இரு இரு· ஒரு பத்து நிமிஷம் போகட்டும். நடந்து வந்தது பயங்கர டயர்டா இருக்கு.''

''அவ்வளவு தூரம் எப்படிங்க நடந்து வந்தீங்க?''

''உனக்கு ஜுரம் எப்படி இருக்கு?''

''நல்லவேளை - அப்பவே விட்டுருச்சி.''

''பசங்க எப்படி ஸ்கூல்ல இருந்து வந்தாங்க?''

''நான்தான் உடனே ரிக்ஷா வச்சு அழைச்சிட்டு வந்துட்டேன்...''

''டெலிபோனை சரி பண்றதுக்கு யாரும் வரலையே?''

''இன்னிக்கி எப்படி வருவான்?''



''இல்லாட்டி வந்துருவான்! இவனுங்களை நம்பி போன் வச்சுக்கறதுக்கு சும்மா இருந்துட்டுப் போகலாம். அதுசரி; எப்படி இதுகள் இந்தக் கலாட்டாவிலும் அந்தப் பெண்ணைப் பாக்கறதுக்குக் கிளம்பிப் போயிடுச்சுகள்... சொல்லி வைத்திருந்த அந்த டாக்ஸிக் காரனும்தான் எப்படி தைரியமா வண்டியை எடுத்திட்டு வந்தான்...?''

''அந்த டாக்ஸிக்காரனெல்லாம் வரலை. சிந்தாதிரிப் பேட்டையில் இருந்து அவன் எப்படி வருவான்? பெண் வீட்டுக் காரங்களே அவங்களோட காரை அனுப்பிட்டாங்க...''

''அடேங்கப்பா; அவங்களோட காரையே அனுப்பற அளவுக்கு வந்திருச்சா?''

-தேவேந்திரன் சில விநாடிகளுக்கு மௌனமாகி விட்டான். அவனுக்குள் பொறாமை தீ பற்றி எரிந்தது.

''கார் வந்ததும் உங்க அப்பாவோட முகத்தைப் பார்க்கணுமே ... ஓடிப்போய் முதல் ஆளா அவர்தான் ஏறி உட்கார்ந்துக்கிட்டார்...''

''அவரை விடு. அந்த வெட்கங் கெட்டவன்களைச் சொல்லு. எம்.பி.ஏ. மாப்பிள்ளைன்னதும் பெண்ணைப் பாக்கறதுக்கே காரை அனுப்பி வைக்கிறானுங்க பார். நல்லவேளை; பொண்ணையே இங்கே அனுப்பி வைக்காமே இருந்தானுங்களே...! ஆனா ஒண்ணு மட்டும் உறுதி ராணி; நானும் என் அனுபத்தில் பார்த்துட்டேன்- இந்த மாதிரி மாமனார் வீட்டோட போய் இருக் இருக்கிற பசங்க எவனும் வாழ்க்கையில் சந்தோஷமா இருந்ததா சரித்திரமே கிடையாது. என்ன சொல்றே?''

''நாம் சொன்னா இந்த வீட்டில யார் மதிச்சுக் கேக்கறா? உங்கப்பாவுக்கு ரெண்டாவது மகனும் மூனாவது மகனும்தான் உசத்தி. நமக்குத்தான் இந்த வீட்ல

மரியாதை இல்லையேன்னு தனிக்குடித்தனம் என்கிற பேர்ல ஒதுங்கிக்கலாம்னு பார்த்தாலும் முடியுதா? அதுவும் முடியலை. பெரியவர் உசிரோட இருக்கறப்ப ஒரு பிள்ளை மட்டும் தனியா போயிடறது குடும்பத்துக்கு பெரிய கௌரவ குறைச்சலாம்...'' சமயம் கிடைத்து செல்வராணியும் பொங்கிக் கொண்டாள்.

''பெரிய கௌரவ குறைச்சல். ஜாயிண்ட் பேமிலியா ஒரே வீட்ல எல்லாரும் ஒண்ணா வாழ்றோம்ங்கிற பிக்ச்சரைக் காட்டிக்கிட்டு; மனசுக்குள் இப்படி ஒருத்தருக்கு ஒருத்தர் பிடிக்காமே ஒருத்தரை ஒருத்தர் வெறுத்துக்கிட்டு வாழ்றதில் மட்டும் கௌரவ குறைச்சல் இல்லை போலிருக்கு. அது சரி ராணி; இந்தப் பொண்ணே முடிவாகி கல்யாணமும் ஆகி சந்துரு அவங்களோட வீட்டுக்குப் போயாச்சுன்னா அப்புறம் மாதா மாதம் அவனோட சம்பளப் பணம் யார் வீட்டுக்குப் போகும்?''

''என்னைக் கேட்டா...? உங்க அப்பா வந்ததும் அவரையே கேளுங்க. சும்மா வாயை மூடிட்டு இருந்துடாதீங்க... முதல்லேயே எல்லாத்தையும் கட் அண்ட் ரைட்டா பேசிடணும்.''

''ஆமா; அப்படி கட் அண்ட் ரைட்டாத்தான் எங்கப்பாகிட்டே பேசித் தொலைய முடியாதே... அதானே ப்ராப்ளம். பெரிய சர்வாதிகாரி மாதிரி அவரா ஒரு முடிவு பண்ணி 'டிக்ளேர்' பண்ணிச் சொல்லிடுவார். அதை எல்லாரும் கையைக் கட்டி நின்னு சரி சாமின்னு கேட்டுக்கணும். ஒருத்தரும் வாயைத் திறந்து அவரை எதிர்த்து ஒரு வார்த்தை சொல்லிட முடியாது. சே... இந்த மனுஷனுக்குப் பேர் அப்பா! இந்த இடத்துக்குப் பேர் தான் வீடு! சனியன்கள்... நம்ம வீடு மட்டும்தான் இப்படி இருக்கோ; இல்லை எல்லா பயல்களோட வீடுமே இப்படித்தானோ...?''



ஆயாசத்துடன் தேவேந்திரன் சோபாவில் கால்களை நீட்டிப் படுத்துக் கொண்டான். மறுபடியும் மறுபடியும் அவனுடைய மனத்தில் சந்துருவின் இந்தப் பெண் பார்க்கப் போயிருக்கிற விஷயமே சுழன்று கொண்டிருந்தது. பெண் வீட்டார் அவர்களின் செல்வத் தகுதியை காட்டி தூண்டில் போடுகிறார்கள். திருமண ஒப்பந்தங்கள் இந்த அடிப்படைகளில்தான் எழுதப்படுகின்றன. இது ஒரு பண்டமாற்றம். பண்டங்கள் பழகிப் போனதும் வசீகரங்கள் காணாமல் போய் விடுகின்றன. தேவேந்திரன் வாட்ச்சில் மணி பார்த்தான். மணி சரியாக ஐந்து.

''கொஞ்சம் சீக்கிரமா வீட்டுக்கு வந்துட்டாலும் பொழுது போக மாட்டேன்கிறது. பெண் பார்க்கப் போனதுகள் இன்னும் பத்து நிமிடத்தில் வந்திடுங்களா ராணி?''

''அவ்வளவு சீக்கிரமா வந்திர முடியுமா? அவங்களோட கார்ல வேற போயிருக்காங்க. சிரிச்சி; பேசி; டிபன் பாப்பிட்டு; பெண்ணைப் பார்த்து...''

''எங்கம்மா பெண் பார்க்கப் போனாத்தான் லேசில் எழுந்து வரமாட்டாளே... நடக்கச் சொல்லி பார்ப்பா. பல்லைக் காட்டச் சொல்லி பார்ப்பா. சவுரி முடியா நிஜ முடியான்னு தெரிஞ்சுக்க ஜடையை வேற இழுத்துப் பார்ப்பா...! உன்னைப் பெண் பார்க்க வந்தப்ப இழுத்துப் பார்த்தாளே— ஞாபகமிருக்கா?''

''ஏன் இல்லாமே?''

''அப்புறம்- இதுக்கெல்லாம் மேல எங்கப்பா வேற இருக்கார். பணக்காரனுங்களைக் கண்டா அவருக்கு சாமியே வந்திடும்...! திறந்த வாயை மூட மறந்திருவார். நீ வேணா பார்- எட்டு மணியாகும் அதுகள் எல்லாம் வர்றதுக்கு... சரி சரி; சூடா காப்பி கொண்டா எனக்கு.

நான் கொஞ்சம் மறந்துட்டேன்னா நல்ல வேளையா போச்சுன்னு நீயும் பேசாமே இருந்திடுவே...!''

''ஆமாமா... ஒரு காப்பி போட்டுக் கொடுக்கறதில் தான் எனக்கு பிராணன் போயிடப் போகுது...! என்னை ஒரு வார்த்தை சொல்லாமே இருந்தாலும் உங்களுக்குப் பொழுது போகாது.''

சில நிமிடங்களில் செல்வராணி காப்பியுடன் வந்தாள். ''இந்த சூடு போதுமான்னு பாருங்க.''

தேவேந்திரன் ஒரு வாய் குடித்துப் பார்த்தான். சூடு போதுமானதாக இருந்தது. உறிந்து உறிந்து நிதானமாகக் குடித்தான்.

''அப்பாடா, இப்பத்தான் தெம்பே வந்தது. டெப்போவில் பால் வந்ததா ராணி?''

''இன்னிக்கு வந்திருச்சு. நாளைக்கு சாயந்தரம் வராதாம். சொல்லிட்டான்.''

''அதானே பார்த்தேன்.''

அப்போது பக்கத்துத் தெருவில் இருக்கும் நண்பரின் வீட்டுக்குப் போயிருந்த தேவேந்திரனின் முதல் தம்பி ரவீந்திரன் தன் மகள் வித்யாவுடன் திரும்பி வந்தான். வித்யா மட்டும் ஹாலில் விளையாட்டில் ஈடுபட ரவீந்திரன் மௌனமாகப் படியேறி மாடியில் இருக்கும் அவனுடைய அறைக்குப் போய் விட்டான். இரண்டு வருடங்களாக ரவீந்திரனும் தேவேந்திரனும் பேசிக் கொள்வதில்லை.

இரண்டு நிமிடங்கள் மௌனமாக இருந்த தேவேந்திரன் தாழ்ந்த குரலில் இகழ்வான தொனியில் சொன்னான்: ''கலைக்டர்! வந்ததும் ஃபைல் பாக்கிறதுக்கு மாடிக்குப் போயிட்டார்...! வெத்து வேட்டுப் பயல்...!'



''உஸ்... சும்மா கிடங்களேன். என்னத்துக்கு இப்ப வீண் வம்புக்குப் போறீங்க...?''

''வயிறு எரியுது எனக்கு. அண்ணன் தம்பியாம் அண்ணன் தம்பி... ஒரே வீட்ல வாழ்ந்துக்கிட்டு இப்படி ஒருத்தனுக்கு ஒருத்தன் பேசாமே இருக்கிற அசிங்கம் வேற எந்தப் பயல் வீட்டிலேயும் இருக்காது.''

''ஆமா, இவர் ஒவ்வொரு வீடா போய் பார்த்துட்டு வந்திட்டார். அண்ணன் தம்பிங்க லட்சணம் எல்லா வீட்டிலேயும் இப்படித்தான் இருக்கு...''

''நம்ப வீட்ல மாதிரி எவன் வீட்டிலேயும் இருக்காது.''

''அப்ப யார்கிட்டேயாவது போய் சொல்லி இதை கின்னெஸ் புஸ்தகத்ல போடச் சொல்லுங்க...!''

''உனக்கு கிண்டலா இருக்கு. மனசுக்குள்ளே நான் எவ்வளவு வேதனைப்பட்டுக்குட்டு இருக்கேன்னு உனக்கெங்கே தெரியப் போகுது...''

''தெரியாமே நான் ஒண்ணும் பேசலை. நீங்க சும்மா இதில் வேதனைப்பட்டு ஆகப்போறது எதுவும் கிடையாது. அதனாலதான் சொன்னேன்—பேசாமே கிடங்கன்னு...''

''பேசாமே இருந்தா சாகிற வரைக்கும் பேசாமலேயே இருந்திட வேண்டியதுதான்.''

''ஒண்ணும் ஆக முடியாத விஷயத்துக்குப் போய் வீணா பேசிப் பேசி ஏன் தொண்டைத் தண்ணியை வத்தடிச்சுக்கணும்?''

''அப்ப நாம தனிக் குடித்தனம் போறது என்கிறதும் இந்த ஜென்மத்தில் இல்லை; அப்படித்தானே?''—தேவேந்திரன் விரக்தியுடன் கேட்டான்.

"என்னைக் கேட்டா...? தைரியம் இருந்தா உங்க அப்பாவைப் போய் கேளுங்க..." அப்போது அவர்களின் வீட்டு வாசல் எதிரில் கருப்பு நிற அம்பாஸ்டர் கார் வந்து நின்றது. "பொண் பார்க்கப் போன கோஷ்டி வந்திருச்சு பார்..." என்று மெல்லிய குரலில் முணுமுணுத்த தேவேந்திரன் அவசரமாக சோபாவில் இருந்து எழுந்து அவனுடைய அறைக்குள் ஓடிப் போய் படுத்துக் கொண்டான். அத்தனை எரிச்சல்...!

.தேவேந்திரன் கட்டிலில் படுத்து போர்வையை வேறு கழுத்துவரை இழுத்துப் போர்த்திக் கொண்டான். கண்களை விரியத் திறந்தபடி அறைக்கு வெளியில் ஒலிக்கும் அரவங்களையும் குரல்களையும் உன்னிப்புடன் செவி மடுத்துக் கொண்டிருந்தான். கார் கிளம்பிச் செல்லும் சப்தம் கேட்டது.

"அண்ணா இன்னும் வரலையா அண்ணி?"—ஹாலில் சந்துருவின் குரல் தான் முதலில் கேட்டது.

"வந்துட்டாரே... நீங்கள்ளாம் போன பத்தாவது நிமிஷமே வந்துட்டார். ஸ்கூட்டரை ஆபிஸ்லேயே விட்டுட்டு பாவம் நடந்தே வந்திருக்கார். அதான் களைச்சுப் போய் நல்லா தூங்கறார்! எழுப்பி விடவா?"

"வேணாம் வேணாம். தூங்கட்டும்..."

"செல்வராணி,"

- தேவேந்திரனின் அப்பா மகாலிங்கத்தின் குரல் கேட்டது.

"ரவீந்திரன் எங்கேம்மா?"

அதானே; கிழவன் என்னிக்காவது நான் எங்கேன்னு கவலையோடு கேட்டிருப்பானா?

-தேவேந்திரன் கோபத்தில் பற்களைக் கடித்துக் கொண்டான்.



"மாடியில் இருக்கார் போலிருக்கு மாமா..."

'ரேவதி, விஷயத்தையெல்லாம் நீ போய் அவன் கிட்டே சொல்லிடும்மா...தேவேந்திரன் தூங்குறானாம்... நானும் கொஞ்ச நேரம் சாஞ்சுக்கிறேன். தலையைச் சுத்தற மாதிரி இருக்கு..."

மகாலிங்கம் அயர்வுடன் அவருடைய கேந்திர ஸ்தானமான ஈசிசேரில் போய் 'ராமா' என்று சாய்ந்து கொண்டார். சந்துரு அவனுடைய அறைக்குப் போய் விட்டான். ரேவதி தன் புருஷனைத் தேடி வேகமாகப் படியேறி மாடிக்குப் போனாள்.

"ராணி..."

"என்னங்க அத்தை."

'எனக்குக் குடிக்கிறதுக்குக் கொஞ்சம் தண்ணியும் ஒரு தலைகாணியும் எடுத்திட்டு வா. ஜுரம் கிரம் வரப் போகுதோ என்னவோ - உடம்பெல்லாம் அப்படி வலிச்சுத் தொலையுது." செல்வராணி மாமியாருக்கு டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். பின் ஒரு தலையணையையும் எடுத்து வந்து கொடுத்தாள். தேவேந்திரனின் அம்மா தண்ணீரை வாங்கிக் குடித்து திருப்தியுடன் ஏப்பம் விட்டாள்.

"யப்பா! சாப்பிட்டதெல்லாம் அப்படியே நெஞ்சுக் கூட்டுக்குள்ளேயே நிக்குது. எத்தினி அயிட்டம்; ஒண்ணா ரெண்டா...அத்தினியையும் சாப்பிடு சாப்பிடுனு சொன்னா- யாரால சாப்பிட முடியும்? இத்தினிக்கும் எல்லாம் நெய்யில் செஞ்சது..."

-அந்த அம்மாள் இதையெல்லாம் செல்வராணியிடம் நேரடியாகச் சொல்லாமல், தனக்குத்தானே பேசிக் கொள்கிற பாவனை செய்து கொண்டாலும்கூட இத்தனையையும் அவள் தெரிவிப்பது, அவளின் மூத்த மருமகள் செல்வராணியிடம்தான்...

உடனே ஈசிசேரில் சாய்ந்து கிடந்த மகாலிங்கம் எழுந்து உட்கார்ந்து சொன்னார்.

''ஆமா- இவங்க போடற சாப்பாட்டைப் பார்த்தா கல்யாணமான நாலே மாசத்ல நம்ம சந்துரு பெரிய பஞ்சு மூட்டை அளவுக்குக் குண்டடிச்சிடுவான் போலிருக்கே...''

அறைக்குள் இழுத்துப் போர்த்தியபடி ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த தேவேந்திரனுக்கு ஒரே நொடியில் விஷயம் புரிந்து விட்டது. 'ஓ... இந்தக் கோஷ்டிக்கு அந்த இந்திராநகர் பெண்ணைப் பிடித்துப் போய் விட்டது...'

## 2

சாந்தோம் நெடுஞ்சாலையில் 'கடல் வெளியைப் பார்த்து கட்டப் பட்டிருந்த நீல வர்ண வீட்டின் முன்புற மல்லிகைப் பந்தலின் கீழ் நின்று சந்துரு தணிந்த ஒலியில் குரல் கொடுத்தான்.

''சுஜா!''

''யெஸ் யெஸ்-கமிங்!''

உள்ளிலிருந்து அவனின் அலுவலக தோழி சுஜாத்தாவின் பதில் குரல் உடனே கேட்டது. காலணிகளை முன்புற தோட்டத்தில் விட்டுவிட்டு சந்துரு படியேறி நின்றான். சகோதரி குடும்பத்தினருடன் ஹாலில் தொலைக் காட்சி பார்த்துக் கொண்டிருந்த சுஜாதா எழுந்து வந்தாள்.

''குட் ஈவினிங் சுஜா!''

''ஹாய் சந்துரு-குட் ஈவினிங். ப்ளீஸ் கம்''

சந்துரு வீட்டிற்குள் நுழைந்தான்.

''என்ன சந்துரு- இன்னிக்கி நீ பெண்பார்க்கப் போனேயா இல்லையா?''



''போனோமே... போயிட்டு இப்பத்தான் வந்தோம். வீட்ல ஒரேடியா போரடிச்சது. அதான்- உன்கூடக் கொஞ்ச நேரம் பேசிட்டு இருந்திட்டுப் போலாமேன்னு வந்தேன்...''

சந்துருவின் முகபாவனையில் எதையோ அவன் பேச வேண்டுமென்று வந்திருப்பதை உடனே சுஜாதாவால் தெரிந்து கொள்ள முடிந்தது.

''ஒன்மினிட், அக்கா-சந்துரு என்னவோ என்கிட்டே பேசணும்னு வந்திருக்கான். ஸோ-நானும் அவனும் பின்னாடி தோட்டத்ல உட்கார்ந்து பேசிண்டு இருக்கப் போறோம். யாராவது வந்து என்னைக் கேட்டா நான் இல்லேன்னு சொல்லிடு... வா சந்துரு!''

சுஜாதாவும் சந்துருவும் பின்புற தோட்டத்தில் போய் உட்கார்ந்தார்கள்.

''ஹை! பின்னாடி இவ்வளவு செடிகளும் மரங்களும் இருக்கா?''- ஆச்சர்யத்துடன் சுற்றிலும் பார்த்தவாறே சந்துரு கேட்டான்.

''அப்போ நீ இதுவரைக்கும் இந்தப் பக்கம் வந்து பார்த்ததே கிடையாதா சத்துரு- ரியல்லி?''

''நான் எங்கே பார்த்தேன்?''

''மை குட்நெஸ்... எப்படி மறந்தேன் நான்? பார்- அந்த நெல்லிக்காய் மரமும் சப்போட்டா மரமும் நான் பார்த்து பார்த்து வளர்த்தது...''

''நெல்லிக்காய் மரத்தில் காய் நிறைய இருக்கும் போலிருக்கே?''

''பறிச்சித் தறேன்-சாப்பிடறியா?''

''அய்யய்யோ. வேணாம்மா?''

''ஸோ பெண் பார்த்துட்டு வந்துட்டியாக்கும்...எப்படி இருக்கா?''

''ஏதோ இருக்கா!''

''என்னய்யா-சுரத்தே இல்லாமலே சொல்றே?''

''வேற எப்படி சொல்லச் சொல்றே?''

''பொண்ணை உனக்குப் பிடிச்சிருக்கா இல்லையா?''

''வீட்ல பிடிச்சிருக்குன்னு சொல்லியாச்சி. அவ்வளவு தான்.''

''இந்த .மாதிரிப் பேச்சுத்தானே வேண்டாம்னு சொல்றேன்.''

''இல்லை சுஜா, நான் உண்மையைத்தான் சொல்றேன்.''

''அப்போ உன்னைப் பொறுத்த வரைக்கும் பொண்ணைப் பிடிக்கலை?''

சந்துரு மௌனமாக இருந்தான்

''ஏய், என்ன ஒண்ணுமே சொல்லாமே இருக்கே?''

''இல்லை சுஜா. எனக்கு அந்தப் பொண்ணைப் பிடிச்சிருக்கா இல்லையான்னே தெரியலை. ஆனா எனக்கு வேற வழி கிடையாது. அதனால் எங்கப்பா கிட்டே இந்தப் பொண்ணைப் புடிச்சிருக்குனு சொல்லிட்டேன்...''

''என்ன நீ. இப்படிப் பொறுப்பே இல்லாமே பேசறே...?''

''அதான் நான் சொன்னேனே சுஜா; எனக்கு வேற வழி தெரியலைன்னு...''

''கொஞ்சம் புரியறாப்பல பேசணும்...''

''அப்ப நான் சொல்றதையெல்லாம் நீ கொஞ்சம் திட்டாமே கேட்டுக்கணும்.''



''வம்புதான் சந்துரு நீ பணறே... நான் திட்டறேன் திட்டாமே போறேன்- அதைப்பத்தி உனக்கென்ன...? யூ டெல் மி மேன்...''

சந்துரு சிறிய பெருமூச்சுடன் ஆரம்பித்தான். ''சரி சொல்றேன். சொல்லக் கூடாது என்கிற மாதிரியான ரகசியம் எதுவும் கிடையாது. ஆனா, சொல்றதுக்குத் தான் எனக்கு போரடிக்குது!''

''பரவாயில்லை சொல்லு!''

''முதல் விஷயம், ரெண்டு வருஷமா எனக்குப் பெண் பார்த்துப் பார்த்து எங்க வீட்ல எல்லாரும் அலுத்துப் போயிட்டாங்க. குடும்பம் பிடிச்சா ஜாதகம் பொருந்தலை, ஜாதகம் பொருந்தினா பெண் பிடிக்கலை. இப்படியே எத்தனை பெண்ணைப் பார்த்துப் பார்த்து எரிச்சலா போச்சு தெரியுமா? வெள்ளையோ குள்ளமோ- ஏதாவது ஒரு பெண் முடிஞ்சா போதும் போதும்னு ஆயிடுச்சி, ஸோ, திடீர்னு இந்த இந்திரா நகர் பெண்ணோட ஜாதகம் பொருந்தினதும்; பிடிக்குதோ இல்லையோ- இந்தப் பொண்ணையே பேசி முடிச்சிட வேண்டியது தான் என்கிற நிலைமைக்கு வந்துட்டாங்க. ஆனா, இந்தச் சம்பந்தத்தில் எங்க அப்பாவுக்கு மட்டும் பெரிய பிரச்சினை வந்திருச்சி...''

''அதைத்தான் அன்னிக்கே சொன்னியே-அப்படியெல்லாம் அவா வீட்டோட நீ மாப்பிள்ளையா போயிடறதுக்கு உங்கப்பா ஒருநாளும் சம்மதிக்கவே மாட்டார்னு...''

''இந்த மாதிரி சம்பந்தமெல்லாம் நமக்குச் சரிப் படாதுனு எடுத்த எடுப்பிலேயே தூக்கி எறிஞ்சிட்டார். அவரோட ஈகோவுக்கு இந்த மாதிரி கண்டிஷனெல்லாம் ஒத்தே வராது. ஆனா, என் மனசில் மட்டும்- ஒத்து வருமோ வராதோ; இந்தப் பொண்ணையே கல்யாணம்

பண்ணிக்கிட்டு வீட்டை விட்டு ஓடி வேண்டியதுதான்னு தோணிச்சிடு...''

''அப்படி ஏன் தோணித்து?''

''உனக்குத் தெரியாது சுஜா. எங்க அப்பாகூட வாழ்றதுக்கு மேலான இம்சை வேற எதுவும் இருக்காது. அவ்வளவு பயங்கரமான ஆள். பார்; இத்தனை வயசாச்சி, இன்னும் அந்தத் தான் என்கிற திமிர் துளிக்கூடப் போகலை. ஒரு வார்த்தை அவரை எதிர்த்து யாரா இருந்தாலும் பேசிட முடியாது. பேசவும் கூடாது. மனுசன் கண்ணை உருட்டி உருட்டியே நம் கழுத்தை அறுத்திடுவார் அறுத்து...!''

''அது சரி; இந்தச் சம்பந்தம் வேண்டாம்னு சொன்னாரே- அப்புறம் எப்படி சரி சொல்லிட்டார்...?''

''ஒரு வாரம் உக்காந்து எல்லா கணக்கையும் போட்டுப் பார்த்தார்... இந்தச் சம்பந்தத்தில் இருக்கிற மற்ற ப்ளஸ் பாயிண்ட் எங்கப்பாவை ரொம்பவும் இம்ப்ரெஸ் பண்ணிடுச்சி...''

''ப்ளஸ் பாயிண்ட்ஸ் மீன்ஸ்?''

''அந்த மிஸ்டர். பெருமாள்சாமிக்கு...''

''இன்னிக்கு நீ போய் பார்த்துட்டு வந்திருக்கும் பெண்ணோட அப்பாவுக்கு...?''

''யெஸ்... அவருக்கு ரெண்டே பொண்ணுங்கதான். நான் போய் பார்த்திட்டு வந்தது - அவரோட பெரிய பொண். ஆம்பளைப் பசங்க கிடையாது அவருக்கு. அது மட்டும் இல்லாமே அந்த பெருமாள்சாமி இருக்காரே- அவர் ஒரு ஹார்ட் பேஷண்ட்...''



''மை காட்...! அதெல்லாம் கூடவா ப்ளஸ் பாயிண்ட்? நோ நோ. நீயா உங்கப்பா பத்தி நிறைய கற்பனை பண்ணிக்கிறேன்னு நெனைக்கிறேன்...''

''நோ நோ. எனக்குத் தெரியும் எங்க அப்பாவைப் பத்தி...பை ஹார்ட் - ராட்சசன் அவர். பெருமாள்சாமிக்கு வாடகை மட்டும் மாதம் எட்டாயிரம் ரூபா வருது... இதிலிருந்து அந்தச் சொத்துக்களோட மதிப்பு எவ்வளவு இருக்கும்னு நீயா கணக்குப் போட்டு பார்த்துக்க. அதுக்கு மேலே அங்கங்கே நிறைய டெபாசிட்ஸ் வேற இருக்கு. ஆண் வாரிசு கிடையாது. மூணு வருஷத்துக்கு முன்னாடி ஏற்கனவே ஒரு தடவை அட்டாக் வந்தவர்- பெருமாள்சாமி. -இந்த ப்ளஸ் பாயிண்ட்ஸ் அத்தனையும் கேல்குலேட்டர் வச்சி கணக்குப் போட்டுப் போட்டு பார்த்தார். அவ்வளவுதான்; ரைட்னு டபிள் விசில் குடுத்து, உடனே பெண் பார்க்க வரோம்னு தகவல் கொடுத்திட்டார்...''

''அட சரிதான் போ; இந்தக் கல்யாணத்தில் கிடைக்கிற பணம், அந்தஸ்து எல்லாத்தையும் நீதானே அனுபவிக்கப் போறே...''

''அப்படியில்லை சுஜா... இந்த பெருமாள்சாமிக்கு திடீர்னு எதிர்பாராமே ஏதாவது ஆச்சின்னா— எங்கப்பா அவரோட ஈசிசேரை தூக்கிகிட்டு உடனே இந்திரா நகர் வந்திடுவார்...''

''இருக்கலாம் சந்துரு. எப்படி இந்தச் சம்பந்தத்தில உங்கப்பாவுக்கு சில ப்ளஸ் பாயிண்ட்ஸ் இருக்கோ-அதே போல உனக்கும் ஒரு ப்ளஸ்பாயிண்ட் இருக்கு. அவ்வளவுதானே?''

''அதை நான் இல்லேன்னு சொல்லலையே... எனக்கும் எங்கப்பாகிட்ட இருந்து இப்போதைக்கு தப்பிக்கிறதுக்கு- இந்த அலையன்ஸை விட்டா வேற சான்ஸ் கிடையாது...''

"ஸோ-எப்படி அவர் ஒரு ஃபார்மாலிட்டிக்காக பெண்ணைப் பாக்கிறதுக்காகக் கிளம்பினாரோ அதே போல நீயும் ஒரு ஃபார்மாலிட்டிக்காக பெண்ணைப் பாக்கறதுக்குக் கிளம்பிட்டே... பொண்ணைப் பிடிச்சாலும் சரி சொல்லிட வேண்டியதுதான் என்கிற முடிவோட...?"

"யெஸ்!"

"கடைசியில் கல்யாணம் என்கிறதையே எவ்வளவு அசிங்கமாக கொச்சை பண்றே பார்."

"ப்ளீஸ்; அப்படியெல்லாம் சொல்லாத சுஜா' திருமணம், திருமண வாழ்க்கை- இதைப் பத்தியெல்லாம் உண்மையில் நான் எவ்வளவு கற்பனைகள், லட்சியங்கள் வச்சிருந்தேன் தெரியுமா? ஜாதி மதம் பார்க்காமே, ஏழை பணக்காரன் என்கிற வித்தியாசம் இல்லாமே, மனப்பூர்வமா ஒரு பெண்ணைச் சந்திச்சி லவ் பண்ணித்தான் மேரேஜ் பண்ணிக்கனும்னு என் காலேஜ் நாட்கள்ள எவ்வளவு தீவிரமா இருந்திருக்கேன் தெரியுமா? ஆனாலும் அந்த மாதிரி கல்யாணத்துக்கெல்லாம் உயிரே போனாலும் எங்கப்பா சம்மதிக்கவே மாட்டார்னுதான்- என்னோட அந்த லட்சியத்தையெல்லாம் மனசுக்குள்ளேயே எரிச்சிச் சாம்பலாக்கிக்கிட்டேன்...."

"இதெல்லாம் கையாலாகாதவன் பேசற பேச்சு சந்துரு... உன் அப்பாவுக்காக உன்னோட லட்சியத்தையெல்லாம் கை விட்டுட்டேன்னு சொல்லி பெரிய தியாகி மாதிரியெல்லாம் என்கிட்டே பேசாதே... அப்புறம் நான் ஏதாவது சொல்லிடப் போறேன்...!"

சில நிமிடங்களுக்கு இருவருமே நிசப்தமாக இருந்தார்கள். பின் சுஜாதா சொன்னாள்:

"உன்னை மாதிரி பாய்ஸ் எல்லாம் மனசுக்குள் இப்படி இருக்கிறது தெரிஞ்சுதான் பொண்கள் இந்தக் காலத்தில் கல்யாணம் பண்ணிக்கவே பயந்து சாகிறது



கள். இவருக்கு இவா அப்பாகிட்டே இருந்து இருந்து தப்பிச்சுக்கனுமாம்... அதுக்காக, பொண்ணைப் பிடிச்சிருக்கோ இல்லையோ- அவா வீட்டோட மாப்பிள்ளையா போயிடறதுனு முடிவு பண்ணிட்டாராம்... அப்போ உனக்கு உண்மையில் நீ போய் பாாத்துட்டு வந்த அந்தப் பெண்மேலே வேற எந்த கவனமோ தனிப்பட்ட கரிசனமோ கிடையாது. அப்படித் தானே...?"

சந்துரு கொஞ்சம் சலிப்புடன் சொன்னான்: "விஷயத்தை நீ உடனே ரொம்பவும் நெகட்டிவ்வா எடுத்துக்கறே சுஜா. என்னை என்ன மனுஷ உணர்ச்சியே இல்லாத கல்லு நெனச்சியா? ஒரு விஷயம் சொல்றேன்- கேட்டுக்க. எனக்கு எங்கப்பாவைக் கொஞ்சம்கூடப் பிடிக்காதுதான். ஆனாலும், அவரோடு வாழ்ந்திருக்கிற இந்த இருபத்தெட்டு வருஷத்ல அவரை எந்த விஷயத்திற்காகவும் கொஞ்சம்கூட அவமதிச்சது கிடையாது. ஒரு சொல் எதிர்த்துப் பேசினது கிடையாது. கடுகளவுகூட அவரோட மனசை விளையாட்டாகப் புண்படுத்தினது கிடையாது. மகன் என்கிற பேர்ல என் கடமைகள் எதையும் அவருக்கு நான் குறையில்லாமே செய்திருக்கேன்... அதே போலத்தான், இன்னிக்கிப் போய் பார்த்துட்டு வந்த பெண்ணை கல்யாணம் பண்ணிக்கிறது என்ன காரணத்தால் என்கிறது முழுக்க முழுக்க எனக்கு மட்டுமான அந்தரங்க விஷயம். அதுக்காக அந்தப் பெண்ணை எந்த விதத்திலும் அலட்சியப் படுத்த மாட்டேன். அவளை நேசிக்காம இருந்திடவும் மாட்டேன். ஐ வில் லவ்ஹர் வித்தவுட் எனி ரிசர்வேஷன்ஸ்... ஆனா, அதே சமயம் என்னோட ஐடியல் வுமன் ஆகவும்- அந்தப் பொண்ணு இருந்திட முடியாது... தட்ஸ் ஆல்..."

சந்துரு சற்று உணர்ச்சி வசப்பட்ட நிலைக்கு உயர்ந்து விட்டதைக் கண்டு சுஜாதா தோழமையோடும்

பரிவோடும் சட்டென அவனின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

"ஸாரி சந்துரு; உன் மனசை நான் புண்படுத் திட்டேன் போலிருக்கு..."

"இன்னிக்கி நேத்திக்கா புண்படுத்தறே...வேலையில் நான் ஜாய்ன் பண்ணின இந்த மூணு வருஷமா இதே வேலை தானே உனக்கு?"

உணர்வுகள் கொஞ்சம் தணிந்து ஓர் இளம் சிரிப் புடன் சொன்னான் சந்துரு.

"உடனே இப்படி சொல்லிடு. ராஸ்கல்யா நீ!"

"சரி. நான் ராஸ்கல். நீ?"

"உனக்கு எப்படிச் சொல்றதுக்கு இஷ்டமோ- அப் படியே சொல்லிக்க..."

"அதெல்லாம் இருக்கட்டும் சுஜா. உன் ஆளு ஏதாவது லெட்டர் போட்டானா?" -சந்துரு பேச்சை மாற்றினான்.

"பாலா தானே... நன்னா போடுவானே லெட்டர்? ராஸ்கல்-அங்கே உக்காந்துண்டு என்னதான் பண்ணு வானோ... கேட்டாக்கா, அந்த லிபியா தேசத்தையே இவன்தான் காப்பாத்தற மாதிரி கதையெல்லாம் விடு வான்..."

"பாலா இந்த வெகேஸன்ல வந்தா மேரேஜ்தானே?"

"பண்ணலேன்னா யார் விடறது அவனை...?"

"நீயும் பாலாவும் லிபியாவில் இருக்கும் போது ஒரு தடவை வரணும்."



"தாராளமா வா. யூ ஆர் வெல்கம்."

"அப்ப நான் வீட்டுக்குக் கிளம்பட்டுமா சுஜா?"

"ஸோ- இன்னிக்கிப் போய் பார்த்துட்டு வந்த பெண் தானா?"

"ஆமாமா. அதில் நோ சேன்ஞ்..."

"பொண் பிடிச்சிடுத்துனு அவாத்துக்கும் சொல்லி யாச்சா?"

"அவ்வளவு ஈஸியா சொல்லி அனுப்பிடுவாரா எங்கப்பா... நாலு தரம் அவங்களை அலைய வச்சித் தானே சொல்லுவார்..."

"ஆனா ஒரு விஷயம் சந்துரு.- இது போல வீட்டோட மாப்பிள்ளையா போற இடங்கள்ள எப்பவுமே அந்தப் பெண்களுக்குக் கொஞ்சம் அகம் பாவம் செருக்கு எல்லாம் இருக்கும். அதையும் நன்னா யோசிச்சுக்கோ... நீ ஒரு மாதிரியான ஸாஃப்ட்டான பையன்...!"

"அப்படி ஸாஃப்ட்டான பையனா இருக்கிற தாலேயே எதையும் என்னால சமாளிச்சுக்க முடியும்- ஐ திங்க் ஸோ..."

"முக்கியமான விஷயத்தைக் கேக்கறதுக்கு மறந் துட்டேன். பார், அந்தப் பொண் பேரென்ன?"

"அமுதாவாம். பேரே சரியில்லை, இல்லே?"

"போறும் போறும். உனக்கு இந்தப் பேர்!"

"சரி சுஜா' கெட்டிங் லேட். குட்நைட் சொல்லிக் கிறேன் நான்."

"நோ பாய்; இன்னிக்கி நைட் எங்காத்ல தோசை. நீயும் இருந்து தோசை சாப்பிட்ட அப்புறமா குட்நைட் சொல்லிக்க."

"ஒன் கண்டிசன்!"

"சொல்லு."

"தோசை நீயே வார்த்துத் தரதா இருந்தா சொல்லு, சாப்பிடறேன்..."

"நோ ப்ராப்ளம். ப்ளீஸ் கம்!"

"தென் ஒகே."

சுஜாதா வேகமாக உள்ளே விரைய சந்துருவும் அவளைப் பின் தொடர்ந்தான்.

## 3

ஹாலில் பெண்களும் குழந்தைகளும் கண்டு குதூகலித்துக் கொண்டிருக்க தொலைக் காட்சியில் நேற்று இறந்த பிரமுகரின் தகனக் காட்சிகள் காட்டப் பட்டுக் கொண்டிருந்தன. அந்தக் காட்சிகளில் ஆர்வம் இல்லாமல் சந்துரு அவனுடைய அறைக்குள் படுத்திருந்தான். மிக விலை உயர்ந்த ஸ்டீரியோ இசைத்தட்டுச் சாதனத்தில் ஓர் பரதநாட்டிய மாலைப் பொழுது என்ற இசைத்தட்டு சுழன்று கொண்டிருந்ததில் தத்ருபமான ஒலிக் கோர்வையில் வசந்தகுமாரியின் அலாரிப்பு ஆரம்பமாகியிருந்ததிலும் சந்துருவின் மனநிலை பதிந்திருக்கவில்லை. நேற்றும் போய் பார்த்துவிட்டு வந்திருந்த அமுதா என்ற பெண்ணின் முகத்தை ஞாபகத்திற்குள் கொண்டுவர முயற்சி செய்யச் செய்ய அந்த முகம் அவனின் நினைவுக் குறிப்பில் இருந்து அழிந்து கொண்டே இருந்தது. ஒரு முகம் தெரியாத பெண்ணைப் போய் மணக்கப் போகிற திகைப்பை இந்த நினைவுக் கலைவு சந்துருவில் ஏற்படுத்தியது. வாழ்க்கைக்கான துணையைத் தேடி தீர்மானிக்கிற பயணம் முடிந்து போய் விட்டதாயென்று நினைத்துப் பார்த்தபோது சிறிய அச்சம்கூட மனத்திற்குள் கவிந்தது. 'இந்த



அமுதாதானா என் மனைவி?'— அபூர்வமான பதிலைத் தொக்கியபடி இக்கேள்வி அவனுள் ஊசலாடியது இந்தப் பெண் வேண்டாம் என்று சொல்லி விடலாமாயென்று நினைத்துப்பார்த்தான். சொன்னால் அப்பாவும் அம்மாவும் ஆளுக்கொரு மூலையில் நின்று கத்துவார்கள். அவனுக்கு இனி தங்களால் பெண் பார்க்க முடியாது என்று பகைமை காட்டுவார்கள். அவன்பாடு அவனுடைய கல்யாணம்பாடுயென ஒதுங்கிக் கொள்ளப் போவதாக பயமுறுத்துவார்கள். ஏற்கனவே உள்ளுக்குள் உறவு கலகலத்துப் போயிருக்கிறது. ஒருவருக்கொருவர் பொய் முகங்களைக் காட்டியபடி உலவிக் கொண்டிருக்கிறார்கள்...சந்துரு பெருமூச்சு விட்டான். திருமணங்கள் இப்படித்தான் நிச்சயிக்கப்படும் போல் இருக்கிறது......

"நமஷ்காரம் அத்தான்"—ஹாலில் சந்துருவின் மாமா வெங்கடேசனின் குரல் உரக்கக் கேட்டது. படுத்திருந்த சந்துரு உடனே எழுந்து உட்கார்ந்தான். 'புரோக்கர் வந்துட்டார்' என முணங்கிக் கொண்டே ஸ்டீரியோ இயக்கத்தை அணைத்துவிட்டு ஹாலில் என்ன பேச்சு நடக்கிறது யென்பதை கூர்மையாகக் கவனிக்கத் துவங்கினான்.

"ஈசிசேரில் சாய்ந்து கண்களை மூடியிருந்த மகாலிங்கம், வலது புறங்கையை நெற்றியில் குறுக்காக வைத்து கண்களை இடுக்கியவாறு, "யாரது?" என்று கேட்டு பார்வையே அற்றவர் போலப் பாசாங்கு செய்தார். இவர்தான் நேற்றுப் பெண் பார்க்கவும் போனவர்...!

"நான்தான் அத்தான்-வெங்கடேசன்"

"வெங்கடேசனா... வா வா... நான் யாரோனு பார்த்தேன்... வர வர பார்வை ரொம்ப மோசமாயிட்டு

வருது; சங்கர நேத்ராலயாவில போய் காட்டலாம்னு இருக்கேன். இப்படி வந்து உக்கார் வெங்கடேசா...''

வெங்கடேசன் அருகில் போய் உட்கார்ந்து கொண்டார்.

''எங்கே அத்தான் - சந்துருவைக் காணோம்?''

''நீ வந்தா ஏதாவது விசேஷம் இருக்கும்,'' - என்றார் மகாலிங்கம் தலையைத் தடவியவாறே.

''விசேஷத்தை நீங்கதான் சொல்லணும். பெருமாள்சாமி காலையிலேயே போன் பண்ணி நேத்து நீங்க போய் பெண் பார்த்த விபரத்தை யெல்லாம் சொன்னார். நானும் காலையில இருந்து உங்களுக்கு போன் பண்ணிப் பார்க்கிறேன்... பெல் அடிக்குது. ஆனா யாருமே எடுக்கலை...''

''அது அவுட் ஆஃப் ஆர்டரா கிடக்கு - மூணு நாளா...''

''அதான் நேர்லேயே வந்து கேட்டுப் போயிலாம்னு வந்தேன்...பொண்ணு எப்படி இருக்கா? எல்லாருக்கும் பிடிச்சிருக்கா? பெருமாள்சாமி நம்ம சந்துருவுக்குப் பெண் குடுக்கறதுக்கு ரொம்ப ஆர்வமா இருக்கார்.''

''எம்.பி.ஏ. மாப்பிள்ளை யாச்சே... ஆர்வமாத்தான் இருப்பார்...!'' - மகாலிங்கம் அலட்சியமாகப் பேசினார்.

அறைக்குள் இருந்து பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த சந்துரு பல்லைக் கடித்தான்.

'எழுபது வயதாகி விட்டாலும் இந்தத் திமிர் மட்டும் குறையவில்லை...'

''ஏன் அத்தான், உங்களுக்கு இந்தச் சம்பந்தத்தில் இஷ்டம் இல்லையா?''



''என் இஷ்டம் இதில் என்ன இருக்கு வெங்கடேசா... வீடு போ போன்னு சொல்லுது. காடு வா வான்னு சொல்லுது...

''என்ன அத்தான் - நீங்க பேசலாமா இப்படியெல்லாம்...? இங்கே உங்க இஷ்டத்துக்கு விரோதமாக யாராவது ஏதாவது செஞ்சிடுவோமா?''

''நீ சொல்றதெல்லாம் பழைய காலத்ல வெங்கடேசா...இப்பல்லாம் பசங்கள் தலையெடுத்துத் தகப்பன் எப்படா மண்டையைப் போடுவான்னு தான் பாக்கிறான்கள்...''

''ஒரு கல்யாண விஷயத்தைப் பேச வந்திருக்கிறப்ப என்னத்துக்கு இப்ப இந்த மாதிரிப் பேச்செல்லாம்...?''

''நல்லா கேளு வெங்கடேசா...'' சந்துருவின் அம்மா வேகமாக வந்து குறுக்கிட்டாள்.

''பொழுது விடிஞ்சா தெனைக்கும் இந்தப் பேச்சுத் தான் நான் செத்துடறேன் நான் செத்துடறேன்னு... எல்லாரும் ஒரு நாளைக்கு சாகத்தான் போறோம். என்னமோ இவர் ஒத்தர்தான் உலகத்லேயே சாகப் போற மாதிரி...மத்த எல்லாரும் நிரந்தரமா இங்கேயே இருக்கப் போற மாதிரி...''

''நான் என்ன பொய்யா சொல்றேன்...நீ வேணா பார் - நான் செத்த அன்னிக்கு உன் பிள்ளைகள் பாயசம் பண்ணிச் சாப்பிடப் போறான்கள்...''

''ஆமா - நீங்க இப்படியே சொல்லிட்டு இருந்தா - கண்டிப்பா அதுகள் பாயசம் வச்சுத்தான் சாப்பிடப் போறதுகள்...''

''பாத்தியா வெங்கடேசா - அவளே சொல்லிட்டா...''

''இப்ப நான் போய் பெருமாள்சாமிக்கு என்ன பதில் சொல்லட்டும் அத்தான். அதை முதல்ல சொல்லுங்க...!''

''எந்தப் பெருமாள்சாமி?''

''அது கெட்டது போங்க! நேத்திக்கி இந்திராநகர் போய் அவரோட பொண்ணைத்தானே பார்த்துட்டு வந்தீங்க...''

''ஓ ..அவரா...மறந்துட்டேன்...வரவர ஞாபக மறதி ஜால்தியாயிட்டே போகுது வெங்கடேசா...''

''அவங்க வீட்ல எல்லாருக்கும் நம்ம சந்துருவை ரொம்பப் பிடிச்சுப் போச்சி...நீங்களும் சரினு சொல்லி டிங்கன்னா -வர சித்திரை மாசமே கல்யாணத்தை வச்சிட லாம்...என்ன சொல்றீங்க...சந்துரு என்ன சொல் றான்...''

''அவனுக்கென்னப்பா தெரியும்? ஏதோ பெரிய பணக்கராங்க வீட்டோட மாப்பிள்ளையா போயிட லாம்னு தெரிஞ்சதும் சரின்னு தலையை ஆட்டிட்டான். அதுக்காக நாமும் உடனே அவனை மாதிரியே தலையை ஆட்டிறதா?! எல்லாத்தையும் யோசிச்சிப் பாத்துத்தான் பதில் சொல்லனும்...''

அறைக்குள் இருந்த சந்துருவுக்கு அவமானமாக இருந்தது. ஒற்றை நாக்கு எப்படிச் சுழன்று சுழன்று ஆயுதமாகத் தாக்குகிறது.

''அப்ப இன்னும் நாலைஞ்சு நாள் எல்லார்கிட்டே யும் கலந்து பேசிட்டுச் சொல்றதா நீங்க சொன்னீங்கனு அவர்கிட்டே போய் நான் சொல்லிடட்டுமா?''

மகாலிங்கம் மௌனமாக யோசித்தார். பாம்புக்கு வாலையும் மீனுக்கு தலையையும் காட்டுகிற அவருடைய சுபாவம் அவருள் இயக்கம் கொண்டது.



''இன்னிக்கிக் கார்த்தாலகூட ஒரு ஜாதகம் வந் திருக்கு ...சொன்னா நீ நம்பமாட்டே படப்பையில் ரெண்டு ஏக்கர் தோட்டம் தரோம்னு சொல்றாங்க...''

-இந்தக் கூற்றைக் கேட்டு அனைவரும் நிசப்தமாக இருந்தார்கள். மகாலிங்கம் கொஞ்சம்கூட விவஸ்தை இல்லாமல் பொய் சொல்லிக் கொண்டிருக்கிறார்...' ஏய்யா இப்படிப் புளுகறே'னு கேட்டுக் குரல் எழுப்ப முடியாத துக்கத்துடன் அவர்கள் குறுகிக் போகிறார்கள்' மகாலிங்கம்-அந்தக் குடும்பத்தின் தலைவர். அவரை அவமதித்து விடக்கூடாது-யாரும்...

மகாலிங்கம் தொடர்ந்தார். ''பெருமாள்சாமிக்கும் நிறைய பணம் சொத்து எல்லாம் இருக்கத்தான் செய்யுது. இல்லேனு சொல்லலை நான். ஆனா உயில் எல்லாம் எப்படி எழுதி வச்சிருப்பாரோ; அதிலேயும் ஏற்கனவே ஒரு தடவை ஹார்ட் அட்டாக் வேற வந்தவர்...''

''உயில் எழுதறதுக்கு ஏதாவது ஆம்பிளைப் பசங்க யாரும் இருக்காங்களன்னு கேட்டா அதுவும் கிடையாது... அப்புறமென்ன அத்தான்?''

''ஆம்பளைப் பசங்க இல்லேன்னா... உயிலே எழுதக் கூடாதா? நீ ஒண்ணு...! இந்தக் காலத்ல ஆம்பளைப் பசங்களைவிட பொம்பளைங்கதான் வெங்கடேசா சொத்து பணம்னு அடிச்சிக்கிறதுகள்...''

''அடிச்க்கிறதுக்கு பெருமாள் சாமியென்ன அஞ்சாறு பொண்ணா பெத்து வச்சிருக்கார்...? இருக்கிறது ரெண்டே ரெண்டு பொண்ணு...''

''போதுமே...இந்த உலகத்தையே அழிச்சிடலாமே... அதுசரி வெங்கடேசா; அவரோட ரெண்டாவது பொண்ணு என்ன பண்ணுது; படிக்குதா படிச்சி முடிச்சி ருச்சா?''

''அது படிச்சு முடிச்சும் மூணு வருஷமாகுது அத்தான்.''

''அது என்ன படிச்சிருக்கு?''

''பி.ஏ.தான் படிச்சிருக்கு...ஆனா ரொம்ப விஷயம் தெரிஞ்ச பொண்ணு. கர்நாடக சங்கீதம் ரொம்ப அருமையா பாடும் இப்ப வீணை வேற கத்துக்கிட்டிருக்கு...''

''நேத்திக்கி நாங்க போனப்ப அந்தப் பொண் கண்லேயே படலையே—?''

''அண்ணா நகர்ல பெருமாள் சாமியோட தம்பி ஒத்தர் இருக்கார். மூந்தா நாள் அவர் வீட்டுக்கு இந்தப் பெண் புறப்பட்டுப் போயிருக்கு—நேத்திக்கி இந்திராநகர் திரும்பிடலாம்னு... திடீர்னு எதிர்பாரமே நேத்திக்கி அந்த ஆள் செத்து பெரிய கலாட்டால்லாம் ஆனதும் அண்ணா நகர்ல இருந்து அந்தப் பொண்ணாலே திரும்பி வர முடியாமே ஆயிடுச்சி... அதான் நேத்திக்கி அது வீட்ல இல்லை...''

''ஆமா; இருந்தாலும் கண்ல காட்டியிருக்க மாட்டாங்க. மூத்த பெண்ணை பெண் பார்க்க வந்திருக்கிறவங்க பார்வையில சின்னப் பொண்ணை நம்ம ஜாதிக் காரங்கதான் படவே விடமாட்டானுங்களே...''

''சேசே! அப்படியெல்லாம் கிடையாது. பெருமாள் சாமியோடஃபேமிலி ரொம்ப மாடர்ன்... சோஷியலா இருப்பாங்க யார்கிட்டேயும் அதுவும் அந்த ரெண்டாவது பொண்ணு இன்னும் நல்ல பழகும் எல்லார் கிட்டேயும்...'',

''அப்ப நம்ம சந்துருவுக்கும் அவங்க வீட்ல நல்லா பொழுது போகும்னு சொல்றே?'' மகாலிங்கம் ஒப்புதலுக்கு சுற்றி வளைத்து வந்து விட்டார்.



''பொழுது போறதா அத்தான் பெரிய விஷயம். சொத்து சுகத்தோட பொண்ணு வருது. அதைப் பார்ப்பீங்களா...''

''ஆனா ஒரு விஷயம் வெங்கடேசா... இப்ப சந்துரு வீட்டுச் செலவுக்கு மாதா மாதம் ரெண்டாயிரம் ரூபா தரான்...கல்யாணத்துக்கு அப்புறமும் அந்த ரெண்டாயிரத்தில ஒரு பைசா கம்மி பண்ணாமே இங்கே வந்தாகணும்—தெரியுதா?''

''அதையெல்லாம்தான் அன்னிக்கே ஒரு தடவை சொல்லிட்டேனே...''

''ஞாபகப் படுத்த வேண்டியது. என்னோட கடமை...!''

''அதைப் பத்தியெல்லாம் நீங்க கவலையே பட வேணாம்...''

''இன்னொரு முக்கிய விஷயம்...மாப்பிளைதான் எங்க வீட்டோட தானே வந்திடப் போறார்னு சாக்கு போக்கு சொல்லி நகையையோ சீர்வரிசையையோ குறைச்சிடக் கூடாது: அம்பது சவரன்னா அம்பது சவரன் நகை போட்டே ஆகணும்...''

''கூடுதலாவே ஒரு சவரன் போடச் சொல்லட்டுமா?''

''சந்தோஷம்...''

''அக்கா; நீ எதுவும் கேட்கிறாதா இருந்தாலும் இப்பவே கேட்டிடு...''

''எனக்கு என்டைாப்பா; சந்துரு நல்லபடியா குடியும் குடித்தனமுமா இருந்தா போதும்... அவன் எங்கேயிருந்த என்ன? ரெண்டு பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணி; ரெண்டு; மருமகள்களையும் பொண்ணுங்களுக்கு மேலாத்தான் பாத்திருக்கேன். அப்படிப் பார்த்திருந்தும் எனக்கு என்ன பேர் கிடைச்சது...! அதுக்கு இது எவ்வளவோ

உத்தமம்... அவபாட்டுக்கு அவங்க வீட்லேயே இருப்பா. நான்பாட்டுக்கு இங்கே இருந்திட்டுப் போவேன்... ஆனா—ஒண்ணே ஒண்ணை மட்டும் நீ கண்டிஸனா சொல்லிடணும். வெங்கடேசா; கல்யாணத்துக்கு பெண்ணுக்குப் போடற நகையும் சரி; செய்யற சீர்வரிசை பாத்திரமெல்லாமும் சரி—இங்கே நம்ம வீட்லதான் இருந்தாகணும்...அதையும் அவங்க வீட்லேயே வச்சிப் போம் என்கிறதெல்லாம் எங்களுக்குச் சரிப்படாது... கல்யாணம் முடிஞ்சா அது எங்க வீட்டுப் பொண்தான்... அவங்க வீட்டுப் பெண் கிடையாது...!''—சந்துருவின் அம்மாவும் தன் பங்கிற்கு முன்மொழிந்து கொண்டாள்.

''அவ்வளவுதானே...வேற ஒன்னும் இல்லையே?'' வெங்கடேசன் திருப்தியுடன் கேட்டார்...

''நல்லாத்தான் கேக்கறே வெங்கடேசா—டிவியில் வயலும் வாழ்வும்ல பேட்டி கேக்கறவன் மாதிரி...!''

''ஹை...! அத்தான்கூட ஜோக் அடிக்கிறாரு...!''

''பெருமாள்சாமியை மறுபடியும் நீ எப்ப பார்ப்பே வெங்கடேசா...?'' மகாலிங்கம் கேட்டார்.

''நாளைக்குக் காலையில அதுதானே முதல் வேலை...''

''வேணாம் வெங்கடேசா; நாளைக்கே சொல்ல வேணாம். என்னவோ அவரோட சொத்துக்கும் பணத் துக்கும் நாம வாயைத் திறந்திட்டு நிக்கறதா ரொம்ப 'சீப்'பா நெனைச்சாலும் நெனைச்சிடுவார்...அதனால நாலு நாள் போகட்டும்...கொஞ்சம் இழுத்தடிச்சி சரி சொன்னாத்தான் நாளைக்கு நமக்கும் மரியாதை...!''

''நீங்க எப்படிச் சொல்றீங்களோ—அப்படியே செய்றேன். எனக்கென்ன அத்தான்—இந்தப் பெண் முடிஞ்சா போதும்...''



''படவா; உனக்கு இதில் கமிஷன் என்னன்னு தெரியலை...''

''சந்துரு இல்லையா?''

''இருக்கான் இருக்கான். உள்ளே தூங்கறான் போலிருக்கு...''

''அப்போ எல்லோருக்குமே இந்த சம்பந்தத்தில் திருப்திதானே ?''

''பார்ரா! திரும்பத் திரும்ப கேக்கறான்...''!

''ஒரு தடவைக்கு நாலு தடவை கேட்டுக்கறது நல்லதுதானே...அப்போ நாலு நாள் கழிச்சி பெருமாள் சாமியிடம் நம் எல்லாருக்கும் பரிபூர்ண சம்மதம்னு சொல்லிட வேண்டியதுதானே...?''

''பேஷா சொல்லிடு...''

இந்தத் திருமணத்தில் தனக்குக் கிடைக்கப் போகிற கமிஷனை எண்ணிய உவகையோடு வெங்கடேசன் வேகமாக வெளியேறிக் கொண்டிருக்க; தன்னுடைய அறைக்குள் கொஞ்சம் கலங்கிய கண்களுடன் நின்றான்- சந்துரு. ஒரு வாழ்க்கை ஒப்பந்தம் கையொப்பம் இடப் பட்டு விட்டது......

## 4

ஆழ்வார்பேட்டை, சி. பி. ராமசாமி சாலையில் பிரு மாண்டமான மரங்களின் மையத்தில் இயங்கும் அந்தத் தனியார் நிறுவனத்தின் விஸ்தாரமான மாடி அறையில் நிர்வாக இயக்குநரின் தலைமையில் முற்பகல் பதினொரு மணிக்குத் துவங்கிய ஆலோசனைக் கூட்டம் சரியாக ஒரு மணிக்கு முடிவுற்றதும்; அந்த நிறுவனத்தின் வெவ்வேறு பிரிவுக்கான உதவி மேனேஜர்களான சந்துருவும்

சுஜாதாவும் ஆங்கிலதிதில் உரையாடியபடி வெளி ஹாலுக்கு வந்தார்கள்.

"லன்ஞ்சுக்கு நீ வீட்டுக்குத்தானே போறே" சந்துரு?- சுஜாதா கேட்டாள்.

"இல்லை. வீட்ல அம்மா இல்லை. சித்தி வீட்டுக்குப் போயிருக்காங்க. ஸோ-வெளியில சாப்பிட்டுக்க வேண்டியதுதான்...நீ?"

"நானும் இன்னிக்கி ஒண்ணும் எடுத்திட்டு வரலை"

"அப்ப நீயும் வாயேன்; ட்ரைவ் இன் போயிட்டு வந்துரலாம்"

"கிளம்பு"

அடுத்த நிமிடங்களில் அவர்களின் இரண்டு சக்கர வாகனங்கள் நீண்ட டி.டி.கே. சாலையில் ஒன்றன் பின் ஒன்றாக விரைந்தோடி; கதீட்ரல் சாலையில் விரிந்த நிழற் சதுக்கமான உணவகத்தை அடைந்தன. இசைவான இடமாகத் தேர்ந்தெடுத்து சந்துருவும் சுஜாதாவும் எதிர் எதிராக உட்கார்ந்து கொண்டார்கள்.

உணவகப் பணியாளரிடம் தேவையானவற்றை சுஜாதாவே 'ஆர்டர் செய்துவிட்டு; 'பாப்' பண்ணப்பட்ட தன் கூந்தல் கற்றைகளை அழகாக குலுக்கிச் சிலிர்த்துக் கொண்டாள்.

"காலையில் எம். டி. உன் பாலா பத்தி என்னவோ உன்கிட்டே கேட்டுட்டு இருந்தாரே-என்னம்மா கேட்டார்?" சந்துரு கேட்டான்.

"லிபியாவில் இருந்து அவனை மெதுவா வரச் சொன்னார்"

"ஏனாம்?"

"நானும் பாலாவும் மேரெஜ் பண்ணிண்டு போயாச்சுனா - என் போஸ்ட்டுக்கு என்னை மாதிரி ஒரு ஆள் அவருக்குக் கிடைக்காதாம்"



"ஆமா, ஆள் கிடைக்கலை ஆள் கிடைக்கலைன்னு சொல்ல வேண்டியது...அப்புறம் கரெக்ட் பர்ஸன் கிடைச்சிட்டா போதும் - உடனே அவனை எக்ஸ்ப்ளாய்ட் பண்ண ஆரம்பிச்சிட வேண்டியது..."

"அது சரி; சாப்பிட வந்த இடத்திலும் கம்பெனிப் பத்தித்தான் பேசியாகணுமா? உன் விஷயம் என்னாச்சு...அதை சொல்லு. அமுதாவோ குமுதாவோன்னு ஒரு பெண் பாத்துட்டு வந்தியே...?" அவாத்துக்கு சம்மதம்னு சொல்லி அனுப்பியாச்சா இன்னும் இல்லையா?"

"நேத்திக்கு சொல்லி அனுப்பியாச்சி..."

"அப்போ முகூர்த்தம் தேதியெல்லாம் ஃபிக்ஸ் பண்ணிட்டாளா?"

"அதெல்லாம் இன்னும் ஃபிக்ஸ் பண்ணலை...ஆனா; நிச்சயதார்த்தத்துக்கு டேட் முடிவு பண்ணிட்டாங்க..."

"ஸோ-அந்த அமுதாகிட்டே மாட்டிண்டே...?"

ஆர்டர் கொடுத்த உணவு வகைகள் வந்தன. சாப்பிட்டுக் கொண்டே பேச்சைத் தொடர்ந்தார்கள்.

"என்னமோ தெரியலை சுஜா - திடீர்னு கல்யாணம் பண்ணிக்கப் போறதை நினைச்சா பயமா இருக்கு. கடைசியில் எல்லாம் இவ்வளவுதானான்னு கொஞ்சம் திகைப்பாகூட இருக்கு..."

"நீ எதிலேயுமே ரெண்டுங் கெட்டான் - அதான் விஷயம்..."

"எனக்கு அது தெரியுது. ஆனா எனக்கே என்னால் ஹெல்ப் பண்ணிக்க முடியலை..."

"ஆமா; என்ன அது ஸ்கூட்டரை அப்படி ஓட்டறே...?"

''எப்படி ஓட்டிட்டேன்?''

-இந்த வர்க்ஷாப்ல; ரிப்பேருக்குப் போற மோட்டர் சைக்கிள்லை அந்த வர்க்ஷாப்ல வேலை பார்க்கிற குட்டி குட்டிப் பசங்க ரிப்பேர் பண்ணி முடிஞ்சதும் சர் சர்னு பயங்கர ஸ்பீட்ல கன்னா பின்னான்னு ஓட்டிப் பார்க்குங் கள்...! நீயும் அதுகள் போலத்தான் ஓட்டறே...!''

''ஆரம்பிச்சாச்சா என்னைக் குத்தம் சொல்றதுக்கு...?''

''போ; இன்னமே நான் வாயே திறக்கப் போறதில்லை...''

''பாலா நல்லா உன்கிட்டே மாட்டிக்கிட்டு முழிக்கப் போறான் பாரு''

''நல்ல ஆளைப் பார்த்து சொன்னே...என்னை முழுங்கிடுவான் அவன்''

''அது சரி; உன் ஆளு வேற எப்படி இருப்பான்?''

''சந்துரு, உன் வுட்பி - அமுதாவோட போட்டோ எதுவும் வச்சிருக்கியா இல்லையா?''.

''நோ. ஆனா அவங்க வீட்லே இருந்து அவளோட போட்டோஸ் ரெண்டு மூனு குடுத்து விடப் போறாங்க போலத் தெரியுது.''

இதற்கு சுஜாதா என்னவோ நினைத்து தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

''சிரிப்பு எதுக்குன்னு எனக்கும் சொல்லிட்டுச் சிரிக் கிறது''

''ஒருத்தருக் கொருத்தர் இப்படி போட்டோல்லாம் கொடுத்துக்கறது பத்தி நெனைச்சுப் பார்த்தேன், சிரிப்பு வந்துடுத்து. உன் போட்டோ போயிடுத்தா - அவாத்துக்கு...?''



''நேத்திக்கிக் கேட்டு ஆள் அனுப்பிச்சாங்க... ''ரெண்டு நாள்ள குடுக்கணும்''

''போட்டோவை வச்சிண்டு என்ன பண்றது? நெஜமாவே அந்த மாதிரி ஃபீலிங்ஸ் எல்லாம் எனக்குப் புரியறதே இல்லை...''

''அப்புறம் எப்படி பாலாவை லவ் பண்றே?''

''சீ போ! லவ்வாது கிவ்வாது...! ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கலாமான்னு ஒரு நாள் கேட்டான். நல்லா யோசனை பண்ணினேன். பாலா - கொஞ்சம் பெட்டர் இண்டிவிஜ்யுல். ஸோ - ஐ ஸெட் யெஸ்... அவ்வளவுதான்''

''உன் அக்காவும் அத்திம்பேரும் ஒண்ணு சொல்லலையா?''

''அவா என்ன சொல்றது? என் வயத்துக்கு நான் சாப்பிடறேன்''

''ரொம்ப அதிர்ஷ்டக்காரப் பொண்ணுதான் நீ''

''சொல்லியாச்சா நீயும்''

''இப்ப எங்கம்மா என்னைச் சொல்லிட்டு இருக்காங்க - நான் ரொம்ப அதிர்ஷ்டக்காரனாம்''

''பெரிய பணக்கார வீட்டுக்கு வீட்டோட மாப் பிள்ளையா போறேன்னா...? அஃப்கோர்ஸ்; அவாளுக்கு இதெல்லாம்தானே வேல்யூஸ்...சரி; உன் வுட் பியை ஒரு நாள் இப்படியே எங்கேயாவது அழைச்சிட்டு வாயேன் - பார்க்கலாம்''

''வேணாம் வேணாம். கல்யாணமெல்லாம் முடி யட்டும்; அப்புறமா அழைச்சிட்டு வரேன். ஆனா சுஜா, உன்னைப் பார்த்தா பயந்தே போயிடுவா...''

''அது ஏன் சந்துரு; என்னைப் பார்த்தாலே பெண் களெல்லாம் கொஞ்சம் பயந்து போயிடுதுகள்?''

''நீ ஒரு மாதிரி ஃரியா டேரிங்கா இருக்கியே... அதனால இருக்கலாம்.''

''பாவம்தான் நம் பொண்களெல்லாம் - இல்லே?''

''எங்க வீட்ல ஆம்பளைங்கதான் ரொம்பப் பாவம்''

''சும்மா அதையே சொல்லிச் சொல்லி போரடிக் காதே. உங்களுக்கெல்லாம் கட்ஸ் கிடையாது. நீங்களே அப்பா அப்பான்னு சொல்லி அவரைத் உசரத்ல தூக்கி வச்சுட்டு அப்புறம் லோ லோன்னு அடிச்சுக்க்கி வேண்டியது. சே! சிக்கன் ஷிட்!''

''ஒரு வாரத்துக்கு எங்க வீட்ல வந்து இருந்து பார்த்தா தெரியும் உனக்கு''

''சரி, மணி என்ன?'' - சுஜாதா கேட்டாள்.

''ஒன் பார்ட்டிஃபைவ்''

''பத்து நிமிஷத்ல கிளம்பிடலாமா?''

''ஒயெஸ்''

''அப்போ உன் மேரேஜ் மார்ச் மாசம் இருக்குமா சந்துரு?''

''இல்லை. ஏப்ரல்ல இருக்கும். அநேகமா ஏப்ரல் லாஸ்ட் வீக்?''

''வெயில் அப்போ டாப்ல இருக்கும். ஒரு மாசம் சிம்லா டார்ஜிலிங்னு ஓடிடு...''

''எம்.டி.லீவ் தரணுமே...''

''உனக்கு தாராளமா தருவார். உன்மேல ஒரு ஸாஃப்ட் கார்னர் வச்சுருக்கார்''

சந்துரு உடனே மகிழ்வோடும் நாணத்தோடும் தலை யைக் குனிந்து கொணடான்.

''இதைச் சொன்னதுக்காக இத்தனை வெட்கம்... கடவுளே! எப்படித்தான் நீயும் கல்யாணம் பண்ணிண்டு



குடித்தனம் பண்ணப் போறியோ... ''ஆமா; உன் வுட்பி அமுதாவுக்கு ப்ரதர்ஸே கிடையாதுன்னுதானே சொன்னே?''

''ஆமா. ஒரே ஒரு தங்கை மட்டும்தான் அவனுக்கு''

''அந்தப் பொண் பேரென்ன?''

''தெரியலைம்மா''

''எங்கேயும் படிச்சிகிட்டுருக்கா?''

''இல்லை. பி.ஏ. படிச்சு முடிச்சாச்சு போலிருக்கு''

''அப்போ அந்தப் பொண்ணுக்கும் அடுத்த வருஷம் கல்யாணத்தைப் பண்ணிடுவா''

''நல்ல வரனா வந்தா கல்யாணத்தை வச்சிட வேண் டியதுதானே...''

''மச்சினி மேல இப்பவே கரிசனம் வந்துடுத்தே''

''அந்தப் பொண்ணுகூட இன்னிக்கோ நாளைக்கோ என்னை வந்து பார்ப்பாள்னு நெனைக்கிறேன்''

''எதுக்காம்''

''அன்னிக்கி நாங்க பெண் பார்க்கப் போனப்ப— அவங்க வீட்ல அந்தப் பொண்ணு இல்லையே... அதனால் என்னைப் பார்க்கணும்னு கிடந்து துடிச்சுக் கிட்டு இருக்காம். எங்க மாமாதான் காலையில போன் பண்ணிச் சொன்னார்.''

''எங்கே வந்து பார்க்கப் போறதாம்...வீட்லேயாவா இல்லை ஆபிஸ்லேயா?''

''அது தெரியலை''

''எங்கே வந்தா உனக்கு வசதி''

''நமக்கு ஆபிஸ்தான் வசதி. வீட்டுக்கு வந்தா போச்சு எல்லா சனியன்களும் சுத்தி நின்னு பிராணனை வாங்கி

டுங்கள். அதுவும்—எங்க அப்பா ஒத்தர் போதும்... என்னவோ அவரைப் பார்க்க வந்தா போலத்தான் ஆட்டம் போடுவார்...!''

''அப்போ போன் பண்ணி அந்தப் பொண்ணை ஆபிஸ்க்கே வரச் சொல்லிடலாமா?"

''அய்யய்யோ. அதெல்லாம் வேண்டாம். எங்க அப்பாவுக்கு கிரிமினல் மைண்ட்...' உடனே பார் போன் பண்ணி ஆபீஸ்க்கு வரச் சொல்லியிருக்கான்! வீட்டுக்கு வரச் சொல்லாமே ..இப்பவே மாமியார் வீட்டுப் பக்கம் சாய ஆரம்பிச்சிட்டான்னு கண்ணை மூடிட்டித் திட்டுவார் எதுக்கு வம்பு! அந்தப் பொண்ணுக்கு எங்கே வர இஷ்டமோ அங்கேயே வரட்டும்...'"

''எழுந்துக்கலாமா?"

''ஒயெஸ்''

மணி மாலை நான்கு ஆகியிருந்தது. அனைத்தையும் மறந்து இரண்டு மணி நேரம் நிறுவன அலுவல்களில் மூழ்கியிருந்த சந்துரு சற்று களைப்புடன் நாகாலியில் சாய்ந்து சோம்பல் முறிந்து போது இண்டர்காம் ஒலித்தது.

"யெஸ்"

''இந்திரா நகர்ல இருந்து நந்தானு ஒரு பெண் உங்களைப்பார்க்க வந்திருக்காங்க சார்''

"ரெண்டு நிமிஷம் கழிச்சு அனுப்புங்க. ஒகே?"

''ஒகே சார்"

சந்துரு நிமிர்ந்து உட்கார்ந்தான். ஷர்ட் காலரை சரி பண்ணிக் கொண்டான். கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்தான். நந்தா என்று ஒரு முறை சொல்லுப் பார்த்தான். அந்தப் பெயர் அவனுக்குப்



பரிச்சயமானதாகத் தோன்றியது. தான் மணக்கப் போகிறவளின் தங்கையைப் பார்க்கப் போகிற மெலிதான இனிமை அவனுள் வியாபிக்கத்தான் செய்தது.— ஆனால் இந்த இனிமை உணர்வு மிகச் சில விநாடிகள்தான். சட்டென சந்துருவின் மனத்துக்குள் ஒரு சந்தேகமும் ஊடுருவியது. மூன்று அல்லது நான்கு வருடங்களுக்கு முன் அவனைக் மிகவும் கவர்ந்திருந்த ஒரு பெண்ணின் பெயரும் நந்தாதான்...... ஒருவேளை; வரபபோகிற இந்த நந்தா அந்த நந்தாவாகவே இருந்து விட்டால்...? நினைத்த மாத்திரத்திலேயே சந்துருவிற்கு இலேசாக வியர்த்து விட்டது. கைக்குட்டையால் முகத்தை ஒற்றிய படி மார்புத் துடிப்புத் துடிப்பு சற்று அதிகரிக்க—நாற்காலியின் நுனியில் ஒய்வின்மையுடன் அமர்ந்திருந்தான்......

சில விநாடிகள் நிசப்தமாகக் கழிந்தன. அலுவலகப் பணியாள் கதவைத் திறந்து வழிவிட சந்துருவின் அறைக்குள் நுழைந்த அப்பெண்—நான்கு வருடங்களுக்கு மூன்; அவளின் அபிமானப் பார்வை தன் மேல் விழாதாயென்று அவள் போகிற பாதைகளில் சந்துரு அவனின் பார்வையை சில மாதங்கள் அலைய விட்டுப் பின் தொடர்ந்திருக்கிற அதே நாந்தாதான்......! ஆனால், அன்றைய நந்தா இளம் கல்லூரி மாணவி. இன்றைய நந்தா முழுப் பொலிவும் பெற்ற பரிபூர்ண நங்கை...... அன்றைய நந்தாவைப் பார்க்கிற போது இளம் மழைத் தூறலின் ஆரம்பத் துளிகள் என மனம் குளிர்ந்து சிலிர்க்கும். இன்றைய நந்தாவைப் பார்க்கிற போது—? கூடி வரும் கரிய மேகக் கூட்டத்தின் முதல் முழக்கம் என நெஞ்சுத் துடிப்பில் அச்சம் ஒலிக்கிறது......

## 6

சில கணங்களுக்கு அவர்கள் இருவரின் உலகங்களும் நிசப்தமாயிருந்தன. வந்தவளை சுதந்திரமாக வரவேற்கிற

1535
279601

தீரம் அற்று சந்துரு நந்தாவைத் திகைப்புடன் கண்டான். சகோதரியை மணக்கப் போகிறவனை வணங்கும் பிரக்ஞை அற்று நந்தா சந்துருவை எதிர்பாராமல் பார்த்தாள். மத்தியில் கால ஓட்டம் சரேலென ஸ்தம்பித்து; நந்தாவின் நிலையில் இருந்து இழை இழையாக உயிர்த்தது. ஜன்னல் அருகே குருவிகளின் சப்தங்கள் ஒலித்தன மனப் பின்னடைவு எதுவும் ஏற்பட்டிராத தோரணையில் நந்தா சந்துருவைப் பார்த்து புன்னகை செய்தவாறு 'வணக்கம்' என்றாள். பதிலுக்கு சந்துருவும் சிரிக்கிற பாவனையைக் காட்டப் பார்த்தான். நந்தாவிற்குக்கூட கேட்க முடியாத குரலில 'வணக்கம்' சொன்னான்.

ஷர்ட்டின் பட்டனைத் திருகிக் கொண்டே "உட்காருங்க" என்றான்.

"தாங்ஸ்"

ஒரு பூ மலர்ச்சியின் விரிதலாக அவளைச் சுற்றிக் கொண்டிருந்த மொர மொரப்பான ரோஜா நிற பருத்திப் புடவையைக் கண்ணியத்துடன் பற்றிக் கொண்டு சந்துருவிற்கு எதிரில் உட்கார்ந்து கொண்டாள் நந்தா. அவள் அமர்ந்தபின், தன்னுடைய இருக்கையில் அமர்ந்து கொண்ட சந்துருவின் முழங்கால்கள் இலேசாக நடுங்கின. அவனின் மனமும் அவனுள் தலை குனிந்திருந்தது. கைகளின் விரல்களைக் கோத்து கோத்து பிரித்தவாறே நந்தாவைப் பார்த்தும் பார்ககாததுமாக இருந்தான்.

"அக்கா உட்ககிட்டே கொடுக்கச் சொல்லி அவளோட ரெண்டு போட்டோ என்கிட்டே கொடுத்தனுப்பிச்சா..." என்று சொல்லி, நந்தா அமுதாவின் புகைப்படங்கள் அடங்கிய உறையை நீட்டினாள்.

"தாங்ஸ்"

அமுதாவின் புகைப்படங்களைப் பார்க்கிற தைரியம் கூட இல்லாமல் சந்துரு அந்த உறையை வாங்கி மேஜையின் டிராயருககுள் வைத்துக் கொண்டான்.



"உங்களோட போட்டோஸ்ஸும் வாங்கிட்டு வரச் சொன்னா' தரேன்னு சொல்லி இருந்திங்களாமே...?"

—நந்தாவின் இந்த விகற்பமே இல்லாத நேர் அணுகல் சந்துருவால் சற்று தாங்க முடியாததாக இருந்தது. இயல்பாகத் திறந்து கொள்ள இயலாமல் அவனின் மனச்சதுக்கம் மூடிப் போயிருந்தது.

"என்ன' பேசவே மாட்டேங்கிறீங்க?"

நந்தாவின் குற்ற மனப்பான்மையே இல்லாத தொனியை கேட்டு அவனுடைய மனமுகம் சிறிதே தலை நிமிர்ந்தது. தயக்கத்தை தவிர்த்து விடுகிற பிரக்ஞையுடன் அவளைப் பார்த்துச் சொன்னான்:

"ஸாரி' போட்டோ எதுவும் ரெடியா குடுக்கிற மாதிரி இல்லை. புதுசா எடுத்து ப்ரிண்ட் போட்டு ரெண்டு மூணு நாள்ல அனுப்பி வைக்கிறேன்..."

"அய்யோ; உங்க போட்டோ வாங்கிட்டுப் போகலைன்னா எங்க அக்கா என்னைத்தான் திட்டுவா......"

நந்தாவின் இந்த வெளிப்பாடு சந்துருவை இம்சை பண்ணியது. அவளெதிரில் மிகவும் போலித்தனத்துடன் அமர்ந்திருப்பதை அவனாலேயே தாங்கிக் கொள்ள முடியவில்லை. கல்யாணமும் வேண்டாம் மண்ணும் வேண்டாம் என எழுந்து ஓடிவிடலாம் போலிருந்தது! கடந்தகால நினைவுகளைக் கடுகளவும் காட்டிக் கொள்ளாத நந்தாவின் இக்கண முன்னிலையை எதிர்நோக்க அவனுக்கு அவமானமாகக் கூட இருந்தது. நந்தா அவனுடைய புகைப்படத்தையும் இயல்பாகக் கேட்டுக் கொண்டிருந்தாலும்கூட; அமுதாவுடன் தீர்மானிக்கப் பட்டிருக்கிற தன் விவாஹத்தின் உறுதிப்பாடு சட்டென

சந்துருவின் மனத்துக்குள் சந்தேகத்திற்கு உரியதாக பல வினைப்பட்டு பெயர்ந்து கொண்டிருந்தது.

"சரி, எங்க அக்காகிட்டே போய் சொல்லிடறேன்—நீங்க பேசவே மாட்றீங்கண்ணு..."—பெய்யான பாவனையில் நந்தா நாற்காலியில் இருந்து இலேசாக எழுந்து கொண்டாள். உடனே சந்துரு சிறிது சுதாரித்துக் கொண்டான். இன்றைய முதல் நிமிடங்களிலேயே தோற்றுப் போக அவனுடைய அறிவு அனுமதிக்கவில்லை. தனது எம்.பி.ஏ. ஆளுமையைப் பற்றிக் கொண்டு இருக்கையில் சற்று இயல்பாக சாய்ந்து அமர்ந்தபடி நந்தாவுக்கு பதில் சொன்னான்.

"இல்லை மிஸ். நந்தா; பொதுவாகவே நான் பெண்களுடன் பேச கொஞ்சம் சங்கோஜப் படுவேன்... அவ்வளவுதான். உட்காருங்கள். என்ன சாப்பிடுகிறீர்கள்—ஏதேனும் ஐஸ்க்ரீம் கொண்டுவரச் சொல்லட்டுமா?"

"இல்லை. நான் ஐஸ்க்ரீமே சாப்பிடறது கிடையாது. ஜஸ்ட் ஒரு காஃபி தாங்க போதும்."

சந்துரு பஸ்ஸரை அழுத்தி பணியாளை வரவழைத்து இரண்டு காப்பி வாங்கி வரச் சொன்னான். பின் நந்தாவை நேருக்கு நேராகப் பார்த்தான். அமுதாவுடன் ஏற்கப் பட்டிருக்கிற திருமண ஒப்பந்தம் முறிந்து போகப் போகிறதாக இருந்தாலும்கூட; இந்தக் கணம் நந்தா என்ற பெண்ணின் எதிரில் கூனிக்குறுகி விடக்கூடாது என்ற வலிந்த பிரக்ஞையில் மிகவும் புதிய குரலில் கேட்டான்.

"அன்னிக்கி நாங்க பெண் பார்க்க வந்த அன்னிக்கி—நீங்க இல்லையா உங்க வீட்ல?"

"திரும்பி வந்துடலாம் என்கிற நினைப்பிலேதான் அண்ணா நகர் சித்தப்பா வீட்டுக்குப் போயிருந்தேன்.



அதுக்குள்ளே ஊர் பூராவும் கலாட்டா ஆயிட்டதால் வர முடியலை..." - இனி அடுத்து என்ன கேட்பதென்று தெரியாமல் மீண்டும் உரையாடல் தொடர் சந்துருவில் அறுபட்டது அந்த இடைவெளியை நிரப்பிக் கொள்வதற்கு வசதியாக காப்பி வந்தது. இருவரும் அருந்தினார்கள்

"மறுபடியும் எங்க வீட்டுக்கு எப்ப வர்ரீங்க?"—நந்தா உரிமையுடன் கேட்டது சந்துருவை சிறிது நெகழ வைத்தது. அந்தப் பெண்ணின் எதிரில் தன்னைக் கொஞ்சம் அற்பமாகக்கூட நினைத்தான். இந்தச் சூழலே அவனுக்கு துக்ககரமாக இருந்தது. அவளைக் கையெடுத்துக் கும்பிட்டு வழியனுப்பி வைத்து விடலாம் போலிருந்து.

"என்னங்க; பதிலே சொல்ல மாட்டேன்கிறீங்க...?" நந்தா விடாமல் கேட்டாள்.

"நிச்சயதார்த்தமெல்லாம் முடியட்டுமே..." சந்துரு சமாளிக்கப் பார்த்தான்.

"அந்த செண்ட்டிமெண்ட் எல்லாம் பார்க்க வேண்டாம். மார்ச் 31 என்னோட பர்தடே...கண்டிப்பா அன்னிக்கி நீங்க எங்க வீட்டுக்கு வந்தாகணும்..."

நந்தாவின் இந்த சுதந்திர வெளிப்பாடு சந்துருவை மிகவும் விநோதத்தில் அமிழ்த்தியது. அவளின் இச்சுதந்திர நிலை உண்மையானதுதானா; இல்லை, தன்னைப் போலவே மனத்துக்குள் தடுமாற்ற சுழற்சியில் இவளும் சுழன்று கொண்டிருக்கிறாளா... சந்துருவால் நந்தாவின் நிஜமான நிலையை நிச்சயமாய் அனுமானிக்க முடியவில்லை. இருந்தாலும்; வெளியில் தெரிகிற அவளின் சுதந்திரமான வெளிப்பாட்டில் தானும் கலந்து கொள்வது தான் கல்வித் தகுதியை சார்ந்த நாகரிகம். - அந்த நாகரிக தொனியுடன் நந்தாவைக் கேட்டான்.

"அமுதாவோட பர்த்டே எப்போ?"

வீசி எறியப்பட்ட தானியங்களைக் கண்டதும் சிறகடித்துப் பறந்து வரும் நெஞ்சு உயர்ந்த புறாவின் இறக்கைகள் போலத்தான் நந்தாவின் கண் இமைகளும் படபடத்துக் கொண்டன.

"நல்லா ஏமாந்தீங்களா... மார்ச் 31 ஒண்ணும் என்னோட பர்த்டே கிடையாது. அதான் எங்க அமுதாவோட பர்த்டே...!"

குறும்பு நிறைந்த ஒரு திரைப்பட கதாநாயகியின் பாவனையுடன் நகம் கடித்தவாறு நந்தா சொன்னதும் சந்துரு அவனையும் இழந்து சிரித்துத்தான் விட்டான்.

"இப்ப சொல்லுங்க; மார்ச் 31 எங்க வீட்டுக்கு வர்ரீங்களா இல்லையா?"

"ப்ளீஸ் மிஸ். நந்தா, என்னை கட்டாயப் படுத்தாதீங்க... நிச்சயதார்த்தம் கல்யாணம் எல்லாம் முடியட்டும். அடுத்த வருஷம் மார்ச் தர்ட்டி ஃபர்ஸ்ட் நாமெல்லாம் சேர்ந்து கொண்டாடிட்டா போறது..."

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. ரெண்டு நாள் கழிச்சு எங்க அக்கா போன் பண்ணுவா. அப்போ பேசிக்கோங்க-அவகிட்டே..."

"அதுசரி; உங்க மேரெஜ் எப்போ?" -விகசிக்கத் துவங்கியிருந்த வேறொரு சூழலைத் தவிர்ப்பதற்காகவே சந்துரு கேட்டான்.

"இன்னும் ரெண்டு வருஷத்துக்குக் கிடையாது. என்னோட வீணைப் பயிற்சி ஓரளவுக்கு என்னோட திருப்தியான கட்டத்துக்கு வந்தப்புறம் தான் மேரெஜ்..."

"யெஸ் யெஸ்; நான் கூட கேள்விப்பட்டேன்...யார் கிட்டே கத்துக்கறீங்க வீணை?"



"ராஜேஸ்வரி பத்மநாபன் கிட்டே..."

"கர்நாடக சங்கீதத்லு வாய்பாட்டும் உங்களுக்குத் தெரியும். இல்லையா?"

"யெஸ். உங்களுக்கு கர்னாடிக் ம்யூசிக்ல ஆர்வம் உண்டா?"

நாட்டியத்ல ரொம்ப ஆர்வம் உண்டு...அது சம்பந்தமான நிறைய ரிக்கார்ட்ஸ் கேஸெட்ஸ் எல்லாம்கூட கலைக்ட் பண்ணி வச்சிருக்கேன்..."

நந்தாவின் முகத்தில் ஓர் அழகிய வானவில் வந்து படர்ந்தாற் போன்ற மந்தகாசம் சட்டென நிலை கொண்டது.

"எனக்குக்கூட ரொம்ப ஓல்ட் ரிக்கார்ட்ஸ்-கர்னாடிக் ம்யூசிக்ல கலைக்ட் பண்ணி வைக்கிற ஹாபி உண்டு... மதுரை மாரியப்ப ஸ்வாமிகள்னு கேள்விப் டிருக்கீங்களா?"

"இல்லை."

"நாற்பது வருஷத்துக்கு முன்னால் அவர் பாடின சில அபூர்வமான பாட்டுக்களைக் கூடத் தேடிப்பிடிச்சு ரிக்கார்ட் பண்ணி வச்சுருக்கேன்..."

"அப்படியா; என்கிட்டேகூட 1937 ல் உதயசங்கர் அமெரிக்காவில் கொடுத்த ஒரு நடன நிகழ்ச்சியோட ரிக்கார்ட் இருக்கு..."

"அப்போ நான் என்னிக்கி வரட்டும் உங்க வீட்டுக்கு - அந்த ரிக்கார்ட்ஸ் எல்லாத்தையும் பாக்கிறதுக்கு...?"

-மறுபடியும் சந்துருவைத் தோற்கடிக்கிற நந்தாவின் சுதந்திரமான இயல்பான நேர்மையான அணுகல்...

சந்துருவால் உடனே பதில் சொல்ல முடியவில்லை.

"இதுக்கும் கல்யாண நிச்சயார்த்தம் முடியட்டும்னு சொல்வீங்க போலிருக்கு!"

"ஸோ வாட் மிஸ் நந்தா... கல்யாணத்துக்கு அப்புறம் என்னோட ரெக்கார்ட்ஸும்; கேஸெட்ஸும் உங்க வீட்டுக்குத்தானே வந்து சேரப்போகுது... அப்பப் பார்த்துக்கோங்களேன். என்ன அவசரம்?"

–இப்படிக் கேட்டபோது சந்துருவின் உள் மனத்துக்குள் விவரிக்க முடியாத ஒரு வலி விரிந்து பரவியது. அவனுக்கும் அமுதாவிற்கும் நிகழ இருக்கிற திருமண நிச்சயதார்த்தத்தை உடைத்து விடுகிற மன அவசரம் அவனுள் பூமி அதிர்வுயென அதிர்ந்தது. திரும்பத் திரும்ப கல்வி சார்ந்த பொய்யான நாகரிக தோரணையிலேயே இந்தப் பெண்ணின் எதிரில் அந்த அமுதாவுடன் தாம்பத்யம் நடத்துவது என்பது ஒரு சிறைத் தண்டனைக்கு ஒப்பானதாகத்தான் இருக்கும் என அவனின் அறிவு கலங்கியது. - இப்போது சந்துருவிற்குள் ஓர் நூதனம் நடந்தது. அவனுள் உண்மையாக குடி கொண்ட மனிதன் சட்டென எழுந்து அந்த அறையை விட்டு நீங்கிவிட; நந்தாவின் எதிரில் ஓர் பொய் உருவமாக மட்டும் சந்துரு உட்கார்ந்திருந்தான்.

"அதெல்லாம் முடியாது; அவ்வளவு நாளைக்கெல்லாம் என்னால இருக்க முடியாது...அதுக்கு முன்னாடியே திடீர்னு உங்க வீட்டுக்கு நான் வரத்தான் போறேன்... நீங்க இருந்தாலும் இல்லாவிட்டாலும் உங்க ரிக்கார்ட்ஸ் கலைக்ஷனை பார்க்கத்தான் போறேன்... பை."

பொய்யான கோபச் சிணுங்கலோடு வேகமாக எழுந்து சென்ற நந்தா; கதவருகில் போனதும் திரும்பிப் பார்த்து "ஸீ யூ" சொல்லிவிட்டு வெளியேறி மறைந்தாள்.



அந்தக் கணமே பொய் மனிதன் மறைந்து போக சந்துருவின் நிஜ வடிவம் நாற்காலியில் சில நிமிடங்களுக்கு சரிந்து கிடந்தது. கடந்து சென்ற நிமிடங்கள் உண்மைதானா என்ற ஐயம் அவனுள் வாய்க்கால் நீர் போல சலசலத்துச் சுழியிட்டது. நிஜமாகவே நந்தா நான்கு வருடங்களுக்கு முற்பட்ட ஞாபகங்களின் குறுகுறுப்பு துளிக்கூட இல்லாமல்தானா இத்தனை நிமிடங்கள் அவனுடன் சுலபமாகப் பேசிவிட்டுப் போனாள்? இல்லை; அவளும் உள்ளும் புறமும் வேறு வேறாக பொய் முகங்களைக் காட்டி விட்டுத்தான் தப்பித்து ஓடியிருக்கிறாளா? சந்துருவால் எந்த விதமாகவும் அனுமானிக்க முடியவில்லை. சிறிது நேரம் கண்களை மூடிக் கொண்டிருந்தான். நந்தா கொடுத்துச் சென்ற உறையில் இட்ட அமுதாவின் புகைப்படங்கள் நினைவில் வந்தன. டிராயரை இழுத்து உறையை எடுத்து புகைப்படங்களைப் பார்த்தான். அமுதாவின் சிரித்த தோற்றங்களில் விதியின் விஷமச் சிரிப்பு மேலோங்கித் தெரிந்தது. என்றைக்கோ தான் காதலிக்க விரும்பிய ஒருத்தியின் சகோதரியை இன்று கல்யாணம் செய்து கொண்டு ஒவ்வொரு நாளும் அவளின் எதிரிலேயே வாழ்ந்து கொண்டிருக்க முடியுமாயென்று தன்னையே கேட்டுக் கொண்ட கேள்வி அவனையே ஆவேசப் படுத்தியது. ஏதோவொரு முற்பகலில் தான் செய்த ஒரு செயலுக்கு வேறொரு பிற்பகலில் இப்படியொரு நிசப்தமான அவமதிப்பா?

சந்துரு பற்களைக் கடித்தபடி தலையை பலமாகக் குலுக்கிக் கொண்டான். நந்தா இத்தனை நேரம் அத்தனை சுயேச்சையாக பேசிச் சென்றதுகூட அவனை தண்டித்ததாகத்தான் தெரிந்தது அவனுக்கு. இப்படியே தொடரப் போகிற ஆயுள் தண்டனைக்கு அவ்ன் தயார் இல்லை. அமுதாவுடன் ஏற்பட இருக்கிற திருமண

வாழ்க்கை என்ற விஷப் பரீட்சை அவனுக்கு அவசியமும் இல்லை.

இண்டர்காமில் சுஜாதாவை அழைத்தான்.

''என்ன சந்துரு?"

''வீட்டுக்கு கிளம்பிட்டியா?''

''இதோ கிளம்பிண்டே இருக்கேன்.''

''எனக்கொரு ஹெல்ப் பண்ணணும் சுஜா நீ...''

''விஷயத்தைச் சொல்லு.''

''இப்ப நீ உடனே கிளம்பி ட்ரைவ்-இன் போய் எனக்காகக் காத்திரு. நான் பத்து நிதுஷத்ல வந்திடறேன்...''

சுஜாதா சில விநாடிகள் தயங்கிய பின் கேட்டாள்' ''எனிதிங் ராங்?''

''அமுதான்னு நான் ஒரு பெண் பார்த்திட்டு வந்தேன் இல்லியா?''

''ஆமாம்.''

''அவளுக்கும் எனக்கும் நடக்க இருக்கிற கல்யாண நிச்சயதார்த்தத்தை நீதான் எங்கப்பாகிட்டே சொல்லி எப்படியாவது நிறுத்தணும்.''

''என்னடா திடீர்னு இப்படி சொல்றே?''

''ப்ளீஸ்; நீ போப் ட்ரைவ்-இன்ல வெயிட் பண்ணு சுஜா. பத்து நிமிஷத்ல நானும் வந்திடறேன். வந்து நேர்ல விஷயத்தை டீடெய்லா சொல்றேன்...''

''சரி. ரொம்ப லேட் பண்ணிடாதே.''



''பத்தே பத்து நிமிஷத்ல வந்திடுவேன்."

-இதற்குள் சந்துருவிற்கு வியர்த்துக் கொட்டி மார்புத் துடிப்பு வேகமடைந்திருந்தது.

## 6

வரவழைக்கப்பட்ட உணவுப் பண்டங்கள் தட்டுக்களில் வீணாக அரைகுறையாகக் கிடந்தன. சுஜாதாவின் எதிரில் சந்துரு கன்னத்தில் கை வைத்தபடி அமர்ந்திருந்தான்

''இல்லை சந்துரு; இவ்வளவு தூரம் நீ பயந்து சாகிற அளவுக்கு இந்த .விஷயம் ஒண்ணும் சீரியஸானதா எனக்குப் படலை,'' என்றாள் சுஜாதா.

சந்துரு பதில் சொல்லாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''அந்த நந்தா மூணு நாலு வருஷத்துக்கு முன்னாடி காலேஜ்ல படிச்சிண்டு இருந்தப்போ ஏதோ கொஞ்ச நாள் ரெகுலரா நீ போகிற பஸ்லே பார்த்திருக்கே. ஒனக்கு அவளை ரொம்பப் பிடிச்சிருக்கு. எப்படியோ; இல்லை யார் மூலமோ அவ பேரெயும் தெரிஞ்சு வச்சுண்டே. அந்தப் பொண்ணை லவ் பண்ணிடணும் என்கிற அஃபெக்ஷன் மனசில் ஏற்பட்டுடற அளவுக்கு ரொம்பத் தான் அவமேலே இம்ப்ரெஸ் ஆகியிருக்கே ஆனா; அதற்குள்ளே என்ன ஆயிடுதுன்னா-அந்தப் பொண் திடீர்னு பஸ்ஸில் வர்ரதை நிறுத்திட்டு, காலேஜுக்கு அவாத்து கார்லேயே வர ஆரம்பிச்சிடுது. ஸோ, அதுக்கு அப்புறம் உன்னால் அந்தப் பொண் நந்தாவை பஸ்ல பார்க்க முடியலை. ஃபாலோ பண்ண முடியலை. லவ் லெட்டர் எழுதிக் குடுக்கலாம்னு போட்டிருந்த

ப்ளானையும் உன்னால் நிறைவேத்திக்க முடியலை. காலேஜுக்கு கார்லேயே வந்து கார்லேயே போக ஆரமிச்சுட்டவளை வேற எந்த வழியாலும் அப்ரோச் பண்ணவும் முடியாமே; கம்யூனிகேஷனுக்கு மாற்று வழியும் தெரியாமே அப்படியே விட்டுட்டே நீ... இதான் விஷயம். இல்லையா?''

''இல்லை சுஜா; இவ்வளவுதான் விஷயம்னு ரெண்டே வார்த்தையில சிம்பிளா சொல்லிடலாம் நீ. ஆனா, அந்த விஷயம் எனக்குள்ளே நீ நெனைக்கிற மாதிரி நாட் ஸோ ஸிம்பிள்!'' - சந்துரு சற்று வருத்தமான தொனியில் சொன்னான்.

''அங்கே தான் வரே நீ! சந்துரு பையா; விஷயம் உனக்குள்ளேதான் 'ஸிம்பிள்' கிடையாது. பட் ஆக்ச்சுவல் திங் இஸ் வெரி சிம்பில்! யூ ஸி; அந்த நந்தாப் பொண்கிட்டே நீ ஒண்ணும் எந்த விதத்திலும் மிஸ்பிஹேவ் பண்ணினது கிடையாது...?''

''எந்தப் பெண்கிட்டேயுமே நான் மிஸ்பிஹேவ் பண்ணினது கிடையாது.''

''அசிங்கமா நந்தா பொண்ணைப் பார்த்து கமெண்ட் பண்ணினது கிடையாது?''

''கிடையாது.''

''ஐ லவ் யூனு சொல்லி பேசினதோ சிரிச்சதோ கிடையாது?''

''அதுக்குள்ளேதான் கார்ல போக ஆரம்பிச்சிட்டாளே...''

''ஜஸ்ட் கொஞ்ச நாள் அவளை சைட் அடிச்சிருக்கே...''



''ஊஹூம்; அதைத் தாண்டி அடுத்த கட்டத்தில் காலை எடுத்து வைக்க ஆரம்பிக்கிற நேரத்லதான் ரூட்டை மாத்திட்டா...!

''அதுக்கு அப்புறம் நந்தாவை நீ பார்க்கலை?''

''இதோ; இன்னிக்கி நாலு மணிக்குப் பார்த்தேன்-அதான்!''

''அதற்கிடையிலே பார்க்கலை?''

''இல்லை!''

''ஆனா அவளை நெனைச்சிண்டு மட்டும் இருந்தே?''

''ஆரம்பத்ல அடிக்கடி நெனைச்சுப்பேன். அப்புறம் நாளாக நாளாக நெனைக்கறதும் குறைஞ்சு போயிடுச்சி... ஆனா; நந்தா மேல் எனக்கு ஒரு சமயத்தில் லவ் வந்தது என்கிறது மட்டும் சத்தியம்...''

''அதாவது ஒருதலைக் காதல்?''

''எப்படி வேணுமானாலும் வச்சுக்க!''

''ஃபூல்! என்னத்துக்கு உனக்கு இப்போ மூஞ்சியெல்லாம் இப்படிச் சிவந்து போறது ... ஒரு தலைக் காதல்னு எந்த அர்த்தத்தில் நான் சொல்றேன்னாக்க — உனக்குள்ளே நந்தா மேல் ஏற்கட்ட காதலை அந்த நந்தா கிட்டே வெளிப்படுத்திக்கவே சான்ஸ் இல்லாமே போச்சு என்கிறதை சுட்டிக் காட்டுகிறதுக்காகத்தான் சொன்னேனே தவிர வேற எதற்காகவும் கிடையாது...''

''நீ சொல்றது உண்மையா இருக்கலாம் சுஜா. ஆனா; காதலைத் தெரிவிக்க; ஒருத்திகிட்டே மனசை வெளிப்படுத்த வார்த்தைகளோ கடிதங்களோ தேவை

யில்லை. அதெல்லாம் ரெண்டாம் பட்சம்தான். ஒரே ஒரு பார்வையே காதலைக் காட்டிக் குடுத்திடும்..."

"அதெப்படித்தான் காட்டிக் கொடுக்குமோ...!"

"உன்னை மாதிரி ஜடங்களுக்குத்தான் எப்படிக் காட்டிக் கொடுத்தாலும் தெரியாது!"

"ஹைஹ! இவரு பெரிய காதல் மன்னன்...! இவருக்குத் தான் எல்லாம் தெரியும். எங்களுக்குத் தெரியாது எதுவும். சரி; ஒரே ஒரு பார்வையே காதலைக் காட்டிக் குடுத்திடும்னு பெரிசா பேசறியே; உன் காதலை; உன்னோட பார்வை அன்னிக்கி அந்த நந்தாகிட்டே காட்டிக் கொடுத்ததா—? சொல்லு!"

சந்துரு யோசித்தான். தயங்கினான். வேண்டு மென்றே சொன்னான் "காட்டிக் குடுத்தாலும் குடுத் திருக்கலாம்..."

"படவா ராஸ்கல்; உதைதான் வாங்குவே நீ... நாலு நாள் ஒரு பொண் பின்னாடி நீங்கள்ளாம் சுத்திச் சுத்தி வருவேள்... திருட்டு முழி முழிப்பேள் ... உடனே பொண்ணுங்கள்ளாம் உங்க பார்வையிலிருந்தே உங்க ளோட காதலைத் தெரிஞ்சுக்கணும் ... இல்லே? என்ன நான்சென்ஸ் பாரு...!"

"இப்ப நீ என்ன சொல்றே...இந்த நிச்சயதார்த்தம் நடக்கப் போறதை ஏதாவது ஒரு காரணத்தை எங்க அப்பாகிட்டே சொல்லி நிறுத்தறதில் எனக்கு ஹெல்ப் பண்ணப் போறியா இல்லையா?"—சந்துரு பொறுமை இழந்து கேட்டான்.

"இப்போ என்னத்துக்காக நீ நிச்சயார்த்தத்தையே நிறுத்தணும் என்கிற எக்ஸ்ட்ரீம் ஸ்டெப்புக்குப் போறேன்னு புரியமாட்டேன்கிறது எனக்கு..."—சுஜா தாவும் பொறுமை குறைந்து போய் கேட்டாள்.



"என்னால அந்த அமுதாவைக் கல்யாணம் செய்துக் கிட்டு அவங்க வீட்டிலேயே வாழறதுங்கறது முடியாத காரியம் சுஜா. நந்தா எதிர்ல இயல்பாவே இருக்க முடியாது எனக்கு. அவ்வளவு கில்ட்டியா ஃபீல் பண்றேன்..."

"இதில் கில்ட்டியா ஃபீல் பண்றதுக்கு ஒண்ணுமே இல்லைடா சந்துரு..."

சந்துரு ஏனோ சட்டென்று தலையைக் குனிந்து கொண்டான். அவனின் தலைக்குனிவில் அவன் உணர்ச்சி வசப்பட்டிருப்பதை உணர்ந்து சுஜாதாவும் சில நிமிடங்களுக்கு அங்கும் இங்கும் பார்த்தவாறு மௌன மாக அமர்ந்திருந்தாள். சிறிது நேரம் கழித்து சந்துரு தலை நிமிர்ந்த போது அவனின் கண்கள் சிவந்து போயிருந்தன.

"அட இவனே...! அழுதியா என்ன?" சுஜாதா ஆச்சர்யத்துடன் கேட்டாள்.

சந்துரு சுற்றிலும் மௌனமாக பார்த்துக் கொண்டான்

"அஷடுய்யா நீ! இதுக்கெல்லாம் போய் யாராவது அழுவாளா? நான் இருக்கேண்டா சந்துரு உனக்கு... விட்டுடுவேனா ? ஃபூல்! உனக்கு ஹெல்ப் பண்ணாமே வேற யாருக்கு நான் பண்ணப் போறேன் ... சொல்... அதுக்காக நீ என்னை என்ன செய்யச் சொன்னாலும் செஞ்சிடுவேன்னும் தயவு செஞ்சு எதிர்பார்த்திடாதே. உனக்கு ஹெல்ப் பண்ணனும் என்கிறதுக்காக எதையும் போய் ராங் அப்ரோச் பண்ணிட முடியாது - என்னால... அதைப் புரிஞ்சுக்கணும் நீ..."

"இந்த கல்யாண நிச்சயார்த்தத்தை நிறுத்த உதவி செய்னு நான் சொல்றதில் என்ன ராங் அப்ரோச் இருக்கு உனக்கு?"-சந்துரு சற்று உறுதியான குரலில் கேட்டான்.

''அடிப்படையாவே அது ராங் சந்துரு. என்னிக்கோ அந்த சின்னப் பொண்ணை நீ பார்த்து கொஞ்சநாள் சைட் அடிச்சிருக்கே... அவளை லவ் பண்ண லாமான்னு யோசிச்சிருக்கே...இதெல்லாம் எந்த விதத்தி லேயும் தப்பான நடத்தை கிடையாது. வெரி வெரி நேச்சுரல் அன் நார்மல் ஆக்ஸன் அது. ஜஸ்ட்-இட்ஸ் ஏ பார்ட் ஆஃப் யுவர் யூத். அதுவும் ரொம்ப ரொம்பச் சின்ன போர்ஷன் அது. அதுக்கு மேல அந்த போர்ஷனுக்கு இந்த நிமிஷம் வேற எந்த வேல்யூவும் கிடையாது; அர்த்தமும் கிடையாது. அதனாலதான் அந்த நந்தாவால இன்னிக்கி திடீர்னு உன்னைப் பார்த்ததும் எந்த விதத் திலும் நெகட்டிவ்வா ரீயாக்ட் பண்ண முடியலை...''

''அப்படி சொல்லிடாதே. என்னைப் பார்த்ததும் ஒரு நிமிஷம் என்ன பண்றதுன்னு தெரியாமே திகைச்சு நின்னுட்டா அவ...''

''இருக்கலாம்; அதுகூட ரொம்ப ரொம்ப நார்மலான விஷயம் தான். மூணு நாலு வருஷங்களுக்கு முன்னாடி தன்னைப் பார்த்துக்கிட்டிருந்த ஒரு பையனை திடீர்னு இன்னிக்கி தன்னோட அக்காவைக் கட்டிக்கப் போறவனா பார்க்கிறது ஒரு பெரிய ஷாக்தான். இல்லேன்னு சொல்லலை நான். ஆனா அது ஒரு ப்ளஸெண்ட் ஷாக்...! அதனாலதான் அத்தனை சந்தோஷமா உன்கிட்டே அந்தப் பெண்ணால் சிரிச்சுப் பேச முடிஞ்சது. கொஞ்சங்கூட அதனோட மனசில் கல்மிஷமே இல்லாததாலேதான் - மூதல்ல மார்ச் 31 தன்னோட பிறந்த நாள்னு பொய் சொல்லி உன்னை ஏமாத்தினது ... புரியலை?''

மனத்துக்குள் மிகவும் உருகியும்; சந்துருவிற்காக ஆதங்கப்பட்டும் தான் சுஜாதா கேட்டாள்.



''இப்ப என்னை என்ன பண்ணனும்னு சொல்றே?'' சந்துரு அதிருப்தியுடன் கேட்டான்.

''என்னிக்கோ நீ அவளை சைட் அடிச்சதாகவோ; லவ் பண்றதுக்கு முயற்சி பண்ணினதாகவோ அந்தப் பொண்ணோட மனசில் ரிக்கார்டே ஆகலை. க்ளீன் ஸ்லேட்டா இருக்கு அது.''

''இப்ப நான் அந்தப் பொண்ணைப் பத்தி எதுவுமே சொல்லலை சுஜா. அது க்ளீன் ஸ்லேட்டாவே இருக் கட்டும். ஆனா, நான் என்னோட மனசுக்குள்ளே அதே போல ஒரு க்ளீன் ஸ்லேட்டா இல்லை ... அதுதான் பிரச்சினை இப்ப...''

ஓர் உணர்வுப் பெருக்கம் உயர்ந்து தணிவது சுஜா தாவின் சக்திமிக்க நெஞ்சுப் பகுதியில் தெரிந்தது. சந்துரு உண்மையைக் கண்டு கொள்ள முடியாதவனாக இருக்கி றானே என்ற தர்மசங்கடம்; சுஜாதா பாப் செய்யப்பட்ட கூந்தல் கற்றைகளை சிலிர்த்துக் கொண்டதில் தோற்ற மாகியது. சேமித்துக் கொண்ட புதிய தெம்புடன் அவளின் குரல் ஒலித்தது.

''அந்த பாயிண்ட்டுக்குத்தான் சந்துரு நானும் வரேன். எப்போ அந்தப் பெண் நந்தா ஒரு அழகான க்ளீன் ஸ்லேட்டா இருக்காள்னு உனக்குத் தெரியறதோ அந்த க்ஷணமே நீயும் அதே க்ளீன்ஸ்லேட்தனத்தைப் பிரதிபலிச்சிடலாம்...''

''ஸாரி; நீ என்ன சொல்றேன்னு புரியலை எனக்கு...''

''இந்த நிமிஷம் அந்த நந்தாவை நீ சைட் அடிக்கிறியா?''

''தெரியலை.''

"இந்த நிமிஷம் அந்தப் பொண்ணைக் காதலிக்கிற டெண்டென்ஸி உனக்குள்ளே இருக்கா?"

"தெரியலை."

"தட் இஸ் க்ளீன் ஸ்லேட்...!"

"ஆனா என்னிக்கோ ஒருநாள் இந்த ஸ்லேட்டில் காதல்னு எழுதப்பட்டிருந்ததே?"

"ஸோ வாட்; என்னிக்கோ எழுதப்பட்டது வேற ஒரு என்னிக்கோவில் அழிஞ்சும் போயிடுத்து...! ஸ்லேட் என்கிறது அதுதான் பையா! அதில் எதை வேண்டுமானாலும் எழுதவும் செய்யலாம். எழுதினதை அழிச்சிடவும் செய்யலாம். எதையுமே எழுதாமே இருக்கிறது என்பதில்லை க்ளீன்ஸ்லேட் என்கிறது. எதுவும் அழிஞ்சி போயிடறதுதான் க்ளீன் ஸ்லேட்!"

"நீ சொல்றது 'ஸ்லேட்' என்கிற ஒரு பரிமாணமுள்ள வஸ்துக்கு சரியா இருக்கலாம். ஆனா; மனசு என்கிற நம்மோட மனித மனத்துக்கு அதெப்படி சரியா வரும்...?"

"ஓஹோ; நீ இன்னும் பேஸிக்கா வர்ரியா? வா வா! அதுக்கும் பதில் சொல்றேன்...ரைட்; மனித மனம் என்கிறது ஒரு வஸ்து கிடையாது. அதாவது; இட்ஸ் நாட் ஏ திங்... அதைத்தானே சொல்ல வரே?"

"யெஸ்!"

"யா! மைண்ட் இஸ் நாட் ஏ திங். அது ஒரு வஸ்து கிடையாது. தென் வாட்?"

"இட்ஸ் ஏ ஸ்பேஸ்... மனம் ஒரு வெளி..."

"யா. மனம் ஒரு வெளி ... எல்லையே இல்லாதபரிமாணங்களே அற்ற மிகப் பெரு வெளி–மனம்... அதாவது



விரிஞ்சு கிடக்கிற வானவெளி மாதிரி தான் மனவெளியும். வானவெளியில் எந்தனை எத்தனைதான் மேகக்கூட்டங்கள் கடந்து போனாலும்; அதெல்லாம் கடந்து போன அப்புறம் வானத்தில் எங்கேயாவது–மேகம் கடந்து போன அடையாளம், தடம் பதிஞ்சிருக்கா?"

சந்துரு பதில் சொல்வதற்கு யோசித்துக் கொண்டிருந்தான்.

"வானத்தில் எவ்வளவோ பறவைகள் அங்கும் இங்கும் பறந்து திரியறதுகள். எந்த இடத்திலாவது ஒரு பறவை பறந்து போன 'மார்க்'காவது வனத்தில் ப்ரிண்டாகியிருக்கா?

சந்துரு ஓர் இனிய அதிர்வுடன் சுஜாதாவைப் பார்த்தான். அவளின் விழிகளில் வானப் பெருவெளி பிரதிபலித்தாற் போலத்தான் இருந்தது.

"ஆமாம் சந்துரு; எவ்வளவு தான் மேகங்கள் ஊர்ந்து போனாலும் சரி; எத்தனைதான் பறவைகள் பறந்து கடந்தாலும் சரி; அவை எதுவுமே வானவெளியில் பதிவு ஆறதே கிடையாது. இந்த உண்மை – நீ சொன்னியே 'மனம் ஒரு வெளி'னு; அதுக்கும் அழகா பொருந்தும். மனித மனவெளியிலும் ஆயிரமாயிரம் எண்ணங்கள் வரலாம், போகலாம்– வித்தவுட் மேக்கிங் எனி மார்க்..."

"ஆனா சுஜா; மனசில் ஏதோவொரு மார்க் விழுந்துடற மாதிரி தெரியுதே?"

"அப்போ அங்கே பெரும்வெளியா இல்லாமே மனசு ஒரு குறுகின வஸ்து மாதிரி ஆயிடுதோ என்னவோ... ஆனா ஒண்ணு; எப்போ 'மார்க்' விழற மாதிரியான திடப்

பொருளா மனசு ஆயிடுதோ-அந்த மனசு என்னிக்காவது ஒருநாள் கண்டிப்பா உடைஞ்சு சிதைஞ்சு போயிடும்! மனச்சிதைவோட ஆரம்பப் புள்ளி இப்படித்தான் ஆரம்பமாகறது சந்துரு. ஆனா; வானவெளியா விரிஞ்சு பரந்து கிடக்கிறதில் உடைஞ்சு போறதுக்கு எதுவும் கிடையாது. ஸோ; இந்த இரண்டு வகையில் உன் மனம் எதுன்னு க்ளியரா அப்ஸர்வ் பண்ணிக்கோ... ஆனா; என்னிக்கோ ஒருத்திமேல உனக்கு ஈடுபாடு இருந்தது என்கிறதுக்காகப் போய் பயந்துண்டு ஒரு கல்யாண நிச்சயார்த்தத்தை கேன்ஸல் பண்றது ரொம்ப அபத்தமானது. சங்கீதத்திலே ஆர்வம் இருக்கிற; கொஞ்சம் கூட கல்மிஷமே இல்லாத ஒருத்தி உனக்கு மச்சினியா வர்ரதுக்கு இருக்கா...! நீயும் அவகிட்டே கல்மிஷமே இல்லாத பையனா இருந்திடு-தென் யூ வில் கெட் ஏ வெரி ஹேப்பி ரிலேஸன்ஷிப் வித் ஹர்... தட்ஸ் ஆல். எனக்கு நாழியாறது. நான் கிளம்பறேன். குட்நைட்...''

சுஜாதா புறப்பட்டுச் சென்று வெகு நேரமாகிய பின்பும் சந்துரு ட்ரைவ்-இன் நாற்காலியிலேயே சரிந்து கிடந்தான்-மறுபடியும் மறுபடியும் காப்பி வரவழைத்து அருந்தியவாறு...

## 7

தொலைக் காட்சியில் வயலும் வாழ்வும் பார்த்துக் கொண்டிருந்தார் மகாலிங்கம். அப்போது தொலைபேசி மணி ஒலித்தது. குழந்தைகளின் 'ஹோம் வர்க்' களில் கவனம் செலுத்திக் கொண்டிருந்த செல்வராணி எழுந்து போய் ரிசீவரை எடுத்தாள்.

''ஹலோ...''



''நான் வெங்கடேசன் பேசறேன். யார்மா பேசறது?''

''செல்வராணி பேசறேன் சித்தப்பா.''

''கொஞ்சம் அத்தானைப் பேசச் சொல்லும்மா!''

''இதோ சொல்றேன்!''

ரிசீவரை மேஜை மேல் வைத்துவிட்டு வயலும் வாழ்வும் நிகழ்ச்சியில் ஆழ்ந்து போயிருந்த மாமனாரிடம் வந்தாள் செல்வராணி.

''மாமா; போன்ல உங்களை உங்க மச்சினர் கூப்பிடறார்...'' என்றாள்.

''என்னவாம்?''

''தெரியலை மாமா...''

''ஒண்ணும் இராது. சும்மா போன் பண்ணுவான்...!',

என்று அலுப்புடன் சொல்லிவிட்டு அக்கறை இல்லாமல் வயலும் வாழ்வும் ஒரு நிமிஷம் பார்த்துக் கொண்டிருந்த பின் மகாலிங்கம் மெதுவாக எழுந்து போனார்.

''என்ன வெங்கடேசா?''

''நம்ம சந்துருவோட மாமனார் பெருமாள்சாமி இப்ப கொஞ்ச நேரத்துக்கு முன்னாடிதான் எனக்கு போன் பண்ணினார்.''

''என்னவாம்?''

''அவரோட ரெண்டாவது பொண்ணு; அன்னிக்கி நீங்க பெண் பார்க்கப் போன அன்னிக்கி வீட்ல இல்லாமே போயிடுச்சி இல்லையா?''

''ஆமா.''

''அதனால, இன்னிக்கி அந்தப் பொண்ணு நம்ம சந்துருவைப் போய் அவனோட ஆபிஸ்லேயே பார்த்துப் பேசிட்டு வந்ததாம்.''

"அப்படியா? எங்களுக்குத் தெரியவே தெரியாதே..."

"சந்துரு வந்து சொல்லலையா இதை?"

"அந்தத் தொரை இன்னும் ஆபிஸ்ல இருந்தே வரலையே..."

"அந்தப் பொண்ணுக்கும் ரொம்ப ரொம்ப சந்தோஷம் தானாம்..."

"நல்லது தான். இப்பவே மச்சினிகிட்டேயும் சர்டிபிகேட் வாங்கிட்டான்...! ஆனா வெங்கடேசா; அந்தப் பொண்ணு நம்ம சந்துருவைப் பார்க்கணும்னு நெனைச்சிருந்தா பேசாமே நம்ம வீட்டுக்கு வந்திருக்கலாமே...ஆபிஸ்க்கு என்னத்துக்குப் போகணும் யாராவது பார்த்தா ஏதாவது சொல்றதுக்கா?"

"நான் தான் உங்ககிட்டே அன்னிக்கே சொன்னேனே அத்தான்- அவங்களோட ரெண்டாவது பொண்ணு ரொம்ப ரொம்ப சோஷியல்னு..."

"அதுக்காக அக்காவைக் கட்டிக்கப் போறவனைப் போய் ஆபிஸ்ல பார்க்கணுமாக்கும்... ஹூம்; அந்தக் காலத்ல நான் உங்க அக்காவைக் கல்யாணம் பண்ணி அஞ்சாறு வருஷம் கழிச்சித்தான் என்னோட மச்சினிகளோட முகத்தையே பார்த்தேன்...! அப்படின்னா பார்த்துக்க- நாங்கள்ளாம் அந்தக் காலத்ல எப்படி இருந்திருக்கோம்னு...!"

"உங்களோட காலம் வேற அத்தான்."

"இதைச் சொல்றதுக்குத்தானா போன் பண்ணினே—நிம்மதியா என்பாட்டுக்கு வயலும் வாழ்வும் பார்த்துக்கிட்டிருந்தேன். இன்னிக்குத்தான் கொஞ்சம் உருப்படியா பங்களூர் கத்தரிக்கா சாகுபடி பண்றதைப் பத்தி அழகா சொல்லிட்டிருந்தான். கேட்க விடாமே கெடுத்திட்டே...!"



எதிர்முனையில் வெங்கடேசன் பலமாக சிரித்துவிட்டுச் சொன்னான்:

"எதிரொலிக்கு இதை எழுதிப் போடுங்க! சந்தோஷப்பட்டுப்பான்..."

"ஆமா; எனக்கு வேற வேலை இல்லை பாரு..."

அப்புறம் அத்தான்: இந்த பரிசப் புடவை வாங்கறதுக்கு வர வெள்ளிக்கிழமை போறப்ப அக்கா என்னையும் வரச் சொல்லியிருந்தாங்க. என்னால வரமுடியாது போலத் தெரியுது. அன்னிக்கு ஒரு முக்கியமான வேலையா நான் காஞ்சிவரம் போய் வர வேண்டியிருக்கு. முக்கியமா இதைச் சொல்றதுக்குத்தான் போன் பண்ணினேன்... அக்காகிட்டே சொல்லிடுங்க..."

"இந்த மாதிரி சமாச்சாரத்தையெல்லாம் நேர்ல நீயே வந்து உங்க அக்காகிட்டே சொல்லிடு... எனக்குத் தெரியாது."

மகாலிங்கம் தடாலென்று போனை வைத்து விட்டார். சப்தம் கேட்டு அவரின் மனைவி சமையல் அறையில் இருந்து வந்தாள்.

"யாரு; வெங்கடேசனா போன் பண்ணினான்; என்னவாம்?"

"சுரைக்காய்க்கு உப்பு இல்லையாம்; அதைச் சொல்றதுக்குத்தான் கூப்பிட்டிருக்கான்...!"

"அதானே...! கேட்ட கேள்விக்கு என்னிக்காவது ஒழுங்கா பதில் சொல்லியிருக்கீங்களா?"

"தெரியும் இல்லையா என்னைப் பத்தி... தெரிஞ்சுக்கிட்டும் ஏன் வந்து கேக்கறே?"

"அதானே...! கடைசில கேட்ட நான்தான் பைத்திய காரி. எல்லாம் இந்தச் சந்துருவோட கல்யாணம் முடியட்டும்— அப்புறம் பேசிக்கறேன்... காசி ராமேஸ்வரம்னு என்பாட்டுக்குக் கிளம்பிப் போயிடறேன்— அப்பத் தெரியும்..."

"காசிக்கென்ன; கைலாசத்துக்கு வேணாலும் போ...! சனி விட்டதுன்னு தலையை முழுகிட்டு அக்கடான்னு இருக்கேன்..."

"இருப்பீங்க இருப்பீங்க... ஏன் இருக்க மாட்டிங்க... நாப்பது வருஷம் உங்களுக்கு வடிச்சுக் கொட்டி குடித்தனம் பண்ணியிருக்கேனே— ஏன் சொல்லமாட்டிங்க... போறேன் போறேன் — கைலாசத்துக்குத்தான் போறேன். போனாத்தான் தெரியும்... தெரியாதா எனக்கு... ஒரு அரைநாள் என் தம்பி வீட்டுக்கோ தங்கச்சி வீட்டுக்கோ போயிட்டா 'இப்படிப் போயிட்டாளே... இப்படிப் போயிட்டாளே'னு கிடந்து புலம்பறது. அப்புறம் கைலாசத்துக்கும் போ எங்கேயும் போன்னு சவடால் அடிக்கிறது. மனுசனுக்குள்ளே— எத்தனை தான் நாக்கோ!"...

"உன்னைப் போய் கல்யாணம் பண்ணினேன் பார்...! என்னைச் சொல்லணும்...!"

"இன்னும் நாப்பது வருஷம் கழிச்சிச் சொல்லுங்க— கேக்கறவங்க மெச்சிப்பாங்க...!"

அப்போது சந்துரு வந்து விட்டதின் அடையாளமாக வெளியே அவனின் ஸ்கூட்டர் சப்தம் கேட்டது. அவன் உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாய் மகாலிங்கம் கேட்டார்.

"சந்துரு..."

"என்னப்பா?"



"பெருமாள்சாமியோட ரெண்டாவது பொண்ணு உன்னை ஆபிஸ்ல வந்து பார்த்தாளாமே?"

சந்துருவிற்கு ஆச்சர்யமாக இருந்தது. விஷயம் அதற்குள் வீடுவரை வந்துவிட்டதா...

"ஆமா..."

"கல்யாணமெல்லாம் முடியற வரைக்கும் இப்படி ஆபிஸ்க்கெல்லாம் வரவேண்டாம்னு சொல்லு. எதுவா இருந்தாலும் இங்கே— வீட்டுக்கு வரச் சொல்லு..."

சந்துருவிற்கு எரிச்சலாக வந்தது. பேசாமல் நின்றான்

"எதுக்காக வந்தது அந்தப் பெண்ணு..."

"என்னைப் பாக்கறதுக்காக..."

"ஏன்; இவ வந்து பார்க்கலைன்னா இந்தக் கல்யாணம் நடக்காதோ?"— மகாலிங்கம் ஏளனமான தொனியில் கேட்டார்.

சந்துரு நிசப்தமாக பற்களைக் கடித்துக் கொண்டான்.

"வீட்டோட மாப்பிள்ளையா போயிடப் போறோமேன்னு அவங்க இஷ்டத்துக்கெல்லாம் தலையை ஆட்டிக்கிட்டு இருந்திடாதே... நாளைக்கு உன் மரியாதை தான் காத்துல பறந்திடும்... போ; போய் சாப்பிடு .."

சந்துரு சாப்பிடுகிற மனநிலையில் இல்லை. உடை மாற்றி; முகம் கழுவி விட்டு அம்மாவைத் தேடி பின்புறம் போனான்.

"எப்படா உன் கல்யாணம் முடியும்னு இருக்கு சந்துரு!" - வருத்தமான குரலில் சொன்னாள் அவனின் அம்மா.

"போச்சு போ! இந்தக் கல்யாணத்தை எப்படியாவது உங்ககிட்டே சொல்லி நிறுத்தச் சொல்லலாம்னு

நெனைச்சி வந்தேன்... நீங்க என்னடான்னா எப்படா இந்தக் கல்யாணம் முடியும்னு காத்துக்கிட்டு இருக்கீங்க...'' என்றான் பதிலுக்கு வருத்தத்துடன். சந்துருவின் அம்மா அவனை அதிர்ச்சியுடன் பார்த்தாள்.

''கல்யாணத்தை நிறுத்தச் சொல்லலாம்னு நெனைச்சி வந்தியா...? அந்த மாதிரியெல்லாம் எதுவும் பைத்தியக்காரதனமா செஞ்சிடாதே— உங்கப்பா அந்தக் காலத்தில் செஞ்ச மாதிரி...'' —அம்மா தணிந்த குரலில் சொன்னாள்.

சந்துருவிற்கு இது முற்றிலும் புதிய செய்தி. ஆச்சர்யத்துடன் கேட்டான்:

''அப்பா செஞ்ச மாதிரின்னா...?''

''என்னைப் பார்த்து சரி, சொல்லிட்டு, நிச்சயதார்த்தம் முடிஞ்ச அப்புறம் என்னைப் பிடிக்கலைன்னு திடீர்னு சொல்லிட்டு ஓடிப் போயிட்டார்...! யப்பா... எத்தனை கஷ்டப்பட்டு, எவ்வளவு சமாதானம் பண்ணி அவரை இழுத்து வந்து என்னைக் கட்டி வச்சாங்க தெரியுமா... இடையில அந்த ஒரு வாரம் கிடந்து நான் அழுதிருக்கேன் பாரு... இன்னிக்கி நெனைச்சாலும் பகீர்னு இருக்கு...''

''ஹூம்; இந்த மனுஷனைக் கட்டிக்கிறதுக்காகவா அழுதீங்க...?''

''அப்படியில்லை சந்துரு. அந்த நேரத்ல முக்கியம்— இந்த மனுஷன் கிடையாது... என்னவானாலும் பேசி வைத்த கல்யாணம் நின்னுடக் கூடாதேங்கிறது தான் முக்கியம்... பொண்ணா பிறந்தவளால எதைத் தாங்கினாலும்; அவளோட கல்யாணம் நின்னு போயிடப் போகுது என்கிறதை மட்டும் தாங்கவே முடியாது. தப்பித்தவறிக் கூட அந்த மாதிரி எதுவும் யோசிச்சிடாதே...''

சந்துரு தலை குனிந்தவாறு பெருமூச்சு விட்டான்.



''ஏன் திடீர்னு இப்படி நினைப்பு வந்திருச்சி உனக்கு?''

''என்னவோ ஒரு பயம்— திடீர்னு மனசில— இந்தக் கல்யாணம் வேண்டாம்னு...''

''அதான் ஏன்னு கேக்கறேன்...''

''வீட்டோட மாப்பிள்ளையா போறதெல்லாம் சரிப்பட்டு வருமான்னு— சந்தேகமா இருக்கு எனக்கு...''

—பொய்யான காரணத்தைச் சொல்லிவிட்டு சந்துரு ஒரு டம்ளரில் தண்ணீர் மொண்டு குடிக்கிற மாதிரி பாவனை செய்தான்.

''நல்லா உன்னை யோசிச்சிப் பார்த்துக்கத்தானே சொன்னோம் எல்லோரும்... நீயும் நல்லா யோசிச்சித் தான் சொன்னே... அன்னிக்கி சரின்னு சொல்லிட்டு இன்னிக்கு வந்து பயமா இருக்குன்னு சொன்னா என்ன அர்த்தம்...? உங்கப்பா காதுல கீதுல விழுந்திடாமே... விழுந்தது— வீட்டையே ரெண்டாக்கிடுவார்...''

''அவர்கூட காலத்துக்கும் இந்த வீட்டிலேயே மாரடிச்சுக்கிட்டு கிடக்கறதுக்குப் பயந்துக்கிட்டுத்தான் அந்த இந்திராநகர் காரரோட வீட்டுக்கு வீட்டோட மாப்பிள்ளையா போயிடலாம்னு நெனைச்சேன்...''

''நீயாவது போய் அக்கடான்னு இரு. சும்மா எதையாவது நெனைச்சி மனசைப் போட்டுக் குழப்பிக்கிட்டு எங்களையும் குழப்பிடாதே. வா; வந்து சாப்பிடு...''

''ஸாரிம்மா; சாப்பிடற நிலையில நான் இல்லை...''

''ஏன்; வெளியில எங்கேயும் சாப்பிட்டியா...?'' என்று கேட்டபடி மகாலிங்கம் உள்ளே வந்தார்.

''ப்ரண்டஸ்கூட ட்ரைவ்-இன் போயிருந்தேன்...'' சந்துரு சற்று பயந்தபடி சொன்னான்.

"பெருமாள்சாமியோட ரெண்டாவது பொண் உன்னோட ஆபிஸ்க்கு வந்திருந்ததாமே...?"

"ஆமாப்பா..." —கேட்டதையே கேட்கிறாரேயென்ற எரிச்சலுடன் சொன்னான்.

"என்னத்துக்கு?"

"அமுதாவோட போட்டோவைக் குடுக்கறதுக்காக எடுத்திட்டு வந்திருந்தா?"

"அது யாரு அமுதா?"

மகாலிங்கம் அலட்சியமாகக் கேட்டதும் சந்துருவிற்கு மனத்துக்குள் வெறியே மூண்டது. பளீரென அவருடைய கன்னத்தில் அறை கொடுக்க அவனுடைய உணர்வுகள் படபடத்தன. தன்னை மிகவும் குறுக்கிக் கொண்டு அவருக்கு பதில் சொன்னான்.

"அமுதாப்பா... நாமெல்லாம் போய் பார்த்துட்டு வந்த இந்திரா நகர் பொண்ணு."

ஓ... அந்தப் பொண்ணோட பேர் அமுதாவா? யாருக்கு ஞாபகமிருக்கு பேரெல்லாம்... சரி; எங்கே அவ போட்டோ... எடுத்து வா பார்க்கலாம்."

சந்துருவிற்கு அப்போதுதான் நினைவு வந்தது. போட்டோக்களை ஆபிஸில் மேஜையின் டிராயரிலேயே விட்டு விட்டு வந்திருந்தான்.

"போட்டோவை ஆபிஸ்லேயே வச்சிட்டு வந்துட்டேன்ப்பா."

"அதுசரி; உன் மச்சினி உன்னை ஆபிஸ்ல வந்து பாக்கிறா... நீ என்னடான்னா போட்டோவை ஆபிஸ்ல வச்சிட்டு வந்துட்டேன்னு சொல்றே... போ போ; நாளைக்கு உன் குடித்தனத்தையும் ஆபிஸ்லேயே



வச்சுக்கோ...! ஏய்— பாத்துக்க; நீ பெத்து வச்சிருக்கிற பிள்ளை எப்படி இருக்கான்னு..."

—சொல்லிவிட்டு மகாலிங்கம் டாய்லெட் பக்கம் போய் விட்டார். அவர் போன திசையில் கைகளை நீட்டி மனத்துக்குள் நன்றாக திட்டிவிட்டு, சந்துரு வேகமாக தன்னுடைய அறைக்குள் போய் கதவைப் பூட்டிக் கொண்டான். அவனைச் சுற்றிய எல்லாமே தீவிரப்பட்டு விட்டாற் போலிருந்தது. எந்தக் காரணத்தைச் சொன்னாலும், இனி கல்யாண நிச்சயார்த்தத்தை முறிப்பது என்பது குடும்பத்திற்குள் மேலும் கசப்பான உறவுச் சிதைவுகளை உண்டு பண்ணிவிடும் என்பது மிகவும் தெளிவாகவே தெரிந்தது. என்ன செய்வதென்று புரியாமல் சந்துரு குழம்பினான். திருமணத்தை நிறுத்துவது அமுதா என்ற பெண்ணின் மனநிலையில் எத்தகைய அதிர்வுகளை ஏற்படுத்தும் என்கிற பக்கத்தையும் யோசித்துப் பார்த்தான். அத்தனை தூரம் மனிதாபிமானக் குறைவாக நடந்து கொள்ளவும்தான் அவனின் மனம் வெட்கப்பட்டது. பெருமூச்சுடன் நந்தாவை நினைத்துப் பார்த்தான். தன்னை வந்து ஆபிசில் பார்த்து விட்டுப் போனதும் வீட்டில் போய் தான் ஏற்கனவே அவளுக்குத் 'தெரிந்தவன்' என்பதை நந்தா வீட்டில் சொல்லியிருப்பாளா இல்லையா என்பதை சந்துருவால் ஊகிக்க முடியவில்லை. சில வருடங்களுக்கு முன்பு தான் அவளை பஸ் பயணங்களில் பின் தொடர்ந்திருக்கிற நினைவுகளின் நெருடல் உண்மையிலேயே அவளில் இல்லையா? — பல நிமிடங்களுக்கு சந்துரு சிந்தனையிலேயே ஆழ்ந்திருந்தான். என்றோ பார்வையில் இருந்தே விலகி மறைந்து போன ஓர் நதி— இன்றைக்கு அவன் இருக்கும் திசை நோக்கியே திரும்பி ஓடி வருவது போலிருந்தது. ஆனால்; அன்றைக்கு மூழ்கித் திளைக்க ஆசைப்பட்ட அந்த நதியில் இன்று கால் பதிக்கக்கூட மனம் கூசுகிறது. நந்தாவின் ஒரே ஒரு பார்வைக்காக அன்றைக்கெல்லாம் தவித்திருக்கும் மனம்

இன்று தலை நிமிர்ந்து அவளைக் காணவே அஞ்சுகிறது ..

சந்துரு கண்களை மூடியவாறே கிடந்தான். கடந்த காலத்தின் ஞாபகப் பதிவு துளிக்கூட இல்லாமல் எப்படி நந்தாவால் அத்தனை இயல்பாகப் பேசி மகிழ முடிந்தது? திரும்பத் திரும்ப அவனுள் ஒலித்த இந்தக் கேள்விக்கு எந்தப் பதிலையும் கண்டு பிடிக்க முனையாமல் நகம் கடித்துக் கொண்டிருந்த அவனுடைய முகம் வெகு நேரத்திற்குப் பின் இளம் புன்முறுவலில் மலர்ச்சியுற்றது. உணர்வுகளில் கவிந்திருந்த திகைப்பு சிறிது சிறிதாக விலகியது. நந்தாவின் தோற்றம் காற்றில் ஆடும் திரைத்துணி போல ஒய்யாரமாக அவனுள் ஆடியது. காலத் திருப்பத்தின் விநோதத்தை எண்ணிப் பிரமித்தபடி சந்துரு எழுந்து உட்கார்ந்தான். என்றைக்கோ காதலியாகக் கிடைக்க முடியாதவள்; இன்றைக்கு மைத்துனியாக அருகில் வர இருப்பது தெய்வத் திருவிளையாட்டு போல் தெரிந்தது...!

சந்துரு, சிறிது உணர்ச்சி வசப்பட்டு உடலைச் சிலிர்த்துக் கொண்டு தோழி சுஜாதாவின் கூற்றை எண்ணிப் பார்த்தான்.

'...சங்கீதத்தில் ஆர்வம் இருக்கிற; கொஞ்சங்கூட கல்மிஷமே இல்லாத ஒருத்தி உனக்கு மச்சினியா வர்ரதுக்கு இருக்கா...! நீயும் அவகிட்டே கல்மிஷமே இல்லாத பையனா இருந்திடு. தென் யு வில் கெட் ஏ வெரி ஹேப்பி ரிலேஸன்ஷிப் வித் ஹர்...'

மீண்டும் மீண்டும் அவனுக்குள் ஒலித்த சுஜாதாவின் இந்தச் சொல்லில் சந்துரு சற்று போதைப்பட்டே எழுந்து நின்று ஓர் பதவிப் பிரமாணம் போல; அவனுக்கு மட்டுமே கேட்கிற குரலில் முன் மொழிந்தான்.



"நன்றி சுஜா. உனக்கு என் நன்றி. உண்மையிலேயே உனுடைய அட்வைஸ் மிகவும் உயர்ந்தது. சங்கீதக் கலையில் ஆர்வம் கொண்டிருக்கிற நந்தா என் மைத்துனியாக கல்மிஷமே இல்லாமல் வருகை தந்திருப்பது உண்மையில் என்னையும் சந்தோஷப் படுத்தவே செய்கிறது. நானும் நீ சொன்னபடி கல்மிஷமே கிடையாத பையனாக அவளுடன் இருப்பதற்கு முயற்சி செய்கிறேன். ஆனால், ஒருவேளை நான் என்னுடைய முயற்சியில் தோற்று விட்டால் அதற்காக உடனே என்னை நீ தவறாகப் பேசி என் மனத்தைப் புண்படுத்தி விடாதே. நான் பெரிய உதாரண புருஷன் இல்லை. என்னைப் போல எல்லா விதத் தவிப்புகளும் கல்மிஷங்களும் நிறைந்த மிகச் சாதாரண மானிடன்தான் நான்...! இருந்தாலும்; அந்த நந்தாவுடன் நல்ல கல்மிஷம் இல்லாத உறவு நான் கொள்ள என்னை நீ வாழ்த்துவாயாக......!"

# 8

**கோ**டை காலத்திற்கு இன்னும் நாட்கள் இருந்தாலும் கூட, சற்றே காலத்திற்கு முரணான வெப்பம் கொண்டிருந்த ஞாயிற்றுக் கிழமையின் மாலை நேரத்தில்; என்றைக்கும் இல்லாத விசேஷமாக தேவேந்திரனும் செல்வராணியும் தங்கள் இரண்டு குழந்தைகளோடு மெரீனா கடற்கரைக்கு வந்திருந்தார்கள். காந்தி சிலையின் இரண்டு புறமும் விரிந்திருந்த புல்வெளியில் அமர்ந்து வேர்க்கடலை தின்றார்கள். சுண்டல் சாப்பிட்டார்கள். குல்பி ஐஸ் வாங்கி ருசி பார்த்தார்கள். குழந்தைகள் இரண்டும் சிறிது தள்ளி மற்ற குழந்தைகளின் விளையாட்டுகளைக் கவனித்துக் கொண்டிருக்க; இத்தனை நேரமும் தனக்குள் இறுக்கி வைத்திருந்த எரிச்சலை செல்வராணி கணவனிடம் வெளியிட்டாள்.

''அதென்ன அது; இந்த அமுதாவுக்கு மட்டும் உங்கம்மா பரிசப் புடவை- மூவாயிரம் ரூபாய்க்கு மேல வாங்கியிருக்காங்க... பெரிய சீமான் வீட்டுப் பெண் என்கிறதாலேயா?''

''போய் எங்கம்மாவையே கேக்கறதானே நீ!''- தேவேந்திரன் பட்டும் படாமலும் சொன்னான்.

''ஆமா; கேக்க வேண்டியதுதான் உங்கம்மாவை... உடனே எனக்கு சண்டைக்காரி என்கிற பட்டம்தான் கிடைக்கும்...''

''வாங்கிக்க பட்டத்தை...அவனவன் ஏதாவது பட்டம் கிடைக்காதான்னு கிடந்து அலையுறான்...!''

''இதான் உங்ககிட்டே; என் விஷயமா எதையாவது சொன்னா இப்படி அலட்சியமாத்தான் பேசுவீங்க...'' செல்வராணி முகம் சிவக்க சொன்னாள்.

''ஆமா...உனக்கு இந்தப் பரிசப் புடவைதான் பெரிய கவலை. எனக்குத் தனிக்குடித்தனம் போறதுக்கு வழியே இல்லையேங்கிற கவலை... பாரு; அவனவன் ஏ்தோ எம். பி. ஏ படிச்சிட்ட ஒரே தகுதியில வீட்டோட மாப்பிள்ளையா போறான்—! நான் எங்கே போறது... இப்படியே காலத்துக்கும் எங்க அப்பன் மூன்னாடி குண்டுச் சட்டிக்குள்ளேயே குதிரை ஓட்டிட்டு இருக்க வேண்டியதுதான்...!''

சில நிமிடங்கள் இருவருமே பேசாமல் இருந்தார்கள். பின் தேவேந்திரன் சொன்னான்:

''அதுசரி; அதென்ன அது; அன்னிக்கி சந்துருவோட கல்யாண நிச்சயார்த்தம் சமயத்ல அவனோட ஃப்ரண்ட்- அந்த பாப்தலைக்காரி ஒரே அட்டகாசம் பண்ணினா! என்னமோ இவதான் பிள்ளை வீட்டுக்காரி மாதிரி எல்லாரையும் வாங்க வாங்கன்னு கும்பிடறா. காப்பி சாப்பிடுங்க காப்பி சாப்பிடுங்கன்னு ஒரேடியா உபச்சாரம் பண்றா... மனசுக்குள்ளே என்ன நெனைச்சிட்டு இருக்கானு தெரியலையே... சந்துருவை வாடா போடான்னு வேற கூப்பிட்டு அலட்டிக்கிட்டா...!''



''சந்துருவைவிட அவ ஒரு வயது பெரியவளாம்!''

''பெரியவளா இருந்தா- வாயும் பெரிசா இருக்கணுமா?! கண்றாவி; நானும் கவனிச்சுக்கிட்டே இருந்தேன்- சரக்னு எதையாவது சொல்லி எங்கப்பா அவளை உட்கார வச்சிடுவார்னு... ஊஹூம்; அந்த மனுஷன் என்னமோ வாயையே திறக்கலை...''

''அதான் எல்லாரும் போன அப்புறம் சந்துருவைக் கூப்பிட்டு நல்லா டோஸ் விட்டாராமே...''

''அந்த பாப்தலைக்காரி தான் அப்படின்னா; அந்தப் பயலோட மச்சினி அதைவிடக் கண்றாவி...! ஒரு கிண்ணம் சந்தனத்தை அவன் ஷர்ட் மேல கொட்டிட்டு குதிக்கிறா குதிக்கிறா- [கொரங்கு மாதிரி குதிக்கிறா...! இவனும் பல்லைக் காட்டி சிரிச்சிட்டு சும்மா இருக்கான்... என்னவோ போ; மச்சினிகாரி சட்டையிலே சேற்றை பூசினால் கூட ஜாலியாத்தன் இருக்குமோ என்னமோ...! அதுசரி- எனக்கெங்கே தெரியும் இதெல்லாம் எனக்குத்தான் மச்சினியே கிடையாதே...''

''ரொம்ப கவலைப் படற மாதிரிதான் இருக்கு- பேசறதைப் பார்த்தா...!''

தேவேந்திரன் சிறிது நேரம் யோசித்துக் கொண்டிருந்த பின் சொன்னான்:

''ராணி; உன்கிட்டே ஒரு விஷயத்தை இதுவரைக்கும் சொன்னதே இல்லைன்னு நினைக்கிறேன். மச்சினி

கிச்சினின்னு பேசினதும் தான் ஞாபகத்துக்கு வருது அது. அதாவது; நமக்குக் கல்யாணமான புதுசில் உனக்கு டைபாய்ட் ஜுரம் வந்து நீ ஒரு மாதத்துக்கும் மேல உங்க அம்மா ஊருக்குப் போய் இருந்தியே- ஞாபகமிருக்கா?''

''ஏன் இல்லாமே?''

''அப்ப நான் உன்னைப் போய் பார்த்துட்டு ரெண்டே நாள்ல திரும்பி வந்திடறதா எங்கப்பாகிட்டே சொல்லிட்டு உங்க ஊருக்கு வந்து பேசாமே பத்து நாள் இருந்திட்டேன்- இல்லையா?''

''ஆமா...''

''அதுக்கு எங்கப்பா எங்க அம்மாகிட்டே, 'தேவேந்திரன் மாமியார் வீட்ல போய் பத்து நாள் உட்கார்ந்துக்கிட்டு என்ன பண்றான்? அங்கே அவனுக்கு மச்சினி கூட கிடையாதேன்னு' பயங்கர கிண்டலா சொன்னாராம்...! எப்படிச் சொல்லியிருக்கார் பார்; என்ன மாதிரி கிரிமினல் மைண்ட் இருந்தா அப்படிச் சொல்லியிருப்பார்...''

'ஏன் நீங்க இதை இத்தனை வருஷம் என்கிட்டே சொல்லவே இல்லை?''

''என்னத்துக்குச் சொல்லனும்னுதான்...!''

''சே...! சரியான திருதுராஷ்டிரன் குடும்பம்!''

''உடனே என்னையும் சேர்த்துச் சொல்லிடு!''

சிறிது நேரம் இருவரும் மௌனமாக இருந்தார்கள். கடற்கரைச் சாலையின் நீண்ட தென்புறத்தைப் பார்த்துக் கொண்டிருந்த செல்வராணியின் முகம் சட்டென மாறுதலுற்றது.

''அங்கே பாருங்க- ரொம்ப தூரத்ல கார்ல இருந்து இறங்கறது நம்ம சந்துருதானே?''



-அவசர அவசரமாகக் கேட்டாள்.

தேவேந்திரன் உடனே அந்தத் திசையில் திரும்பிப் பார்த்தான்.

''இன்னும் அவனுக்குப் பின்னாடி கார்ல இருந்து யாரெல்லாம் இறங்கிறதுன்னும் பாரேன்... அவனோட வுட்பி- அமுதா; அவளுக்குப் பின்னாடி அவளோட தங்கை-நந்தியா நந்தாவா... அவ...''

''எங்கேயோ ப்ரண்டைப் பார்க்கப் போறதா உங்கம்மாகிட்டே சொல்லிட்டுப் போனார்......''

''இவங்க தான் ப்ரண்ட்ஸ்...! ஜாலிதான் சந்துரு பயலுக்கு...!''

''வாங்க, வாங்க. நாம எழுந்து போயிடலாம்- வர்ரதைப் பார்த்தா அவங்களும் இந்தப் பக்கம் தான் வர்ர மாதிரி இருக்கு...''

''ஆமாமா. வா-அலைப் பக்கம் ஓடிடலாம். நம்மைப் பார்த்தா அவன் வழிவான். அவனைப் பார்த்தா நாம் வழிவோம்...! என்னத்துக்கு வம்பு...''

செல்வராணியும் தேவேந்திரனும் குழந்தைகளை அழைத்துக் கொண்டு கரையை நோக்கி மணலில் இறங்கி வேகமாக நடந்தார்கள்.

சந்துரு அமுதாவோடும் நந்தாவோடும் மிக மிக மெதுவாக அகன்ற நடைபாதையில் காந்தி சிலையை நோக்கி நடந்து கொண்டிருந்தான். அவனின் பிரக்ஞை முழுவதும் உல்லாசம் பொங்கித் ததும்பிக் கொண்டிருந்தது. மனைவியாகப் போகிறவளுடன் காரில் இருந்து இறங்கி வீதியில் நடப்பதின் சுகம் முற்றிலும் அவனுக்குப் புதியதாக

இருந்தது. எதிரில் வருகிறவர்களிடமெல்லாம் 'இவள் தான் என் வுட்பி-அமுதா; அவள்தான் என்னுடைய ஒரே மைத்துனி-நந்தா...!' என அறிமுகம் செய்து வைக்க வேண்டும் போலிருந்தது! மானசீகமாக அறிமுகமும் செய்தான்!

இந்தச் சாலையில் அவனுடன நந்தா வருவது-அவனின் வேறொரு மனச் சதுக்கத்தில் வேறொரு ஆறுதல் பரிசாகவும் தெரிந்தது! இந்தச் சாலையில்தான் நந்தா சில வருடம் முன்பு பயின்ற கல்லூரி இருக்கிறது...! இந்த வழி போகிற பேருந்துகளில் தான் ஒரு காலத்தில் சந்துரு அவளின் பார்வைச் சந்திப்பிற்காக பல சந்தர்ப்பங் களில் பின் தொடர்ந்திருக்கிறான்...

சந்துரு ஒரு விநாடி நந்தாவை கடைக் கண்ணால் திருப்தியுடன் பார்த்துக் கொண்டான்!

''அத்தான்; நேரா கண்ணகி சிலை வரைக்கும் நடக்கலாமா?''-நந்தா கேட்டாள்.

''ப்ளீஸ்; என்னை நடக்க மட்டும் சொல்லாதீங்க—!''

''என்னக்காக இப்படிச் சொல்றார்... நீ பிசாசு மாதிரி நடப்பே...''

''அப்ப இங்கே காந்தி சிலைக்குப் பக்கத்திலேயே உக்கார்ந்துக்கலாம்...'' அமுதா சொன்னாள்.

''நடக்கணும்னா நடக்கலாம்!''- சந்துரு சொன்னான்.

''இல்லைங்க. உட்கார்ந்துப்போம்.''

''ரெண்டு பேரும் மாறி மாறி வழியாதீங்க...!'' நந்தா சிரித்தபடியே சொன்னாள்.

அமுதாவிற்கு சந்தோஷமான கோபம் வந்தது. ''இரு...உன்னை வீட்ல வந்து பேசிக்கறேன்...'' என்றாள்.



அருகில் விலை உயர்ந்த ஷிபான் புடவைகளின் நறுமணம்; பெரிய செல்வந்தர் வீட்டுச் சகோதரிகளின் இனிய ஊடல்; மிக பக்கத்தில் அருமையான மஞ்சள் வெயில் தெளிக்கப்பட்ட சாயங்காலம்... சந்துரு கர்வத் துடன் இரண்டு கைகளையும் பேண்ட் பாக்கெட்டில் விட்டுக் கொண்டபடி கம்பீரமாய் நடந்தான்...!

மூவரும் புல்வெளியில் அமர்ந்து கொண்டார்கள். அமுதா மிகவும் சந்துருவிற்கு நெருக்கமாய் உட்கார்ந்து விடாமல் சற்றுத் தள்ளி நந்தாவிற்கு அருகாமையில் துளியளவு சங்கோஜத்துடன் அமர்ந்திருந்தாள்—இரண்டு விலை உயர்ந்த பெண்களுடன் இருக்கின்றோம் என்ற மெலிதான பெருமிதம் சந்துருவின் கண்களில் பள பளத்தது!

''நிச்சயதார்த்தம் ஆகி ஒரு வாரம்தான் ஆகுது. அதுக்குள்ளே எத்தனையோ நாள் ஆயிட்டமாதிரி யிருக்கு...'' நந்தா சொன்னாள்.

எனக்கென்னமோ நாள் இறக்கை கட்டிப் பறக்கிற மாதிரித் தெரியுது'' என்றான் சந்துரு.

''பேசாமே நீங்க ரெண்டு பேர் மட்டும் வந்திருக்க லாம். என்னையும் வீணா இழுத்திட்டு வந்துட்டிங்க '' நந்தா தொடர்ந்து சொன்னாள்.

''இல்லை நந்தா. நோ ப்ராப்ளம்...''

''எனக்காக சொல்லாதீங்க...''

''ரியல்லி......''

''உங்க ஃப்ரண்ட் மிஸ் சுஜாதா எப்படியிருக்காங்க அத்தான்?''

''ஷி இஸ் ஃபைன்.''

''ஸாலிட் வுமன்— இல்லே? ஐ லைக் ஹர் வெரிமச்...''

''ரொம்ப ப்ரில்லியண்ட் லேடி... அவளோட திறமைக்கு எங்கேயோ இருக்கணும் அவ... ஆனா; கல்யாணமானதும் ஆஸ்திரேலியா போயிடணும் என்கிற ஐடியாவில்— ஒரு ஜஸ்ட் ஃபார் ஜாப்— என்கிற ஐடியாவில் எங்க கம்பெனியில் இருக்கா...''

''அப்போ அவங்க கல்யாணமும் ஃபிக்ஸ், ஆயிடுச்சா?''

''லவ் மேரேஜ்... பாலமுருகன்னு வேற கேஸ்ட் பையன் ஒருத்தன். கெமிக்கல் என்ஜினியரிங் படிச்சிட்டு லிப்யாவில் இருக்கான். இவளைவிட படு ப்ரில்லியண்ட் பாய் அவன்... ஆக்ச்சுவலா— சுஜாவை விட ரெண்டு வயசு சின்னவன் அந்தப் பையன்.. காண்ட்ராக்ட்ல லிப்யா போயிருக்கான். அது முடிஞ்சு அவன் வந்ததும் மேரேஜ் நடக்கும்...''

''நந்தா நந்தா, அந்த மேகத்தைப் பாரேன்— மகாபலிபுரக் கோயில் மாதிரி இல்லே?''— கடற்புரத்தில் பெரும் மேகக் கூட்டத்தைக் காட்டி அமுதா கேட்டாள்.

''ஆமா... உனக்கு எதைப் பார்த்தாலும் கோயில் மாதிரிதான் தெரியும்'' என்றாள் நந்தா.

மேகத்தை சிறிது நேரம் கவனித்துவிட்டு சந்துரு சொன்னான்: ''யெஸ்—அந்த மேகம் அமுதா சொல்ற மாதிரி ஒரு கோயில் கோபுரம் மாதிரிதான் இருக்கு.''

''உங்களுக்குத் தெரியுமா அத்தான்; எங்க அக்காவுக்கு கோயில்னா பயங்கர உயிர்...''

''அப்படியா?''

''ஒரு பீரோ நிறைய தகவல்கள் சேகரிச்சு வச்சிருக்கா!''

''எதைப்பற்றி?''



''தமிழ் நாட்டில் இருக்கிற ஆயிரக்கணக்கான கோயில்கள் பற்றி...''

''அப்படியா...? யாருமே என்கிட்டே அமுதாவோட இந்த விஷயத்தைச் சொல்லவே இல்லையே...'' சந்துரு கொஞ்சம் ஆச்சர்யத்துடன் கேட்டான்.

''சொல்லலையாக்கா நீ?''— நந்தாவும் ஆச்சர்யப் பட்டு அமுதாவைக் கேட்டாள்.

இல்லையென்று அமுதா அழகாகத் தலையை அசைத்தாள். உடனே நந்தா பல விஷயங்களை வெளியிடப் போகிற தோரணையில் சப்பணமிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''அமுதாக்காவுக்கு சின்ன வயசில் இருந்தே கோயில் ரொம்பப் பிடிக்கும் , அத்தான்... பிடிக்கும்னா— கோயில்ல போய் சாமி கும்பிடறதைச் சொல்லலை... அந்தக் கோயிலோட கோபுர அழகு; அதில் உள்ள சிற்பங்கள்; விக்ரஹங்கள்; சந்நிதிகள்; அந்தக் கோயிலைக் கட்டியவர் யார்; எந்த வருஷம் கட்டினார்— போன்ற பல விஷயங்களையும் தெரிஞ்சு அதையெல்லாம் அழகா டைப் பண்ணி பண்ணி— நிறைய ஃபைல்ஸ் வச்சிருக்கா... எனக்குத் தெரிஞ்சு முந்நூறு ஃபைல் வச்சிருக்கா... அப்பாதான் அக்கா ஆசைப்படற கோயில்களுக்கெல்லாம் கூட்டிட்டு போவாங்க... அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக் வந்த அப்புறம்தான் அக்கா கோயிலுக்காக அங்கே இங்கேன்னு போறதையெல்லாம் விட்டா...''

உண்மையிலேயே சந்துருவிற்கு இத்தகவல் மிகவும் சந்தோஷம் தந்தது. மனைவியாகப் போகிறவளிடம் படிந்திருக்கும் ஓர் வித்தியாசமான ரசனை அவனுக்கு ஓர் இதத்தையே தந்தது. இதுவரை அமுதா என்ற பெண்ணிடம் ஏற்பட்டிராத உவகை அவனுள் அரும்பியது. சற்று

மூன் அமுதா சுட்டிக் காட்டிய மேகத்தை புதிய அந்நியோந்நியத்துடன் நிமிர்ந்து பார்த்தான்.

"என்ன அத்தான், மறுபடியும் அந்த மேகத்தைப் பார்க்கறீங்க... மகாபலிபுரம் கோயில் தெரியுதான்னா?" —நந்தா கிண்டலாகக் கேட்டாள்.

"ஏய், சும்மா இரேன் வாயை மூடிட்டு..." என்று அமுதா தங்கையைக் கிள்ளி வைத்தாள்.

"அமுதாவோட அந்த ஃபைல்ஸ் எல்லாம் பாக்கிற துக்கு இன்னொரு நாள் வரேன்..." சந்துரு சொன்னான்.

"யூ ஆர் வெல்கம்'!'— அமுதா மன நிறைவுடன் சொன்னாள்.

"நீங்க கோயில்களுக்கெல்லாம் போறதுண்டா அத்தான்?"— நந்தா கேட்டாள்.

"விசேஷ கவனத்தோடு போனது கிடையாது... இனிமேதான் அமுதாவோடு போகணும்..."

அமுதா மனசுக்குள் சந்துருவிற்கு நன்றி சொல்லிக் கொண்டாள். இந்த அங்கீகார ஒற்றைத்துளியே அவளுள் கடல் என நிரம்பி வியாபித்தது.

"அப்படி ஒரேயடியா சொல்லிடாதீங்க அத்தான். அப்புறம் உங்களை ஊர்ல இருக்கிற அத்தனை கோயில் லேயும் ஏறி இறங்க வச்சிடுவா..."

"ஸோ வாட்?"

"அக்கா— ஞாபகமா கேட்டுக்க; நாளைக்கு ஏதாவது பேச்சு மாறினார்னா, பிடிச்சுக்க..."

இப்போது சந்துரு கொஞ்சம் தீவிரத் தன்மையுடன் குறுக்கிட்டான்...



"இதுவரைக்கும் அப்படி எத்தனை கோயில்கள் பத்தி தகவல்கள் கலெக்ட் பண்ணியிருக்கே அமுதா";

"ஸாரி; அந்தக்கணக்குப் பார்க்கலை இதுவரைக்கும்' ஒரு வாரம் டயம் தாங்க... கணக்குப் பார்த்து சரியா சொல்லிடறேன்..."

"ஏதாவது ரெண்டு மூணு கோயில் பத்தி— இப்ப கொஞ்சம் சுருக்கமா சொல்லேன்—" சந்துரு வாட்ச்சைப் பார்த்து விட்டுக் கேட்டான்.

அமுதா தயக்கத்துடன் தங்கையைப் பார்த்தாள்.

"என் முகத்தைப் பார்த்தா..."

"இல்லைடி. எந்தக் கோயிலைப் பத்திச் சொல்ற துன்னு தெரியலை..:"

"அதான்— அந்த மேகம் மகாபலிபுரத்துக் கோயில் மாதிரித் தெரியுதுன்னு சொன்னியே—அந்த மகாபலிபுரக் கோயிலைப் பற்றியேதான் சொல்லேன்..."

நந்தா எடுத்துத் தந்த புள்ளியிலேயே சில நிமிடங் கள் ஆழ்ந்திருந்த அமுதாவின் மனத்துள் சொல்ல வேண்டிய தகவல் முழுமையாக வடிவம் பெற்றது. சந்துருவின் முகத்தை நேருக்கு நேர் பார்த்துச் சொல்ல வெட்கமாக இருந்ததால் தங்கையைப் பார்க்கும் தோரணையில் சொன்னாள்.

"மாமல்லபுரத்து கடற்கரைக் கோவிலைக் கட்டிய ராஜசிம்மன்தான் காஞ்சிபுரத்ல இருக்கிற கைலாசநாதர் கோயிலையும் கட்டினான் நந்தா. அதே ராஜசிம்மன் கட்டின இன்னொரு அற்புதமான கோயில் விழுப்புரத் துக்குப் பக்கத்தில் பனைமலை என்கிற ஊரில் இருக்கு. இந்த மூணு கோயிலுக்கும் போனப்பத்தான் எனக்கொரு புது விபரமே கிடைச்சது. ஒரே கால கட்டத்தில, ஒரே

ராஜாவால கட்டப்பட்ட இந்த மூணு கோயிலுமே ஒரு முக்கோண இணைப்பில் பார்த்தா— ஒரு யந்திரம் போல தோணுச்சு எனக்கு அதைவிட இன்னொரு முக்கியமான விஷயம் என்னனாக்க—இந்த மாமல்லபுரம் கோயில்—கடற்கரையில். காஞ்சிவரம் கைலாசநாதர் கோயில்—சமவெளியில். பனைமலையில் இருக்கும் சிவன் கோயில் ஒரு சின்ன மலையில்... இந்த முக்கோண முப்பரிமாண அமைப்புப் பத்தி ஆராய்ச்சியாளர்கள்— எதுவும் குறிப்பிட்டுச் சொல்லி இருக்காங்களா இல்லையானு தெரியலை. ஆனா, அதில் ஏதோ சூட்சுமம் இருக்கற மாதிரி இன்னிக்கும் எனக்குத் தோணுது...''

—சொல்லிவிட்டு, போதுமா என்கிற பாவனையில் அமுதா நந்தாவையும், சந்துருவையும் மாறி மாறிப் பார்த்தாள். நந்தா சந்துருவையே கவனித்தாள். சந்துருவோ இனிய அலையால் தாக்குண்டவன் போல புளகாங்கிதத்துடன் அமுதாவையே நோக்கினான். அவனின் மனத்தின் மென்மையான பகுதியை அமுதாவின் எதிர்பாராத வெளிப்பாடு அழகாகத் தொட்டு விட்டிருந்தது. அவளின் கைகளைப் பற்றி ஆனந்தத்துடன் குலுக்க வேண்டும் போலிருந்தது... அமுதாவின் இந்தக் கோயில் கலா ரசனைக்கு நட்புடன் கைகொடுக்க வேண்டும் போலிருந்தது. அமுதா என்ற பெயரில் ஓர் சாதாரண இளம் தாவரம் அவனின் வாழ்க்கைக்குக் கிடைத்திருப்பதாகத் தான் இத்தனை நாட்கள் சுவாரஸ்ய மில்லாமல் இருந்து வந்திருப்பவன், அமுதாவை ஓர் அழகிய மலராக உணர்ந்து மனநிறைவு பெற்றான். இதுவரை அழகற்ற முகமாகத் தெரிந்த அமுதாவின் வட்டமான முகத்தில் அசாதாரண எழில் வந்து படிந்திருந்தது. கடவுளுக்கு மனத்துள் நன்றி சொல்லிவிட்டு ஒரு முறை கண்களை மூடித் திறந்தான். பின் உற்சாகத்துடன் சொன்னான்:

''நம்ம மேரேஜ் முடிஞ்சதும் முதல்ல நாம் போகப் போறதும் இந்த மூணு கோயிலுக்குத்தான். சரியா?''



சந்தோஷத்தில் தலையை அசைத்த அமுதா, யதேச்சையாக பின்புறம் சற்றுத்தள்ளிப் பார்த்தபோது ஒரு பெண்மணியைக் கண்டு சற்று யோசித்தாள். அடுத்த விநாடி அப்பெண்மணி யார் என்பது தெரிந்து விட்டது.

''நந்தா நந்தா— அங்கே பாரேன்; எங்க இங்கிலிஷ் மேடம்... அஞ்சு நிமிஷம் நீ அத்தான்கூடப் பேசிட்டு இரு... நான் மேடம் கிட்டே போய் பேசினதும் வந்திடறேன்...''

''இன்விடேஷன் கொடுக்கறதுக்கு மறக்காமே அவங்க அட்ரஸை வாங்கிட்டு வந்திடு...''

''எக்ஸ்க்யூஸ் மி; நீங்க நந்தா கிட்டே பேசிட்டிருங்க இதோ நான் வந்துடறேன்...''

''ஓயெஸ்...''

அமுதா அந்தப் பெண்மணியை நோக்கி எழுந்து போனதும், இத்தனை நேரமும் வேறொரு இயல்பில் கனம் இல்லாமல் சுழன்று கொண்டிருந்த சந்துருவின் சாயங்கால சுற்றுப்புறம் சட்டென பெரும் சுமையாய், அதிவேக பம்பரச் சுழற்சியாய் விரைவாகவும் ஸ்தம்பித்தாற் போலவும் சுழலத் துவங்கியது. திடீரென அவனுடைய வாழ்க்கை வெளியில் அமுதா அகன்று, நந்தா மட்டுமே கொலு வீற்றிருப்பது போலிருந்தது. இந்த நிமிஷம் வரை மைத்துனியாகத் தெரிந்து கொண்டிருந்த நந்தா, அமுதா எதிர்பாராமல் எழுந்து சென்றதும், மூன்று வருடங்களுக்கு முன்பு பின் தொடர்ந்திருக்கிற ராணி மேரிக் கல்லூரி மாணவி நந்தாவாக உரு மாறினாள். மூன்று வருடங்களுக்கு முன்பு அவளிடம் வெளிப்படுத்தவே முடியாமற் மண்மூடிப் போக நேர்ந்த காதல் ஊற்று மீண்டும் கண் திறந்து விடுமோ என்ற குற்றமனப் பான்மையுடன் சந்துரு சற்றே மனம் தடுமாறினான். மனத்தடுமாறத்தை நந்தா உணர்ந்து விடாதிருக்க

முகத்தை வேற்றொரு பக்கம் திருப்பிக் கொண்டு அவசரமாக தோழி சுஜாதாவை நினைவு கூர்ந்தாள்......

## 9

"என்ன அத்தான், திடீர்னு சைலண்ட் ஆயிட்டீங்க?"- நந்தா கேட்டாள்.

"ஒண்ணுல்லம்மா நந்தா. அமுதா இப்படி எதிர்பாராமே கோயில்களைப் பத்தி சொன்னதும் ஒரு ப்ளஸெண்ட் ஷாக் மாதிரி ஆயிடுச்சி எனக்கு. அதான்..."

"அய்யோ! இதுக்கே இப்படி ஆயிட்டீங்கன்னா— அவளோட ஃபைல்ஸை பார்த்தீங்கன்னா மயக்கம் போட்டே விழுந்துடுவீங்க போலிருக்கே..."

"பரவாயில்லை. இது ஒரு நல்ல ஆரோக்கியமான ஹாபிதான்... இல்லே?"

"நிச்சயமா..."

அமுதா இல்லாமல் அவர்களிடையே நிகழ்ந்த உரையாடல் மறுபடியும் சில நிமிடங்கள் அற்றுப் போய் நிசப்தமாய் இருந்தது. சற்றுத் தள்ளி பேராசிரியை உடன் பேசிக் கொண்டிருந்த அமுதாவை நந்தா கவனித்துக் கொண்டிருந்தது சந்துருவிற்குக் கொஞ்சம் வசதியாக இருந்தது. மூன்று வருடங்களுக்கு முற்பட்ட இளம் பிராய மனநிலை அவனின் கண்களில் இரங்கத்தக்க வகையில் மேகம் போல் வந்திருந்தது. சந்துரு ஓர் அவமானத்துடன் தலையைக் குனிந்து கொண்டான். மூன்று வருடங்களுக்கு முற்பட்ட தினங்களின் நெருடல் துளிக்கூடவா நந்தாவிற்குள் இல்லாமல் போய்விடும்? குற்ற மனப்பான்மையின் குறுகுறுப்பாக இல்லா விட்டாலும் கூட, ஓர் இறந்த கால ஞாபகமாகக் கூடவா அவளில் நினைவுகள்



கடந்து போகாமல் இருக்கும்...? ஓர் ரகசியப் பொருளுடன் ராணி மேரிக் கல்லூரியை திரும்பிப் பார்த்துக் கொண்டு, நந்தாவின் கவனத்தைத் தன் பக்கம் திருப்புவதற்காகக் கூப்பிட்டான்:

"ஏன் நந்தா..."

"சொல்லுங்க அத்தான்..."

"அமுதாவுக்கு- உங்களுக்கு மாதிரி கர்னாடிக் ம்யூசிக்ல இன்ட்ரெஸ்ட் உண்டா?"

"கிடையாது. அவளுக்கு சினிமா பாட்டிலதான் இன்ட்ரெஸ்ட். அதுவும் இளையராஜான்னா... தனி இன்ட்ரெஸ்ட்..."

"நீங்க யார்கிட்டே வீணை கத்துக்கிறதா சொன்னீங்க?"

"ராஜேஸ்வரி பத்மநாபன்... ஒரு நாள் நான் க்ளாஸ்க்குப் போறப்ப நீங்களும் வாங்களேன்"

"ஒயெஸ்..."

"ஏதாவது வீணைக் கச்சேரிக்குப் போயிருக்கீங்களா அத்தான் நீங்க?"

"இல்லைம்மா."

"நல்ல கச்சேரி வந்தா போலாமா?"

"போலாமே..."

"டேன்ஸ் ப்ரொக்ராம் நிறைய போவீங்கன்னு நெனைக்கிறேன்."

"அப்படியெல்லாம் போறது கிடையாது. நேரம் கிடைச்சாத்தான் போவேன். ஆனா-டேன்ஸ் ரொம்பப் பிடிக்கும்...அலர்மேல் வள்ளி, யாமினி கிருஷ்ணமூர்த்தி,

பத்மா சுப்ரமணியம்- இவங்களோட நிகழ்ச்சிகள் நிறைய பார்த்திருக்கேன்...''

''ஸ்ரீநிதி ரெங்கராஜன், சுஜாதா ஸ்ரீநிவாசன்-இவங்களோட ப்ரொக்ராம்ஸ் பார்த்ததில்லை?''

''சுஜாதா ஸ்ரீநிவாசன் பற்றி கேள்விப்பட்டிருக்கேன்- ஆனா பார்த்தது கிடையாது.''

''ரெண்டு பேருமே ரொம்ப நல்லா ஆடுவாங்க...''

''ஒரு நாளைக்குப் போகலாம்...''

''அடுத்த ஸண்டே மணிகிருஷ்ணசாமி ப்ரொக்ராம் இருக்கு. வரீங்களா அத்தான்?''

''டேன்ஸா?''

''போச்சு போங்க! கடைசில சீதைக்கு ராமன் சிததப்பாவான்னு கேட்ட மாதிரி இருக்கு...! மணி கிருஷ்ணசாமி டேன்ஸ் ஆடினா யார் பாக்கிறது...! அவங்க அழகா பாடுவாங்க அத்தான்...!''

சந்துருவிற்கு வெட்கமாகப் போய் விட்டது. ஆனாலும் கூட நந்தாவின் கேலிச் சொல் அவனைக் களிப்படையத்தான் செய்தது. நந்தா என்ற மைத்துனியிடம் இவ்விதம் தோற்பதுகூட அவனுக்கு ஓர் மனச் சுகத்தைத்தான் தந்தது. ஏனெனில்; இவ்வித மனச்சுக கணங்களில் அந்த நந்தா மைத்துனியாக அல்லாமல், ஒரு பூர்ண பெண்மணியாக அல்லவா சந்துருவில் மன நெருக்கப் படுகிறாள்...!

''இருங்க இருங்க; ஒரு நாளைக்கு அந்த அம்மா மணி கிருஷ்ணசாமியைப் பார்த்தா, எங்க அத்தான் உங்களை இப்படிக் கேட்டார்னு சொல்றேன்...''

''அந்தம்மா உங்களுக்குப் பழக்கமா?''



''பழக்கப் படுத்திக்கிட்டா போகுது—!''

''எதைப் பழக்கப் படுத்திக்கப் போறே...?'' என்று கேட்டபடி அமுதா திரும்பி வந்தாள்.

''வா வா, உன்னைத்தான் காணோமேன்னு நெனைச்சோம்...! வந்து இன்னும் ஏதாவது ரெண்டு மூணு கோயில்களைப் பத்தி சொல்லு. அத்தான் ரொம்ப இம்ப்ரெஸ் ஆகிப் போயிருக்காங்க- நீ கோயில்களைப் பத்தி சொன்னதில்...''

''அப்படி என்ன சொல்லிட்டேன்...?'' என்றவாறு அமுதா தன் இடத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

''அதுலேயே 'க்ளீன் போல்ட்' ஆயிட்டார்டி...!''

''ஏய்...''—அமுதா பொய் கோபத்துடன் தங்கையை அடக்கினாள்.

''நிஜம் தான் அமுதா. உண்மையாவே—ரொம்ப நான் இம்ப்ரெஸ் ஆயிட்டேன்...''

''தாங்ஸ்...''

''இப்ப நீ சொன்ன கோயில் பற்றியே இன்னும் ஏதாவது சொல்லேன் அக்கா...''

''வேணாம்ண்டி... சும்மா கோயில் பற்றியே சொல்லிட்டு இருந்தா இவருக்கு போரடிச்சிடும்...''

''இன்னும் ஏதாவது ஒரே ஒரு தகவல் மட்டும் சொல்- போதும்...'' சந்துரு அமுதாவைத் தூண்டினான்.

அமுதா ஒரு நிமிடம் யோசித்தாள்.

''ஒரே ஒரு ந்யூஸ் தான் சொல்வேன்...''

''சொல்லுனுதான் சொன்னேனே...''

''காஞ்சிபுரத்ல கைலாசநாதர் கோயிலைப் பத்தி சொன்னேன்— இல்லையா... அந்தக் கைலாசநாதர்

கோயிலைப் பார்த்துத்தான் பின்னாடி தஞ்சாவூர் பிரஹதீச்வரர் கோயிலைக் கட்டினாங்க...''

சந்துரு ஒரு விநாடி கண்களை மூடி அமுதா சொன்ன அந்தச் செய்தியை மனத்துள் பதிவு செய்து கொண்டான்.

''உன் இங்லிஷ் மேடம் என்னக்கா சொன்னாங்க?'' —நந்தா அமுதாவைக் கேட்டாள்.

''கல்யாணத்துக்கு கண்டிப்பா வரேன்னு சொல்லியிருக்காங்க... இவரைப் பத்தி விசாரிச்சாங்க... கல்யாணத்துக்கு முன்னாடியே ஜாலியா சேர்ந்து கிளம்பியாச்சான்னு கேட்டாங்க...''

''அய்யோ பாவம்! இதெல்லாம் கூட இவங்களுக்கு இன்னும் பெரிய விஷயமாத்தான் இருக்கு...''

''எங்க வீட்டிலேயே கூட இதெல்லாம் ரொம்பப் பெரிய விஷயம்தான் நந்தா...'' சந்துரு சொன்னான்.

''அப்ப வீட்ல என்ன சொல்லிட்டு வந்தீங்க?''

''ப்ரண்ட்ஸைப் பார்க்கப் போறதா சொல்லிட்டு வந்தேன்.''

''பாருக்கா இவரை... பொய் சொல்லிட்டு வந்திருக்கிறதை...''

''வேற என்ன பண்ண முடியும்... எனக்கோ அமுதாவை எங்கேயாவது வெளியில் அழைச்சிட்டுப் போகணும் போல இருந்தது...''

''அப்போ என்னையும் வந்து எதுக்காகக் கூப்பிடணும்? அவளும் நீங்களுமா மட்டும் வந்திருக்க வேண்டியதுதானே...''

''நோ நோ... அமுதாகூட எங்கேயாவது வெளியில போகணும்னு தோணிச்சி... ஆனா அமுதாகூட மட்டும்



தனியா போகணும்னு தோணலை... நீங்களும் எங்ககூட வரணும்னு தான் நெனைச்சேன்.''

''எனக்காக பொய்யெல்லாம் சொல்லக் கூடாது அத்தான்...''

''ரியல்லி...''

''ரியல்லி பொய் சொல்றதா சொல்றீங்களா...?''

''ஏய், அவர் தான் சொல்றாரே-அப்புறமும் பொய்யான்னு கேட்டா என்னடி அர்த்தம்?''

''அதுக்குள்ளே உனக்குக் கோவம் வந்தாச்சா...! என்ன இவளே, சும்மா ஒரு டீஸ் பண்ற மாதிரிதானே கேட்டேன்...''

''உன் டீசிங்கை இன்னிக்கேவா ஆரம்பிச்சிடணும்?''

''பார்த்துக்கோங்க அத்தான்... உங்கள் சார்பா பேசறதுக்கு ஆள் வந்தாச்சு...''

சந்துரு அழகாக சிரித்துக் கொண்டான். தனக்கு ஒரு 'ஆள்' வந்து விட்டதை அவனாலும் அந்தக் கணத்தில் மனத்துள் உறுதிப் படுத்திக் கொள்ள முடிந்தது. இந்த உறுதிப்பாட்டில் இதுவரை அவன் உணர்ந்திராத பாதுகாப்பு உணர்வு அவனின் மனத்தில் ஓர் இனிய வண்ணத் திரவம் போல் பரவி ஈரப்படுத்தியது. இதற்கு ஈடான மற்றொரு உவப்பான வண்ணத் திரவம் அமுதாவின் உள் மனத்திலும் வியாபித்து அவளையும் ஈரப் படுத்தியிருந்தது. அந்த உணர்வு ஈரம் இரவு படுக்கையில் படுத்து வெகு நேரம் ஆன பின்புங்கூட அமுதாவில் ஜிலு ஜிலுத்துக் கொண்டே இருந்தது.

''என்னக்கா, உன் நெனைப்பெல்லாம் அத்தான் கிட்டேயே இருக்கு போலிருக்கே...?''

அமுதாவின் அருகில் படுத்திருந்த நந்தா மேலும் நெருக்கமாகப் புரண்டு வந்து கேட்டாள்.

"அய்யோ! எப்படிடி கண்டு பிடிச்சே...?"

"ஆமா, பெரிய சிதம்பர ரகசியம் இது— கண்டுபிடிக்க முடியாமப் போகிறதுக்கு...! முஞ்சியெல்லாம்தான் நிலா வாட்டம் பூத்துப் போய் கிடக்கே..."

"எனக்கு அவரை— ரொம்பப் பிடிச்சிருக்கு நந்தா. ஸாஃப்ட்டா இருக்கார். சொல்றதை உண்மையாவே 'லிஸன்' பண்றார்..."

"அப்பாவும் இதையேதான் சொன்னாங்க..."

ஆனாலும்— கல்யாணம்னு பண்ணிக்கிறதில் கொஞ்சம் மனசுக்குள் பயமாத்தான் இருக்கு— எங்கே நம்ம ரெண்டு பேருக்கும் இடையில் இருக்கிற அந்நியோந்நியமும் நட்பும்— குறைஞ்சு போயிடுமோன்னு..."

"அதே பயம்தான் எனக்கும்... உன்னை என்கிட்டே இருந்து பிரிச்சிடுமோன்னு... அதை நினைச்சாத்தான் அத்தான் மேலேயே கூட லேசா பொறாமை வருது...! அத்தான் வந்துட்டார்னு என்னை மறந்திடாதேக்கா..."

—நந்தா அமுதாவை மிகவும் நெருங்கிப் படுத்துக் கொண்டாள். அமுதா கருணையுடன் தங்கையின் கூந்தலைத் தடவிக் கொடுத்தாள். காதலுடன் அவளின் நெற்றியில் முத்தமிட்டாள்.

"உனக்கும் சீக்கிரமா மாப்பிள்ளை பார்த்து முடிச்சிடணும்னு அப்பா சொல்லிட்டு இருந்தாங்க..."

"எவன் வரப் போறானோ...! அதை நெனைச்சாலும் பயமாயிருக்கு... சங்கீதம்னா கிலோ என்ன விலைன்னு கேக்கறவனா இருந்தா— செத்தேன் நான்...!"



"ஆனா ஒண்ணு, மத்த பொண்களுக்கு கல்யாணமானா வர்ற ஒரு ப்ராப்ளம் நம்ம ரெண்டு பேருக்கும் கிடையாது... மாமியார் வீட்டுக்குப் போக வேண்டியதில்லை நாம் ரெண்டு பேரும்...!"

"அது வரைக்கும் தப்பிச்சோம்... ஆனா, நம்மைக் கல்யாணம் பண்ணிட்டு இங்கே வர்ரவங்களுக்கு எப்படியிருக்குமோ தெரியலை..."

"இருக்கறதுக்கு சம்மதிச்சித்தானே வராங்க..."

ஆனா—நாமும் ஜாக்கிரதையா இருந்துக்கணும்க்கா... ஏதோ நம்ம வீட்ல வந்து இருக்காங்கன்னு மறந்துகூட நாமும் அவங்களை கடுகளவுகூட அலட்சியப் படுத்திடக் கூடாது. அப்படி தப்பித் தவறி ஏதாவது செய்திட்டோம்... அவ்வளவுதான்; ப்ராப்ளம் வந்திடும் ரிலேஸன்ஷிப்ல... அப்படி ரிலேஸன்ஷிப்ல ப்ராப்ளம் வந்தது— அது எந்த உலகமா இருந்தாலும் சரி, கஷ்டப்படறது பொம்மனாட்டிகள்தான்..."

"உனக்கும் சீக்கிரமா கல்யாணமாகி நாமெல்லாம் சேர்ந்து ஒரு பெரிய டூர் போகணும் நந்தா..."

"அதுக்குள்ளே நீ குழந்தை பெற்றுக் கொள்ளாமல் இருந்தால் சரி...!"

"சீ...! மூணு வருஷத்துக்கு அப்புறம்தான் குழந்தை பெத்துப்பேன்... அதுவரைக்கும் அத்தான்கூட இந்தியாவில் இருக்கிற ஊரெல்லாம் சுத்திப் பார்த்திடணும்..."

"என்னையும் கூட்டிட்டு போக்கா..."

தங்கையின் பற்றுதல் அமுதாவை உணர்ச்சிவசப் படுத்தியது. புரண்டு நந்தாவை இறுக தழுவிக் கொண்டாள்.



7536
9796011

"உன்னை விட்டுட்டுப் போவேனாடி செல்லம்... நீதான் என்னோட வெரி ஃபர்ஸ்ட் லவ்... அத்தான்கூட எனக்கு உனக்கு அப்புறம்தான்..."

"என்னிக்குமே நாம் இப்படியே இருக்கணும் அக்கா..."

"கண்டிப்பா இருப்போம்..."

"உன் கல்யாணம் முடிஞ்சிட்டா— நாம் ரெண்டு பேரும் இப்படி ஒண்ணா படுத்துத் தூங்க முடியாதேடி."

"நைட்ல முடியாது... பகல் பூரா இங்கே தானே இருக்கப் போறோம்..."

"நைட்ல மட்டும் ஏன் முடியாது?"— நந்தா வீம்பிற்காகக் கேட்டாள்.

"உம்- யாரையாவது கேட்டுச் சொல்றேன்."

"யாரைப் போய் கேட்பே...?"

"யாருக்குத் தெரியுமோ அவங்களைப் போய்..."

"ஏன்— உனக்குத் தெரியாதாக்கும்...?"

"எனக்கெப்படி தெரியும்?"

"ஆமாமா. சின்ன பப்பா நீ. உனக்கு ஒண்ணும் தெரியாது..."

"நந்தா நந்தா! நாளைக்கு அத்தானுக்கு போன் பண்ணிப் பேசுவோமா?"

"வீட்டுக்கா ஆபிஸ்க்கா"

"ஆபிஸ்க்கு..."

"ஆபிஸ்னா— மார்னிங் பண்ணக்கூடாது. ரொம்ப பிஸியா இருப்பார். ஈவினிங் நாலு மணிக்கு ரிங் பண்ணுவோம்..."



'ஆபிஸ் முடிஞ்சதும் வீட்டுக்கு டிபன் சாப்பிடக் கூப்பிடுவோமா?"

"என்னக்கா— இப்படி பைத்தியமாயிட்டே...?"— நந்தா ஆச்சர்யத்துடன் கேட்டாள்.

பதில் சொல்ல முடியாமல் அமுதாவின் மனம் முழுவதும் நாணத்தால் நிறைந்தது. மௌனமாகப் படுத்துக் கிடந்தாள்.

"என்ன பதிலையே காணோம்..."

"காதல் வசப்பட்டா எப்படி இருக்கும்னு முதல் முதலா— இப்பத்தாண்டி நந்தா அனுபவிக்கிறேன். திஸ் மூமெண்ட்— ஐ லவ் ஹிம். ஐ நீட் ஹிம்..."

"கல்யாணத்துக்கு இன்னும் நாற்பது நாள் இருக்கு. எப்படித்தான் இருக்கப் போறியோ...?"

நந்தாவின் இச்சொற்களை உணராமல் அமுதா, சந்துருமேல் பொங்கிய காதலால் கண்கள் சொக்கிக் கொண்டிருக்க, சந்துருபால் அரும்பிய பாலுணர்வால் நெஞ்செல்லாம் விம்மி தகித்துக் கிடக்க, அகன்ற பஞ்சு மெத்தையில் குப்புறப் படுத்தபடியே தூங்கிப் போய் விட்டாள்......

## 10

மணி பிற்பகல் மூன்று முப்பது ஆகியிருந்தது. பகல் உணவை அப்போதுதான் சாப்பிட்டு விட்டு வந்திருந்த சந்துரு சிறிய ஏப்பம் ஒன்றை விட்டவாறே இருக்கையில் அமர்ந்து கொண்டபோது இண்டர்காம்களில் ஒன்று ஒலித்தது. எதுவெனக் கண்டு ரிஸீவரை எடுத்தான். எதிர் முறையில் அவனுக்காக மிகத் தயாராக சுஜாதா காத்திருந்தாள்.

"சந்துரு..."

"என்ன சுஜா!"

"மத்யான லஞ்ச்சுக்கு டைனிங் ஹால் பக்கம் வரலையே நீ. எங்கேயும் வெளியில் போயிருந்தியா?"

"நோ நோ. எம். டி. ரும்லேயே இருந்துட்டேன். மூணு மணியாயிடுச்சி. இப்பத்தான் மத்யான லன்ஞ்சே சாப்பிட்டேன்."

"அவ்வளவு நேரம் என்ன பேசிண்டிருந்தே...எனிதிங் பர்சனல்?"

"நத்திங் பர்சனல். இ.டி.பி. மேனேஜர் ரிஸைன் பண்ணப் போறாராமே..."

"நிஜமாவா ?"

"தெரியாதா உனக்கு?"

"தெரியவே தெரியாதே. ஏன்; என்ன ஆச்சு?"

"அது பெரிய கதை. நேர்ல இன்னொரு நாள் சொல் றேன்....?'

"சரி, நேத்திக்கி அமுதாவை அழைச்சிண்டு எங்கே யாவது வெளியில போகப் போறதா சொன்னீயே... போனேயா இல்லையா?"

"போனோமே. பீச்சுக்குப் போயிருந்தோம்."

"வேற எங்கே போறதாம்மெட்றாஸ்ல... பீச்சுதான்."

"நானும் அமுதாவும் மட்டும் போகலை. நந்தாவும் எங்ககூட வந்திருந்தா..."

"ஏய் பைத்தியம்! கல்யாணம் பண்ணிக்கப் போறவளை இப்போத்தான் முதன் முதலா வெளியில் அழைச்சிட்டுப் போய் மீட் பண்ணப் போறே... அப்போ என்னத்துக்கு அந்தக் குட்டிப் பொண்ணு?"



"அப்படியில்லை. சுஜா. அமுதாவும் நந்தாவும் ஒரு அக்கா தங்கை மாதிரியே கிடையாது. ஒரு உயிருக்குயி ரான ப்ரண்ட்ஸ் மாதிரி அவங்க ரெண்டு பேரும். வெரி க்ளோஸ். அதுவும் இல்லாமே, எனக்கும் அமுதாவை தனியா மீட் பண்ணனும் என்கிற மாதிரியான ஐடியா வெல்லாம் கிடையாதே, ஸோ, நோ ப்ராப்ளம். அது மட்டுமில்லை, நேத்திக்கி வெளியில போறதுக்கு முன்னாடி வரைக்கும் அமுதாவை தனிப்பட்ட முறையில் எந்த விதத்திலும் நான் ரெகக்னைஸ் பண்ணியதே இல்லை. நேத்திக்கி அமுதாவோட சில ரசனைகள் தெரிஞ்சு ரொம்ப இம்ப்ரெஸ் ஆயிட்டேன்..."

"அப்போ— உனக்கு இப்போ அமுதாகிட்டே 'வுட்பி' என்கிற பர்சனல் அஃபெக்ஷன் வந்தாச்சுன்னு சொல்லு..."

"அதில் சந்தேகமே கிடையாது."

"இனி அந்த குட்டிப் பொண்ணு நந்தா விஷயமா உன் மனதில் நெருடல் எதுவும் இருக்காதே...?"

சுஜாதாவின் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல சந்துரு யோசித்தான்.

"யோசிக்காதே பையா! யோசிச்சா யூ ஆர் ராங்னு அர்த்தம்."

"அப்படியில்லை சுஜா. மத்தவங்க முன்னாடி எப்படியோ, உன்கிட்டே என்னால நூறு சதவிகிதம் உண்மையாத்தான் இருக்க முடியும்."

"இப்போ என்னத்துக்கு எனக்கு ஐஸ் வைத்தாகற துன்னு தெரியலை..."

"நந்தா விஷயத்லேயும் எனக்குள்ளே அப்பப்ப கல்மிஷம் வந்திடுதே சுஜா... நேத்திக்கி பார். பீச்ல பேசிட்டு இருந்தப்ப இடையில் ஒரு பத்து நிமிஷம்

அமுதா எழுந்து போய் வேற ஒரு லேடிகூடப் பேசிட்டு இருந்தா— அந்தப் பத்து நிமிஷம் நான் ரொம்ப ஸெல்ஃப் கான்ஸியஸா ஆயிட்டேன் சுஜா! அமுதா பக்கத்ல இருந்தவரைக்கும் ஒரு மைத்துனியா மட்டும் தெரிஞ்ச நந்தா, அமுதா எழுந்து போன அடுத்த செகண்டே அந்தப் பழையநாள் நந்தாவா மாறித் தெரிஞ்சா! அந்தப் பத்து நிமிஷம் என்னால் நந்தாவை மனம் நிமிர்ந்து பார்க்க முடியலை. இயல்பா கூடப் பேசமுடியலை... பெரிய டென்ஷனே வந்திடுச்சி சுஜா...''

சுஜாதா சிறிது சிந்தித்துக் கொண்ட பின்கேட்டாள்.

''வருத்தப்படறயா இதுக்காக...''

''யோசிச்சிப் பார்த்தா 'யெஸ்'னுதான் சொல்லணும்...

''எனக்குத் தோண்றது- இதுக்கோசரம் நீ கவலைப்பட தேவையில்லைன்னு...''

சந்துரு பேசாமல் இருந்தான்.

சுஜாதா தொடர்ந்து சொன்னாள்:

''ஒரு மூணு வருஷ இடைவெளி விட்டு அவளை நீ பார்த்திருக்கே இல்லையா...அந்தப் பரபரப்புத்தான் இது. இந்தப் பதட்ட உணர்ச்சி கொஞ்சம் எல்லாருக்குமே வரக்கூடியது தான். இது ஒரு ஆற்றோட நேச்சர் மாதிரிடா சந்துரு. புறப்பட்டு மலையில ஓடி வர்றச்சே ஆற்றின் சத்தம் அதிகமாகத்தான் இருக்கும். ஆனா, அதுவே சமவெளிக்கு வந்து சேர்ந்தாச்சுன்னா சத்த மில்லாமே அமைதியா ஓட ஆரமிச்சிடும். ஸோ, ஒரே யடியா பயந்து பயந்து ரொம்ப ரிசர்வ்டா இருந்திடாதே. ஃப்ரியா இரு. நாளைக்கு உன்னோட அன்றாட வாழ்க்கையே அவங்க வீட்டிலே தான் என்கிற நேரத்ல இந்த டென்ஷன் பரபரப்பு எல்லாம் கொஞ்சம் கொஞ்சமா வடிஞ்சு போயிடும்... அப்புறம் நந்தா



வந்தாலும் சரி, இல்லே எந்த சாந்தா வந்தாலும் சரி- ஒண்ணும் ஆகாது உனக்கு. நீ பாட்டுக்கு இருப்பே...!''

உடனே சந்துரு ஆறுதலான தொனியுடன் சொன்னான்:

''நேத்திக்கி பீச்சுக்குப் போயிருந்தப்ப நந்தா உன்னை ரொம்ப விசாரிச்சா சுஜா!''

''எதுக்காம்?''

''என்னமோ- ஐ லைக் ஹர் வெரி மச்னு சொன்னாம்மா!''

''அதுக்காக அவளுக்கு தாங்ஸ் எல்லாம் சொல்லிட மாட்டேன்னு போய் சொல்லு அவகிட்டே !''

''அதான் பார்த்தேன். என்னடா இவ்வளவு நேரமாகியும் டீஸ் பண்ணாமே ஒழுங்கா பேசிட்டு இருக்காளேன்னு...''

''பிறவிக் குணம் போயிடுமா... ஓகே. நாளைக்குப் பார்க்கலாம்.''

''ஓகே.''

சந்துரு ரிஸீவரை வைத்துவிட்டு, வியர்த்துப் போயிருந்த உள்ளங் கையை கைக்குட்டை எடுத்துத் துடைத்துக் கொண்டான். சோம்பல் முறித்தபடி சிறிது நேரம் வெறுமனே உட்கார்ந்திருந்தான். சுஜாவுடன் 'இண்டர்காமி'ல் கொண்டிருந்த உரையாடல் பூரணம் பெறாத குறைவுடன் துண்டிக்கப்பட்டு விட்டாற் போலிருந்தது... உடனே சுஜாதாவை அவனே மீண்டும் இண்டர்காமில் அழைத்தான்.

''என்ன, அதுக்குள்ளே பொழுது விடிஞ்சுடுத்தா?''

''இல்லை சுஜா, முக்கியமா ஒரு விஷயம் மட்டும் இப்பவே உன்கிட்ட பேசணும் போல இருக்கு...''

''சுருக்கமா சொல்லு. எனக்கு வேலை இருக்கு...''

''நந்தாகிட்டே எனக்கு இருக்கிற பேஸிக் ப்ராப்ளம் என்னன்னு எனக்கே இப்பக் கொஞ்சம் கொஞ்சம் புரியற மாதிரி இருக்கு... அதாவது, அந்த மூணு வருஷங்களுக்கு முற்பட்ட நாட்கள் அவளுக்கு ஞாபகம் இருக்கா; இல்லே- ஞாபகமே இல்லையா; அல்லது ஞாபகம் இருந்தும் அதையெல்லாம் இக்னோர் பண்ணிட்டாளா; உண்மையில் அவளோட மனநிலை என்ன?- இது மட்டும் எனக்குத் தெரிஞ்சு போச்சுன்னா போதும்னு இருக்கு... எதுவுமே தெரியாமே அதெல்லாம் ஒரு சஸ்பென்ஸாகவே இருக்கிறதைத் தான் என்னால் தாங்கிக்க முடியலை...''

''சரி; அதுக்கு என்ன. பண்ணலாம்னு நினைக்கிறே...?''

''என்னிக்காவது தனியா பேசறதுக்கு சான்ஸ் கிடைச்சா நந்தாகிட்டேயே இதைக் கேட்டுடட்டுமா?''

''கேக்கறதுக்கு தைரியம் இருக்கா உனக்கு?''

சந்துரு பதில் சொல்ல யோசித்தான்.

''தைரியம் இருந்தா கேள்...''

''தைரியமா கேட்டுட வேண்டியதுதான்...''

''ஒகே. விஷ் யூ குட்லக்...!''

தடாலென்று சுஜாதாவின் ரிஸீவர் வைக்கப்பட்டு விட்டது. எரிச்சலுடன் முணங்கியபடியே சந்துருவும் ரிஸீவரை வைத்தான். பெண்களின் மனநிலை என்பதே அவ்வப்போது மர்மம் கவிந்ததாகத் தோன்றுதல் அவனை ஆத்திரமூட்டியது.'வளவளன்னு பேசுவாள்கள்... திடீர்னு வாயை இறுக்கி மூடிப்பாள்கள்...!' என்ற அலுப்பு வந்தது அவனுக்கு. 'நிம்மதியாகக் கல்யாணம் செய்து கொண்டோமா இருந்தோமான்னு இல்லாமல் என்ன தர்ம சங்கடம் இது... அதுவும் இல்லாமல் எனக்குத்தானா



இப்படி என்னிக்கோ நான் சைட் அடித்த ஒருத்தியே மச்சினியாக வரவேண்டும்? சே!... பாம்புன்னு நெனைச்சு ஒடவும் முடியலை. சனியன், கயறுன்னு மிதிக்கவும் முடியலை...! பிராணன் போகுது! நந்தாவாம் நந்தா. பெரிய நந்தா! வேற எவளாவது முன்னே பின்னே தெரியாதவ எனக்கு மச்சினியா வரக்கூடாதா? போயும் போயும் இவதானா வரணும்? ஒரேயடியா இவளை மச்சினியாகவும் நினைக்க முடியலை. அன்னிக்கி விழுந்து விழுந்து சைட் அடிச்சதை மறக்கவும் முடியலை...! என்னதான் பண்ணப் போறேனோ பிள்ளையாரப்பா...'

–சந்துரு குழப்பத்துடன் தலையைச் சொறிந்து கொண்ட போது டெலிபோன் ஒலித்தது. சுரத்தில்லாமல் ரிசீவரை எடுத்தான்.

''யெஸ்.''

''சார், இந்திராநகர்ல மிஸ்டர். பெருமாள்சாமி ஃபாமிலியில் இருந்து பேசறாங்க...''

''குடுங்க...'' -சந்துரு நிமிர்ந்து உட்கார்ந்தான்.

''ஹலோ...''

''ஹலோ! சந்துரு ஹியர் ''

''குட் ஈவினிங்.''

''குட்ஈவினிங்...''

''பேசற நான் யாருன்னு சொல்லுங்க பாக்கலாம்- அமுதாவா நந்தாவா?''

''சொல்விட்டா- ?''

''சொல்லுங்களேன் பார்க்கலாம்...''

''ரொம்ப ஈஸியா சொல்லிடுவேன்...''

''சொல்லுங்க அதைத்தான்...''

''குட்ஈவினிங் நந்தா...''

''ஹை! எப்படி கண்டு பிடிச்சீங்க...?''

''வெரி சிம்பிள். அமுதாவா இருந்தா இவ்வளவு ஃப்ரீயா பேசமாட்டா... கொஞ்சம் வெட்கப்பட்டுப் பட்டுத்தான் பேசுவா...''

''கிரேட் அத்தான்! இங்கே வந்து பாருங்க- நான் உங்ககூடப் பேசறதையே வெட்கத்தோட பார்த்திட்டு இருக்கா... அவளுக்கு உங்ககிட்டே என்னமோ பேசணுமாம். அதுக்குத்தான் ரிங் பண்ணினேன். அக்காகிட்டே பேசுங்க...''

சில விநாடிகள் கழித்து அமுதாவின் குரல் கேட்டது. ''ஹலோ... நான் அமுதா பேசறேங்க...''

''என்னம்மா...''

''இன்னிக்கி ஆபிஸ் முடிஞ்சதும் எங்க வீட்டுக்கு வர்ரீங்களா?''

''இன்னிக்கா... ?''- சந்துரு நம்பிக்கைக் குறைவோடு கேட்டான்.

''இன்னிக்கி ஈவினிங் டிபன் சாப்பிடறதுக்கு உங்களை வீட்டுக்குக் கூப்பிடலாம்னு நானும் நந்தாவும் ப்ளான் பண்ணினோம்...''

''அய்யோ! இன்னிக்கி ஈவினிங் முடியாது அமுதா. இன்னிக்கி நான் ஆபீஸ் வந்து உண்மையா ஒரு வேலை பார்க்கலை. எல்லா வேலையும் அப்படி அப்படியே கிடக்கு... இன்னொரு நாள் வரேன்...''

''ஒரு அரைமணி நேரம்கூட வர முடியாதா...?''

''வந்தா எனக்கு ரிலாக்ஸ்டா இருக்கணும்... அதுக்குத் தான் சொல்றேன். இன்னொரு நாள் நானே போன் பண்ணிச் சொல்லிட்டு வரேன் சரியா?''



''சரி... அப்ப வச்சிடட்டுமா?''

''ஒயெஸ்...''

''தாங்ஸ்.''

சந்துரு ரிசீவரை வைத்தான். அன்றைய அலுவலக வேலை அவனுடைய மேஜையில் பரவிக் கிடந்தது. நாற்காலியில் சாய்ந்தவாறே கோப்புகளை ஆற்றாமையுடன் கண்டான். பணியில் முனைய இருந்த மன நிலையை அமுதாவின் தொலைபேசி அழைப்பு சிறிது சேதப்படுத்தி இருந்தது. சந்துரு பிடரியை வருடியவாறே யோசித்தான். நேற்றைய மாலை நேரம் அவனின் மனவெளியில் சாயங்கால வெயில் போல இதமாக விரிந்தது. அவ்வளவுதான்; அலுவலக பிரக்ஞை மறைந்து, அமுதா பிரக்ஞை மாலை வெயில் போலவே அவனுள் ரம்மியமாய் படிந்தது. தவிர்க்க முடியாமல் மனைவியாக வரப் போகிறவளின் அருகாமை உடனே வேண்டும் போலிருந்தது. சந்துருவில் எதிர்பாராமல் அமுதாவிற்கான மோகம் மூண்டது. நேற்று அவள் அணிந்திருந்த புடவையைக் கூட விரும்பி நினைத்துப் பார்த்தான். எழுந்து நேராக இந்திராநகர் போய்விடலாம் போலிருந்தது! அவனுடைய மனோபாவம் முழுவதையும் அமுதாவிடம் குவித்து விடுவதுதான் சலனமற்ற நிலைக்கு உத்திரவாதமானதாகத் தெரிந்தது. நந்தா பற்றிய என்றோ ஒரு இறந்தகால ஒருதலைப்பட்ச சம்பவ ஞாபகங்களை மனத்தில் கொண்டிருப்பது வீண் சுமையென்பதும் புரியத்தான் செய்தது. சந்துரு யோசித்து யோசித்துப் பார்த்தான். சுமை என்பது அறிவில் தெரிந்தாலும் உணர்வுகள் அந்தச் சுமையை சுமக்கவும் இச்சைப்பட்டன! மனம் ஒரு வானவெளியாக இருக்கட்டும் எத்தனை மேகங்கள் கடந்தாலும் அதன் தடங்கள் வான வெளியில் எங்கும் ஏற்படுவதில்லை- என்ற சுஜாதாவின் சொற்களை நினைத்துப் பார்த்தான். இனி அவனுடைய

வாழ்க்கை என்ற, மனம் என்ற வானவெளியில் அமுதா என்ற சூரியன் மறையப் போவதில்லை... அதே நேரத்தில், நந்தாவும் கூட அவ்வான வெளியில் இல்லாமல் போய்விடப் போவதில்லை! அவளும் வானவெளியில் தோன்றுவாள். மறைவாள். மேகமாக அல்ல; ஓர் வான வில்லாக! அதுவும் சூரியனுக்கு நேர் எதிரான வண்ண வானவில்லாக...!

சந்துரு தலைமுடியைக் கோதிவிட்டுக் கொண்டான். அவனுக்குச் சூரியனும் வேண்டும்தான். வானவில்லும் வேண்டும்தான். இது கல்மிஷம்தான் என்றால் கல்மிஷமாகவே இருந்துவிட்டுப் போகட்டும். இப்போது சூரியன் என்னைத் தொலைபேசியில் அழைக்கிறது...! அழைப்பை ஏற்றுப் போகாமல் அலுவலகப் புணி என்ன பெரிய அலுவலகப் பணி...! அழைத்திருப்பது, வெளிப்படையாகத்தான் சூரியன். மறைமுகமாக வானவில்லும்தான் அழைத்திருக்கிறது...! கிளம்பிவிட வேண்டியதுதான்– அழகிய இந்திராநகர்!

தொலைபேசியில் அமுதாவை அழைத்துத் தகவல் தெரிவித்துவிட்டு சரியாக ஐந்து மணிக்கு சந்துரு ஸ்கூட்டரில் இந்திராநகர் நோக்கிக் கிளம்பி விட்டான்.

## 11

ஈசிசேரில் வெகுநேரமாகக் கண்களை மூடி நித்திரை கொண்டவரைப் போல் கிடந்த மகாலிங்கம் எழுந்து சமையலறைப் பக்கம் போனார். அங்கு அவருடைய மனைவி சௌந்திரம் மட்டும் தனியாக வேலைகளில் ஆழ்ந்திருந்தார்.

"என்ன, யாரையும் காணோம்... நீ மட்டும் தனியா வேலை பார்த்திட்டிருக்கே...?" என்றபடி மகாலிங்கம் சமையலறையில் நுழைந்தார்.



"தேவேந்திரனும் செல்வராணியும் எங்கேயோ கல்யாண வரவேற்புன்னு சொல்லிப் போயிருக்குகள்..."

"ரவீந்திரன்?"

"அவனோட மச்சினியோட குழந்தைக்கு பிறந்த நாளாம்– அந்த ரெண்டும் அதுக்குப் புறப்பட்டுப் போனதுகள்..."

"அதுசரி! மச்சினியோட குழந்தைக்கு பிறந்த நாள்னா அவசியம் போய் கலந்துக்கணுமே...! போகலைன்னா தலை வெடிச்சுப் போயிடுமே... பிறந்த நாளுக்குப் போறவன் கையை வீசிட்டு சும்மா போயிட முடியுமா? ஏதாவது வாங்கிட்டுப் போயிருப்பானே...?"

"என்ன வாங்கிட்டுப் போறானோ... யார் கண்டா? நம்மகிட்டே சொல்லிட்டா போகுதுகள்...? அதது களோட இஷ்டம்தானே இந்த வீட்ல..."

"சின்னவர் இன்னும் ஆபீஸ்ல இருந்தே வரலையோ?"

"அது எங்கே போச்சுதோ...."

"கார்த்தால உன் தங்கை வந்து என்னமோ காதைக் காதை கடிச்சிட்டு இருந்தாளே... என்னவாம்?"

"என்னடா இவ்வளவு நேரமா கேட்கக் காணோமேன்னு பார்த்தேன்..."

"அதென்னமோ, அவ வந்தாலே பேசறது துளி விழாது காதில். அப்படி என்னதான் ரகசியம் இருக்குமோ அக்கா தங்கைகளுக்குள்..."

"ஏன், ஒரு நாற்காலியை எடுத்தாந்து எங்க பக்கத்ல போட்டு உட்கார்ந்துக்க வேண்டியதுதானே... நாங்க பேசிக்கற ஒவ்வொண்ணும் காதுல விழணும்னா..."

"ஆமா, எனக்கு வேற வேலை இல்லை பார்... ஏதோ படு சீரியஸா உன் காதைக் கடிச்சிட்டு இருந்தாளேன்னு கேட்க வந்தேன்..."

"எல்லாம் நம்ம சந்துருவோட கல்யாணத்தைப் பத்தித்தான் பேசிட்டிருந்தா... வேறென்ன?"

"என்னவாம் அவனோட கல்யாணத்தைப் பத்தி?"

"அந்த பெருமாள்சாமியோட குடும்பத்துக்கு நம்ம சந்துருவை நீங்க வித்துப்புட்டதா எல்லாரும் பேசிக்கிறாங்களாம்... என் தங்கை சொல்றா."

"ஆமா, ஊரே திரண்டு வந்து இவகிட்டே மனு கொடுக்குது... இவயென்ன பெரிய ப்ரைம் மினிஸ்ட்ரா– மனு கொடுக்கிறதுக்கு... பொறாமையில் இவளே கதை கட்டி விடுவா... எனக்குத் தெரியாதாக்கும் இவளைப்பத்தி... மருமகள் நகைகளையெல்லாம் மகளுக்குப் போட்டு கட்டிக் கொடுத்தவளாச்சே...! இவ வந்து சொல்ல வந்திட்டா என்னை... மகனை, அதுவும் எம். பி. ஏ. படிச்ச மகனை விக்கறதுக்கு நானென்ன பைத்தியக்காரனா...சந்துருவை அந்த பெருமாள்சாமிக்கு லீஸ்க்கு விட்டிருக்கேண்டி! காஸ்ட்லியான லீஸ்க்கு விட்டிருக்கேன்...! லீஸ் என்னிக்கு முடியுதோ அன்னிக்கே சந்துரு அவன் பெண்டாட்டியைக் கூட்டிக்கிட்டு வந்து சேந்துருவான்... எல்லாம் பெரிய ப்ளான் போட்டுத்தான் இந்தச் சம்பந்தத்துக்கு சரின்னு சம்மதிச்சேன்... பார்– என்ன நடக்கப் போகுதுன்னு... என் மகனை வளர்த்து ஆளாக்கி விக்கறதுக்கு நானென்ன காதுல பூவா வச்சிருக்கேன்... சொல்ல வந்துட்டாளுங்க பெரிசா...!"

"எனக்கென்ன தெரியும்– அவ வந்து சொன்னா..."

"சொல்லுவா– சுரக்காய்க்கு உப்பு இல்லேன்னு...! நீ ஏன் கேட்டுக்கிட்டு சும்மா இருந்தே... என்னைக் கூப்பிட்டு உடனே சொல்லியிருக்க வேண்டியது தானே..."



"சொன்னா– உடனே அவளைப் போட்டு திட்டியிருப்பீங்க......"

"இன்னொரு நாள் வராமலா போகப் போறா– அப்ப கேக்கறேன் பார்– நாக்கைப் பிடிங்கிக்கிற மாதிரி... மச்சினியா இருந்தாயென்ன யாரா இருந்தாயென்ன...!"

"உங்ககிட்டே போய் இதைச் சொன்னேன் பாருங்க– அதுக்கு என்னைத்தான் சொல்லணும்..."

"பின்னே என்ன? என் மகனை வித்துட்டேன்னு எவ்வளவு திமிர் இருந்தா சொல்லுவா அவ..."

"அவ சொல்லலைங்க... யார் யாரோ வந்து அப்படி அவகிட்ட சொன்னாங்களாம்..."

"நல்ல வந்து சொல்வாங்களே...! பாவம்; உன் தங்கைக்கு இத்தனை வருஷமாகியும் இன்னும் நான் யார்னு தெரியலை... உங்கப்பா உயிரோட இருந்திருந்தா சொல்லிப்பாரு— நான் யார்னு..."

"ஆமா, எங்கப்பா வந்து சொல்லாட்டா எங்களுக்கெல்லாம் தெரியாது... தலை தீபாவளிக்கு கொடுத்த வேஷ்டில ஒரு விரற்கடை ஜரிகை இருந்ததுக்காக, வாங்கின வேஷ்டியை அப்படியே பிரிச்சு கூடத்துத் தூண்ல கட்டி வச்சிட்டு ஓடிப் போன மனுசன் எப்படிப் பட்டவர்னு என் தங்கைக்கும் தெரியும்! என் தத்தாவுக்கும் தெரியும்...!"

"தெரியும் இல்லியா... அப்புறம் என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு... என் மகனை நான் விக்கிறேன் இல்லை, ஏலம் போடறேன்... இவளுக்கென்னன்னேன்..."

''உங்களை கையெடுத்து வேணுமானாலும் கும்பிடறேன்... உங்க பணத்தாசைக்கு என்னைத்தான் ஆயிரம் இம்சை பண்ணியாச்சு... புள்ளைகளையும் இம்சை பண்ண வேண்டாம்.. அதுகளாவது நிம்மதியா இருக்கட்டும்...''

''ஏன் கும்பிடறதோட நிறுத்திக்கறே... தோப்புக்கரணமும் போட்டுடேன்...''

''பேசுங்க பேசுங்க... எவ்வளவு நளைக்கு பேசுவீங்க... நான் உயிரோட இருக்கிற வரைக்கும் பேசுவீங்க...''

''ஆமா— நீ செத்துட்டா உடனே எனக்குப் பேச்சு வராது... ஊமையாயிடுவேன் நான்...! பேசறீயே— பைத்தியக்காரி மாதிரி... இப்ப• இப்படித்தான் பேசுவே... நாளைக்கு இதே சந்துருவோட இதே கல்யாணத்தை வச்சி மூட்டை மூட்டையா பணம் சம்பாரிக்கப் போறேன்— அப்ப வந்து நீ என்ன பேசறேங்கிறதைப் பார்க்கறேன். இரு இரு......''

சரியாக இந்தச் சந்தர்ப்பத்தில்தான் வெளித் தோட்டத்தில் சந்துருவின் ஸ்கூட்டர் வரும் சப்தம் கேட்டது. உடனே மகாலிங்கம் வேகமாகப் போய் ஈசிசேரில் சாய்ந்து தூங்குவது போல கண்களை இறுக மூடிக் கொண்டார்.

சந்துரு கை கால் கழுவி ஆடை மாற்றிக் கொண்டான். அம்மாவிடம் போய் காப்பி மட்டும் கேட்டு வாங்கி அருந்தி விட்டு அவனுடைய அறைக்குள் போய் ஒரு நாட்டிய இசையை சன்னமாக ஒலிக்க விட்டபடி கட்டிலில் சாய்ந்து கொண்டான். அமுதாவின் அழைப்பை ஏற்று அவர்களின் வீட்டிற்கு டிபன் சாப்பிடப் போகாமல் இருந்திருக்கலாம் எனத் தோன்றியது. தொலை பேசியில் அழைத்திருப்பது சூரியன்



மட்டுமில்லை; மறைமுகமாக வானவில்லும்தான் என்ற களிப்பில் இந்திரா நகர் விரைந்தவனுக்கு ஏமாற்றம்தான் காத்திருந்தது. அங்கே அவனை வரவேற்க சூரியன்தான் இருந்தது; வானவில் இல்லை.

''...நான் முதல்ல போன் பண்ணிப்ப நீங்க வரலைன்னு சொல்லிட்டீங்களே— அதனால நந்தா உடனே அவளோட ஃப்ரண்ட்ஸையெல்லாம் பார்த்திட்டு வரேன்னு சொல்லிட்டு காரை எடுத்திட்டு வெளியில் போனா— அப்பத்தான் உங்க போன் வந்தது... நானும் ஓடிப்போய் வேகமா பார்த்தேன். அதுக்குள்ளே கார் தெரு முனைக்குப் போயிடுச்சி.''

''அதனால என்ன? பரவாயில்லை.''

''உங்களுக்குப் பரவாயில்லை. நந்தாவுக்கு? நீங்க வந்திருந்தது தெரிஞ்சா கோவம் கோவமா வரும் அதுக்கு.''

''நான் உன்கூடப் பேசிட்டு இருக்கணும்னுதானே வந்தேன் அமுதா—'' சந்துரு வேண்டுமென்றே சொன்னான்.

''இதை நீங்க சொன்னதா அவகிட்டே சொன்னா— அவ்வளவுதான்... ஒரு மாதிரி ஆயிடும் அவளுக்கு...''

''ஆமாமா... சொல்லிடாதே...''

''நந்தா ரொம்ப மென்மையான பெண்ணுங்க...'' அமுதா உண்மையான மன நெகிழ்வுடன் சொன்னாள்.

''அப்படியா—?''

''அய்யோ— ஐ லவ் வெரி மச்... வாழ்க்கையில் என்னால் எதை மிஸ் பண்ண முடிஞ்சாலும் நந்தாவோட அன்பை மட்டும் என்னால் மிஸ் பண்ணவே முடியாதுங்க.''

"பேசாமே உனக்கும் நந்தாவுக்குமே கல்யாணம் செய்து வச்சிடலாம்!"

"எங்கப்பாகூட இப்படித்தான் சொல்வாங்க... உண்மையாவே எங்க நந்தா ரொம்ப நல்ல பொண்ணு"

"அப்ப நீ நல்ல பெண் இல்லையா?" –இதையும் சந்துரு வேண்டுமென்றேதான் கேட்டான்.

"நானும் நல்ல பொண்தான்..." முகத்தில் நாணம் பரவ பதில் வந்தது.

சந்துரு சுற்றிலும் ஒரு முறை பார்த்து விட்டுச் சொன்னான்... "உனக்கு ஒரு விஷயம் தெரியுமா அமுதா. எனக்கு உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு..."

அமுதாவிற்கு முகம் வெட்கத்தில் மலர்ந்து அந்த மலர்ச்சி கண்களில் உடனே மொத்தமாகப் பிரதிபலித்தது மன நிறைவுடன் 'தாங்ஸ்' என்றாள். சந்துரு அமுதாவின் நாணத்தை அக்கறையுடன் நோட்டமிட்டான். இத்தனை நெருக்கத்தில் பெண்ணிடம் வெட்கத்தைக் காண்பதெல்லாம் அவனுக்கு மிகப் புதியதாய் இருந்தது. அவனின் இளமைக்கு உதவியாகவும் இருந்தது!

"உன்னை மட்டுமில்லை; உங்க குடும்பத்தையே ரொம்பப் பிடிச்சிருக்கு... உங்க வீட்ல பொதுவாகவே எல்லாருமே ஒருத்தர் கொருத்தர் அன்பா இருக்கீங்க அதனால அட்மாஸ்பியரே உங்க வீட்ல ரொம்ப இதமா இருக்கு... அதுவும் எங்க வீட்ல இருக்கிற சூழ்நிலைக்கு நேர் விரோதம் உங்க வீட்டுச் சூழ்நிலை..."

"இதை எங்க உறவுக்காரங்க எல்லாருமே கூட சொல்வாங்க..."

"எங்க விடும் இருக்கே— வீடா அது...? யாருக்கும் யார்கிட்டேயும் உண்மையான அன்பே கிடையாது அமுதா... என் மேல என் அண்ணன்களுக்குப் பொறமை.



எங்க அப்பாவுக்குப் பணத்தைத் தவிர எது மேலேயும் மரியாதை கிடையாது. அவரோட கடவுளே பணம்தான். எங்க தாத்தா அந்தக் காலத்தில் லட்சம் ரூபாய்க்கும் மேல் அவரை இன்ஷூர் பண்ணியிருந்தாராம்... தத்தா எப்படா சாவார்; இன்ஷ்யூரன்ஸ் பணம் எப்படா கைக்கு வரும்னு அப்பா காத்திட்டிருந்தாராம். எங்க அம்மாவே சொல்லியிருக்காங்க... என்ன வேணுமானாலும் செய்வார் எங்கப்பா—பணத்துக்காக..."

"சொல்லாதீங்க... கேக்கறப்பவே பயமாயிருக்கு எனக்கு..."

"நீ ஏன் பயப்படறே; கல்யாணத்துக்கு அப்புறம் நாம் இங்கேதானே இருந்திடப் போறோம்..."

"உங்கம்மா எப்படிப் பட்டவங்க..."

"எங்கப்பாகிட்டே பட்ட இம்சையிலேயே நசுங்கிப் போயிட்டவங்க. ஏதோ-பிறந்தாச்சு பூமியில்; அப்படியே தள்ளிட்டே போக வேண்டியதுதான் என்கிற நிஷ்டூரம் தான் அவங்கிட்டே... அதனால் ரொம்ப ஆழமான அன்பை யெல்லாம் எதிர்பார்க்க முடியாது... ஏதோ, அவங்களோட கடமையை செய்திட்டு யாரையும் அவ்வளவா கண்டுக்காமே இருந்திடுவாங்க... அதனால, என் கல்யணாத்துக்குப் பெண் பார்க்கணும் என்கிற பேச்சு கிளம்பினப்ப இப்ப கல்யாணம் செய்துக்க வேண்டாம்னுதான் நெனைச்சேன். எங்கவீட்ல எனக்கே நிலைமை சரியில்லாமே இருக்கிற சமயத்தில இன்னொருத்தியும் வந்து படணுமான்னு இருந்தது எனக்கு... நல்ல வேளை; கடவுள் என்னைக் காப்பாத்தினார்..."

சொன்னதையெல்லாம் குறுக்கிடாமல் மௌனமாக அமுதா கேட்டுக் கொண்டிருந்ததைக் கவனித்த சந்துரு சட்டென அமைதியுற்றான். இத்தனை அவசரப்பட்டு தான் தனது குடும்பத்தினரைப்பற்றி விவரித்திருக்க

வேண்டாமோயென்று தோன்றியது. அதனால் பேச்சை மாற்றினான்

"இதென்னமா டிபன்–புதுசா இருக்கு?"

"பால்போளி... நல்லாயிருக்கா?"

"நிஜமாவே நல்லாயிருக்கு !"

"ஆசை ஆசையா நந்தாதான் செய்தா..."

"நான் வருவேன்கிறது நிச்சயமா தெரியாமே எப்படி இதையெல்லாம் நந்தா செய்தது?"

"எப்படியும் நீங்க வருவீங்கன்னு நம்பிக்கை அவளுக்கு..."

"பாவம் இல்லே? நான் வந்து அது செய்த பால் போளியை சாப்பிட்டுட்டு இருக்கேன். அதை மட்டும் காணோம்..."

"நீங்க அவசரமா கிளம்பிப் போயிட வேணாம். நந்தா வந்ததும் அவளையும் பார்த்திட்டுப் போயிடுங்க. இல்லேன்னா என்னைத்தான் கோவிச்சுப்பா..."

அமுதாவின் இந்த வெண்மையான அறியாமை சந்துருவின் மனத்தின் குற்றப் பக்கத்தை மெலிதாகத் தாக்கியது. கொஞ்சம் கொஞ்சமாக ஓர் குற்ற உலகம் நோக்கியும் மனத்தால் தான் நகர்ந்து கொண்டிருப்பதைச் சந்துருவால் காண முடிந்தது. நந்தா தயாரித்து வைத்து விட்டுப் போயிருந்த பால்போளி அந்தரங்கத்தில் அவனின் வேறோர் உணர்வுகளுக்கு உணவாகிக் கொண்டிருந்தது. மூன்று வருடங்களுக்கு முந்தைய கல்லூரி மாணவி நந்தா சட்டென அவனுள் தெரிந்தாள். அன்றைய அந்த நந்தாவாக இன்றைய நந்தாவை அணுகவே முடியாதா என்ற ஏக்கம் மனத்துள் புரண்டது.

"இப்பா எங்க அப்பாவுக்கு என்னைப் பத்தின கவலை போயிடுச்சி; எனக்குக் கிடைச்ச மாதிரியே எங்க



நந்தாவுக்கு ஒரு நல்ல வரன் கிடைச்சிட்டா நிம்மதியாயிடுவார்... வேற ஒரு கவலையும் கிடையாது அவருக்கு..."

மனவெண்மை குறையாமல் தொடர்ந்து அமுதா சொன்ன இத்தகவல் சந்துருவின் வேறொரு பிரக்ஞை வட்டத்தைச் சுழல வைத்தது. இந்தக் குடும்பத்திற்கு வீட்டோடு மாப்பிள்ளையாக வாழ்வதற்கு இன்னொரு ஆடவனும் வருவான் என்ற அந்த ஞாபகத்தை துரிதமாக மறக்க விரும்பினான்! ஆனால் முடியவில்லை. அந்த ஞாபகம் அவனின் இதயத் துடிப்புடன் சேர்ந்தே அடித்துக் கொண்டிருந்தது. இந்தக் குடும்பத்தில் அவனுக்குக் கிடைக்கத் துவங்கி இருக்கும் ஒருமித்த உபசாரங்களும் அவனுக்கு மட்டுமேயான பிரத்யேகமானதாக இருக்க வேண்டும் போலிருந்தது. இம்மாதிரியான சுவையான பால்போளிகள் அவனுக்கு மட்டுமேதான் என்றைக்கும் தயாரிக்கப்பட வேண்டும்! இன்னொரு ஆடவனுக்கும் தயாரிக்கப்படக் கூடாது! அது மட்டுமில்லை; நந்தாகூட ஒட்டு மொத்தமாக சந்துருவின் அருமை மைத்துனி என்ற ஒரே ஒரு கோணத்தில் மட்டும் இயங்கிக் கொண்டிருந்தாலே போதுமானது! வேறொரு முக்கிய பிடிமானம் நந்தாவிற்கு வேறொரு உறவின் இழைகள் மூலம் கிடைத்து விடக்கூடாது! அவள் சந்துருவின் மைத்துனி மட்டும்தான்...!

இந்த உணர்வுக் கபடங்கள் கசியத்தொடங்கியதுமே சந்துருவிற்கு பால்போளியும், அமுதாவின் அருகாமையும் சுவைக்கவில்லை பேசாமல் ஆபிசில் வேலைகளில் கவனம் செலுத்தியிருக்கலாம் போலிருந்தது. அவனின் உள் மன ஓட்டத்தைக் காணத் தெரியாமல் அமுதா ஆர்வத்துடன் மாம்பலம் கோதண்டராமர் கோயில் பற்றி சொல்லிக் கொண்டிருந்த போது பொறுமையில்லாமல் குறுக்கிட்டுக் கேட்டான்:

"உனக்குப் பால்போளி செய்யத் தெரியுமா தெரியாதா?"

"தெரியுமே..."

"இனிமே எனக்காக எப்ப பால்போளி செய்யறதா இருந்தாலும் நீதான் செய்யணும். சரியா?"

எத்தனை மறைக்க முயன்றும் மறைக்க முடியாத குரோத உணர்வுடன் கேட்ட தொனி அமுதாவிற்கே சற்று அதிர்ச்சியைத் தந்தது. இதில் ஏன் இத்தனை குரோத தொனி என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் ஓர் தயக்கத்துடன் சந்துருவை அவள் ஏறிட்டுப் பார்த்த போது எதிர்பாராத அவசரத்துடன் அவன் அமுதாவிடம் விடைபெற்றுக் கொண்ட பாணி மானிட உறவின் வேறொரு திசைப்பைத் தருகிற எச்சரிக்கை பாணியாக அவனுக்குத் தெரிந்தது. இந்த வீட்டின் சுவர்களுக்குள் இது முற்றிலும் புதியபாணி...!

## 12

இரவின் நீட்சி நீளமடைய நீளமடைய சந்துரு நிம்மதி இழக்க ஆரம்பித்து விட்டான். அத்தனை எளிதாகத் தன்னுடைய பலவீனம் வெளிப்பட்டு விட்டதேயென்று வெட்கப்பட்டான். சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போது தானும் மிக மிகச் சாதாரண ஆடவனாகத்தான் நடந்து கொள்வோமோ என்று சந்தேகப்பட்டான். உண்மையில் தான் எந்த விசேஷ தன்மைகளும் இல்லாத மிக சராசரி மனிதன்தானா- அடிப்படையில், என சிந்தித்துப் பார்த்தான். உண்மை சற்றே கசப்பது போலிருந்தது. கசப்பை ருசிக்க முடியாமல் மனச் சக்கரம் உடனே எதிர் வழியில் சுற்றத் தொடங்கியது. 'ஆமாம். பெரிய மகானாக இருந்தால் கூப்பிட்டு பெரிய பாரத



ரத்னா பட்டமா கொடுத்து விடப் போகிறார்கள்' என்ற ஆற்றாமைமிக்க எரிச்சலும் உள்ளுக்குள் ஏற்பட்டது. திருமணம் முடிந்த ஒரு மாதத்தில் வீட்டோடு மாப்பிள்ளை யாக இருக்க முடியாது என்று ஒப்பந்தத்தை மீறி விடலாமா என்றுகூட நினைத்தான். அங்கேயே இருந்தால் இந்த இம்சை அவ்வப்போது குறுக்கிடத்தான் செய்யும். காதலியாக இவள்கள் எனக்குக் கிடைக்க மாட்டாள்கள். ஆனால் இவள்கள் செய்து வைக்கும் பால்போளிகளை மட்டும் நான் வெட்கங் கெட்டுப் போய் தின்று கொண்டிருக்க வேண்டும்! என்னடா இது அநியாயம்...! அந்தக் காலத்தில் இவள் மட்டும் என் னுடன் பஸ்சில் வராமல் திடீரென்று ராணி மாதிரி காரில் போய் விடுவாள்; இன்றைக்கு நான் மட்டும் இவள் கூப்பிட்டதும் மணிகிருஷ்ணசாமி கச்சேரிக்குப் போய்விட வேண்டும்...! ஏனென்றால் நான் மட்டும் அவ்வளவு ஏமாளி! இரண்டு காதுகளிலும் பெரியதாக பூ வைத்திருக் கிறேன்...! என்னடா இது அக்கிரமம்...!

சந்துரு மனத்திற்குள்ளேயே நந்தாவிற்கு அழகு காட்டினான். கோபம் கோபமாக வந்தது அவனுக்கு. இதெல்லாம் விதியின் திட்டமிட்ட சதியாகவும் தெரிந்தது. காதலியாகக் கிடைக்க விடாமல் மச்சினியாக அனுப்பி வைத்திருக்கிறது விதி! இது சதிதானே...! சந்துரு யோசித்துக் கொண்டே இருந்தான். விதிக்கு மட்டும் தான் சதி பண்ணத் தெரியுமோ? எனக்குத் தெரியாதா சதி பண்ண... இல்லை; விதிதான் சதி பண்ணுமோ; நானும் பண்ணக் கூடாதோ சதி......

சந்துருவில் எண்ணங்கள் இப்படித் திருகித் திருகி புழுக்களாக நெளிந்து கொண்டிருந்தன. எண்ணப் புழுக்கள் மாலையில் சாப்பிட்ட பால்போளியின் மேல் ஊர்ந்தன. பால்போளி என்னமோ ருசியாகத்தான் இருந்தது! சட்டென சந்துருவின் மனவெளியில்

வெய்லின் உக்கிரம் விலக்கியது. மேகக் கூட்டங்கள் என எண்ணக் கூட்டங்கள் விரைந்து வந்தன. மறுகணம் மன வெளியில் வானவில் தெரிந்தது! எத்தனை நட்புமிக்க ஊர்ஜிதம் இருந்திருந்தால் நான் வருவேனா என்பது கூடத் தெரியாமல் அத்தனை சுவையாக நந்தா பால் போளி தயாரித்திருப்பாள்... வானவில்லில் இருந்து சிறு சிறு மழைத் தூறல் பெய்தாற் போலிருத்தது சந்துருவிற்கு... சட்டென அவனுக்கு உணர்வுகள் பொங்கின• அலைபாய்ந்தன. நந்தாவிற்காக கோழைத்தனத்துடன் நவித்தன. ரகசியமான காதலுடன் கோபம் கொண்டன...... கடைசியில், இந்த அத்தனை உணர்வுகளும் கண்களின் வழியே சூடான நீர்க்கோடுகளாய் வழிந்து தலையணையை நனைத்தன. நந்தா அவனுடைய வாழ்வில் வெறும் மைத்துனியாக 'மட்டும் இயங்குவது சந்துருவிற்குப் போதாதாக இருந்தது. மைத்துனி என்ற பூச்சுகளைத் துடைத்துவிட்டு வெறும் வீணை வாசிக்கும் பெண்ணாக மட்டும் அவளை ஏற்றுக் கொள்ள வேண்டும் போலிருத்தது. அமுதாவை சந்துருவின் மனம் நிராகரிக்கவில்லை. நந்தாவையும் தவிர்க்க முடியவில்லை அவனால். மையமுள் சமனமாக ஆடாமல் அசையாமல் இருக்க தராசின் இருபுற நிலையிலும் சம எடைக் கற்களாக அவர்கள் இருவருமே அவனுக்குத் தேவைப்பட்டார்கள்...!

கண்ணீரை காதலுடன் துடைத்து விட்டு சந்துரு எழுந்து உட்கார்ந்தான். 'ஸ்டில், ஐ லவ் நந்தா' என முணகினான். 'கவலைப்படாதே அமுதா! உன்னையும் நான் காதலிக்கிறேன் ... நீயும் எனக்குப் பிடித்தமான மனைவிதான். உன்னையும் நான் வெறுக்கவே மாட்டேன். ஆனால், எனக்கு நந்தாவும் வேண்டும். மனைவி இருக்கும் போதே இன்னொருத்தியையும் மனைவியாக ஏற்று எத்தனையோ பிரமுகர்கள் வாழ்ந்து கொண்டிருக்க வில்லையா?



அப்படி இருக்கும் போது மனைவி ... இன்னொருத்தியை நான் காதலிக்கக் கூ... கூடாது? உண்மையில் பார்த்தால் என்னு... காதலியே நந்தாதானே...இரண்டாவதுதாலே ... தா...!'

ஏனோ உவகையுடன் சந்துரு தலையைக் குலுக்கிக் கொண்டான். செப்பனிடப்படாமல் இருந்த ஒரு கோயிலின் கோபுரம் திடீரென புதுப்பிக்கப்பட்டு குட முழுக்கு விழா துவங்கியிருப்பது போல் தெரிந்தது அவனுக்கு! ஏதேனும் அற்புதம் நிகழ்ந்து தானே நந்தாவையும் மணந்து கொண்டால் எப்படி இருக்குமென்று யோசித்து வேறு பார்த்தான்... யாரோ ஒருத்தியை இரண்டாம் மனைவியாக்கிக் கொள்வதில் தப்பு ஒன்றும் இல்லையே...! சந்துருவின் சிந்தனைகள் தறிகெட்டு இயங்கிக் கொண்டிருந்தன. மைத்துனியையும் மணந்த பிரமுகர்கள் யாரேனும் இருக்கிறார்களா என்று ஞாபகப்படுத்திப் பார்த்தான். யாரும் ஞாபகத்தில் வரவில்லை. அதனாலென்ன? யாரும் மைத்துனியை மணந்திருந்தால்தான் என்ன? மணக்காவிட்டால்தான் என்ன? நான் மணந்து ஒரு புதிய சரித்திரம் படைக்கிறேன்...!

பொழுது விடிவதற்குச் சில மணி நேரங்கள் முன்பு வரை இவ்விதமெல்லாம் உணர்வுகள் போன போக்கில் மனம் வயப்பட்டு கிடந்த சந்துரு பொழுது விடிந்து கண் விழித்த போது இரவின் தனது மிகையான எண்ணங்கள் குறித்துச் சிறிது வெட்கப்பட்டுப் போனான். என்ன இது! இவ்வளவு மோசமான மனக்கிலேசத்திற்கு உள்ளாகிப் போய் விட்டோம் என்ற அதிர்ச்சியும் வந்தது. அவசர அவசரமாக மனத்தைச் சுத்தப்படுத்த வேண்டும் போலிருந்தது. நேற்று திடீரென அவசர அவசரமாக அமுதாவிடம் விடைபெற்றுக் கொண்டதின் அறிவிலித்தனம் அறிவை உறுத்தியது. எதிர்பாராமல் நேற்றைய சந்திப்பில் இறுதியில் நேரிட்டு விட்ட கவனக் குறைவின் பிழைகளை எப்படிச் சரி செய்வதுயென்று யோசித்தான்.

வெய்லின் உக்கிரம் விலக்கியது. மேகக் கூட்டங்கள் என எண்ணக் கூட்டங்கள் விரைந்து வந்தன. மறுகணம் மன வெளியில் வானவில் தெரிந்தது! எத்தனை நட்புமிக்க ஊர்ஜிதம் இருந்திருந்தால் நான் வருவேனா என்பது கூடத் தெரியாமல் அத்தனை சுவையாக நந்தா பால் போளி தயாரித்திருப்பாள்... வானவில்லில் இருந்து சிறு சிறு மழைத் தூறல் பெய்தாற் போலிருத்தது சந்துருவிற்கு... சட்டென அவனுக்கு உணர்வுகள் பொங்கின. அலைபாய்ந்தன. நந்தாவிற்காக கோழைத்தனத்துடன் நவித்தன. ரகசியமான காதலுடன் கோபம் கொண்டன...... கடைசியில், இந்த அத்தனை உணர்வுகளும் கண்களின் வழியே சூடான நீர்க்கோடுகளாய் வழிந்து தலையணையை நனைத்தன. நந்தா அவனுடைய வாழ்வில் வெறும் மைத்துனியாக மட்டும் இயங்குவது சந்துருவிற்குப் போதாதாக இருந்தது. மைத்துனி என்ற பூச்சுகளைத் துடைத்துவிட்டு வெறும் வீணை வாசிக்கும் பெண்ணாக மட்டும் அவளை ஏற்றுக் கொள்ள வேண்டும் போலிருத்தது. அமுதாவை சந்துருவின் மனம் நிராகரிக்கவில்லை. நந்தாவையும் தவிர்க்க முடியவில்லை அவனால். மையமுள் சமனமாக ஆடாமல் அசையாமல் இருக்க தராசின் இருபுற நிலையிலும் சம எடைக் கற்களாக அவர்கள் இருவருமே அவனுக்குத் தேவைப் பட்டார்கள்...!

கண்ணீரை காதலுடன் துடைத்து விட்டு சந்துரு எழுந்து உட்கார்ந்தான். 'ஸ்டில், ஐ லவ் நந்தா' என முணகினான். 'கவலைப்படாதே அமுதா! உன்னையும் நான் காதலிக்கிறேன் ... நீயும் எனக்குப் பிடித்தமான மனைவிதான். உன்னையும் நான் வெறுக்கவே மாட்டேன். ஆனால், எனக்கு நந்தாவும் வேண்டும். மனைவி இருக்கும் போதே இன்னொருத்தியையும் மனைவியாக ஏற்று எத்தனையோ பிரமுகர்கள் வாழ்ந்து கொண்டிருக்க வில்லையா?



அப்படி இருக்கும் போது மனைவி இருக்கும் போது இன்னொருத்தியை நான் காதலிக்கக் கூடவா செய்யக் கூடாது? உண்மையில் பார்த்தால் என்னுடைய முதல் காதலியே நந்தாதானே... இரண்டாவதுதானே அமுதா...!'

ஏனோ உவகையுடன் சந்துரு தலையைக் குலுக்கிக் கொண்டான். செப்பனிடப்படாமல் இருந்த ஒரு கோயிலின் கோபுரம் திடீரென புதுப்பிக்கப்பட்டு குட முழுக்கு விழா துவங்கியிருப்பது போல் தெரிந்தது அவனுக்கு! ஏதேனும் அற்புதம் நிகழ்ந்து தானே நந்தாவையும் மணந்து கொண்டால் எப்படி இருக்குமென்று யோசித்து வேறு பார்த்தான்... யாரோ ஒருத்தியை இரண்டாம் மனைவியாக்கிக் கொள்வதில் தப்பு ஒன்றும் இல்லையே...! சந்துருவின் சிந்தனைகள் தறிகெட்டு இயங்கிக் கொண்டிருந்தன. மைத்துனியையும் மணந்த பிரமுகர்கள் யாரேனும் இருக்கிறார்களா என்று ஞாபகப் படுத்திப் பார்த்தான். யாரும் ஞாபகத்தில் வரவில்லை. அதனாலென்ன? யாரும் மைத்துனியை மணந்திருந்தால் தான் என்ன? மணக்காவிட்டால்தான் என்ன? நான் மணந்து ஒரு புதிய சரித்திரம் படைக்கிறேன்...!

பொழுது விடிவதற்குச் சில மணி நேரங்கள் முன்பு வரை இவ்விதமெல்லாம் உணர்வுகள் போன போக்கில் மனம் வயப்பட்டு கிடந்த சந்துரு பொழுது விடிந்து கண் விழித்த போது இரவின் தனது மிகையான எண்ணங்கள் குறித்துச் சிறிது வெட்கப்பட்டுப் போனான். என்ன இது! இவ்வளவு மோசமான மனக்கிலேசத்திற்கு உள்ளாகிப் போய் விட்டோம் என்ற அதிர்ச்சியும் வந்தது. அவசர அவசரமாக மனத்தைச் சுத்தப்படுத்த வேண்டும் போலிருந்தது. நேற்று திடீரென அவசர அவசரமாக அமுதாவிடம் விடைபெற்றுக் கொண்டதின் அறிவிலித் தனம் அறிவை உறுத்தியது. எதிர்பாராமல் நேற்றைய சந்திப்பில் இறுதியில் நேரிட்டு விட்ட கவனக் குறைவின் பிழைகளை எப்படிச் சரி செய்வதுயென்று யோசித்தான்.

அலுவலகம் போனதும் முதல் காரியமாக அமுதாவை தொலை பேசியில் அழைத்தான்.

"என்னங்க, காலங் கார்த்தாலேயே போன் பண்றீங்க?"- அமுதா மிக இயல்பாகவே கேட்டாள்.

"என்னமோ உன்னைப் பார்க்கனும் போல இருந்தது... ஆனா இந்த நேரத்ல வர முடியாதே... அதனால போன் பண்ணியாவது அஞ்சு நிமிஷம் பேசலாமேன்னு பார்த்தேன்."

"காலையில என்ன டிபன் சாப்பிட்டீங்க?"

"இட்லி. நீ?"

"நானும் இட்லிதான் சாப்பிட்டேன்."

"எத்தனை இட்லி சாப்பிட்டே?"

"இருங்க. யோசிச்சுச் சொல்றேன்...... உம் ஆறு."

"என்னைவிட ஒண்ணு கூட சாப்பிட்டிருக்கே..."

"இனிமே சாப்பிடறச்சே வேணா நானும் ஒண்ணைக் குறைச்சுக்கறேன்... சரியா?"

"நோ நோ... எனக்காக நீ ஏன் குறைச்சுக்கணும்... கேரி ஆன்... அப்புறம், நேத்திக்கி நந்தா எப்போ வந்தது?"

"நீங்க போய் கால்மணி நேரத்ல வந்துட்டா... வந்து நல்லா திட்டினா என்னை..."

"எதுக்கு?"

"அவ வரதுக்கு முன்னாடி உங்களைப் போக விட்டதுக்கு. நைஸா அவளை வெளியில் அனுப்பிட்டு நான் உங்களை வரச்சொல்லிட்டேனாம்... அப்படியெல் லாம் சொல்லித் திட்டுது என்னை... இன்னொரு நாள் என்னை ஏமாத்திட்டு உங்ககூட அவ மட்டும் எங்கே யாவது வெளியில போகப் போறாளாம்... சொல்றா......"



சந்துரு மன நிறைவுடன் சிரித்தான். இப்பேற்பட்ட நந்தாவிடம் காதல் வயப்படாமல் இருக்க எந்த ஆடவனால் முடியும் என பிரியத்துடன் நினைத்துக் கொண்டான். ஐ லவ் யூ ரஸ்னா என தொலைக் காட்சி விளம்பரத்தில் ஒரு துல்லியமான குழந்தை முழு திருப்தியில் சொல்லுமே- அது போல் ஐ லவ் யூ நந்தா என பூரிப்புடன் சொல்ல வேண்டும் போலிருந்து. அதைச் சந்துரு மனத்துக்குள் சொல்லிக் கொண்டான்.

"அப்புறம் நேத்திக்கி இனிமே பால்போளி எனக்கு செய்யறதா இருந்தா நீதான் செய்யணும்னு நான் சொன் னதை நீ எப்படிப் புரிஞ்சுக்கிட்டேன்னு தெரியலை... எனக்காக நந்தா செய்ய வேண்டாம் என்கிற ஐடியாவில் சொல்லலை அதை. விசேஷமா எனக்கு செய்யறப்போ நீயே செய்தா எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கும் அமுதா... அதைச் சொல்றதுக்குத்தான் அந்த மாதிரி சொல்லிட்டேன். அதை நீ தப்பா எடுத்துக்க வேண்டாம்..."

"நோ நோ... அப்படியெல்லாம் தப்பா எடுத்துக்கலை நான்..."- அமுதா கொஞ்சம் பிரயாசைப்பட்டுத்தான் இதைச் சொன்னாள்.

"இப்போ நந்தா எங்கே?"

"பாத்ரும்ல குளிச்சிட்டிருக்கா..."

"இவ்வளவு நேரம் கழிச்சா?"

"இதான் அவளோட டைம்..."

"அப்போ மறுபடியும் எப்போ பார்க்கலாம்."

"இன்னிக்கி ஈவினிங் வரீங்களா?"- அமுதா எதிர் பாராத உரிமையுடன் கேட்டு விட்டாள்.

"நோ. இனிமே உன் பர்த்டே அன்னிக்குத்தான் வருவேன். அதுக்கு அப்புறம் நம்ம மேரேஜ் அன்னிக்குத்

தான்... அப்போ வச்சிரட்டுமா? நந்தா வந்ததும் சொல்லு. மார்ச் தர்ட்டிஃபஸ்ட் சந்திப்போம்... ஒகே?

''ஒகே... தாங்க் யூ. தாங்க் யூ வெரிமச்!''

அமுதா களிப்புடன் ரிசீவரை வைத்தாள்.

''யாருக்கு நூறு தடவை தாங்க்யூ தாங்க்யூனு சொல்லி வழிஞ்சிட்டிருந்தே?''- தலையைத் துவட்டியவாறே வந்த நந்தா கேட்டாள்.

''யார்னு நீதான் சொல்லேன் பார்க்கலாம்.''- கைகள் இரண்டையும் மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு மிடுக்குடன் கேட்டாள் அமுதா.

நந்தா ஒரு விதச் சந்தேகத்துடன் அமுதாவைப் பார்த்தாள். ''ஏய், யாரோடடி பேசினே?''

''நீ தான் சொல்லேன்...''

''அத்தான் கூடவா?''

அமுதா ஆம் என்று தலையை அசைத்தாள்.

''திருடி திருடி... நேத்திக்கி எனக்குத் தெரியாம வீட்டுக்கு வரச் சொன்னே; இன்னிக்கி என்னடான்னா எனக்குத் தெரியாமே திருட்டுத்தனமா போனெல்லாம் பண்ணிப் பேசறே... அதென்ன நீ மட்டும் பேசறது... நானும் பேசுவேன்...''

நந்தா வேகமாகப் போய் ரிசீவரை எடுத்து டயலைச் சுற்றினாள். அமுதா விரைந்து சென்று போன் பட்டனை அழுத்திக் கொண்டாள்.

''வேண்டாம் நந்தா. மார்னிங் டைம். பிஸியா இருப்பார்.''

''நீ மட்டும் ஏண்டி பேசினே?''

டயலைச் சுற்றுவதற்கு நந்தா முரண்டு பிடித்தாள்.

''சொன்னா கேளு நந்தா...''



''ரெண்டே ரெண்டு நிமிஷம் தாண்டி...''

''தொலை...''

நந்தா உன்னிப்புடன் டயல் செய்தாள். சில நொடி களில் சந்துரு கிடைத்தான்.

''அத்தான், நான் நந்தா பேசறேன்.''

''என்ன நந்தா?''

''ஸண்டே மணிகிருஷ்ணசாமி டேன்ஸ் பார்க்கப் போகலாம். வரீங்களா?''

''என்னது, அதுக்குள்ளே அவங்க டேன்ஸ் கத்துக் கிட்டாங்களா?''

''அய்யோ ! கடிக்காதீங்க...''

''டேன்ஸ் பார்க்கப் போகலாம்னு முதல்ல கடிச்சது யாரு?''

''சும்மா உங்களை டீஸ் பண்றதுக்காக சொன்னேன்... சரி; மணிகிருஷ்ணசாமி கச்சேரிக்கு போயிட்டு வரலாம். என்ன சொல்றீங்க...?''

சந்துரு பதில் சொல்வதற்கு யோசித்தான். நந்தா வுடன் கச்சேரிக்குச் செல்ல சம்மதிப்பது சிறப்பானதா, மறுப்பது சிறப்பானதா என்று சிந்தித்துப் பார்த்தான். எப் போதுமே எதிர்மறை அணுகல்களுக்குத்தான் பாதிக்கும் திறன் அதிகம் என்பதை அவனின் கல்வித் தகுதிகள் சுட்டிக் காட்டின.

''ஒரு கச்சேரிக்கு போய் வரலாமான்னு கேட்டா அதுக்குப் பதில் சொல்றதுக்கு இவ்வளவு நேரமா?''- நந்தா பொறுமை இல்லாமல் சிணுங்கினாள்.

''வர ஸண்டேவா?''

''ஆமா ஆமா ஆமா...''

''அய்யோ! முடியாதே நந்தா. அன்னிக்கி என் ப்ரண்ட் ஒருத்தனோட மேரேஜ் ரிஸப்சன் இருக்கேம்மா... அடுத்த ஸண்டே வேணா போகலாம்.''

''ஆமா, உங்களுக்காக ஒவ்வொரு ஸண்டேயும் அந்தம்மா பாடிட்டே இருப்பாங்க... போங்க; உங்ககூட சண்டை... பேசப் போறதில்லை நான்... அதே மாதிரி உங்க வுட்பி கூடேயும் பேசப் போறது கிடையாது...''

நந்தா தடாலென ரிசீவரை வைத்து விட்டு கோபம் குறையாமலே அம்மாவிடம் பேசினாள்...

''அம்மா, பாருங்கம்மா. அமுதா எனக்குத் தெரியாமே தெரியாமே அத்தானுக்கு போன் பண்ணிப் பண்ணி பேசறா.''

''அவ ஆசைக்கு அவ பேசறா... நாளைக்கு உனக்கும் கல்யாணம் நிச்சயமாகி, நீயும் உன்னைக் கட்டிக்கப் போறவருக்கு எத்தனை போன் வேணுமானாலும் பண்ணிப் பேசு... யாரு வேண்டாம்னு சொல்றது...''

அம்மா சொன்னதை ஆமோதிப்பது போல் ஆள்காட்டி விரலை உயர்த்திக் காட்டி ஆட்டியபடி அமுதாவிடம் நந்தா சொன்னாள்:

''இரு இரு. எனக்கும் ஒரு காலம் வரும்க்கா... அன்னிக்கி கவனிச்சுக்கிறேன் உன்னை. நானும் என்னோட வுட்பிக்கு உனக்குத் தெரியாமே தெரியாமே தினம் போன் பண்ணிப் பேசறேனா இல்லையானு பாரு...''

''சாயந்தரம் இன்னிக்கி நீ வீணை க்ளாஸ்க்குப் போனதும் மறுபடியும் நான் அத்தானுக்கு போன் பண்ணிப் பேசுவேனே...'' என்று சொல்லித் தங்கையை அமுதா அழகு காட்ட, பதிலுக்கு நந்தா அவளுக்கு அழகு காட்ட, சகோதரிகள் இருவரும் ஒருவரை ஒருவர் துரத்தி



ஓடிக் கொண்டிருந்த அதே கணம், சந்துரு அவர்கள் இருவரையும் அவனுடைய தராசின் இரு புறங்களாக திருப்தியுடன் ஓர் முறை மானசீகமாகக் கண்டுவிட்டு அலுவலகப் பணிகளில் ஈடுபட ஆரம்பித்தான்...

## 13

மந்தைவெளி செயிண்ட் மேரி சாலையில் மகாலிங்கத்தின் வீடு ஒரு புயலை எதிர்நோக்கிய இறுக்கத்தில் நிசப்தமாக இருந்தது. சகோதரர்கள் மூவரும் ஏதும் அறியாத இயல்பில் அவரவர் அலுவலகங்களுக்குச் சென்ற பின்தான் அந்த வீட்டின் சூழலில் அசாதாரண மௌனம் ஓர் கரிய நிழலாக வந்திருந்தது. பெண்கள் ஆங்காங்கு அவர்களுக்குப் பழக்கமான சுவர்களுள் மறைந்து கொள்ள, மகாலிங்கம் மட்டும் கிழப்புலியாக ஹாலுக்குள் சுற்றிச் சுற்றி நடந்து கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அவரின் மைத்துனர் வெங்கடேசன் அவசரமாக மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கினார்.

''வணக்கம் அத்தான். உடனே என்னைப் புறப்பட்டு வரச் சொன்னீங்களாம்... அதான் என்ன விபரம்னு கேட்டுட்டுப் போகலாம்னு வந்தேன்...''

''வெங்கடேசனா, வா வா... உன்னைத்தான் எதிர் பார்த்துக்கிட்டிருந்தேன்... நீ ஒரு காரியம் செய்யணும் வெங்கடேசா...''

''என்ன விஷயம்னு சொல்லுங்க. தாராளமா செய்றேன்.''

''என்னோட இந்த வீட்டைப் பார் வெங்கடேசா— எவ்வளவு மோசமா இருக்குன்னு... இருபது வருஷமா ரிப்பேரே பார்க்காமே எப்படிப் போச்சு பார்... ஏழெட்டு

வருஷமா வெள்ளையும் அடிக்கலை. இப்படியே விட்டா வீடே நாசமாயிடும் போல இருக்கு. அதனால வீட்டை கம்ப்ளீட்டா ரிப்பேர் பார்த்து பெயிண்ட் அடிச்சிரலாம்னு பார்க்கிறேன்.''

''சொல்லுங்க, ஆள் ஏற்பாடு பண்ணி நானே எல்லா வேலையும் பார்த்து உங்களுக்கு 'நீட்'டா முடிச்சுத் தரேன்...''

''அதே மாதிரி செலவோட செலவா மொட்டை மாடியில இன்னொரு ரும் ஒண்ணும் கட்டிடலாம்னு நெனைக்கிறேன்...''

''ம்... கட்டிடலாம்.''

''இது எல்லாத்துக்கும் மொத்தச் செலவு ஒரு லட்சம் ஆகுமா?''

''குறைஞ்சது எழுபத்தி ஐந்தாயிரம் ருபா ஆகும் அத்தான்...''

''ஒரு லட்சம் ஆகும்னு வச்சுக்கோயேன்...''

''அத்தான் சொன்னா வேண்டாம்னா சொல்லப் போறேன்...''

''அந்த ஒருலட்ச ருபா பணம் – நீதான் ஏற்பாடு செய்து தரணும்... வெங்கடேசா.''

''போச்சுடா. அவ்வளவு பெரிய தொகைக்கு நான் எங்கே அத்தான் போவேன்?''

''போய் அந்தப் பெருமாள்சாமியைத்தான் கேளேன்... பணத்தை அவர் சும்மாதானே வச்சிட்டிருக்கார்......''

மகாலிங்கம் தன் மன வ்யூகத்திலிருந்து நேர்த்தியாகச் செயல்பட்டு வெளிப்பட்டார்.

இத்தனை நிமிஷங்களும் நடந்து கொண்டிருந்த உரையாடலின் பின்னால் பதுங்கிக் கொண்டிருந்த



வஞ்சகம் பளீரென்று நெருப்புப்போல மகாலிங்கத்தைச் சுற்றிலும் எரிந்து தெரிந்தது.

வெங்கடேசன் அதிர்ந்து போய் கேட்டார்: ''என்ன அத்தான் இது; அவரைப் போய் பணம் கேக்கச் சொல்றீங்க...?''

''வேற யாரைக் கேக்கறது... அவரைத் தான் கேட்க முடியும்... நான் ஒண்ணும் சும்மா அவரைப் பணத்தைத் தூக்கித் தரச் சொல்லலையே... கடனாத்தான் வாங்கித் தான்னு சொல்றேன்...''

''அதுசரி; அப்ப அந்தப் பணம் பேங்க்காரன்கிட்டே வாங்கின கடன் மாதிரிதான்...!''

''என்னமோ உன் வீட்டுப் பணத்தை நான் கேட்டுட்ட மாதிரிதான் பேசறே...''

''யார் வீட்டுப் பணமா இருந்தாயென்ன அத்தான். பணத்தைக் கேக்கறதுக்கும் ஒரு முறை வேணாமா...''

''என்ன முறை கெட்டுப் போனதை கண்டுட்டே நீ... எம்.பி.ஏ. படிச்ச என் பையனை தூக்கி வீட்டோட மாப்பிள்ளையா கொடுத்திருக்கேன் வெங்கடேசா... சும்மா வேலை இல்லாத வெட்டிப் பயலை கொடுத்திடலை அவங்களுக்கு. மாசம் மூவாயிரம் ருபாய்க்கு மேல சம்பளம் வாங்கற பொன்முட்டை போடற தங்க வாத்தைத்தான் தாரை வார்த்திருக்கேன்—தெரிஞ்சுக்கோ...''

''சந்துரு கல்யாணமாகிப் போனாலும் எப்பவும் போல மாதா மாதம் ரெண்டாயிரம் ருபா பணத்தை அவனோட சம்பளத்தில் இருந்து உங்களுக்கேதான் கொடுத்திடணும்னு நாம்தான் அன்னிக்கே பேசி முடிச்சாச்சே... அப்புறம் எப்படி வாத்தோட பொன்முட்டை பெருமாள்

சாமி வீட்டுக்குப் போகும்...? என்ன அத்தான் நீங்க பேசறது...''

''அதான், நான் சொல்ல வந்ததை முழுசா சொல்ல விடாமே முந்திரிக் கொட்டை தனமா பேசினா இப்படித் தான் பேச்சு வரும். எப்பவும் போல மாசாமாசம் ரெண்டாயிரம் ருபாவை குடுத்திடணும்னு அன்னிக்கிப் பேசினதை வாபஸ் வாங்க்கிறேன்... சந்துரு அந்த ரெண்டாயிரத்தை பெருமாள்சாமிகிட்டேயே ஒவ்வொரு மாதமும் குடுத்திடச் சொல்லு. எங்களுக்குத் தரவேணாம் அவன். அப்படி மாதா மாதம் ரெண்டாயிரம் ருபா குடுத்தா ஒரு வருஷத்துக்கு எவ்வளவு கொடுப்பான்?''

''இருபத்தி நாலாயிரம்...''

''இருபத்தி ஐயாயிரம்னு வச்சுக்க.''

''சரி. இருபத்தி ஐயாயிரம்!''

''நாலு வருஷத்துக்கு?''

''ஒரு லட்சம்.''

''அந்த ஒரு லட்சத்தைத்தான் அட்வான்ஸா பெருமாள்சாமிகிட்டே வாங்கித் தந்திடுன்னு சொல்றேன்!''

''அதென்ன அத்தான்– நாலு வருஷ கணக்கு?''

''நான்தான் நாலு வருஷத்துக்கு அப்புறம் உயிரோட இருக்க மாட்டேனே...! சரியா நாலு வருஷம் முடிஞ்சதும் சந்திரதசை ஆரம்பிக்குது எனக்கு. அதான் மாரகதசை எனக்கு... நான் மண்டையைப் போட்டாச்சுன்னா இங்கே அந்தப் பயல் யாருக்கும் பைசா தரவேண்டியதில்லையே... எல்லாம் பெருமாள்சாமி குடும்பத்துக்குத் தானே...''

''என்னமோ அத்தான் அவர்கிட்டே போய் லட்ச ருபாய் கேக்கறது எனக்கு அநியாயமா தெரியுது...''



''ஒரு அநியாயமும் கிடையாது... என் மகனோட வருமானத்தை அடமானம் வச்சு கேக்கறதா நெனைச்சு கேக்கறேன். பெருமாள்சாமி என்கிற பேங்க்ல நான் போடற ஃபிக்ஸட் டெபாசிட் என் மகன்! என்னோட ஃபிக்ஸட் டெபாசிட்ல நான் லோன் கேக்கறேன்! அவ்வளவுதான்.''

''ஏதோ மாப்பிள்ளைக்கு ஒரு வைர மோதிரம் போடுங்க– அந்த மாதிரி வேணுமானாலும் கேட்கலாம். வீடு ரிப்பேர் பண்றதுக்கு ஒரு லட்ச ருபா தாங்கன்னு அவங்களைப் போய் கேக்கறது நியாயம் கிடையாது அத்தான்... லட்ச ருபா என்கிறது சாதாரணமான தொகை கிடையாது. போய் கேட்டா மிஸ்டர் பெருமாள்சாமி எப்படி ரீயாக்ட் பண்ணுவாரோ? ஏற்கனவே ஒரு தடவை அட்டாக் வந்த ஹார்ட் பேஷண்ட் வேற... திடீர்னு கல்யாணத்துக்கு இன்னும் பத்து நாள் இருக்கிற இந்த நேரத்ல போய் இவ்வளவு பெரிய தொகையை கேட்டா– அந்த அதிர்ச்சியில் அவரோட ஹெல்த்துக்கு ஏதாவது பெரிய ஆபத்து வந்துட்டா என்ன பண்றது... சொல்லுங்க...''

''அவரு ஹார்ட் பேஷண்ட்னா அதுக்கு நான் என்ன பண்றது? என்ன நீ... நீ சொல்றதைப் பார்த்தா சாவு வீட்டுக்குத் துக்கம் கேட்கப் போறவளும் தாலி அறுத்துக்கிட்டுத்தான் போகணும்னு சொல்வே போலிருக்கே... உன்னால போய் கேட்க முடியாதுன்னா சொல்லு; நான் போய் கேட்டுக்கறேன்... எனக்கு வேண்டியது ஒரு லட்ச ருபா...''

''இல்லை இல்லை; நான் போய் கேட்கிறேன்... உங்களுக்காகப் போட்டேன் இந்த நாய் வேஷம். கடைசி வரை குரைச்சிடத்தானே வேணும்... ஆனா, அதுக்கு முன்னாடி ஒண்ணை மட்டும் நல்லா யோசிச்சு வச்சுக்கோங்க... ஒரு லட்ச ருபால்லாம் தரமுடியாதுன்னு

பெருமாள்சாமி சொல்லிட்டார்னா- என்ன பண்ணுவீங்க?''

''சொல்லிடுவாரா தர முடியாதுன்னு?''- விகற்பத்தின் எல்லைக் கோட்டில் நின்றபடி கேட்டார் மகாலிங்கம்.

''அப்படிச் சொல்லிட்டார்னு வச்சுக்கோங்க அத்தான்... அப்ப என்ன பண்ணுவீங்க?- முதல்ல இதுக்குப் பதில் சொல்லுங்க...''

மகாலிங்கம் விஷமமான உள் அர்த்தத்துடன் தோளில் கிடந்த துண்டை எடுத்து ஒரு முறை உதறிக் காட்டினார்.

''அவ்வளவு தைரியமா சொல்லிட்டார்னா- அவ்வளவுதான்; துண்டை உதறி தோள்ள போட்டுட்டு சந்துருவை டெபாசிட் பண்றதுக்கு வேற பேங்க்கைப் பார்த்துப் போயிடுவேன்! பேங்க்கா இல்லை இந்த ஊர்ல. கூரை மேல இரையைப் போட்டா ஆயிரம் காக்கா வெங்கடேசா! டெபாசிட் தரேன்னு சொன்னா நான், நீன்னு போட்டி போட்டுட்டு நூறு பேர் வருவான்... உலகம் தெரியாமே இருக்கே நீ... போ. போய் கேளு. ஒரு லட்ச ரூபா வந்தா கல்யாணம் நடக்கும். ஒரு லட்ச ரூபா இல்லேன்னா இந்தக் கல்யாணம் நடக்காது...''

-உள்ளே சந்துருவின் அம்மா விம்மி விம்மி அழுகிற சப்தம் வெங்கடேசனுக்கும் கேட்டது. ஹாலை விட்டு வெங்கடேசன் உடனே வெளியேறி விட்டாலும் பத்து நிமிடங்கள் கழித்தே அவரின் மோட்டார் சைக்கிள் புறப்படும் சப்தம் ஒலித்தது.

பெருமாள்சாமி குடும்பத்தினர் அனைவரும் நிசப்தமாக அமர்ந்திருந்தார்கள். அமுதாவின்தாயார் ஜானகியின் கண்கள் கலங்கிக் கிடந்தன. சகோதரிகள் இருவரும் அப்பாவையே நோக்க, பெருமாள்சாமி ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். செய்தியை வெளியிட்டு விட்ட



துக்கத்தில் வெங்கடேசன் ஓர் ஆங்கிலப் பத்திரிகையைப் பார்க்கிற பாவனையில் கூர்மையாக உட்கார்ந்திருந்தார்.

பெருமாள்சாமி சொன்னார்,''ஒரு லட்ச ருபா அவர் கேட்டது கூட எனக்குப் பெரிய விஷயமா படலைங்க வெங்கடேசன். கேட்டதுக்கான காரணமும், கேக்கறது ஏதோ அவரோட டெபாசிட்ல கடன் கேக்கற மாதிரியான அந்த இடக்கும் தான் எனக்கு என்னவோ போல இருக்கு... என்னவோ ப்ளாக் மெயில் பண்ற மாதிரி இருக்கு... இல்லே?''

''ப்ளாக் மெயில் தான்... வேறென்ன?'' என்றார் வெங்கடேசன்.

''பெண்ணைப் பெற்றவன்னா அத்தனை இளக்காரமா இருக்கு... என்ன பண்றது. கொடுத்துத்தான் ஆகணும். வேற வழி?''

''கல்யாணத்துக்கும் அப்புறமும் இந்த மாதிரிப் பணம் கேட்டாங்கன்னா?''- ஜானகி அம்மாள் அச்சத்தோடும் சந்தேகத்தோடுப் கேட்டாள்.

''கேட்கக் கூடியவர் தான் எங்க அத்தான்.''

''எனக்கும் மகாலிங்கம் எப்படிப் பட்டவர்னு கொஞ்சம் கொஞ்சம் தெரியத்தான் செய்யும்... ஆனா- அந்தப் பையன் சந்துருவுக்காகத்தான் இந்தச் சம்பந்தத்துக்கு நான் சம்மதிச்சேன்... அது என்னாடான்னா இந்த மாதிரி வம்பில் வந்து முடிஞ்சிருக்கு... ஒரு லட்ச ரூபாய்னா பக்கத்திலேயா இருக்கு...! உட்கார்ந்து அவரை எண்ணச் சொல்லுங்க- தெரியும்!- லட்ச ரூபாய்னா எவ்வளவுன்னு...''

மறுபடியும் பல நிமிஷங்களுக்கு அவர்களிடையே மௌனம் நிலவியது. திருமண வைபவம் நெருங்கிக் கொண்டிருக்கிற மொத்த சந்தோஷமும் அந்தக் குடும்பத்தில் வடிந்து போயிருந்தது.

"மிஸ்டர் சந்துருவிற்கும் அந்த வீட்டில பாக உரிமை இருக்கு என்கிற ஒரே ஒரு செக்யூரிட்டியை வச்சு லட்ச ரூபாய் தரேன். ஆனா ஒரே ஒரு கண்டிஷன்..." என்றார் பெருமாள்சாமி...

"சொல்லுங்க சார்."

"ரூபாயை நான் செக்காகத்தான் தருவேன். அதுக்கு மிஸ்டர். மகாலிங்கம் ஜஸ்ட் ஒரு ஸ்டாம்ப் ஒட்டின ரசீது தந்தாகணும்... தருவாரா கேளுங்க..."

"ஆயிரம் ரசீது கேட்டாலும் தருவார். அவருக்கு வேண்டியது பணம்..."

"இன்னிக்கி புதன் கிழமை. சனிக்கிழமை வாங்க. செக் தர்ரேன்..."

"இதில் என்னை நீங்க தப்பா நெனைச்சிடக் கூடாதுங்க..."

"நோ நோ... எனக்குத் தெரியும் மிஸ்டர். மாக லிங்கத்தை... ஆனா, அவர் இப்படிப் பணம் கேக்கறதை அவரோட மகன்கள் யாரும் குறுக்கிட்டு ஒண்ணும் சொல்றதில்லையா?"

"யார் வந்து சொன்னாலும் அவர்கிட்டே எடுபடாது. பசங்களையெல்லாம் அடிமை மாதிரி தானே வச்சிருப் பார்..."

"இந்த லட்ச ரூபாய் விஷயம் மிஸ்டர் சந்துருவிற்குத் தெரியுமா தெரியாதா?"

"தெரியலை சார். தெரிஞ்சாலும் ஒண்ணும் பண்ண முடியாது. எங்க அத்தானை... எங்கப்பாவையே அந்தக் காலத்தில் என்ன பாடு படுத்தியிருக்கார்... ஆனா ஒண்ணு, அவர் இதுவரைக்கும் பண்ணியிருக்கிற பாவத்திற்கு அவருக்கு எதுவுமே தீங்கு நடக்கலை... அதான் ஆச்சரியம்."



"அப்ப சனிக்கிழமை வந்து செக்கை வாங்கிட்டுப் போயிடுங்க வெங்கடேசன்..."

"உங்க பெண்ணைச் சந்தோஷமா இருக்கச் சொல்லுங்க... அதான் முக்கியம்."

"இப்ப நீங்க நேரா மிஸ்டர் மகாலிங்கத்தைத்தானே பார்க்கப் போறீங்க?"

"போய் சொல்லிடணுமே..."

"அவர் கிட்டே போய் சொல்றதுக்கு முன்னாடி நீங்க நேரா இப்ப மிஸ்டர் சந்துருவைப் போய் பார்த்து இங்கே நாம் பேசினதை யெல்லாம் சொல்லிடுங்களேன்... அநாவசியமா கல்யாணம் நின்னு போயிடக் கூடாதுங்கற ஒரே காரணத்துக்காகத்தான் இந்தப் பணத்தைக் கொடுக்கறதுக்கு நாங்க சம்மதிச்சோம்னு அவர் மட்டு மாவது தெரிஞ்சுக்கட்டும்..."

"ஓயெஸ். உங்க இஷ்டப்படியே போய் சொல்றேன். ஆனா, எனக்கு இதில் ரொம்ப வருத்தம் தான். நான் ஏற்பாடு செஞ்ச ஒரு காரியத்தில் எங்க அத்தான் இப்படிப் பண்ணிட்டாறே..."

"என்ன பண்றது. எங்க விதி. ரொம்ப சந்தோஷமா இருந்தோம்..."

"அப்போ சனிக்கிழமை வந்து செக் வாங்கிக்கிறேன்."

"இப்போ போய் மிஸ்டர் சந்துருகிட்டே முதல்ல நான் சொன்னதைச் சொல்லிடுங்க..."

"அதான் என் முதல் வேலை..."

வெங்கடேசனின் மோட்டார் சைக்கிள் பெரும் சீற்றத்துடன் சந்துருவின் அலுவலகத்தை நோக்கி விரைந்தது.

# 14

வெங்கடேசன் விஷயத்தைச் சொன்னதும் குபீரென கற்பூரக் குவியலில் நெருப்புப் பற்றினாற் போலிருந்தது சந்துருவில் உணர்வுக் கோப எரிதல். வெகுண்டு கை முஷ்டியால் மேஜை மேல் ஓங்கி ஒரு குத்து விட்டான்.

"கடைசியில் என் கல்யாண விஷயத்திலும் அவரோட புத்தியை காட்ட ஆரம்பிச்சிட்டாரா? இனி விடக்கூடாது. நானும் எத்தனையோ விஷயத்ல இது வரைக்கும் அவர் பேச்சுக்கு மறு பேச்சு பேசாமே வாயை மூடிட்டு இருந்திருக்கேன்... இப்ப என் வாழ்க்கை யிலேயே கை வைக்க வந்திட்டார்... இனிமேயும் பொறுமையா இருக்கக் கூடாது. வ்ாழ்வா சாவான்னு பாத்திட வேண்டியதுதான்... மாமா, இப்ப நீங்க நேரா இந்திரா நகர்ல இருந்துதானே வரீங்க?"

''அங்கேயிருந்து தான் வரேன்...''

''இப்பவே போனா அமுதாவோட அப்பா வீட்ல இருப்பார் இல்லையா?''

''ஆமாமா. வீட்லதான் இருப்பார்.''

''ரைட். வாங்க. நேரா முதல்ல அங்கே போவோம்...''

''அங்கே போய் என்ன பண்ண சந்துரு...''

''நீங்கே வாங்களேன். வந்து பாருங்க என்ன பண் றேன்னு...''

சந்துரு இண்டர்காமில் சுஜாதாவைக் கூப்பிட்டான். ரிசீவரில் தோழியின் குரலைக் கேட்டதுமே அவனின் உணர்வுகள் நெகிழ்ந்து குழைந்தன.

''என்ன ஏதுன்னு இப்ப எதுவும் கேட்காதே. உடனே நாம் இந்திரா நகர்ல அமுதா வீட்டுக்குப் போகணும். நீயும் என்னோட வரே...!'' என்றான்.

''எனிதிங் சீரியஸ்?''



''யெஸ். பயங்கர சீரியஸ்... அநேகமா இன்னிக்கி பூராவும் நீ என்னோடேயே இருக்க வேண்டியிருக்கும் சுஜா.''

''நோ ப்ராளம்... வா கிளம்பலாம்...''

''நீ கீழே போர்ட்டிகோவில் இரு. உனக்கும் சேர்த்து பி.எம். கிட்டே லீவ் சொல்லிட்டு ஐந்தே நிமிஷத்தில் வரேன்...''

''நம்கூட வேற யார் வரா?''

''எங்க மாமா ஒருத்தர் வந்திருக்கார்— அவரும் வரார்.''

''சரி. கீழே வெயிட் பண்றேன்...''

ஐந்தே நிமிடத்தில் சந்துரு மாமா வெங்கடேசனுடன் கீழே வந்தான். மறு நிமிஷம் மூவரின் இரண்டு சக்கர வாகனங்களும் இந்திரா நகர் நோக்கிப் புறப்பட்டன. போகிற வழியிலேயே ஆங்காங்கு குரலை உயர்த்தி உயர்த்தி சந்துரு விஷயத்தை சுஜாதாவிடம் விளக்கி விட்டான். விஷயத்தைக் கேள்விப்பட்ட சுஜாதாவிற்குத் தாங்கவில்லை.

''சந்துரு, அஞ்சு நிமிஷம் எங்கேயாவது நிறுத்தி கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிவிட்டு அப்புறமா போக லாம்... என்னமோ தெரியலை; கோபத்தில் என் கையெல் லாம் நடுங்கறது...'' என்றாள்.

அடையார் தியசாபிகல் சொஸைட்டி எதிரில் ஓரமாக வண்டிகளை நிறுத்தினார்கள். கோபத்தில் சுஜாதாவின் முகமெல்லாம் சிவந்திருந்தது. சில நிமிடங்கள் யாருமே பேசவில்லை...

''என்னடா சந்துரு! உங்கப்பாவுக்கு தலையில் முடிதான் கிடையாதுன்னு பார்த்தாக்க சுத்தமா மூளை யும் கிடையாது போலிருக்கே...!'' என்றாள் சுஜாதா.

"மூளையா, இருதயமே கிடையாதும்மா அவருக்கு."

"எப்படி இப்படி வாய் கூசாமே லட்ச ரூபாய் கொடுன்னு கேட்க முடியறதோ தெரியலை...விட்டுடாதே அவரை... ரெண்டுல ஒண்ணு பாத்திடு... நான் இருக்கேன் என்ன ஹெல்ப் வேணுமானாலும் பண்றேன்... உங்கப்பா விற்கு லட்ச ரூபாயும் போகக்கூடாது. இந்தக் கல்யாண மும் நின்னுடக்கூடாது."

"கமான்!"

மீண்டும் உயிர் பெற்று மூன்று வாகனங்களும் விரைந்தன.

அமுதாவின் வீட்டை அவர்கள் அடைந்தபோது வீட்டில் சூழ்ந்திருந்த இயல்பற்ற அமைதியே அந்தக் குடும்பத்தினரின் மனநிலையை எடுத்துக் காட்டியது. கொஞ்சமும் எதிர்பாராமல் சந்துருவைப் பார்த்த அமுதா குபீரென்று வெடித்து விட்ட அழுகையை அடக்க முடியாமல் கதறி அழுதபடி வேகமாக அவளுடைய அறைக்குள் ஓடிப்போனாள்.

நந்தாதான் உடைந்து விடாமல் வலிமையுடன் நின்று, "வாங்க அத்தான்" என்று அழைத்தாள்.

"அப்பா இல்லையம்மா நந்தா"—சந்துரு கேட்டான்.

"இருக்காங்க. இப்பத்தான் உள்ளே போய் படுத் தாங்க. இதே கூப்பிடறேன். நீங்க உட்காருங்க . நீங்களும் உங்காருங்க மிஸ். சுஜாதா..."

அப்போது சப்தம் கேட்டு பெருமாள்சாமியே வந்து விட்டார். எல்லோருமே ஒரு நெருடலான குற்ற உணர் வுடன் சோபாக்களில் அமர்ந்தார்கள். சில நொடிகள் அவர்களின் உலகம் கொடிதாக இருந்தது.

சந்துரு முதலில் தயக்கந்துடன்தான் பேசத் துவங் கினான்.



"ஸாரிங்க... மாமா வந்து சொன்னதுக்கு அப்புறம் தான் எனக்கு விஷயமே தெரிஞ்சது. திடீர்னு அப்பா இந்த மாதிரி நடந்துக்கிறதுக்காக முதல்ல நான் உங்க கிட்டே மன்னிப்புக் கேட்டுக்கறேன். ப்ளீஸ்! அந்த ரூபாயை நீங்க கொடுக்க வேண்டாம். என்ன ஆனாலும் நான் பார்த்துக்கறேன். நிச்சயமா இந்தக் கல்யாணம் நடக்கும். கவலையே படவேண்டாம் நீங்க. என்ன ஆனாலும் சரி; எங்கப்பாவை இந்த விஷயத்ல ரெண்டுல ஒண்ணு பாத்திடறதா முடிவு பண்ணிட்டேன்... அமுதா வையும் கூப்பிட்டுச் சொல்லுங்க– எனக்கே அவமானமா இருக்கு... அவரை என் அப்பான்னு சொல்றதுக்கே கேவலமாயிருக்கு..."

பெருமாள்சாமி சிறிது நேரம் அமைதியாக இருந்து விட்டுச் சொன்னர்ர்.

"இல்லை மிஸ்டர். சந்துரு. இப்போதைக்கு முதல்ல உங்கப்பா கேட்ட பணத்தைக் கொடுத்திடலாம். எதுக்கு வம்பு கல்யாணத்துக்கு முந்தி... எல்லாம் சுமுகமா நடந் திடட்டும். அப்புறம் பார்த்துக்கலாம்..."

"நோ சார்! நோ... நீங்க பணம் கொடுக்கவே கூடாது... எனக்கு அது அவமானம்... அந்த அவமா னத்தை நெஞ்சில சுமந்திட்டு தாலி கட்ட முடியாது என்னால். அந்த அளவுக்கு இன்சென்ஸ்டிவ் இல்லை நான்..."

"பணம் வரலைன்னா கல்யாணம் நின்னு போயி டும்னு சொன்னாராமே?"

"அதைச் சொல்றதுக்கு அவருக்கு உரிமை கிடை யாது. இது என்னோட கல்யாணம். என்னோட வாழ்க்கை நிச்சயதார்த்தம் அன்னிக்கி நீங்க ஒத்துக் கொண்டபடி இந்தக் கல்யாணத்திற்கான செலவு பூராவும் உங்க ளோடதுதானே...?"

"எல்லாம் எங்க செலவுதான்..."

"அப்போ பிரச்சினையே இல்லையே... ப்ளான் பண்ணியபடி எல்லா வேலையும் நடக்கட்டும்... சரியா முகூர்த்த நேரத்ல நான் வந்து அமுதா கழுத்ல தாலி கட்டறேன்... நம்புங்க என்னை..."

சொல்லும் போதே சந்துருவின் கண்களில் நீர் சுரந்து விட்டது. சுஜாதாவைத் தவிர எல்லோருமே ஆனந்தத்தால் கண்கலங்கிப் போயிருந்தார்கள்.

"நந்தா"— பெருமாள் சாமி அழைத்தார்— கண்களை துடைத்தவாறே.

"என்னப்பா."

"அமுதாவைக் கூப்பிடு..."

"உள்ளே அக்கா அழுதிட்டு இருக்காப்பா. வர மாட்டேன்கிறா..."

"சந்துரு, நீங்களே போய் ஆறுதல் சொல்லிட்டு வாங்க..."

சந்துரு அறைக்குள் போனான். அமுதா மெத்தையில் குப்புறப் படுத்தபடி அழுது கொண்டிருந்தாள்.

"அமுதா"... சந்துரு மெல்லிய குரலில் அழைத்தான்.

பதிலாக அவளிடமிருந்து விம்மல்தான் ஒலித்தது. குனிந்து சிறிது நேரம் அமுதாவின் அழுகை தெரியும் முதுகையே பார்த்தான்.

"கண்ணம்மா! ஏம்மா இன்னும் அழறே... அதான் நான் வந்திட்டேனே... எழுந்திரு... எழுந்து சந்தோஷமா என்னைப் பார்த்து சிரி கொஞ்சம். அப்பத்தான் நானும் சந்தோஷமா போவேன்... அமுதாம்மா... எழுந்துக்கடா... என் டார்லிங் இல்லையா நீ... எழுந்துக்க..." என்றான்.

அமுதா மெதுவாக எழுந்தாள். அவளின் முகம் பூராவும் அதற்குள் வீங்கிப் போயிருந்தது. ஆதரவுடன் அவளின் முகத்தை சந்துரு கைகளில் ஏந்திக் கொண்டான்.



"எங்கப்பாவைக் கொலை பண்ணிட்டு வந்தாவது உனக்கு நான் தாலி கட்டுவேன்! ஓகே? பயப்படாதே... உன்னைக் கைவிடவே மாட்டேன். அட் எனிகாஸ்ட்; என்னால் உன்னை மிஸ் பண்ண முடியாது. உன்னை மட்டுமில்லை; உங்க ஃபேமிலியில் யாரையுமே என்னால மிஸ் பண்ண முடியாது... தைரியமா இரு. முடிஞ்சா இடையில் ஒரு தடவை வந்து பாக்கறேன்... வரமுடியலைன்னா நேரா கல்யாணத்தன்னிக்கித்தான்... சரியா?"

அமுதா மன நிறைவுடன் தலையை அசைத்தாள்.

"ஐ லவ் யூ-வெரிமச்" என்றான் அமுதாவின் முகத்தையே பார்த்தபடி. இருவரின் கண்களும் இருவரின் கண்களையே கண்டன. மென்மையான காதல் உணர்வுடன் சந்துரு அமுதாவின் கண்களில் முத்தமிட்டு விடை பெற்று ஹாலுக்கு வந்தான்.

"அப்போ நாங்க கிளம்பறோம் சார்!" என்றார் வெங்கடேசன்.

"மிஸ்டர். சந்துரு, அப்பாகிட்டே ரொம்ப முரட்டுத்தனமா நடந்துக்காதீங்க. அவருக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான்..."

"இதுவரைக்கும் தெரியாததையும் இன்னிக்கித் தெரிஞ்சுக்கப் போறார்...! அவ்வளவுதான்... போயிட்டு வரோம். இனிமே எந்தத் தகவல் சொல்லி விடறதா இருந்தாலும்- ஒண்ணு; எங்க மாமாவே வருவார். இல்லேன்னா என்னோட ஃப்ரண்ட் சுஜா வருவா... நீங்களும் கவலைப் படாமே உங்க ஹெல்த்தைப் பார்த்துக்கோங்க... எல்லாம் நல்லபடியா நடக்கும்... வரேன்ம்மா நந்தா..."

'போயிட்டு வாங்க அத்தான்..."

''ஹலோ லிட்டில்ஃப்ளவர்! வரட்டுமா!'' —சுஜாதா நந்தாவைப் பார்த்துக் கேட்டாள்.

உடனே நந்தாவின் முகம் பூ போலத்தான் மலர்ந்து விட்டது...

''கல்யாணத்துக்குக் கண்டிப்பா'வந்திடுங்க சுஜாதா!'' —நந்தா சொன்னாள்.

''நான் வராமலா...? ஓகே. ஸீயூ...''

''ஸீயூ...''

மூவரும் ஹெல்மெட் அணிந்து போர்டிகோவிற்கு வந்தார்கள்.

''விஷயத்தோட பயங்கரங்களே இனிமேல்தான் இருக்கு'' என்றான் சந்துரு.

"பயமாயிருக்கா சந்துரு?" —சுஜதா கேட்டாள்.

"பயங்கர களைப்பா இருக்கு...அந்த ராட்சஸனைப் போய் ஜெயிக்கணுமே...''

"அதுக்குள்ளே களைச்சுப் போனா எப்படி...கமான்"

பதினைந்து நிமிடங்களில் மூவரும் மந்தைவெளி செயிண்ட் மேரி சாலை வந்து சேர்ந்தார்கள்.

''ஒரு லட்ச ரூபா வராதா?"—மகாலிங்கம் கண்களை இக்கியவாறு கேட்டார்.

"ஆமா வராது...'' சந்துரு உறுதியான குரலில் சொன்னான்.

"ஏண்டா வராது?'' —மகாலிங்கம் ஈசிசேரிலிருந்து எழுந்து நின்று கேட்டார்.

"வராதுன்னு சொன்னா வராதுதான்..."

''பரவால்லையே... பெரியா ராஜா ராம்மோஹன் ராய் மாதிரிப் பேசறியே...! வெங்கடேசா, அந்தப் பெருமாள் சாமிக்கு போன் பண்ணி இந்த கல்யாணம் கேன்சல்னு சொல்லிடு...''



''கல்யாணத்தைக் கேன்சல் பண்றதுக்கு நீங்க யாரு? செலவு பண்ணி இந்தக் கல்யாணத்தை நடத்தறவர்— பெருமாள்சாமி. கல்யாணத்ல தாலி கட்டப் போறவன் நான்... இடையில் பணம் கேட்றதுக்கு நீங்க யார் ..?

"பலே...! மாமியார் வீட்டு மோகம் அவ்வளவு தூரத்துக்கு வந்திருச்சா... அப்ப அவ்வளவுதான். இனிமே இந்த மகாலிங்கம் சொல் அம்பலம் ஏறாது தான்...! ஏலே...! பெரிய ஆளாயிட்டே நீ. இல்லே? என்னைக் கேட்கிறே யார்னு... நான் உன் அப்பன்டா... பெத்து வளர்த்து உன்னை ஆளக்கின தகப்பன்..."

''எவன் உங்கிட்டே வந்து என்னைப் பெத்துத் போடச் சொன்னது... நானா சொன்னேன்— என்னைப் பெத்துப் போடுங்கன்னு...''

"ஆமாண்டா! என் இஷ்டத்துக்குத்தான் உன்னைப் பெத்தேன். அதே மாதிரி என் இஷ்டத்துக்கு லட்ச ரூபாயும் கேட்பேன் கோடி ரூபாயும் கேட்பேன்...நீ யாரு வாங்கக் கூடாதுன்னு சொல்றதுக்கு...?''

''நானா? மனுஷய்யா. மனுஷன்..." சந்துரு கோபத்தில் பொங்கினான். அவனுக்கு பக்கபலமாக அவனின் கையை இறுகப் பற்றியபடி நின்ற சுஜாதாவை மகாலிங்கம் வெறுப்புடன் பார்த்தார்...

''ஏய் பொம்பளை, என் வீட்டுப் பிரச்சினையில நீ ஏன் வந்து நிக்கறே? ஒடு வெளியில" என்றார்.

''ஐ வோண்ட் சார்,'' என்றாள் சுஜாதா சிரித்துக் கொண்டே

''போகமாட்டியா... யார்லே அங்கே... ஒரு கொம்பு இருந்தா எடுத்து வாடா... போக மாட்டாளமே... கொம்பால் ரெண்டு போடு போட்டா போறாளா இல்லையானு பார்க்கிறேன்...'' கொந்தளித்தார் மகாலிங்கம்.

"மேலே கை வச்சிடாதீங்க... வச்சிங்க, நடக்கிறதே வேற." சந்துரு எச்சரித்தான்.

"பொட்டை கம்மனாட்டி! பொம்பளையை கூட்டிட்டு வந்தா கலாட்டா பண்றே... வெளியில போடா... இந்த நிமிஷமே வெளியில போ... இது என் வீடு. என்னோட சுயசம்பாத்தியத்தில் நான் கட்டின வீடு. இதில் கால் தூசிகூடக் கிடையாது உனக்கு... போ வெளியில..." மகாலிங்கம் வெறி பிடித்தவர் போலக் கத்தினார்.

"எவனுக்கு வேணும் இந்தத் தரித்திரம் பிடிச்ச வீடு .. நீங்க சொல்லவே தேவையில்லை. நானே வெளியேறியிடறேன்..."

"பெருமாள்சாமி உனக்கு நல்லாத்தான் சொக்குப் பொடி போட்டு விட்டிருக்கான்— அதான் ஆடறே... வெங்கடேசா! கடைசியா கேக்கறேன்— பெருமாள்சாமி கிட்டே பணம் வாங்கித் தந்திடச் சொல்லு. வீணா என்கிட்டே பொல்லாப்பு வேணாம்... பெத்த பயல்னுகூட நான் பார்க்க மாட்டேன்— அப்புறம்..."

"லீட்ச ருபாயில்லை; லட்சம் பைசா வாங்கித் தரதாயில்லை..." சந்துரு உறுதியான குரலில் சொன்னான்.

"அப்ப இந்த நிமிஷமே வெளியேறிப் போயிட வேண்டியதுதான்— ஒரு சட்டை பேண்ட்டை கூடத் தொடக்கூடாது. அப்படியே வெளியேறிப் போ... வெங்கடேசா! என்னோட வீடு வாசல் பணம் எதிலும் இவனுக்கு உரிமை கிடையாது. நாளைக்கே அந்தப் பயல் கிட்டே ஒரு விடுதலைப் பத்திரம் எழுதி வாங்கி வந்து கொடுக்கிறது உன் பொறுப்பு... நான் செத்தாகூட அந்த ராஸ்கல் இந்த வீட்டுக்குள்ளே இனிமே நுழையக் கூடாது இப்பவே வெளியே போகச் சொல்லு அவனை..."



"எனக்கும் இனிமே இங்கே என்ன வேலை?... வா சுஜா!"

சுஜாதாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு மிக வேகமாக வீட்டை விட்டு வெறியேறி மறைந்தான் சந்துரு. மறுகணமே அந்த வீட்டின் பின்கட்டில் இருந்து அவனின் அம்மா பெரிய குரலில் அழுகிற சப்தம் கேட்டது...

## 15

"தப்பு பண்ணிட்டே சந்துரு! வீட்டுக்குள் போன உடனேயே ரொம்ப ஆவேசமா ரீயாக்ட் பண்ணிட்டே... கொஞ்சம் நிதானமா பேசியிருக்கணும்" என்றாள் சுஜாதா.

"அப்படியில்லை சுஜா. எங்கப்பா ஒரு லட்ச ருபாய் கேட்டார்னு எங்க மாமா வந்து சொன்ன நிமிஷமே எனக்குள்ளே ஏதோ ஒண்ணு வெடிச்சிருச்சி . அதனாலதான் பொங்கி எழுந்திட்டேன். ஆனா சுஜா, வெடிச்சது என்னமோ இன்னிக்கித்தான்... ஆனா இந்த வெடி உள்ளுக்குள் புகைய ஆரம்பிச்சு ரொம்ப வருஷமாச்சு...யம்மா! எத்தனை வருஷமா இவரோட அக்கிரமத்தையெல்லாம் பார்த்து பார்த்து குமுறிக்கிட்டிருந்தேன் தெரியுமா? அதுக்கெல்லாம் இப்பத்தான் ஒரு விடிவு காலம் வந்திருக்கு...."

"அப்போ இனிமே நெஜமாவே உனக்கும் உங்க ஃபாதருக்கும் ஒரு சம்பந்தமும் கிடையாதா?"

"நெஜமாவே கிடையாது. இன்னியோட தீர்ந்தது."

"படவா ராஸ்கல்! இன்னிக்குத்தான் நீ ஆம்பளை மாதிரி இருக்கே!"

"உன்னை என்னவோ சொன்னாரே...?"

"ஏய் பொம்பளை, என் வீட்டுப் பிரச்சினையில் நீ ஏன் வந்து நிக்கறே? ஒடு வெளியிலேன்னு சொன்னார் ...

எனக்கு சிரிப்புத் தாங்கலை... எப்படியெல்லாம் மனுஷா இருக்கா பார்... இல்லே?''

''அது சரி; போட்டுட்டு இருக்கிற ஷர்ட் பேண்ட்டோட இப்படி வெளியில் வந்துட்டேனே ... என்ன சுஜா பண்றது?''

''நான் வாங்கித் தரேன்டா உனக்கு... வேணும்ங்கற ட்ரஸ்...''

''கல்யாணத்துக்கு தைச்ச புது ட்ரெஸ் எல்லாம் கூட வீட்டிலேயே மாட்டிக்கிடுச்சு...''

உனக்கு என்னென்ன வேணுமோ- அதை யெல்லாத்தையுமே நான் வாங்கித் தரேன் - என் பணத்தில். உன்னால் எப்போ முடியுமோ அப்போ பணத்தைத் திருப்பித் தந்தா போறும்... எனக்கொண்ணும் அவசரம் கிடையாது... என்ன?''

''உனக்கு எப்படித்தான் நன்றி சொல்லப் போறேனோ சுஜா?''

''சும்மா இப்படி வழியாமே இருந்தா போறும்!''

''ஆனா, இந்த மாதிரியெல்லாம் என் வாழ்க்கையில நடக்கும்னு நான் கனவுலே கூட நெனைச்சிப் பார்க்கலை சுஜா. இன்னும் நெனைக்க நெனைக்க த்ரிலிங்கா இருக்கு... பயங்கர விடுதலை கிடைச்சிட்ட மாதிரி இருக்கு.''

''உனக்கு விடுதலை கிடைச்சிட்டது கூட பெரிய விஷயம் கிடையாது சந்துரு. நீ போய் வாழப் போறே பார்- அந்த வீட்ல ரொம்பப் பெரிய ஹீரோ ஆயிட்டே... நீ வேணா பார், அந்தப் பொண்ணு அமுதா உனக்குக் கோயிலே கட்டப் போறா...''

''சும்மாவே அவளுக்கு கோயில்னா உயிர்...''



''அப்போ கணவனே கண்கண்ட தெய்வம்தான். ஜரய்...!''

''போய் எனக்கு வேண்டிய ட்ரெஸ், இன்னும் கல்யாணத்துக்கு என்னென்னல்லாம் வேணுமோ-அதையெல்லாம் போய் வாங்கிட்டு வந்திடலாமா?''

''போலாம். நீயும் கல்யாணமாகிற வரைக்கும் எங்க வீட்டிலேயே இருந்துக்கோ... என்னோட ரூமையே யூஸ் பண்ணிக்கோ. எது வேணுமின்னாலும் தயங்காம மனசு திறந்து கேள். சும்மா அநாவசிய காம்ப்ளெக்ஸ் எதுவும் வேணாம். பி ஃப்ரீ... திஸ் இஸ் யுவர் ஹோம்...''

''மில்லியன்ஸ் ஆஃப் தாங்ஸ்.''

''சரி வா. ஷாப்பிங் போயிட்டு வந்துரலாம்.''

வளர்பிறை நிலா மேற்கு வானத்தில் ஒற்றையாக வட்டம் கொண்டிருந்ததை ஜன்னல் வழியாகக் கண்டபடி சந்துரு நின்று கொண்டிருந்தான். தென்னங் கீற்றுகளிளெல்லாம் நிலாவின் வெளிச்சம் கொட்டி வழிந்து கிடந்தது. அந்த நடுநிசியில் கூட ஏதோ ஓர் சிறு பறவை வானில் குறுக்கிட்டுப் பறந்தது. இதமான உணர்வுடன் கட்டிலில் சாய்ந்தான். சுஜாதாவின் அச்சிறு அறை சந்துருவின் நன்றி உணர்வால் நிறைந்து போயிருந்தது. வாழப் போகும் நாட்கள் வளம் மிகுந்து தெரிந்தது. ஓர் இறுக்கம் தொடர்கிற பழைய வாழ்க்கையிலிருந்து முற்றிலுமாக விடுதலை... இனி வாழப்போகிற பெருமாள் சாமியின் குடும்பம் ஒரு வானவில்லின் ரம்மிய நிழலாகத் தெரிகிற சூழ்நிலை.... அருகருகில் கிணற்றடியில் ஓங்கி வளர்ந்திருக்கும் பசுமையான வாழைப் பிள்ளைகளாக அமுதாவும் நந்தாவும் கொண்டிருக்கும் தோழமை, அருமைத் தோழியின் பக்கபலம்... சந்துரு திருப்தியுடன் குப்புறப் படுத்துக் கொண்டான். பெருமாள்சாமியின் குடும்பத்தில் சுஜாதா சொன்னது போல தான் ஓர் ஹீரோவாக உயர்ந்த ஸ்தூபியில் அமர்ந்து விட்டிருப்பது

7535
2796011

தெரிந்தது. எதிர்பாராத இனிய திருப்பம் இது எந்த யுத்தமும் நடக்காமலேயே வெற்றி வாகை சூடி விட்டாற் போலிருந்தது. ஓர் மௌனப் புரட்சியே நிகழ்ந்து விட்டாற் போலக் கூட இருந்தது சந்துருவிற்கு! நந்தாவின் மனத்திலும் தான் எத்தகைய முத்திரையை பதிவு செய்திருப்போம் என கணக்கிட்டுப் பார்த்தான். விடை அவனுக்குச் சாதகமாகவே தெரிந்ததில் சந்துரு மிகவும் பரவசமடைந்தான்! அமுதாவிடம் அவனின் மனம் காதலுடன் ஒன்றி விட்டதும் உண்மைதான். முழுமையான மனைவியாக அவள் அவனுள் இடம்பெற்றிருப்பதும் நிஜம்தான். இருப்பினும், நந்தா என்ற பெண்ணையும் மனத்தின் மென்மையான சதுக்கத்தில் இருந்து அவனால் அப்புறப் படுத்த முடியவில்லை. மூலஸ்தானத்தின் பாவை விளக்காய் அவ்வப்போது அப்பெண்ணின் வடிவம் சந்துருவின் மனக்கருவறையில் தெரிந்து கொண்டே தான் இருந்தது. அப்பாவை விளக்கால்தான் அவனின் வாழ்வின் வேறொரு சிறப்பும் கைகூடி வரும் போலிருந்தது! நினைக்க நினைக்க சந்துருவிற்கு பரவசமாக இருந்தது. அவனின் வாழ்க்கை நாடகத்தை எழுதும் நாடகாசிரியன் திட்டமிட்டு வசீகரமான திருப்பங்களை புனைவது போலத்தான் இருந்தது- சந்துருவிற்கு...! மனத்தால் அந்த நாடகாசிரியனுக்கு நன்றி சொல்லிக் கொண்டான். என்னமோ வாழ்க்கை என்னும் நதி நந்தாவை நோக்கித்தான் ரகசியமாக ஓடுவது போலிருந்தது. இனி இதில் குற்ற உணர்விற்குக் கூட அவசியம் கிடையாதென்று நினைத்தான். காலம் கனிந்து வருகையில் நந்தாவிடம் அவனின் காதல் கரத்தை உயர்த்தி விட வேண்டியதுதான் என நினைத்தான். இது அவனுக்கு விகற்பான இச்சை இல்லை. நந்தா தான் அவனின் மிக முதல் காதல். -அன்றொரு நாள் இந்தக் காதல் ஆற்றில் நீர் நெளிந்து ஓடிக் கொண்டிருந்தது. பின், மூன்று வருடங்கள் பருவமழை இல்லையோ



என்னவோ ஆற்றில் நீர் இல்லை... ஆனால் ஆறு இருந்து கொண்டேதான் இருந்தது! ஆற்றின் இயல்பு இதுதான். நீர் இருக்கிறதோ இல்லையோ- ஆறு இருக்கிறது. இன்று பருவமழை தீவிரமடைந்திருக்கிறது! ஆற்றில் நீர் கரை புரண்டோடுகிறது. ஆற்றின் போக்கை மாற்றுவது இயலாதது!- ஆற்றை அதன் போக்கில் விட்டுவிட வேண்டியதுதான் என்ற முடிவிற்கு வந்தான் சந்துரு. எழுந்து போய் புத்துணர்ச்சியுடன் மீண்டும் நிலாவை அவன் பார்த்த கணத்தில் இந்திரா நகரில் அமுதாவும் நந்தாவும் அதே நிலாவை தங்கள் அறையில் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"ஹனிமூன் எங்கேக்கா போகப் போறே?" - நந்தா கேட்டாள்.

"பிடிச்ச ஒவ்வொரு கோயிலா போக வேண்டியது தான்."

"சாமியார் ஆக்கிடாதே அவரை..."

"அம்மா சொன்னாங்க- கல்யாணம் முடிஞ்சதும் முதல்ல நாங்க குருவாயூர் போயிட்டு வந்திரணுமாம். அதுக்கு அப்புறம் எந்தக் கோயிலுக்கு வேணுமானாலும் போய்க்கோன்னு சொல்றாங்க. என்னு தெரியலை."

"ஆமா, சாயந்தரம் அத்தானோட ஃப்ரண்ட் சுஜாதா அப்பாவைப் பார்த்துப் பேச வந்திருந்தப்ப நீ ஏன் அவங்களோட சரியாவே பேசலை...?"— நந்தா நினைவு வந்து கேட்டாள். அமுதா பதில் சொல்லாமல் மௌனமாக இருந்தாள்.

"ஏய், என்ன கம்னு இருக்கே?"

"அதென்னமோ நந்தா அவளைப் பார்த்தா கொஞ்சம் பயமாயிருக்கு எனக்கு. ஏனோ லேசா அவளைப் பார்த்தா பொறாமையாகூட இருக்கு..."

''சீ! அநியாயமா பொறாமையெல்லாம் படாதே. பாவம், நல்ல மனுஷி...''

''அவர்கிட்டே ரொம்ப நெருக்கமா இருக்கா. அதான் ஒரு மாதிரியா இருக்கு...''

''இதைப் போய் அத்தான்கிட்டே என்னிக்காவது சொல்லி வச்சிடாதேடி இவளே... ஹார்ட் ஆனாலும் ஆயிடுவார்...''

''சே சே! அவர்கிட்டே சொல்லுவேனா?''

''அத்தான் மாதிரி ஒருத்தர் உனக்குக் கிடைக்கவே கிடைக்காது... எப்படி அவங்க அப்பாவை விட்டு வெளியேறிப் போயிருக்கார் பார். அத்தான் மட்டும் இப்படி நடந்துக்காமே பேசாமே இருந்திருந்தா நம்மோட சந்தோஷமெல்லாம் எப்படித் தூள் தூளா போயிருக்கும்...?''

''தப்பிச்சோம். இல்லே?''

''தப்பிச்சோமா? பிழைச்சோம்! ஒரு லட்ச ரூபாயைத் தூக்கிக் கொடுத்திருந்தா- அத்தான் எவ்வளவுதான் நல்லவரா இருந்தாலும் நம் மனசுக்குள் அந்த வலி இருக்கத்தானே செய்யும். சே! மனுஷாளுக்கு ஏன்தான் இத்தனை பணவெறியோ-அதுவும் வயசான காலத்தில்...''

''அத்தான் அந்த சுஜாதாவோட விட்லதான் தங்கியிருக்கிறாராமா?'' அமுதா கேட்டாள்.

''அதுக்கும் பொறாமைப் படாதே... இன்னிக்கிச் சரியா பத்தாவது நாள் இந்நேரம் உன்கிட்டே இருப்பார்...''

''அதெப்படி- அதற்குள் அண்ணா நகர்ல இருந்து சித்தப்பாகூடத் தெரிஞ்சு போன் பண்ணிட்டார்?''

''அந்த வெங்கடேசன் தான் போன் பண்ணிச் சொன்னாராம்...''



''அப்பாவுக்கு பயங்கர சந்தோஷம்- இல்லே?''

''எனக்கே எவ்வளவு சந்தோஷமா இருக்கு... அப்பாவுக்கு இருக்காதா?''

''பாவம் அப்பா, எனக்கு மாப்பிள்ளை பார்த்துப் பார்த்து அசந்திட்டார்... இந்தக் கல்யாணமும் நின்னு போயிருந்தா- அவ்வளவுதான்... ஹார்ட் அட்டாக்கே வந்திருக்கும் மறுபடியும் அவருக்கு...''

''அத்தானுக்குத்தான் இவளே நாம் நன்றி சொல்லணும்...''

''இனிமே கல்யாணத்தன்னிக்குத்தான் பார்க்க முடியுமா அவரை?''

''ஏன்க்கா- பத்து நாள் பொறுக்க முடியாதா உன்னால?''

''இடையில் ஒரே ஒரு நாள் வந்தார்னா நல்லாயிருக்கும்.''

''போன் பண்ணி வரச் சொல்.''

''அய்யோ... வேண்டாம்.''

''நான் வேணா போன் பண்ணட்டுமா?''

''நீ ஒண்ணும் பண்ண வேண்டாம்...''

''நீ என்ன சொல்றது... நாளைக்கே நான் போன் பண்றேன் பார்...''

''சொன்னா கேள் நந்தா...''

சொன்னதைக் கேட்காமல் மறுநாள் காலையில் நந்தா சந்துருவிற்குப் போன் செய்து விட்டாள்.

''குட்மார்னிங் அத்தான்.''

''குட்மார்னிங் மை டியர் லிட்டில் ஃப்ளவர்!''

''ஹை! என்ன அத்தான், நீங்களும் சுஜாதா மாதிரியே என்னை லிட்டில் ஃப்ளவர்னு கூப்பிட ஆரம்பிச்சிட்டீங்க?''

''ஏன், கூப்பிடக் கூடாதா?''

''நல்லா கூப்பிடலாம்...''

''நான் கூப்பிடறது இருக்கட்டும்- நெஜமாவே நந்தா லிட்டில் ஃப்ளவர்தானே?''- சந்துரு வேறொரு மனோநிலைக்குப் பெயர்ந்து விட்ட ரகசிய தொனியில் கேட்டான்.

''தெரியலையே.''- புலனாய்வு தெரியாத அறிவு நிலையில் நந்தா பதில் சொன்னாள்.

''லிட்டில் ஃப்ளவர்தான்... அப்படித்தான் இனிமே நான் நந்தாவைக் கூப்பிடப் போறேன்.''

''உங்க இஷ்டம் எப்படியோ அப்படியே கூப்பிடுங்க.''

''இன்னொரு விஷயம் நந்தா! இனிமே நான் நந்தாவை 'வாங்க போங்க'னு சொல்லப் போறதில்லை. அதென்னமோ அப்படிக் கூப்பிடறப்ப ஒரு அந்நியோந்நியம் வரமாட்டேன்கிறது எனக்கு. அதனால நீ வா போன்னுதான் சொல்லப் போறேன். நந்தாவுக்கு அதிலொண்ணும் ஆட்சேபணை இருக்காதே?''

''ஊஹூம், நந்தாவுக்கும் அது தான் இஷ்டம்...''

''வீட்ல அப்பா எப்படி இருக்காங்க- தைரியமா இருக்காங்களா?''

''நீங்க இருக்கும் போது இனிமே எங்க தைரியத்துக்கு என்னத்தான் குறைச்சல்? வி ஆர் வெரி ப்ரௌட் ஆஃப் யூ...''

''எனக்கும் உங்க குடும்பத்தில் ஒருத்தனா ஆகிறதில் ரொம்ப ரொம்ப சந்தோஷம்... நந்தா. அதுவும் ஒரு பெரிய



வீணை வித்வான் என் மைத்துனியா வராங்கன்னா- சும்மாவா!''- சந்துருவின் இந்தச் சுற்றி வளைந்து வந்த புகழ்ச்சி நந்தாவிற்கும் இதமாகத்தான் இருந்தது. திருப்பி அவளும் சுற்றி வளைத்த குறும்புடன் கேட்டாள்.

''உங்க மச்சினி அவ்வளவு பெரிய வீணை வித்வானா?''

''இல்லையா பின்னே?''

''இப்பத்தானே கத்துக் கொண்டிருக்கா.''

''என் மச்சினிகிட்டேயே நானும் கர்நாடக சங்கீதம் கத்துக்கலாம்னு பார்க்கிறேன்.''

''மச்சினி ஃபீஸ் நிறைய கேட்பாளே...!''

''அவளுக்கு இல்லாததா?'

இந்தக் கேள்வியின் போது சந்துருவில் கல்லூரி மாணவி நந்தா தோன்றினாள் துளித் துளியாக அந்த நந்தாவை அணுகிக் /கொண்டிருக்கிற உல்லாசம் அவனின் உணர்வுகளில் சுழியிட்டுக் கொண்டிருந்தது.

''சரி, பாடத்தை எப்ப ஆரம்பிக்கட்டும் மச்சினி?''—நந்தா கேட்டாள்.

''கல்யாணம் முடிஞ்சதும் ஆரம்பிச்சிட வேண்டியது தான்.''

''நெஜமாகவே கத்துக்கணும் நீங்க அத்தான்.''

''நெஜமாத்தான் நந்தா நெஜமாவே உன்கிட்டே கத்துக்கலாம்னு இருக்கேன். உலகம் பூராவும் புகழறாங்க கர்நாடக சங்கீதம் பற்றி... அதைப் பத்தி நான் மட்டும் எதுவுமே தெரிஞ்சுக்காமே இருந்தா எப்படி? அந்தக் காலத்து வேதங்களில் கூட கர்நாடக இசை பற்றிய குறிப்புகள் இருக்காமே?''

''கர்நாடக இசைன்னு தனிமைப்படுத்தி கிடையாது' பொதுவா இசை பற்றி உபநிஷத்தில் கூட சொல்லப்

பட்டிருக்கு... இசை வந்து நான்கு உபவேதங்களில் ஒன்று அத்தான்...''

''ஸோ- இன்னிக்கே என் பாடத்துக்கு பிள்ளையார் சுழி போட்டாச்சு?''

''நீங்க சொன்னா சரி...''

''அப்போ வச்சிரட்டுமா... வேலை கொஞ்சம் நிறைய இருக்கு. லன்ஞ்ச் அவர்ல அமுதாவுக்கு நான் ரிங் பண்றேன்னு சொல்லு...''

''ஒயெஸ்...''

சந்துரு மனநிறைவுடன் ரிசீவரை வைத்தான். வாசித்து வரும் தொடர் நவீனம் இனிமையான அத்தியாயத்தில் மையம் கொண்டிருக்கிற சுகானுபவ நிலையின் மகிழ்வோடு அலுவலகத்தின் அன்றாட பணிகளைத் தொடங்கினான்.

## 16

**மா**ம்பலம் ராகவன் காலனியில் நண்பன் கண்ணப்பன் வீட்டின் எதிரில் போய் சந்துருவின் ஸ்கூட்டர் நின்றது. கண்ணப்பன் அப்போது வீட்டின் முன் வராந்தாவிலேயே குழந்தைகளோடு விளையாடிக் கொண்டிருந்தான்.

'வாய்யா-சந்துரு, வா! மெட்றாஸ்லேதான் இருக்கியா... ஆள், அட்ரஸே இல்லையே?... என்ன விஷயம்; எதுவும் விசேஷமா?'' என்றபடி சந்துருவை கண்ணப்பன் வரவேற்றான்.

''விசேஷம்தான்... வர்ர வெள்ளிக்கிழமை எனக்குக் கல்யாணம்...''



''அடிசக்கை... நம்ம செட்லேயே நீ தான் இது வரைக்கும் மாட்டிக்காமலே இருந்தே... இப்ப நீயும் மாட்டிக்கப் போறியா...? மாட்டிக்க மாட்டிக்க..! ஜோரா மாட்டிக்க... பொண்ணு யாரு... மெட்றாஸ்தானா வெளியூரா?''

''மெட்றாஸ்தான் கண்ணப்பா... இங்கேதான் இந்திராநகர்...''

''நல்ல வசதியான இடமா?''

''வசதியான இடம்தான். அதுவும் ஆண்வாரிசு இல்லாத இடம். அதனால வீட்டோட மாப்பிள்ளையாவே போறேன்...''

'அடேங்கப்பா! பெரிய அதிர்ஷ்டம்தான். தூள் கிளப்பு!''

''அதுமட்டுமில்லை கண்ணப்பா! இப்ப நான் கட்டிக்கப் போற பெண் இருக்காளே— அவளோட தங்கையை நீகூடப் பார்த்திருக்கே... நந்தாங்கிற பேர ஞாபகமிருக்கா உனக்கு? க்வீன் மேரிஸ்ல படிச்சாளே...''

''க்வின் மேரிஸ்லேயா! நந்தாவா...?'' - கண்ணப்பன் ஞாபகம் வராமல் கேட்டான்.

''கொஞ்சம் உசரமா, எப்பவும் சிரிச்ச முகமா இருக்குமே...?''

''இரு இரு... யோசிச்சுப் பாக்கிறேன். உசரமா, சிரிச்ச முகமா... ரைட் ரைட்! அவளுக்கு இடது கன்னத்தில் கூட அழகா ஒரு மச்சம் இருக்குமே- அந்தப் பொண்ணா?''

''யெஸ்... அதே பொண்ணுதான்...''

''அந்தப் பொண்ணு இப்ப உனக்கு என்ன முறைன்னு சொல்றே?''

"அந்த நந்தாவோட அக்கா அமுதாவைத்தான் வர்ற வெள்ளிக் கிழமை நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்..."

"அடிச்சேடா- ஒண்ணாம் நம்பர் ப்ரைஸ்! தூள் கிளப்பு. சைட் அடிச்சவளே மச்சினியா வராளா- அடிசக்கை! விஷயமே புதுசாத்தான் இருக்கு. இப்பவே போய் யாராவது சினிமாவாலா கிட்டே- இதைச் சொல்லட்டா... வேற யார்கிட்டேயும் சொல்ல வேணாம்; நம்ம பாலசந்தர்கிட்டே சும்மா இந்த 'நாட்'டைச் சொல்லிட்டு வந்திட்டா போதும்- மிச்சத்தை அவர் பார்த்துப்பார்...! சும்மா அபூர்வராகங்களையே தூக்கிச் சாப்பிடற மாதிரி இன்னொரு அபூர்வராகம் பண்ணிடுவார் - என்ன; சொல்லட்டுமோ போய்...?"

"சீ! ஏண்டா இப்படி கத்திப் பேசறே...ஒரு அடையாளத்துக்காக சொன்னா- உடனே ரொம்ப சீரியஸா எடுத்துக்கறியே..."

"எனக்கு இது சீரியஸான பாயிண்ட்தான்ப்பா! மாஞ்சு மாஞ்சு சைட் அடிச்ச பொண்ணே இன்னிக்கி மச்சினியா வருதுன்னா- சும்மாவா அது? லட்சத்தில் ஒரு கேஸ்டா இது...!"

"சரி, லட்சத்தில் ஒண்ணாவே இருந்திட்டுப் போகட்டும்... வர வெள்ளிக்கிழமை காலையில முகூர்த்தத்துக்கு வந்திடு. ஈவினிங் வரவேற்பு இருக்கு... வீட்லேயும் உன் மனைவியையும் கூட்டிட்டு வந்திடு... எங்கே உன் வைஃப்... வீட்ல இல்லையா?"

"இதோ- நாலாவது வீட்ல ஒரு லேடி டாக்டர் இருக்காங்க... அங்கே போயிருக்கா..."

"ஏன், உடம்பு ஏதுவும் சரியில்லையா?"

"உடம்பே கிடையாதுரா அவளுக்கு! எப்பப் பாரு- ஏதாவது ப்ராப்ளம்...மழைகாலம் வந்திட்டா- கால் வலி.



பனிகாலம் வந்துட்டா- காது வலி... வெயில் காலம் வந்தாச்சுன்னா- கேட்கவே வேணாம்! இந்த லட்சணத்ல மாசத்தில பாதி நாள் அவுட் ஆஃப் டோர் வேற...! என்ன பண்ணுவேன் சொல்லு... போதும் போதும்னு ஆயிடுச்சி... ஏண்டா கல்யாணம் கட்டிக்கிட்டோம்னு இருக்கு..."

"உன் வைஃப்புக்கு உடம்பு சரியில்லேனு சாக்குச் சொல்லிட்டு வராமே இருந்திடாதே... அப்புறம் எனக்குக் கெட்ட கோபம் வரும்...!"

"நோ நோ. கண்டிப்பா வெள்ளிக்கிழமை கார்த்தாலேயே வந்திடுவேன்... அதுவும் உன் மச்சினி அந்த நந்தாவைப் பாக்கறதுக்காகவாவது வந்தே தீருவேன்... அந்தக் காலத்திலேயே அருமையான 'டேபிள் லேம்ப்' மாதிரி இருப்பா!' இப்ப எப்படியிருக்கான்னு பார்க்க வேண்டாமா?"

"இந்தா இன்விடேசன்!"

'தாங்க்யூ!"

மற்ற சில நண்பர்களுக்கும் திருமண அழைப்பிதழ் கொடுத்து விட்டு அரைமணி நேரம் தாமதமாக சந்துரு அலுவலகம் வந்தபோது, வரவேற்பில் அவனுக்காக அவனின் அண்ணா தேவேந்திரன் காத்திருந்தான். அண்ணாவைப் பார்த்ததுமே 'சம்திங் ராங்' என சந்துருவிற்குத் தெரிந்து போய் விட்டது...

பதட்டம் வெளிப்பட்டு விடாமல் கேட்டான், "என்ன அண்ணா! திடீர்னு...?"

"உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்- ரொம்ப முக்கியமான விஷயம் ஒண்ணு நம்ம வீட்ல நடந்து போயிருச்சி..."

"வா... என் அறைக்குப் போய் பேசலாம்..."

சந்துருவின் அறைக்குள் போனதும் தேவேந்திரன் சொன்னான்: "அப்பா நேத்திக்கி மார்னிங் பாத்ரூம்ல விழுந்துட்டார் சந்துரு..."

"அய்யய்யோ... அப்படியா? இப்ப அப்பா எங்கே இருக்கார்... வீட்லேயா ஆஸ்பிட்டல்லயா?"

"தேவகி ஆஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணியிருக்கோம்... நேத்திக்கிக் காலையில் அட்மிட் பண்ணினப்ப ப்ரஷர் இருநூறுக்கு மேல இருந்து மூக்கு வழியா லேசா ரத்தம் கூட வர ஆரம்பிச்சிருச்சி... நேத்து சாயந்தரத்துக்கு மேல பக்கவாதம் மாதிரி வந்து பாடியோட வலது பக்கம் ஆக்ஸனே இல்லாமே போயிடுச்சி..."

தேவேந்திரன் சொன்னதைக் கேட்டு சந்துரு திடுக்கிட்டுப் போனான்.

"இவ்வளவு சீரியஸான விஷயத்தை என்ன இவ்வளவு சாவகாசமா வந்து சொல்றே...?" - சந்துரு படபடப்புடன் கேட்டான்.

"இல்லை சந்துரு, நேத்திக்கி உனக்கு தகவல் சொல்றதுக்கோ சொல்லி அனுப்பவோ ஒழியவே இல்லை... பயங்கர டென்ஷன் எல்லாருக்கும்... ஆஸ்பிடல்ல அட்மிட் பண்ணிட்டு இன்னிக்கு சொல்லிக்கலாம்னு அம்மாதான் சொன்னா..."

"ஒரு போன் பண்ணியாவது எனக்கு விஷயத்தைச் சொல்லியிருக்கலாமே?"...

'பக்கவாதம் அட்டாக் பண்ற வரைக்கும் அப்பா நல்லா ஞாபக சக்தியோட இருந்தாரே... உனக்குச் சொல்ல வேண்டாம்னு அவர்தான் சொன்னார்...'

"இப்ப எப்படி இருக்கார்?"

"இப்ப பேச்சு மூச்சு இல்லாமே கிடக்கார்..."

"அப்ப சீரியஸ்தானே?"



"இந்த நிமிஷம் உயிருக்கு ஆபத்து மாதிரி எதுவும் இல்லே .. ஆனா, பாடியோட வலது பக்கம் போச்சி..."

சந்துரு துக்கத்துடன் பெருமூச்சு விட்டான். நான்கு நாட்களுக்கு முன்பு அவருடன் போட்டுக் கொண்ட சண்டை ஞாபகத்தில் வந்தது. ஏதோ புலன்களுக்குத் தெரியாத சுழல் அவனைச் சுற்றி சுற்றி வருகிறாற் போலிருந்தது. தனது திருமணம் நடக்கப் போகிறதா இல்லையா என்ற எரிச்சலில் சில நிமிடங்கள் மௌனமாக இருந்த பின் கேட்டான்:

"இப்ப என்ன பண்ண? பெருமாள்சாமிக்குப் போன் பண்ணி கல்யாணத்தைத் தள்ளி வச்சிக்க சொல்லிடவா?"

"அதெல்லாம் வேண்டாம்... அது ஏற்பாடு செய்த மாதிரி நடக்கட்டும்னு அம்மாவே சொல்லிட்டா. தள்ளி வைக்க வேண்டாம். ஆனா, சிம்பிளா நடக்கட்டும். வரவேற்பை மட்டும் கேன்சல் பண்ணிட சொன்னா..."

"அம்மா எப்படி இருக்காங்க?" - சந்துரு வருத்தத்துடன் கேட்டான்.

"அம்மா தைரியமாத்தான் இருக்கா..."

"வெள்ளிக்கிழமைக்குள்ளே எதிர்பாராமே அப்பாவிற்கு ஏதாவது ஆயிடுச்சுனா...? அப்ப- கல்யாணத்தை தள்ளித்தானே வைக்கணும்..."

"அந்த நிலைமை வராது... நேத்திக்கிகூட அவரோட ஜாதகத்தை எடுத்துப் பார்த்தேன்... இப்ப மாரகம் பண்ணாது... நாலைஞ்சு வருஷத்துக்கு- இப்படியே கை கால் விளங்காமே இருப்பார்..."

அம்மாதான் பாவம்! என் மேல அவங்களுக்கு ஒண்ணும் வருத்தம்கிடையாதே..." சந்துரு கண்கள் கலங்கக் கேட்டான்.

அதெல்லாம் ஒண்ணும் கிடையாது. நீயாவது நிம்மதியா அங்கே இருக்கட்டும்னுதான் சொல்லிட்டிருந்தா..."

"லட்சருபா வாங்கித்தான்னு சொன்னா-யார் வாங்கித் தருவா? நீயே சொல்லு..."

"அவருக்கு யார் புத்தி சொல்ல முடியும்...சொன்னாத் தான் கேப்பாரா..."

"கொஞ்சமாவது மனுஷ குணம் இருக்கனும். ஒரேயடியா பணம்தான் வாழ்க்கையில பிரதானம்னு நெனைச்சா... இப்பப் பணம் இருந்து என்ன செய்ய, கை கால் போச்சி..."

"சரி. கிளம்பி வரியா- ஆஸ்பிட்டல் போகலாம்..."

"இரு இரு. அமுதா அப்பாவுக்கும் போன் பண்ணிச் சொல்லிடறேன்..."

"அவங்களுக்குச் சொல்றதுக்கும் ஆள் போயாச்சி. மாமா போயிருக்கார்..."

"பாவம்! அவங்க என்ன நினைக்கிறாங்களோ... அமுதா அப்பா வேற பெரிய ஹார்ட் பேஷண்ட்!"

"கிளம்புவோமா?"

"சரி... தலைவிதிப்படி நடக்கட்டும்... வா போலாம்..."

இரவெல்லாம் சந்துருவிற்குத் தூக்கமே வரவில்லை' மனநிம்மதி முற்றிலுமாக குலைந்து போயிருந்தது. சுஜாதா எத்தனை ஆறுதல் கூறியும் அவனுள் கவிழ்ந்து விட்டிருந்த கோழைத்தனம் கலையவே இல்லை. திடீரென்று வாழ்க்கை வக்கரித்துக் கொண்டு எதிரில் விஸ்வருபமெடுத்து நிற்பது போலிருந்தது. காலையில் நண்பர்களுக்கு திருமண அழைப்பிதழ்கள் கொடுக்கப் போயிருந்த நேரத்தில்கூட எத்தனை சந்தோஷமாக



இருந்தோம் என்று எண்ணிப் பார்த்தான். சட்டென சந்துருவின் கண்களில் நீர் சுரந்து வழிந்து விட்டது.

"நீ சும்மா இப்படி பொம்மனாட்டி மாதிரி அழுதிண்டிருந்தா நான் எழுந்து போயிடுவேன், பார்த்துக்கோ" என்றாள் சுஜாதா.

"அப்படியில்லை சுஜா; திடீர்னு வாழ்க்கை ரொம்ப ஹெவியா சவால் விடற மாதிரி இருக்கு. என்னவோ நடக்கப் போகிற மாதிரி மனசெல்லாம் திக் திக்னு அடிச்சிக்குது. எங்கப்பா இப்படி ஆயிட்டார்னு தெரிஞ்சதுமே அமுதா வீட்லேயும் ஒரு மாதிரி ஆயிட்டாங்க. அவங்களுக்கே கல்யாணத்தைத் தள்ளி வச்சிடலாம் என்கிற மாதிரி மைண்ட் வந்திருச்சி... எங்கம்மா ரொம்ப ஸ்ட்ராங்கா சொன்னு அப்புறம் தான் அவங்க மனசே மாறுச்சி... அவங்க பாட்டுக்குக் கல்யாணத்தைத் தள்ளி கிள்ளி வச்சிருந்தாங்கன்னா- தொலைஞ்சிருப்பேன் நம்பிக்கையே வந்திருக்காது எனக்கு..."

"அதான் கல்யாணத்தைத்தான் நடத்திடப் போறாளே- அப்புறமும் என்னத்துக்கு அழுகை?"

"உள்ளுக்குள்ளே இன்னமும் பயமாவே இருக்கும்மா எங்கே அமுதாவை மிஸ் பண்ணிடுவேனோ; எங்கே நந்தாவை மிஸ் பண்ணிடுவேனோன்னு ஒரு பயம் இருந்துக்கிட்டே இருக்கு. நீ என்ன வேணுமானாலும் நெனைச்சிக்கோ; இப்பவே மனசளவில் அவங்க ஃபாமிலியோட ஃபாமிலியா நான் இணைஞ்சிட்டேன். எந்தக் காரணத்தாலும் அந்த இணைப்பு 'கட்' ஆயிடக் கூடாது. ரொம்ப ரொம்ப முக்கியம் இது- என் வாழ்க்கைக்கு..."

"புரியறதுடா எனக்கு. நன்னா புரியறது. நீ பிறந்து வளர்ந்த குடும்பத்தில் உனக்குக் கிடைச்சிராத ஒரு

அஃபெக்ஷன் இவங்க ஃபாமிலியில் உனக்குக் கிடைச்சிருக்கு... அஃப்கோர்ஸ்-இது மனுஷ இயல்புதான்... எல்லாருக்குமே ஈடு இணையில்லாத அன்புதான் வேண்டியிருக்கு. அநேகமா எல்லாருக்குமே அதுதான் கிடைக்கவும் மாட்டேன்கிறது- அதுதான் ப்ராப்ளம்... ஆனா, உனக்குத்தான் கிடைச்சாச்சே... கிடைச்ச அப்புறமும் கைவிட்டுப் போயிடுமோன்னு பயந்தா அதுக்கு நான் என்ன செய்ய முடியும்... அழுதிண்டே இருக்க வேண்டியதுதான்...!"

"அமுதா கழுத்ல தாலி கட்டற வரைக்கும் இந்தப் பயம் என்னைப் விட்டுப் போகாது சுஜா"

"பாலா உன்னை ரொம்பக் கேட்டு வேற எழுதியிருக்கான்- நீ எப்படி இருக்கேன்னு; வந்து பார்; ஸ்கூல் பசங்க மாதிரி அவன் அழுதிண்டு இருக்கான்னு எழுதிடட்டுமா?"

பாலா என்ற செய்தி குறுக்கிட்டதும் சந்துரு சிறிது ஆசுவாசமடைந்தான்.

"வேற என்ன எழுதியிருக்கான்; எப்ப வரானாம்?" என்றான்

"அதை நீதான் எழுதிக் கேள் அவனை... ஒரு வரி கிடையாது வர்ரதைப் பத்தி..."

"அவன் பெயருக்கு ஒரு இன்விடேசன் குடுத்தேனே- அட்ரஸ் எழுதி போஸ்ட் பண்ணிட்டேயா?"

"அதெல்லாம் ஆச்சு ...நாளைக்கு இந்நேரம் இன்விடேசன் அவன் கையில் கிடைச்சிரும்..."

"அமுதா வீட்ல என்ன அழகான இன்விடேசன் ப்ரிண்ட் பண்ணியிருக்காங்க தெரியுமா- எவ்வளவு பிரமாத ப்ளானெல்லாம் போட்டாங்க... கடைசியில கல்யாணம் நடந்தா போதாதாங்கிற நிலைமைக்கு வந்திருச்சி... இதுதான் அவங்க வீட்ல முதல் கல்யாணம் வேற..."



"அதுக்கு என்ன பண்றது: அடுத்த குட்டி பொண்ணு நந்தா கல்யாணத்தை ஜாம் ஜாம்னு நடத்த வேண்டியது தான்..."

"சுஜாதாவின் இந்தச் சொல் சந்துருவின் மனத்துள் நந்தா பற்றிய மென்மையான சதுக்கத்தில் ஒரு கல்லாக விழுந்தது. சதுக்கம் சிறிது நேரம் நிசப்தமாக இருந்தது. கொஞ்சம் மூர்க்கத்தனத்துடன் முறைத்தது. உள்ளுக்குள்ளேயே எதையோ தீர்மானித்தது.

"படவா ராஸ்கல்; நந்தான்னு சொன்னதும் வாயை மூடிக்கோ" சுஜாதா கோபத்துடன் சொன்னாள். சந்துருவும் பதிலுக்குக் கோபத்துடன் சொன்னான். "இல்லை சுஜாதா;. இந்த விஷயத்ல நான் பெரிய அரிச்சந்திரன் இல்லைதான். நந்தா மேல எனக்குள்ளே ஒரு ஸாஃப்ட் கார்னர் இருக்கத்தான் செய்யுது. அப்படியெல்லாம் கிடையாதுன்னு நான் ஒண்ணும் பொய் சொல்ல விரும்பலை. ஆனா; என் மனசோட ஆழத்தில் இருந்து சொல்றேன்-ஐ'ம் நாட் இம்மாரல் பர்சன். அதை மட்டும் என்னால சத்தியமா சொல்ல முடியும் அதே சமயத்ல-ஐ லவ் நந்தா... அந்த எண்ணத்தை மட்டும் என்னால மாத்திக்கவே முடியலை. உனக்கே தெரியும்- இது என் வாழ்க்கைல ப்ளான் போட்டு நடந்த விஷயமில்லை. ஸோ; இதுக்கு நான் பொறுப்பாளி கிடையாது. எனக்கு நந்தாவும் வேண்டியிருக்கு. அமுதாவும் வேண்டியிருக்கு. உண்மையா இதுக்கு என்ன அர்த்தம்னு எனக்குத் தெரியலை. ஸாரி; உனக்குத் தெரிஞ்சா சொல்லு... ஆனா-அதுக்காக எதையாவது சொல்லி என் மனசை மட்டும் புண் படுத்திடாதே. திஸ் மூமெண்ட் ஐ'ம் நாட் ஸ்ட்ராங்... ஈசியா உடைஞ்சு நொறுங்கிப் போயிடுவேன்..."

சுஜாதா சில நிமிடங்கள் மௌனமாக இருந்தபின் சொன்னாள் "சரி; இப்போ பேச வேணாம்- அதைப்பத்தி

யெல்லாம்- முதல்ல உன் கல்யாணம் முடியட்டும்... அப்புறம் ஒருநாள் வச்சுக்கலாம். ஆனா ஒண்ணு; அப்போதும் நீ நந்தா விஷயத்ல இந்த மாதிரியே சீரியஸாவே இருந்தே- நானும் அப்போ படு சீரியஸாத் தான் விஷயத்தை டீல் பண்ணிடுவேன். அப்போ உன் மனசு புண்பட்டதுனாக்க அதுக்கு என்னைக் குற்றம் சொல்லாதே. ஆனா- ஒண்ணே ஒண்ணை மட்டும் இப்போவே சொல்லிடேறன்- கல்யாணம் செய்துக்கற துக்கு முன்னாடியே இப்படி எனக்கு என் ஆம்படை யாளா வரப்போறவளும் வேணும்; அவளோட தங்கையும் வேணும்னு சொல்றது இருக்குதுபார்-அதுவந்து இம்மாரல் இன்ஸ்டிங்க்ட்தான்... இப்படிச் சொல்றதுக்காக என்னைக் கோவிச்சுக்கறதா இருந்தா கோவிச்சுக்கோ ஐ டோண்ட் கேர்..."

சந்துரு மௌனமாக இருந்தான். சில விநாடிகள் அவனையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு சுஜாதா எழுந்து வெளியேபோனாள். அவளுடன் இருந்த உறவில் அதிர்வு மிக்க இடைவெளி ஏற்பட்டு விட்டாற் போன்ற உணர்வில் அமுதாவையும் நந்தாவையும் எண்ணியபடி சந்துரு கண்களை மூடிக் கொண்டான். -அவனுடைய உணர்வுகள் வெள்ளிக்கிழமை நடக்க இருக்கற திருமணத்திற்காகத் தயாராகி புரண்டு கொண்டிருந்தன- அவசர பாவத்துடன்.

## 17

மிகவும் ஆடம்பர விமரிசைகளுடன் நடை பெற்றிருக்க வேண்டிய சந்துருவின் திருமண வைபவம் மிகவும் எளிமையாக; ஓர் இறுக்கமான சூழ்நிலையில், வர வேற்பு நிகழ்ச்சிகூட இல்லாமல் சற்று அவசரமான கதியில் நடந்து முடிந்தது. உடல்நிலை மேலும் மோச மடைந்திருக்கா விட்டாலும் கூட; இன்னமும் நினைவு



திரும்பாமலேயே கிடந்த மகாலிங்கத்தைப் பார்த்து முதலில் சாந்தி முகூர்த்தத்தையாவது தள்ளி வைத்து விட லாம் என்று தான் பெருமாள்சாமி நினைத்தார். பின், பெரியவர்கள் கலந்து பேசி, அதையும் அன்று இரவே வைத்து விடலாம் என்ற முடிவிற்கு வந்தார்கள்.

துரிதமாக அலங்கரிக்கப்பட்டிருந்த அறையின் நறு மணம் சூழ்ந்த அகன்ற கட்டிலின் மெத்தையில் சந்துரு களைப்போடும், ஓய்வோடும், அவசர தேவையோடும் தன் மனைவி அமுதாவின் பட்டுப்புடவை நிறைந்த இளம் மடியில் தலை வைத்து நீளப் படுத்திருந்தான். புத்தம் புதிய பொன் வளையல்கள் நிறைந்த கைகளால் தன் கணவனின் கரிய கேசத்தை காதலுடன் அளைந்த படி அமுதா வர்ணம் உலராத சித்திரம் போல் வியர்வை யுடன் அமர்ந்திருந்தாள். வெகுநேரம் வரைக்கும் அந்த தோற்றத்திலேயே இருவரும் பேச்சு இல்லாமலேயே இருந்தார்கள். பட்டுப் புடவையின் பெண்மணத்தை நுகர்ந்தபடியே பேசாமல் படுத்தே இருக்கலாம் போலிருந்தது சந்துருவிற்கு. அத்தனை களைப்பாக இருந்தது அவனுக்கு. படுத்திருந்த நிலையிலேயே விழி களை மட்டும் உயர்த்தி அமுதாவின் முகத்தை எறிட்டுப் பார்த்தான்.

"என்னங்க?" - அமுதா மெல்லிய குரலில் வினவி னாள்.

"கால் வலிக்குதா?" சந்துருவும் மென்மையான குரலில் கேட்டான்.

"இல்லையே..."

"நிம்மதியா இப்படி விடிய விடிய படுத்திருக்கணும் போல இருக்கும்மா"

"படுத்திருங்க அப்ப..."

"பத்து நாளாவே பயங்கர டென்ஷன். அதுவும் இந்த நாலைஞ்சு நாளா தூக்கமே கிடையாது. கல்யாணம்

நடக்குமான்னே சந்தேகமா போச்சு...இப்பவும் பார். எங்கப்பா அங்கே பேச்சு மூச்சு இல்லாமலே கிடக்கார்... அதை நெனச்சாத்தான் இன்னும் எனக்கு ஒரு மாதிரியாவே இருக்கு...''

அமுதா மௌனமாக இன்னும் சந்துருவின் தலை முடியை அளைந்து கொண்டிருந்தாள். சிறிது நேரம் கழித்து சந்துரு சொன்னான்.

''அமுதா, நமக்கு இது முதல் இரவு மாதிரியே தெரியலை.''

''ஏன்?''

''கல்யாணத்துக்கு முன்னாடியே நாலைஞ்சு தடவை நாம் மீட் பண்ணிட்டது - ரொம்ப ஈஸியா இருக்கு... உனக்கு எப்படித் தோணுது?''

''எனக்கு எந்த மாதிரியும் தோணலை.''

''என்னை உனக்குப் பிடிச்சிருக்கா அமுதா?'' சந்துரு ஆசை பொங்கக் கேட்டான்.

''ம்''

''நெஜமாவே பிடிச்சிருக்கா?''

''அப்ப ஒருத்தரை பொய்யாக்கூட பிடிக்குமா?''

குனிந்து நாணத்துடன் தன்னையே காணும் அமுதாவின் கண்களையே சந்துரு பார்த்தான். வானத்தில் பதித்தாற் போல அவளின் கண்கள் எதையோ பிரவகித்துத் தளும்பிக் கொண்டிருந்தன. நிலா அளவு காதலும் நட்சத்திர அளவுப் பாலுணர்வும் அந்தக் கண்களில் கலந்து மிதந்தன. கடற்கரையில் அப்போது தான் வந்து கரை ஒதுங்கிய 'புத்தம் புதிய ஈரமான பெரிய சங்கு போல் அந்த முகம் ஒளி கொண்டிருந்தது.

''ஐ லவ் யூ டியர்'' சந்துரு நெகிழ்ந்த குரலில் சொன்னான்.

அமுதா மௌனமாக இருந்தாள்.



''நீயும் என்னை ஐ லவ் யூ டியர்னு சொல்லு அமுதா.,

''ஐ லவ் யூ டியர்...''

''ஐ லல் யூ வெரிமச்... நீயும் சொல்லு.''

''ஐ லவ் யூ வெரிமச்...''

அமுதாவின் அந்தச் சொல்லில் சந்துரு கரைந்து போனான்.

''என்னை ஒரு பெண் ஐ லவ் யூன்னு சொல்றது - இது தான் என் வாழ்க்கையிலே முதல் தடவைம்மா...அம்மா! இப்பத்தான் உயிரே வர்ர மாதிரியிருக்கு...எவ்வளவு நாளா இந்த ஒரு வார்த்தைக்காக ஏங்கியிருக்கேன் ... அமுதா.''

''ம்''

''இந்த அன்பு எனக்கு ஒரு நாளும் குறைஞ்சு போயிடாதே?''

''ஊஹூம், ஒரு நாளும் குறையாது...''

''எனக்கு நீ ரொம்ப வேணும் அமுதா. ஐ நீட் டுமச்.''

''எனக்கும்தான் நீங்க வேணும்...''

''முழுக்க முழுக்க என் இஷ்டத்துக்கு ஏத்த மாதிரியெல்லாம் நடந்துப்பேல்லியா நீ?'' சந்துரு சிறிது விநயம் கலந்துதான் இந்தக் கேள்வியைக் கேட்டான்.

''நிச்சயமா நடந்துப்பேன். - உங்க இஷ்டம்தானே என் இஷ்டமும்...''

''உன்னோட இந்த அன்புக்கு எப்படிம்மா நான் நன்றி சொல்வேன்?'' சந்துரு மிகையாக உணர்ச்சி வசப்பட்டு கேட்டான்.

அமுதா அவசரத்துடன் சந்துருவின் வாயைத் தன் விரல்களால் மூடினாள்.

''நாங்கதான் உங்களுக்கு உண்மையா நன்றி சொல்லணும்...உங்கப்பாவை எதிர்த்து நின்னு தைரியமா என்னைக் கல்யாணம் செய்துக்க முன் வந்தது நீங்க தானே...?''

''எங்க அப்பாவோட அக்கிரமத்தை எதிர்த்து நான் நின்னது உண்மைதான். ஆனா, அதுமட்டுமே காரணம் கிடையாது. இனிமே உங்க குடும்பத்தைப் பிரிச்சி என்னைத் தனியா பார்க்க முடியாது என்கிறதும் நிஜம். அந்த வழியில் பார்த்தா உன்னைக் கல்யாணம் செய்துக்கணும் என்கிற பாயிண்ட்டில் நான் ரொம்ப ஸ்ட்ராங்கா நின்னது – என்னோட சுயநலம்னுதான் சொல்லணும். எனக்கு நீ மட்டுமில்லே, உங்க குடும்பமே தேவையா இருக்கு...''

''என்ன நடந்தாலும் உங்கப்பா இறந்து போயிடக் கூடாது. அதான் என் கவலை''- அமுதா நிஜமான வருத்தத்துடன் சொன்னாள்.

''இல்லை இல்லை, இப்ப இறக்கமாட்டார்... ஆனா, இவ்வளவு வயசாயிட்ட இந்த நேரத்ல அவருக்கு பேராலிசிஸ் வந்ததில் இன்னமும் கஷ்டப்படப் போறது எங்க அம்மாதான். அவங்களை நினைச்சாத்தான் கவலையாயிருக்கு ... ஸாரி, ஞாபகமில்லாமலே உன் மடியிலேயே படுத்திருக்கேன். கால் வலிக்கப் போகுது உனக்கு...'' என்று சொல்லி சந்துரு எழுந்து கொள்ளப் பார்த்தான். ஆனால் எழுந்து கொள்ள முடியாமல் அமுதாவின் வளையல்கள் நிரம்பிய கைகள் அவனின் நெஞ்சில் கோத்து இறுக்கிக் கொண்டன. அந்தக் கரங் களில் தெரிந்த தேவையை சந்துருவால் உணர முடிந்தது. காதலுடன் பற்றி அவளின் செழுமையான புறங்கையில் முத்தமிட்டான். உடலில் 'புதிய வெந்நீர் ஓட்டம் ஆரம் பிப்பது தெரிந்தத. ஏறிட்டு நோக்கினான். அமுதாவின் கழுத்திலிருந்து தொங்கிக் கொண்டிருந்த புத்தம் புதிய



பொன் ஆபரணங்களின் அழகில்கூடப் பாலுணர்வு ஊசலாடுவது போலிருந்தது. தங்கச் சங்கிலியில் கோக்கப் பட்ட கற்கள் பதிக்கப்பட்ட அன்னப் பறவைகளைத் தொட்டு சந்துரு முத்தமிட்டான் -அந்த அன்னப் பறவையில்கூட அமுதாவின் வாசனையை அவனால் நுகர முடிந்தது. சற்றே அவளுடைய மடியில் புரண்டு பட்டுப்புடவையில் முகத்தைத் திருப்பித் திருப்பித் தேய்த்து அமுதா அமுதாயென்று முணங்கினான். 'எனக்கு நீ வேணும் அமுதா, எனக்கு நீ வேணும் அமுதா' என்று பிதற்றினான். அந்தப் பிதற்றல் அமுதாவை எர்தல் அடையச் செய்தது. உடல் முழுவதையும் கனம் பெறச் செய்தது. கனத்தை அவனில் சேர்த்து விடுகிறாற் போல அவள் சந்துருவின் மீது தாழ்ந்து பிடரியில் சாய்ந்து வேட்கையுடன் அவனின் கூந்தலுக்குள் விரல்களைத் துழாவிட-இருவரிலும் கனத்த பாலுணர்வு அழுத்தம் இயற்கை வாயு போல, புதிய எண்ணெய்க் கிணற்றின் ஊற்றுப்போல பீறிட்டு விட்டது! அந்த வேகமுள்ள ஊற்று ஏறக்குறைய அதிகாலை வரைக்கும் பெருகித் தெறித்துக் கொண்டிருந்தது...!

அருகில் இருந்த மேஜைக் கடிகாரம் மணி நான்கு முப்பது என காட்டிக் கொண்டிருந்தது. சிறிது நேரம் அரைகுறை தூக்கத்தில் இருந்த அமுதா முழு பிரக்ஞை பெற்றபோது, அவளின் நெஞ்சருகே முகம் வைத்தபடி சந்துரு தூங்கிக் கொண்டிருந்ததைக் கண்டாள். ஓர் இளம் மனைவிக்கு இது ஓர் உன்னதமான ரம்மியமான கணம். அவளுக்கே உரியவன் அவளை மறந்து அவளின் நெஞ்சின் அருகே தூங்கிக் கிடப்பது- இன்னும் மீதம் இருக்கும் அந்தரங்க இரவுக் கட்டம். முன்னிரவுக் காதல் பெருக்கையெல்லாம் நினைவில் குவித்துக் காட்டும் ஒளி வட்டம்! எப்படி ராஜகுதிரையாக இயங்கியவன் அயர்ந்து போய் தூங்குகிறான்...! அமுதா இமைகூட அசைந்து

விடாமல் அப்படியே படுத்திருந்தாள். சந்துரு அவளுடைய மனசு பூராவும் நிறைந்து போயிருந்தான். கடுகளவு கூட அவனின் மனம் கோணாமல் அவனைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என நினைத்தாள். தன்னை துளிக்கூட மிச்சம் வைக்காமல் அவனுக்கே வார்த்து விட வேண்டுமென்பதையே லட்சியமாய் வார்த்துக் கொண்டாள் தன்னை சந்துருவிற்கு ஈந்துவிட்ட விச்ராந்தியாலும் மனச்சுகம் அடைந்திருந்தாள்.- தாம்பத்யத்தில் இது ஒரு பிளவுபட்ட வினோதச் சுழற்சி. மனைவி கணவனுக்குத் தன்னைக் கொடுப்பதாய் நினைக்கிறாள். கணவன் தனக்கு வேண்டியதை மனைவியிடம் பெற்றுக் கொள்வதாய் எண்ணுகிறான்...

அமுதா தன் உடலில் புதிதாய் .இணைந்திருக்கும் சந்துருவின் தாலியை கற்புடன் தொட்டு முத்தமிட்டுக் கொண்டபோது அவனுடைய உடலில் சிறிய அசைவுகள் ஏற்பட்டதை கவனித்துக் கொண்டே இருந்தாள். அயர்வுடன் சற்றே அவன் புரண்டான். அவனுடைய உதடுகள் எதையோ முணு முணுத்தன. சந்துரு எதையோ இன்னும் தூக்கம் கலையாத நிலையில் கூற விழைகிறாற் போலிருந்ததால் அமுதா கொஞ்சம் சுவாரஸ்யத்துடன் கணவனின் முணகல்களையே கவனித்தாள்.

மெலிதாக இரண்டு கைகளாலும் தன் மார்பில் வருடிக் கொண்டே இப்போது கொஞ்சம் ஸ்பஷ்டமாக ''நந்தா... நந்தா...நந்தா...'' என மூன்று முறை உரக்கவே சந்துரு புலம்பினான்!

சில கணங்களுக்கு அமுதா சற்று ஏமாற்றமான தன்மையில்தான் சந்துருவின் புலம்பலை செவிமடுத்தாள். அந்த புலம்பலுக்குப் பின் சந்துரு மறுபடியும் ஆழ்ந்த தூக்கத்தில் அடங்கிவிட்டதும் அவள் மெதுவாக எழுந்து உட்கார்ந்தாள். தனது பெயரைச் சொல்லாமல் தன்னுடைய தங்கையின் பெயரை தூக்கத்தில்கூட உச்சரிக்கும் தன் கணவனின் முகத்தை ஒரு கணம் அந்நிய பாவத்துடன் நோக்கினாள். அவளுள் ஏதோ ஒரு இயக்கம் கொஞ்சம் திகைத்தாற் போலிருந்தது. எங்கேயோ அவளின் மனம் சிறிது பின் வாங்கியது. சந்துரு நந்தாவின் பெயரைப் புலம்பியதை வேடிக்கையாக பாவித்துக் கொள்வதா, தீவிரமாக எடுத்துக் கொள்வதாயென்று அவாளல் நிச்சயிக்க முடியவில்லை. எந்தத் திசையில் யோசித்தாலும் அதற்கு நேர் எதிரான திசையில் அமுதாவின் மனம் நழுவவே பார்த்தது. அச்சத்துடன் அவனுடைய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது அறைக் கதவு தட்டப்படும் சப்தம் லேசாகக் கேட்டது. அரவம் எழுந்து விடாமல் ஜாக்கிரதையுடன் எழுந்து போய் கதவைத் திறந்தாள். அவளுடைய அம்மா கதவில் இருந்து ச்ற்று பின் தள்ளி நின்று கொண்டிருந்தாள்.



''என்னம்மா?''

''வா. வெந்நீர் போட்டு வச்சிருக்கேன். முதல்ல நீ வந்து குளிச்சிடு..."

''நீங்க போங்க, நான் ஒரு நிமிஷத்ல வரேன்."

மீண்டும் அமுதா தூங்கும் சந்துருவின் அருகில் போய் நின்றாள். வாழ்க்கையில் முதன் முறையாக அவளுக்கு நந்தாவிடம் ஒரு வேற்றுமையான எண்ணம் வந்தது. ஆனால், யார் மீதும் அவளுக்குத் தவறான எண்ணமும் ஏற்பட்டுவிடவில்லை. எனினும் ஓர் திகைப்பு மட்டும் விதையாக அவளுள் விழுந்திருந்தது.

''என்னம்மா, ஒரு மாதிரியா இருக்கே?'' அமுதாவை அம்மா கேட்டு விட்டாள்

''ஒண்ணும் இல்லையே... உடம்பெல்லாம் அசதியா இருக்கு. அதான்...'' அமுதா அவசரமாக பதில் சொல்லி தன்னுடைய முகபாவனையை மாற்ற முயன்றாள்.

''அங்கே மாமனார் ஆஸ்பிட்டல்ல படுத்திருக்காரேன்னு கவலையா இருக்கா?''

''அய்யோ... அதெல்லாம் கிடையாதும்மா. எனக்கு அசதிதான், வேற ஒண்ணுமில்லை...''

''நீ குளிச்சதும் மாப்பிள்ளையை எழுப்பி குளிக்கச் சொல்லு-எல்லோரும் குளிச்சிட்டு ஏழு மணிக்கு கிளம்பி முப்பாத்தம்மன் கோயிலுக்குப் போயிட்டு வந்துரலாம்-வந்த அப்புறம் டிபன் சாப்பிடலாம்.''

''சரிம்மா''

முகபாவனையில் தான் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு அமுதா குளிப்பதற்குப் போனாள்.

# 18

சந்துரு சுஜாதாவிற்கு போன் செய்தான்.

''குட்மார்னிங் சுஜா''

''குட்மார்னிங்யா... எப்படி இருக்கே'' ?

ஃபைன்... நீ எப்படியிருக்கே" ?

''எனக்கென்ன - எப்பவும் போல இருக்கேன். ஹனிமூன் எதுவும் போகலையாக்கும்''?

''அப்பா இப்படி இருக்கறச்சே எனக்கு மனசே வரலை ஹனிமூன் போறதுக்கு...''

''நேத்திக்கு லேசா கண் திறந்து பார்த்தாராமே...?

''ஆமா உனக்கு யார் சொன்னா''?

''உன் பிரதர் தேவேந்திரனை நேத்திக்கு பார்த்தேன். அவர்தான் சொன்னார்''



''பெரிய கண்டம் தப்பியிருக்கார்.. ஆனாலும் இன்னும் ரொம்ப நாளைக்கு பெட்தான்..."

''என்ன பண்றது-தள்ளிண்டே போக வேண்டியது தான்... ஸோ, அமுதா எப்படி இருக்கா''?

''ஷி இஸ் ஃபைன்..."

''லிட்டில் ஃபளவர்"?

''உன் லிட்டில் ஃபளவர் பக்கத்திலதான் நிக்குது. பேசறியா?"

''குடேன்..."

''ஹலோ..." நந்தா பேசினுள்

''ஹலோ லிட்டில் ஃபளவர், எப்படியிருக்கே டார்லிங்?"

''நல்லாயிருக்கேன் பெரிய ஃப்ளவர்! நீங்க எப்படியிருக்கீங்க?

''நானும் ஜோராத்தான் இருக்கேன்"

''அவர் எப்படி இருக்காராம்?"

''எவர்"

''உங்க வுட்பி... ?

''பாலாவா... தெரியலைம்மா, லெட்டரே காணோம் அவன்கிட்டேயிருந்து... எப்பவுமே இப்படித்தான் அவன், லெட்டரே போட்டுத் தொலையமாட்டான்..."

''ஒருநாள் லீவ் அன்னிக்கு எங்க வீட்டுக்கு வாங்களேன்"

''நீதான் கூப்பிடறே, இது வரைக்கும் உங்க அத்தான் காரு என்னை வான்னு கூப்பிடவே இல்லையே?"

''அவர் கூப்பிடாட்டாயென்ன, நான் கூப்பிடறேன்..."

''அதிருக்கட்டும், உங்க அத்தான் காருவை என்னிக்கு நீங்கள்ளாம் ஆஃபீஸ் அனுப்பறதா இருக்கீங்க...''

''மே டென்த் அன்னிக்குத்தான் ஜாய்ன் பண்றதா இருக்கார்''

'' சரி லீவ்ல இருந்தா இந்தப் பக்கமே உன் அத்தான் வரப்படாதுன்னு அர்த்தமா? எங்க வீட்டுப் பக்கம் கூட வரலை அவன்...''

''அமுதாவுக்கு நாலைஞ்சு நாள் லேசா ஜுரம்... அதனால் அத்தானும் எங்கேயும் வெளியில் போகாமே வீட்டிலேயே இருந்துட்டாங்க...''

''சரி இன்னிக்கு என்ன பண்றாராம் துரை...''?

''இன்னிக்கா? இன்னிக்கு அவருக்கு மியூசிக் க்ளாஸ் ஆரம்பிக்கப் போகுதே'

''ம்யூசிக் க்ளாஸா, அது எங்கே?''

''எங்க வீட்லதான்...!

''ஓ துரை உன்கிட்டேயே கத்துக்கப்போறாரா? கத்துக்கொடு. ஆனா ஒரு கண்டிசன், துரை சங்கீதம் கத்துக் கிட்டேன்னு சொல்லி என்னிக்காவது என்கிட்டே வந்து பாடிக் காட்டிடச் சொல்லிடதே எனக்குத் தாங்காது!''

''நீங்க இப்பச் சொன்னதை அத்தான் கிட்ட சொல்லவா?

''தாராளமா சொல்லு எனக்கன்ன பயம்? ஸோ-சங்கீத கிளாஸ் ஆரமிச்சுட்டியாக்கும்?'

''யெஸ்''

''விட்டில் ஃளவர்''

''என்ன பெரிய ஃப்ளவர்?''



''ஷட்ஜத்திற்கும் பஞ்சமத்திற்கும் மட்டும் ஏன் உட்பிரிவுகள் கிடையாதுன்னு சொல்லு பார்க்கலாம் .''

''அய்யோ அந்த மாதிரி நாலெட்ஜ் எல்லாம் எனக்குக் கிடையாது...''

''அப்போ நீ சங்கீதம் கத்துக் கொடுக்கறதுக்கு யூஸ்லெஸ்! ஸியூ...'' சுஜாதா ரிசீவரை வைத்துவிட்டாள். நந்தாவிற்கு ஒரு மாதிரியாகி விட்டது. சந்துரு அவளுடைய முகமாற்றத்தை கவனித்தான்.

''என்னம்மா என்னவோ போலாயிட்டே...?'' என்றான்

''என்னத்தான் திடீர்னு ஒரு மாதிரி பேசிட்டாங்க-மூஞ்சியில் அடிக்கிற மாதிரி...''

''அதான் சுஜாகிட்ட,. சட்டுனு கொஞ்சம் ரஃப்பா பேசிடுவா... என்ன சொன்னா?''

''ஷட்ஜத்துக்கும் பஞ்சமத்துக்கும் ஏன் உட்பிரிவுகள் கிடையாதுன்னு கேட்டாங்க. எனக்குத் தெரியாதுன்னு சொன்னேன். நீ சங்கீதம் கத்துக் கொடுக்கறதுக்கு யூஸ்லெஸ்னு பட்னு சொல்லி ரிசீவரை வச்சிட்டாங்க...''

''சனியன் திடீர் திடீர்னு இப்படித்தான் மனசைப் புண் படுத்தற மாதிரி எதையாவது சொல்லிடும்...''

''அவங்களுக்கும் கர்நாடிக் ம்யூசிக்கெல்லாம் நல்லா தெரியுமா அத்தான்...?

''தெரியுமோ என்னமோ, என்கிட்ட இதுவரைக்கும் பேசினது கிடையாது அவ...சரி, உனக்கு அது கேட்டது பத்தின விஷயம் தெரியாதாயென்ன?''

'' எது எதுக்கு உட்பிரிவுகள் உண்டுன்னு தெரியும், எது எதுக்கு உட்பிரிவுகள் கிடையாதுன்னு தெரியும். ஏன் கிடையாதுன்னு கேட்டா...?

''அவளுக்கு தெரிஞ்சிருக்கும் அதனலேதான் கேட்டிருக்கா...''

இன்னிலேருந்துதான் உங்களுக்கு சீரியஸா டெய்லி கொஞ்ச நேரம் ம்யூசிக் பத்திச் சொல்லித் தரணும்னு நெனைச்சிக்கிட்டிருந்தேன் - இன்னிக்குப் பார்த்து என் மூடைக் கெடுத்திட்டாங்க..." நந்தா வருத்தத்துடன் சொன்னாள்.

"அது குணம் அது மறந்திடு அதை அதென்ன அது ஷட் ஜம் பஞ்சமம்?"

"பேசிக் ஸ்வரம் அத்தான்."

"அதாவது ச, ரி, க, ம-ன்னு சொல்ற ஸ்வரம்?"

"யெஸ், ச, ரி, க, ம, ப, த, நி ன்னு சொல்றது சுருக்கம்..."

எதனோட சுருக்கம்?

"ச-வந்து ஷட்ஜம், ரி-வந்து ரிஷபம், அந்த மாதிரி ஏழு ஸ்வரங்களும் - முறையே காந்தாரம்-க, மத்யமம் ம-பஞ்சமம் தான்-ப, தைவதம் வந்து-த கடைசியில்தான் நிஷாதம் அதுதான் நி.

"ஸோ அதுதான் ஏழு ஸ்வரங்களா?"

"யெஸ்"

"இந்த ஸ்வரம் கர்நாடக இசைக்கு மட்டும்தானே, ஹிந்துதானிக்கு எப்படி?

" ஸ்வரம் இரண்டுக்கும் ஒண்ணுதான்"

"அப்ப ஹிந்துதானிங்கறது என்ன?"

"ஆதிகாலத்ல இந்தப் பிரிவுகளெல்லாம் கிடையாது அத்தான். வட இந்தியாவில் இஸ்லாமிய ராஜாக்கள் ஆட்சி ஏற்பட்ட அப்புறம்தான் அவர்கள் மூலமா அந்தப் பெர்ஷியா போன்ற தேசங்கள்ள இருந்த சில இசை மரபுகளும் வந்து கலந்து - அதனால வந்ததுதான் ஹிந்துஸ்தானி ம்யூசிக்..."



"அதே மாதிரி மேற்கத்திய சாஸ்திரிய சங்கீதம்னு இருக்கே - அதைப்பத்தி எதுவும் உனக்குத் தெரியுமாம்மா?"

"அந்த ம்யூசிக் பத்தி அவ்வளவா தெரியாது அத்தான். ஆனா அதிலேயும் பேஸிக்கா-இதே மாதிரி ஏழுதான்...ஒண்ணு Doh, ரெண்டு Ray, மூணாவது Me, நாலாவது Fa, அஞ்சாவது Soh ஆறாவது, வந்து Lah. ஏழாவதுதான் Si இல்லேன்னு Te, இதை அவங்க வந்து சுருக்கமா C D E F G A Bன்னு சொல்லுவாங்க..."

"ஆனு பேஸிக்கா அதிலும் ஏழுதான்..."

"அப்புறம் - ஆரோகணம் அவரோகணம்னு சொல்றாங்களே - அதென்னம்மா?"

"ஸ்வர ஸ்ருதி ஏறு வரிசையில் இருக்கிறது வந்து ஆரோகணம், அதுவே இறங்குகிற வரிசையில்-அவரோகணம்..."

"அப்ப எந்த ராகத்திலேயும் இந்த ரெண்டும் இருக்கும்?"

"ஆமா-இருக்கும்."

"இப்பச் சில பேர் அவரோகணம் இல்லாமே பாட்டுப் போடறாங்களாமே?"

"போடுவாங்க போடுவாங்க... ஏன் போட மாட்டாங்க! ஒரு ராகத்துக்கு அஸ்திவாரமே-ஆரோகணமும் அவரோகணமும் தான்... அஸ்திவாரம் சரியில்லாமலேயே பாடினா...! இதுக்கு ஒரு உதாரணம் சொல்றேன் கேளுங்க. நமக்கு ரெண்டு காலால் நடக்கிறது தான் இயற்கையானது. சம நிலையானது. 'ஒரு காலால்தான் நடப்பேன்'னு யாராவது ஒருத்தர் சொன்னா-

அதுக்கு அவர் நல்லா நொண்டியடிக்கப் போறார்னுதான அர்த்தம்...! சரிதானா அத்தான் நான் சொல்றது...?''

''சரியாத்தான் சொல்றேன்னு நினைக்கிறேன்!''

அப்போது, சமையில் அறையில் இருந்து அமுதாவின் குரல் வந்தது.

''நந்தா!''

''என்னக்கா...''

''இங்கே வாயேன்.''

''மாட்டேன் போ.''

''இங்கே வந்து கூடமாட கொஞ்சம் ஹெல்ப் பண்ணுடி.''

''நான் இங்கே அத்தானுக்குக் கிளாஸ் எடுத்திட்டிருக்கேன்...''

''க்ளாஸ் அப்புறம் எடு.''

''என்னத்தான், அமுதாக்கா கூப்பிடறா... போகவா?''

''போகாதே!''

''அக்கா, அத்தான் போகாதேன்னு சொல்றாங்க...''

''அவருக்கு வேற வேலை... வான்னு சொன்னா வந்திரு நீ...''

''நந்தா வரமாட்டா அமுதா...'' என்றான் சந்துரு.

அமுதா மௌனமாக இருந்தாள். முதல் இரவு கழிந்த அதிகாலைப் பொழுதில் சந்துரு நந்தா பெயரைச் சொல்லி புலம்பியது சுவர்ப் பல்லி மாதிரி அவ்வப் போது அவளுள் ஊர்ந்தது. விகற்பமாக எதையும் அவளால் நினைக்க முடியாவிட்டாலும் கூட, அந்தப் புலம்பல், அதுவும் திருமணம் முடிந்த மறுநாளே கேட்க நேரிட்டது விரும்பத் தகாததாக இருந்தது. அம்மாவிடம் கூடச் சொல்லிக் கொள்ளப் பயமாக இருந்தது. நந்தாவிற்கும்



சந்துருவிற்கும் இடையே எவ்வளவு அந்நியோந்நியத்தையும் அனுமதிக்க அமுதாவிற்கு மறுப்பு ஏதுமில்லை. ஆனால், அந்தப் புலம்பலை அனுமதிக்க மனம் ஒப்பவில்லை. அன்றைய மதிய உணவிற்குப் பின் மீண்டும் தனிமை கிடைத்த போது மறைமுகமாக அணுகிப் பார்த்தாள்.

''என்னங்க, காலையில் தூக்கத்தில் என்னவோ நீங்க புலம்பின மாதிரி கேட்டதே...'' என்று சமத்காரமாகக் கேட்டாள்.

'போச்சா, வந்த அன்னிக்கே இங்கேயும் புலம்பிட்டேனா?'' என்றான் சந்துரு.

''ஏன் தூக்கத்ல புலம்பற பழக்கம் உண்டா உங்களுக்கு?''

''அநியாயத்துக்குப் புலம்புவேன்! ஆமா, என்ன புலம்பினேன்?'' – சந்துரு ஆர்வத்துடன் கேட்டான்.

''அது எங்கே ஒழுங்கா காதில் விழுந்தது... என்னவோ முக்கி முனகி யாரையோ கூப்பிடற மாதிரி இருந்தது...''

''உன்னைத்தான் கூப்பிட்டிருப்பேன்... வேற யாரைக் கூப்பிடுவேன்...''

சந்துருவின் இந்தப் பதில் அமுதாவிற்குப் பிடித்தது. ஆனாலும், உண்மையில் அவன் கூப்பிட்டது அவளை இல்லையே...! அந்த உண்மை கசப்பாகவும் இருந்தது.

''இல்லைங்க, என்னைக் கூப்பிட்ட மாதிரித் தெரியலை...''

''உன்னைக் கூப்பிடலேன்னா- ஒருவேளை உன் தங்கையைக் கூப்பிட்டாலும் கூப்பிட்டிருப்பேன்!''-என்று கொஞ்சமும் எதிர்பாராமல் சந்துரு சொன்னதும் ஏதோ ஒரு வாகனம் முகத்தில் வந்து மோதினாற் போன்ற அதிர்வை அடைந்தாள் அமுதா. குபீரென ஒரு நிசப்தம்

அவர்களிடையே பாய்ந்து கொண்டது. மின்னல் மின்னுகிற நொடிப் பொழுதில் அணு அளவு களங்கம் கலந்து நகைச்சுவை போன்ற தோரணையில் ஓர் பொய் சொல்வதாய் அவன் சொல்லி கபடத்துடன் மௌன மானான். பொய் போல் வேடிக்கையாகச் சொன்னாலும் அதுதான் உண்மை என்ற அதிர்வுடன் அமுதா கவலை யுடன் மௌனமானாள். அந்த மௌனத்தை உடனே கலைக்க வேண்டிய அவசரம் சந்துருவில் மீண்டும் மின்னலாய் மின்னியது. மிக கவனத்துடன் அளவெடுத் தாற் போல் கேட்டான்:

''என் அமுதா, ஒரு மாதிரி ஆயிட்டே, ஒரு வேளை நான் நந்தா பெயரையே சொல்லிப் புலம்பியிருந்தால் கூட அது ஒண்ணும் தப்பு இல்லையே . ?''

''நான் ஒண்ணும் அதைத் தப்புன்னு சொல்லலையே... ஆனாலும், நீங்க ஒண்ணும் நந்தா பேரைச் சொல்லிப் புலம்பலையே...''- அமுதாவிற்கும் அப்போதைக்கு இந்தப் பொய்தான் தற்காப்பாகத் தெரிந்தது.

''அப்படியே நான் புலம்பியிருந்தாலும்- டோண்ட் பாதர் எபௌட் இட். ஏன்னா, எங்க அம்மா சொல்லி யிருக்காங்க- தூக்கத்தில இடையிடையில நான் என் ஃப்ரண்ட் சுஜா இல்லே- அவ பேரைச் சொல்லிக் கூட புலம்பியிருக்கேனாம்... இதை எதுக்காகச் சொல்றே னாக்க - என்னிக்காவது நான் சுஜா பேரைச் சொல்லிப் புலம்பினாக்கூட- நீ பயந்திடாதே- என்னடா இதுன்னு...! என்னோட அறிவை வைத்துப் பார்க்கிறப்ப எனக்குத் தோண்றது இதுதான்- யாருடைய உறவாவது அல்லது அன்பாவது என்னை ரொம்ப 'இம்ப்ரஸ்' பண்ணி யிருந்தாக்க- ஐ திங்க், நான் அவங்க பேரை எப்பவாது சொல்லிப் புலம்பினாலும் புலம்பிடுவேன்... போலிருக்கு... அதான் விஷயம்.''



சந்துரு மிகவும் எச்சரிக்கையுடன் எண்ணி எண்ணி வார்த்தைகளை வலை போல் கவனமாகப் பின்னி தன்னைப் பாதுகாத்துக் கொள்ள விழைந்தான். என்றைக்காவது நந்தாவின் பெயரையே புலம்பினாலும் கூட இந்த முன்னெச்சரிக்கையான முன்னுரையை நினைவுபடுத்தித் தப்பித்துக் கொள்ளலாம் எனவும் மனத்துள் திட்டமிட்டுக் கொண்டான். எனினும், அத் தனை கணிதத்தோடு அவன் திட்டமிட்டுக் கொண்ட பாணியே 'எங்க அப்பன் குதிருக்குள் இல்லை' என்ற கதையாக அமுதாவை மேலும் சற்றே பின் வாங்க வைத்தது!- அமுதாவின் உள் மனநிலையை தெரிவிக் காமல் போய்விடுமா- சந்துரு மகாராஜாவின் கல்வித் தேர்ச்சி...?

''இன்னிக்கி என்ன புலம்பினேனோ தெரியலை...! இனிமே புலம்பினா உன் பேரைத்தான் புலம்புவேன்!'' என்று சொல்லி சட்டென்று அமுதாவை அணைத்து அவன் தந்த முத்தத்தைப் பெற்றுக் கொள்ள அவளுடைய மனம் கூசத்தான் செய்தது.- காரணம், அந்த முத்தம் அன்பளிப்பாக இல்லாமல் லஞ்சமாகத் தெரிந்தது...!

# 19

திருமணத்திற்காக எடுத்துக் கொண்ட விடுமுறை நாளையுடன் முடிவடைந்து அதன் மறுநாள் சந்துரு அலுவலகப் பணிகளில் மீண்டும் இணைந்து கொள்ள வேண்டும். இடையே, இந்த இரண்டு வார தாம்பத்ய வாழ்க்கை நந்தாவும் அருகில் இருக்க ரம்மியமாகத்தான் கழிந்திருக்கிறது. அமுதாவுடன் திருவான்மியூர் மருந்தீச வரர் கோயிலுக்குப் போய் வந்தான். நந்தாவும் உடன்வர ஒருநாள் காஞ்சிவரம் கைலாச நாதர் கோயிலுக்கும் சென்றான். கோயிலின் ஆரவாரமற்ற கற்சுவர்களுக்குள்

ஓர் அருள் கொட்டிக் கிடந்ததை அவனாலும் உணர முடிந்தது. அந்த அருள் சந்துருவின் சற்று களங்கம் படிந்த மனநிலைக்கு ஓர் சவாலாகக்கூட சுழன்றது. விருட்டென வெளியில் வந்து விட்டான்.

''என்னங்க, என்னாச்சு? திடீர்னு வெளியில வந்துட்டீங்க?"- அமுதா கேட்டாள்.

''என்னன்னு தெரியலை அமுதா... உள்ளே என்னை எதுவோ என்னவோ பண்ணிடுச்சி... ஒரு வலிமையான கதிர்வீச்சு; அதுவும் குறிப்பா- அந்த வில்வமரத்துக்குப் பக்கத்ல... அய்யோ! என்னமோ இருக்கு அங்கே. ஒரு- வார்த்தையில் சொல்ல முடியாத அமைதி... அதுவும் அருபமா நின்னு என்னைப் பாக்கிற மாதிரி வேற தெரிஞ்சது- அதான் தாங்க முடியாமே வெளியில வந்துட்டேன்... எப்படிம்மா கண்டுபிடிச்சே- ஆள் அட்ரஸ் இல்லாத இந்தக் கோயிலை?''

''அதுதான் அமுதாக்கா!" என்றாள் நந்தா.

"நீயும் இருக்கீயே- அமுதாவுக்கு தங்கைன்னு சொல்லிட்டு...! சும்மா வீட்ல உக்காந்து 'ப்ரோசேயா ரெவருரா'னு பாட்டுப் பாடறதுக்குத்தான் லாயக்கு!"- சந்துரு நந்தாவை வேண்டுமென்றே சீண்டினான்.

உடனே நந்தா தலையில் அடித்துக் கொண்டாள். ''சொல்லத் தெரிஞ்சா சொல்லுங்க. இல்லேன்னா வாயை மூடிட்டு சும்மா இருங்க. ப்ரோசேயா ரெவருரா இல்லே. ப்ரோசேவா ரெவருரா... வாசுதேவாச்சாரியார் கிருதி. கமாஸ் ராகம், ஆதிதாளம்...''

''ஹூம்...! ஆல் இண்டியா ரேடியோவில் வேலை பார்க்க வேண்டிய பொண்ணு நீ...!

''பாருக்கா- அத்தானை! கிண்டல் பண்றாரு என்னை, இருங்க இருங்க. எனக்கும் கல்யாணமாகி ஒரு வீட்டுக்காரர் வரட்டும்; அப்ப அவரைவிட்டு அமுதாக்காவை நல்லா கிண்டல் பண்ணச் சொல்றேன்...''



இது எளிய உண்மைதான். ஆனாலும், சந்துருவை வலிமையுடன் தாக்கியது. நந்தா குறித்த மென்மையான சதுக்கம் அவனுள் சிறிது நேரம் வெறுமையாய் நின்றது. மிகச் சிறிய நேரம் தலை குனிந்தது. அதனினும் குறுகிய நேரம் அந்தப்பெண்ணுக்காக ஏங்கியது. இந்த ஏக்கத்தையெல்லாம் கண்டு கொள்ளத் தெரியாத கபடமில்லாத சிறுமியாக நந்தா. சந்துருவின் திடீர் மௌனத்தை வேறொரு மனநிலையாக உணர்ந்து அவசரத்துடன் சொன்னாள்.

''ஸாரி அத்தான்! நான் சும்மா தமாஷுக்கு சொன்னேன்... உடனே ஒரு மாதிரி ஆயிட்டீங்களே...''

''அப்ப நானும் தமாஷா ஒரு விஷயம் சொல்லட்டுமா?''- நந்தாவின் சமாதானத்திற்கு சம்மதிக்கிறாற்போல சந்துரு கேட்டான்.

''சொல்லுங்களேன்!''

மிகக் கபடத்துடன் சந்துரு அந்த அம்பை எய்தான்: "உன்னையும் நான்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்...!'' என்றான்.

தமாஷ் என்ற போர்வையில் மனத்தீவிரம். விளையாட்டு என்ற காட்சியில் விநயம். அன்பு என்ற தோற்றத்தில் ஆற்றாமை...

-இதெல்லாம் எங்கே தெரிகிறது நந்தாவிற்கு...

''ஆசை தோசை- நாளைக்கி நின்னு அம்மாவாசை! நான் பண்ணிக்க மாட்டேன்ப்பா- உங்களை... மீசை கூட இல்லாத உங்களைப் போய் யார் கல்யாணம் பண்ணுவா? என்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவருக்கு முதல்ல நல்லா கிடா மீசை மாதிரி இருந்தாத்

தான் நான் பண்ணிப்பேன்..." நந்தா விளையாட்டாகவே பதில் சொன்னாள்.

"அப்ப நாளைக்கே நானும் கிடாமீசை மாதிரி வளர்க்க ஆரம்பிச்சிடறேன்..." என்றான் சந்துருவும் விளையாட்டுப் போலவே...

அமுதாவிற்குத்தான் இந்தப் பேச்சு பிடிக்கவில்லை. "போதும்- இந்த வெட்டிப் பேச்சு" என்று முற்றுப்புள்ளி வைத்தாள். அந்த முற்றுப்புள்ளி சந்துருவிற்கும் தேவையாக இருந்தது. ஏனெனில், விளையாட்டின் பின் இருந்த விநயம் அவனுக்கே தாங்க முடியாததாக இருந்தது.

மற்றொரு நாள் சந்துருவிற்காக சுஜாதா ஸ்ரீநிவாசனின் நடன நிகழ்ச்சிக்குப் போனார்கள். நந்தாவிற்காக இன்னொரு நாள் சேஷகோபாலன் இசை நிகழ்ச்சிக்குச் சென்றார்கள்.

"அது என் நந்தா சங்கீத வித்வான்கள் யாரும் மீசை வச்சுக்கறதில்லை?"- சந்துரு கேட்டான்.

"தெரியாம பேசாதீங்க! டி.வி. கோபால கிருஷ்ணனுக்கு ஏ க்ளாஸ் மீசை உண்டு!"

"அப்ப பி க்ளாஸ் மீசை யாருக்காம்?"

'அய்யோ-கடிக்காதீங்க...!"

பொழுது இப்படியே விளையாட்டாகவும் உள்ளூர விநயமாகவும் ஓடியது. படர்ந்தது. பெரிய மீசை வளர்க்க ஆரம்பிக்கலாமாயென்று கூட நினைத்தான். ஆனால் அவசரப்பட வேண்டாமென்றும் எண்ணிக் கொண்டான். திட்டமிடப்பட்ட சதுரங்க விளையாட்டாகக் கருத வேண்டும் என தீர்மானித்தான். விளையாட்டுத்தான் என்றாலும் வெற்றி பெற வேண்டும். எல்லா விளையாட்டுக்கும் இது பொருந்தும். மன அந்தரங்கத்தில் சந்துருவிற்கு நந்தாவுடன் விளையாட்டு வேண்டி இருக்கிறது. அந்த விளையாட்டுக்குக் கிடைத்திருக்கிற மைதானம்



தான்- வீட்டோடு மாப்பிள்ளையாக வந்திருக்கிற இந்த பாக்கியம்...! அவனாக தேடி வரவில்லை இந்த மைதானத்தை. திருமணம் என்ற அலை வந்து தள்ளிக் கொண்டு வந்து விட்டது அவனை! ஆரம்பத்தில் இந்த மைதானத்தில் நந்தாவின் எதிரில் நிற்க மனம் குறுகுறுக்கத்தான் செய்தது. மைதானத்திற்குள் நுழையாமலே ஓடிப்போய் விடலாம் போலத்தான் இருந்தது- முதலில்! ஆனால், நந்தா ஓர் எதிரி போல் தெரியாமல் தோழி மாதிரி இருந்ததைப் பார்த்ததும் பயம் போய் விட்டது. பழைய காதல் பெருங்காயம் தன் வாசனையையும் தல்லதூக்கி விட்டது! அதுசரி, பெருங்காய பெட்டகம் பெருங்காய பெட்டகம்தானே... எத்தனை காலமானாலும் போய் விடுமாயென்ன- அதன் வாசம்... பெருங்காய பெட்டகம் தன்னுடைய வாசனையை சமயம் அறிந்து காட்டிவிட கபடத்துடன் காத்துக் கொண்டுதான் இருந்தது. என்றைக்கோ தெரிவிக்க முடியாமல் போன காதலை உரிய தருணத்தில் வெறுமே தெரிவிக்க முடிந்தாலே போதும் என்று சில சமயங்களில் அவனின் கபடம் அடக்கமாக யோசித்தது! மற்றொரு வேளையில் இன்னும் அந்தக் காதல் தன்னுள் ஜீவித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் தைரியமாய் காட்டி விடலாமாயென்று சிறிது தீவிரமாகவும் கபடம் சிந்தித்தது!- இதில் சந்துரு ஒன்றில் மட்டும் மிகவும் கவனமாக இருந்தான்- எத்தனை காலம் விளையாட்டு நீடித்தாலும், வெகு தாமதமாக வேணும் விளையாட்டில் வென்று விட வேண்டும். எந்தக் காரணத்தாலும் தோற்று விடக் கூடாது. வெற்றி கிட்டப் போவதில்லை என்ற பட்சத்தில் விளையாட்டை முடித்து விடவேண்டும்...!

சந்துருவின் இந்த விளையாட்டுக்கு கர்நாடக சங்கீதமும், பரதநாட்டியமும்கூட பயிற்சிக்களம் போல் தான் கை கொடுத்தன. தினசரி சில நிமிடங்களாவது

அந்தப் போர்வையில் நந்தாவுடன் அந்நியோந்நியமாக இருக்க முடிந்தது.

''நாட்டியத்ல மட்டும்- பரத நாட்டியம், கூச்சுப்புடி, ஒடிஸி, கதக்களினு எப்படி அத்தனை பிரிவு வந்தது நந்தா? இதெல்லாமே பேஸிக்கா ஒண்ணுதானா, இல்லை வேற வேறயா?"- சந்துரு நந்தாவை கேட்டான்.

''எல்லாமே நாட்டிய சாஸ்திரம், அபிநய தர்ப்பணம் ஆகியவற்றின் இலக்கணங்களை அடிப்படையா கொண்டதுதான் அத்தான். ஆனா- ஒவ்வொண்ணுக்கும் கொஞ்ச கொஞ்சம் வித்தியாசம் இருக்கும். உதாரணத்துக்கு கதக்களியில் கால் அசைவுகள்தான் பிரதானம். ஆனால் ஒடிஸியில் அபிநயம்தான் இருக்கும். கால் அசைவே இருக்காது.''

"அதென்னம்மா அது- பரத நாட்டியத்ல கடைசியா தில்லானான்னு ஆடறாங்களே...?''

''அது மராட்டிக்காரங்களோட ஒரு மாதிரியான லாவணின்னு சொல்லலாம். அது வந்து ஒரு ஜனரஞ்சகத்துக்காக பின்னாடி தஞ்சாவூர்ல மராட்டி ராஜாக்கள் ஆண்ட போது சேர்த்தாங்க..."

''பரவாயில்லை நந்தா! நீயும் நிறையத்தான் தெரிஞ்சு வச்சிருக்கே...''

''நோ நோ- இதெல்லாம் விஷயமே கிடையாது அத்தான். நத்திங்! நாட்டிய சாஸ்திரம் பத்தி பத்மா சுப்ரமணியம் கிட்டே பேசிப் பாருங்க- திணறிப் போயிடுவீங்க! நாட்டிய சாஸ்திரம் பற்றின அறிவுக் கடல் அந்தம்மா. ரொம்பப் பெரிய ஸ்காலர்...''

''நான் நீ சொன்ன இந்த விஷயங்கள்ளேயே அம்பேல் ஆயிட்டேன்...! அந்தம்மாவைப் போய் பார்த்து என்ன பேசுவேன், அவ்வளவுதான், தீர்ந்தேன்!"



''சே! உங்களுக்காக நான் டேன்ஸ் கத்துக்காமே இருந்துட்டேன் பாருங்க..."

''நான் ஸ்கூல்ல படிச்சிட்டு இருந்தப்பல்லாம்- பெரிய ஆளானதும், ஒரு நல்லா டேன்ஸ் ஆடத் தெரிஞ்ச லேடியைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு நெனைச்சிருக்கேன்!''

''யக்கா! கேட்டுக்க- அத்தான் என்ன சொல்றார்னு... பேசாமே இன்னிலேந்து டேன்ஸ் ஆட கத்துக்க...'

-இந்தச் சமயத்தில்தான் சந்துருவின் அண்ணா தேவேந்திரன் வந்தான்.

''வா அண்ணா... என்ன திடீர்னு இவ்வளவு தூரம்?'' -சந்துரு தேவேந்திரனை வரவேற்றான்.

''நேத்திக்கி நீ ஆஸ்பிட்டலுக்கு வந்திருந்தியாமே- அப்பத்தான் நான் வீடு வரைக்கும் போயிருந்தேன்.''

''ஒரு மணி நேரம் இருந்தேன் நீ வரலை. சரினு அம்மாகிட்டே சொல்லிட்டு கிளம்பிட்டேன்..."

' அன்னிக்கி பார்த்ததுக்கு நேத்திக்கி எப்படியிருக்யிருக்கார் அப்பா?"- தேவேந்திரன் கேட்டான்.

''இருக்கார்... அஞ்சு நிமிஷம் கண்ணைத் திறந்து பார்த்தார்னு நெனைக்கிறேன். வேற ஒரு மூவ்மெண்ட் கிடையாது. பார்த்தா பாவமாத்தான் இருக்கு... எத்தனை நாளைக்குத்தான் இப்படியே கிடக்கிறது... யார்தான் அசராமே அவரைப் பார்த்துக் கொள்றது... பாவம் அம்மா! கடைசிக் காலம் வரைக்கும் அவங்களுக்குத்தான் தொந்தரவு...''

''நீ ஒரு நாள் அமுதாவைக் கூட்டிட்டு வீட்டுக்கு வாயேன். பசங்க எல்லாம் சித்தியைப் பார்க்கணும்னு சொல்லிட்டே இருந்ததுகள். இன்னும் நீ லீவில்தானே இருக்கே?"

"ஆமா, நாளை லீவ் முடிஞ்சு ஜாய்ன் பண்றேன்..."

"பாவம், ஹனிமூன் போக முடியாமே போச்சி உனக்கு..."

"போகாமே இருந்ததும் நல்லதுதான். அவளுக்கும் இடையில் நாலு நாள் ஜுரம்..."

ஒரு நிமிடம் அமைதியாக இருந்து விட்டு தேவேந்திரன் கொஞ்சம் தயங்கிய குரலில் சொன்னான்.

"ஒரு முக்கியமான விஷயமா வந்தேன், சந்துரு..." கொஞ்சம் பணம் தேவையாயிருக்கு- ஆஸ்பிடல் செலவு இதுவரைக்கும் எட்டாயிரம் ரூபா ஆகியிருக்கு. அவசரமா இப்ப கொஞ்சம் பணம் கட்டியாகணும்... அதான் உன்னைக் கேக்கலாம்னு..."

"எவ்வளவு வேணும் சொல்லு... இப்பவே செக் தரேன்..."

"ஜாஸ்தி வேணாம். ஒரு ஐயாயிரம் ரூபா தந்தேன்னா அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம்..."

"ஒயெஸ். தரேன். நோ ப்ராப்ளம்..."

"உனக்கு அக்கௌண்ட்- செயின் மேரி ரோட்டில் இருக்கிற கனரா பேங்க்லதானே?"

"ஆமா... செக் தரேன். மாத்திக்கிரியா?

"அது நான் மாத்திக்கறேன்..."

சந்துரு காசோலையை கொடுத்தான். எப்படியும் இதில் ஆயிரம் ரூபாய் ஒதுக்கி விடலாம் என்ற சந்தோஷத்துடன் காசோலையைப் பெற்றுக் கொண்டு, சூடாக ஒரு பானத்தையும் குடித்துவிட்டு தேவேந்திரன் அங்கிருந்து வெளியேறினான். பணம் கொஞ்சம் குறைத்துக் கொடுத்திருக்கலாமோயென்று யோசனை செய்து கொண்டிருந்த சந்துருவின் சிந்தனையை நந்தாவின் குரல் கலைத்தது.



"என்னம்மா!" என்றான்

"உங்களுக்கு போன் அத்தான். உங்க ஃப்ரண்ட் சுஜாதா கூப்பிடறாங்க..."

சந்துரு எழுந்து போய் ரிசீவரை வாங்கினான்.

"என்ன சுஜா?"

"உனக்கு ஒரு வருத்தமான செய்தி சந்துரு. நேத்திக்கி ஈவினிங் நான் என்னோட வேலையை ராஜினாமா பண்ணிட்டேன்..."

"அய்யய்யோ! என்னம்மா இது? ஏன் ராஜினாமா பண்ணினே?" -சந்துரு அதிர்ச்சியுடன் கேட்டான்.

எதிர்பாராத விஷயம் நடந்திருச்சி. நேத்திக்கி நம்ம எம். டி. என்கிட்டே தப்பா நடந்திட்டார்...?"

"தப்பா நடந்திட்டார்னா?"

"ஹி வாண்ட்ஸ் டு ஷேர் ஹிஸ் பெட் வித் மி..."

"ச்சொச்சோ... நம்ம எம்.டி.யா அப்படி நடந்துக்கிட்டார்...?"

"நானே ஒரு நிமிஷம் அதிர்ந்து போயிட்டேன். என்னாலேயே அப்படி அவர் கேட்டுட்டதை நம்ப முடியலை. அழுதிட்டேன் ஆக்ச்சுவலா... எவ்வளவு மரியாதை வச்சிருந்தேன் அவர்கிட்டே..."

"இந்த விஷயம் வேற யார் யாருக்குத் தெரியும்?"

"ஆபிஸ்ல யாருக்கும் தெரியாது. சொல்லலை நான். அப்படியெல்லாம் சொல்லி அவரைப் பழி வாங்கறதுக்கு எனக்கு இஷ்டமில்லை. அதே நேரம்- அவர்கிட்டே தொடர்ந்து வேலை பார்க்கிறதுக்கும் எனக்கு இஷ்டமில்லை. ஸோ- ரிஸைன் பண்ணிட்டேன்..."

"எத்தனையோ ஆபிஸ்ல அந்த மாதிரியெல்லாம் நடக்குதுன்னு கேள்விப்படத்தான் செய்திருக்கேன்.

ஆனா; நம்ம எம்.டி.யும் இப்படி நடந்துப்பார்னு நான் நெனைச்சிக்கூடப் பார்த்ததில்லை. சே! ஐ ஃபீல் வெரி பேட் சுஜா... நாளைக்குப் போய் அவரோட முகத்தைப் பார்க்கறதுக்கே அசிங்கமா இருக்கு எனக்கு..."

"ஆபிஸ்ல வேற யாருக்கும் இது தெரிய வேண்டாம் சந்துரு. விட்டுரு. பெரிய பணக்காரனுங்க இப்படித்தான் இருப்பானுங்க... நாம் ஒண்ணும் செய்ய முடியாது அவனுங்களை..."

"நான் விட்டுடத்தான் போறேன். நான் என்ன பண்ணப் போறேன்... ஆனா எல்லாருமே என்னிக்குமே விட்டுட்டே இருந்திட மாட்டான். எவனாவது ஒருத்தன் வந்து என்னிக்காவது ஒருநாள் மாட்டு மாட்டுனு மாட்டிடுவான்... அப்பத் தெரியும் இவன்களுக்கு...!"

"நீ நாளைக்குத்தானே ஜாய்ன் பண்றே?"- சுஜாதா கேட்டாள்.

"ஆமா- நாளைக்குத்தான் ஜாய்ன் பண்றேன்."

"இன்னிக்கி ஈவினிங் வேற ப்ரொக்ராம் எதுவும் இருக்கா உனக்கு?"

"இதுவரைக்கும் நோ ஐடியா."

"அப்போ ஈவினிங் எங்காத்துக்கு வாயேன்..."

"எத்தனை மணிக்கு வரட்டும்?"

"அஞ்சு மணிக்கு வாயேன்."

"ஓயெஸ்..."

"மத்ததெல்லாம் நேர்ல பேசிப்போம்."

"ஓகே. சரியா அஞ்சு மணிக்கு வந்திடறேன்..."

"பை..."

# 20

சுஜாதா தொலைபேசியில் தெரிவித்த செய்தி மிகவும் எதிர்பாராமல் சந்துருவை பாதித்து விட்டது. வெகு நேரத்திற்கு யாரோடும் பேசக்கூட முடியாமல் மௌனமாகவே அமர்ந்திருந்தான். திரும்பத் திரும்ப பெண்ணிடம் தவறாக நடந்து கொள்கிற ஆண் பற்றியே தான் கேள்விப்பட வேண்டியிருக்கிறது ஆடவனிடம் தப்பாக நடந்து கொண்ட பெண் பற்றி கேள்வியே பட முடியவில்லை! இது ஆணுக்கு மட்டுமே உரிய பலவீனமா? நினைக்க நினைக்க சந்துருவிற்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. ஆம்பிளைகளை யெல்லாம் அழித்து விடலாம் போலக், கூட 'இருந்தது! மானத்தை வாங்குகிறார்கள் ஆண்கள்...!- ஆனால், ஒட்டுமொத்தமாக இதற்கு ஆண்களை மட்டுமே குற்றம் சொல்லவும் கூடாது. ஆண் தவறு இழைத்து விடுகிற அளவிற்கு பெண்ணிடமும் ஏதோ இருக்கிறது...! அதுவும் அபூர்வமாக என்னவோ பெண்ணிடம் ஒளிந்து கிடக்கிறது... அதுதான் ஆடவனை வசீகரித்து விடுகிறது. நினைக்க நினைக்க சந்துருவிற்கு பெரிய குழப்பம் ஏற்பட்டது. ஏதாவது ஒரு பெண்ணிடம் போய் தப்பாக நடந்து கொள்ள வேண்டும் போலத்தான் இருந்தது அவனுக்கும்-! ஒரேயடியாக அப்படி இருந்து விட்டாலும் தேவலை போல்தான் தெரிந்தது. சும்மா- ஒருவனுக்கு ஒருத்தி' ஒருத்திக்கு ஒருவன் என்ற கட்டுப்பாடுகள் எல்லாம் வெறும் பாசாங்குகள் வேஷங்கள் என்று புரிந்தது. 'சரி, இதற்கு தான் என்ன செய்யலாம் என்று சிந்தித்த போது தான், என்ன செய்வதென்று விளங்காமல் அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. எழுந்து போய் தனது முதலாளியின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுத்து விட்டு வரலாம் போலிருந்தது! பின் என்ன? ஒரு சுஜாதா

விடம் போய் எப்படித் தவறாக நடந்து கொள்ள முடியும்? அவளிடம் தப்பாக நடந்து கொள்கிறவன் எந்தப் பெண்ணிடமும் தப்பாகத்தான் நடந்து கொள்வான்...! இப்படி சுஜாதாவிடம் போய் தவறாக நடந்து கொண்டானே, பதிலுக்கு நான் போய் அவனுடைய மனைவியிடமோ மகளிடமோ அப்படி நடந்து கொண்டால் எப்படி இருக்கும் அவனுக்கு?' கோபம் வருமா வராதா...? அப்படித்தானே இருக்கும் எல்லோருக்கும்...! அது தெரிய மாட்டேன்கிறதே- இவன்களுக்கு...!

தாங்க முடியாத வியாகூலத்துடன் சந்துரு மிகவும் சோர்வுடன் நாற்காலியில் அமர்ந்திருந்தான். சட்டென அவனுடைய மனவெளியில் நந்தா தெரிந்தாள். அவனின் மனம் அந்த மனவெளி நந்தாவையே பார்த்தது. மன வெளி நந்தாவை மனத்தால் மட்டும் தான் தொட முடியும் போல் தெரிந்தது. அன்றாட வாழ்வின் யதார்த்தத்தில் அவளுடைய நகங்களைத் தொடக் கூட அவனுக்கு பாத்தியம் கிடையாது. 'பின், என்ன இழவுக்காக மனத்துள் அவளோடு வேறொரு நாடகமாடிக்கொண்டிருக்கிறோம்?' என்ற எரிச்சல் ஏற்பட்டது சந்துருவிற்கு. உண்மையில் பல விஷயங்களில் தான் கையாலாகாதவன் என்ற உண்மையைக்கூட பார்க்க முடிந்தது அவனால்! ஒன்று- முழுக்க முழுக்க நல்ல மனிதனாகவே இருந்துவிட வேண்டும். இல்லை- முற்றிலும் கெட்ட பயலாக இருந்து விட வேண்டும். இப்படி இரண்டும் கெட்டானாக இருக்கக் கூடாது. முடிந்தால் முழுமையான வன்முறை. முடியாவிட்டால் மொத்தமாக சாத்வீகம்...! நினைக்க நினைக்க சந்துருவிற்கு தலையெல்லாம் வலிக்க ஆரம்பித்தது. இனி தான் பணி புரியப் போகும் இடத்தில் சுஜாதா இருக்க மாட்டாள் என்ற நிலைகூட அவனைச் சோர்வடையச் செய்தது. தன் தோழியிடம் தவறாக நடந்து கொண்ட முதலாளியின் முகத்தைத் தன்னால்



இனி நிமிர்ந்து பார்க்க முடியுமாயென்று யோசித்துப் பார்த்தான். சுற்றி கிடந்த வாழ்க்கைச் சூழலே குழப்பமாய் கனத்துத் தெரிந்தது.- அந்தக் கனம் தாங்கமாட்டாமல் மதிய உணவிற்குப் பின் அமுதாவிலேயே புதைந்து கிடந்துவிட்டு, மாலை உடல் அயர்வுடனேயே சுஜாதாவின் வீட்டிற்கு மிகக் குறைந்த வேகத்திலேயே ஸ்கூட்டரில் சென்று அடைந்தான்.

''என்ன சந்துரு, முகமெல்லாம் ஒரு மாதிரியிருக்கு- உடம்பு எதுவும் சரியில்லையா?''- சுஜாதா எடுத்த உடனேயே கேட்டாள்.

''என்னன்னு தெரியலை- அப்பப் பிடிச்சு தலையை வலிக்குது... லேசா இப்ப வயிறு வேற வலிக்கிற மாதிரி தெரியுது.''

''அப்போ என்ன அவசரம், இன்னொரு நாள் வந்திருக்க வேண்டியதுதானே...''

''அதென்னமோ நீ சொன்ன ந்யூஸை கேட்டதில் இருந்து எனக்கு மனசே சரியில்லை சுஜா... அதான் உன்னைப் பார்க்கலாம்னு கிளம்பி வந்திட்டேன்...''

''சரி வா, பின்னாடி இருக்கிற தோட்டத்துக்குப் போயிடலாம்...''

''ஓயெஸ்.''

இருவரும் பின்புற தோட்டத்தில் சப்போட்டா மரத்தின் கீழ் உட்கார்ந்துகொண்டார்கள்.

''ஸோ, நாளைக்கு ஆபிஸ்ல லீவ் முடிஞ்சு ஜாய்ன் பண்றேயாக்கும்?''

''நான் ஜாய்ன் பண்றது இருக்கட்டும், என்னம்மாது- கடைசியில இவ்வளவு மோசமா நடந்திட்டார் எம்.டி...?'' சந்துரு படபடப்புடன் கேட்டான்.

''பாவம், ரொம்ப நாளா இந்த எண்ணத்தை மனசில் வச்சிருந்தாரா. இல்லை- திடீர்னு ஒரு மூமெண்ட்ல அப்படி நடந்திண்டாரான்னு தெரியலை... ஐ வாஸ் ஷாக்ட்... ஒரு நிமிஷம் ஹார்ட்டே நின்னு போயிட்டாப்ல இருந்தது... என்ன பண்றதுன்னே புரியலை. திகைச்சுப் போயிட்டேன். அவமானமா வேற போயிடுத்து. எப்படிக் கொஞ்சம்கூட சுயமரியாதையே இல்லாமே இப்படி நடந்துக்க முடியுமோ தெரியலை. ஹாரிபிள்யா... முதல் தடவையா நேத்திக்குத் தான் சந்துரு பொண்ணா பிறந்துட்டேனேன்னு ஒரு நிமிஷம் கலங்கிட்டேன்! என்னால் நெனைச்சே பார்க்க முடியலைடா அதெப்படி ஒருத்தியை திடீர்னு. அதுவும் ஆபிஸ் ரூம்ல படுக்க வரயாடின்னு கேட்க முடியறது? அதுவும்- எந்த ரிலேஸன்ஷிப்பும் இல்லாத ஒருத்தியைப் போய்... மை காட், என்னால் நெனைச்சே பார்க்க முடியலை சந்துரு... நெனைச்சே பார்க்க முடியலை..."- சொல்லிவிட்டு சுஜாதா உடலைச் சிலிர்த்துக் கொண்டாள்.

''என்னாலேயும் தான் நெனைச்சிப் பார்க்க முடியலை சுஜா.- அவர்கிட்டே போய் எப்படி இனிமே நிமிர்ந்து பார்த்து வேலை பார்க்கப் போறேனோன்னு...இருக்கு.''

''என் அத்திம்பேருக்கு பயங்கரமா கோவம் வந்துடுத்து. போய் உடனே கேட்கப் போறதா ஒரேயடியா கத்தினார். நான்தான் கஷ்டப்பட்டு ஒரு மாதிரி பேசி கீசி அடக்கி வச்சேன்...''

''பாலாவுக்கு எப்படி சொல்லப் போறே?"

''அவனுக்கெல்லாம் சொல்லப் போறதில்லை. பாவம், அவனுக்குப் போய் இதை எழுதிண்டு...''

''வேலையை ஏன் ராஜினாமா பண்ணினேன்னு கேட்பானே?''

''அதுக்கு எதையாவது சொல்லிண்டா போறது.



அதுவும் இல்லாமே நான்தான் நெக்ஸ்ட் வீக் ப்ரிட்டானியாவில் ஜாய்ன் பண்ணப் போறேனே..." என்றாள் சுஜாதா.

''என்னம்மா, அப்ப போன் பண்ணினப்ப இந்த ந்யூஸை நீ சொல்லவேயில்லை?'' சந்துரு சந்தோஷத்தோடும் ஆச்சர்யத்தோடும் கேட்டான்.

''இப்போத்தான், ஜஸ்ட் அரைமணி நேரத்துக்கு முன்னாடி தான் கன்ஃபர்ம் ஆச்சு. அதான் அவசரப்பட்டு அப்போ சொல்லலை. ஆனா ஒரு விஷயம்- வேலை மெட்ராஸ் ப்ரான்ஞ்ச்ல இல்லை... அவாளோட பாம்பே ஆபிஸ், ஐ திங்க் திஸ் இஸ் வெரிகுட் ஆப்பர்சூனிட்டி ஃபார் மீ...''

சந்துரு அதிர்ச்சி அடைந்து விட்டான்! ''அப்ப நீ இம்மீடியட்டா பாம்பே போகணுமா?'' - ஏமாற்றத்துடன் கேட்டான்.

''அடுத்த திங்கட்கிழமை ஜாய்ன் பண்ணியாகணும்டா...''

''என்னம்மாது. திடீர்னு என்னை இப்படி விட்டுட்டு போறே?'' சந்துரு அன்பு கலங்கக் கேட்டான்.

''சீ! எப்படியும் பாலாவை கல்யாணம் பண்ணிண்டாச்சுன்னா- நான் ஆஸ்திரேலியா போயிட வேண்டியவள் தானே."

''அதுவேற... இப்ப நீ திடீர்னு போறியே. அதான் ஒருமாதிரியிருக்கு...''

''உங்கப்பா எப்படியிருக்கார்...போய் பார்த்தேயா?''

''பார்த்தேன் பார்த்தேன்.''

''உன்னை ரெகக்னைஸ் பண்ணிக்கிறாரா?''

''எல்லாரையும் ஒரே மாதிரி வெறிக்க வெறிக்க பார்க்கிறார். அவ்வளவுதான். அதுக்கு மேல ஒண்ணும்

சொல்லிக்கிற மாதிரி இல்லை. அதென்னமோ சுஜா, திடீர்னு லைஃப் ரொம்ப ஹெவியா இருக்கிற மாதிரித் தெரியுது. ஏதோ கண்ணுக்குத் தெரியாத சங்கிலிகள் என் கையையும் காலையும் பிடிச்சு இறுக்கிக்கிட்டு இருக்கிற மாதிரி இருக்கு. ஐ டோண்ட் நோ வய்?''

''அமுதாகூட ஒண்ணும் உனக்கு ப்ராப்ளம் இல்லையே?''

''அமுதாகிட்டே ஒரு ப்ராப்ளமும் கிடையாது. ஐ லவ் ஹர் வெரி மச்... ஆனா, எனக்குள் இருக்கிற இன்னொரு முக்கியமான ஏரியாவுக்கு- அமுதா போதமாட்டேன்கிறா! அவகிட்டே இருந்து கிடைக்கிற காதல் எனக்குப் போதலை சுஜா.''

''நீ வேற எதையோ மனசில் வச்சுண்டு பேசறேன்னு நெனைக்கிறேன்...''

''மனசில் வேற எதுவும் இல்லேம்மா. ஐ நீட்டு மச்'னு சொல்ல வரேன். இதை ஒரு அழகான உதாரணம் மூலமா சொல்றேன்- பாரேன்... தஞ்சை மாவட்டத்ல லட்சணக் கணக்கான ஏக்கர்ல வளர்ந்திருக்கிற நெல் பயிருக்கு எவ்வளவு தண்ணி பாய்ஞ்சாலும் போதும்னு சொல் றாங்களா- யாராவது! தண்ணி போதலை தண்ணி போதலைன்னு தான் கத்துறாங்க. கர்நாடகாகாரன் கிட்டேபோய் வேற தண்ணி கொடுன்னு கெஞ்சறாங்க...! மேட்டூர் டேம் பெரிசுதான். ஆனாலும் அதில் இருக்கிற தண்ணி என்னமோ நெல்லுக்குப் போற மாட்டேங்குது. கிருஷ்ணராஜசாகர் தண்ணியும் வரவேண்டியிருக்கு அதுக்கு...!''

''அதுசரி, எங்க எம்.டி யும் அவர் செஞ்ச காரியத்துக்கு இதே லாஜிக்கை சொன்னார்னா அப்போ என்ன பண்ணுவே நீ?'' - சுஜாதா மறைமுகப் பொருளுடன் கேட்டாள்.

7536



279601

''லஸ்ட் வேற லவ் வேற சுஜா...!''

''சரி, மேட்டூர் டேம் போறலைன்னே வச்சுக்கலாம். இன்னொரு கிருஷ்ணராஜசாகர் அணைக்கட்டும் வேண்டியிருக்கு உனக்கு... ஆனா- கிருஷ்ணராஜசாகர் டேம் பொம்மனாட்டியாத்தான் இருக்கணும்னு சட்டம் ஒண்ணும் கிடையாதே...! அன்பு ஆம்பளைகள்கிட்டேயிருந்து கிடைச்சாயென்ன, பொண்ணுகள் கிட்டேயிருந்து கிடைச்சாயென்ன? ஆனா- உனக்குத் தேவையா இருக்கிற கிருஷ்ணராஜசாகர்- ஒரு பொண்ணாகத்தான் இருக்கணும்னாக்க- தட் இஸ் நாட் லவ், அது லஸ்ட் தான்... அதைப் புரிஞ்சுக்கோ நீ... சும்மா என்கிட்டே வந்து லவ் வேற லஸ்ட் வேறேனு கதையெல்லாம் விடாதே...!''

''தெரியும் சுஜா எனக்கு. கடைசியில் நீ எப்பவும் என்னைத்தான் குற்றம் சொல்வே?''- சந்துரு ஆயாசத்துடன் சொன்னான்.

''ஆமா, உன்னைக் குற்றம் சொல்றதுக்காகவே நான் ஏங்கிண்டிருக்கேன்... வேற வேலையில்லை பார்- எனக்கு!''

சந்துருவிற்கு முகம் சிவந்து விட்டது.

''என்னை அவமானப் படுத்தறே சுஜா-'' கொஞ்சம் கோபத்துடன் சொன்னான்.

''இதையெல்லாம் அவமானப் படுத்தறதா எடுத்துண்டேன்னாக்க- ஸாரி, ஐ காண்ட் ஹெல்ப் இட்...'' சுஜாதா வருத்தத்துடன் சொன்னாள்.

சில நிமிடங்களுக்கு இருவரும் மௌனமாக இருந்தார்கள். பின் சுஜாதா கேட்டாள்:

''சரி, அதுக்கென்னத்துக்கு இப்போ மூஞ்சியை தூக்கி வச்சுக்கணும், நான் பாம்பே கிளம்பிப்

போறதுக்குள்ளே ஒருநாள் அமுதாவை அழைச்சிட்டு வாயேன் ஆத்துக்கு?''

''நோ. அவளையெல்லாம் அழைச்சிட்டு வரலை! நாளைக்கு லீவ் முடிஞ்சி ஆபிஸ்ல ஜாயின் பண்ணிட்டா- எனக்கு டைம் இருக்காது! ஐ வில் பி பிஸி!''- எதிர்பாராத குரல் மாற்றத்துடன் சொன்னான் சந்துரு.

''அப்போ நான் வரேன் உங்காத்துக்கு- ஐ மீன் அமுதாத்துக்கு...''

''நான் தான் சொன்னேனே இப்ப- ஐ வில் பி பிஸின்னு...!''

''அவ்வளவு கோபமா உனக்கு?''

சந்துரு பேசாமல் இருந்தான்.

''என் கல்யாணத்துக்கு வருவாயோல்லியோ?''

''மெட்றாஸ்ல இருந்தா வரேன்!''

சந்துரு எழுந்து விட்டான். ''ஆல் த பெஸ்ட்''- என்றான் நட்பே இல்லாத குரலில்.

சுஜாதா நண்பனை ஏறிட்டுப் பார்த்தாள். முகத்தைச் சட்டென்று திருப்பிக் கொண்டு வேகமாக வெளியேறிய சந்துரு பத்து நிமிடங்களில் இந்திரா நகர் போய் சேர்ந்தான்.

''என்னங்க- ரொம்ப சீக்கிரமாவே திரும்பிட்டீங்க?'' -அமுதா கேட்டாள்.

''என்னமோ போரடிச்சது- கிளம்பி வந்துட்டேன். அதுவும் இல்லாமே உடம்பு வேற ஒரு மாதிரி இருந்தது- நாளைக்கு ஆபிஸ் போகணுமே, அதனால் படுத்து நல்லா ரெஸ்ட் எடுக்கலாம்னு புறப்பட்டுட்டேன்...''

''முகத்தைப் பார்த்தா ஒரு மாதிரி தான் இருக்கு.''



''என் உடம்பைத் தொட்டுப்பார் ஃபீவர் எதுவும் இருக்கானு...''

அமுதா சந்துருவின் உடலைத் தொட்டுப் பார்த்தாள்.

''என்னங்க- உடம்பு இப்படிக் கொதிக்குது... ஒன் நாட் டு, ஒன் நாட் த்ரீ- இருக்கும் போல இருக்கே... இப்படி உட்கார்ங்க நீங்க. நான் போய் முதல்ல அப்பாகிட்டே சொல்லிட்டு வரேன்...''

சந்துரு களைப்புடன் சோபாவில் சாய்ந்து அமர்ந் தான். சிலநிமிடங்களில் தன் அப்பாவுடன் அமுதா வேகமாகதிரும்பி வந்தாள்.

''மாப்பிள்ளை, உடனே கார்ல அமுதாகூடப் போயிட்டு வந்திடுங்க. நம்ம ஃபாமிலி டாக்டர். முத்தரசன் இன்னும் கிளினிக்கில் தான் இருக்காராம் போன் பண்ணிச் சொல்லிட்டேன்... உடனே இன்ஜெக்ஸன் போட்டுட்டா சரியாயிடும்...''- என்றார் பெருமாள்சாமி.

அடுத்த நிமிடம் கார் டாக்டர் முத்தரசன் கிளினிக் நோக்கி விரைந்தது.

## 21

அடையாரில் இருக்கும் அந்தத் தனியார் மருத்துவ மனையில், மிக வாடகை உயர்ந்த அறையின் சுத்தமான வெண்மையான படுக்கையில் சந்துரு உட்கார்ந்திருந் தான். முதல் இரண்டு நாட்கள் சாதாரண மாத்திரை களாலும் ஊசி மருந்துகளாலும் குணப்படுத்த முடியாத அவனின் காய்ச்சல், பின்னர் டைபாய்டு ஜுரம் என ஊர்ஜிதம் செய்யப்பட்டு, உடனே இந்த தனியார்

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு ஐந்து நாட்களாகி விட்டிருந்தன. நேற்று மாலையில் இருந்து காய்ச்சல் நீங்கியிருந்தது. இன்னும் நான்கு நாட்களில் அவனை மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு அனுப்பி விடுவார்கள். மருத்துவமனையில் அவனுடன் இருந்து அமுதா கவனித்துக் கொள்கிறாள். சாப்பாடு வகைகளை வீட்டில் இருந்து நந்தா ஒவ்வொரு வேளையும் காரில் கொண்டு வந்து கொடுத்துவிட்டுச் செல்கிறாள்.—இப்போது, காலை மணி எட்டு ஆகிறது. இன்னும் சிறிது நேரத்தில் நந்தா காலை உணவு எடுத்து வருவாள். காலையில், அமுதா அங்கேயே தயாரித்துத் தந்திருந்த ஹார்லிக்ஸை குடித்திருந்த சந்துரு ஒரு வாரம் ஷேவ் செய்யப்படாத முகத்துடன், சற்று இளைத்த தோற்றத்தில் படுக்கையில் சோர்வுடன் அமர்ந்திருந்தான். அவன் விரும்பிக் கேட்டதற்காக சந்துருவின் கன்னத்தில் அமுதா நாணத்துடன் ஒரு தடவை முத்தமிட்டாள்.

''ஜுரம் விட்டதுமே—ஆசை தானா?" கொஞ்சலுடன் கேட்டாள்.

"ஜுரம் மனசுக்கு இல்லையே..."

''நேத்திக்கி நைட்டெல்லாம் ரொம்பப் புலம்பிட்டு இருந்தீங்களே - தூக்கத்ல... எதுவும் கனவு கினவு கண்டிங்களா?''- அமுதா கேட்டாள்.

''கனவு கண்ட மாதிரி எதுவும் ஞாபகம் இல்லைம்மா- சரி; என்ன சொல்லிப் புலம்பினேன்?"

''அது எங்கே காதில் க்ளியரா விழுது... ஒரே மூக்கல் முனகல்தான் ... நான்தான் தூங்கலை— உங்க புலம்பலைக் கேட்டு..."

''குட்மார்னிங்...''

-என்று சொல்லியபடி கதவைத் திறந்துகொண்டு நந்தா காலை உணவுகளுடன் அறையில் நுழைந்தாள்.



குளித்து புதிய உடையில் வந்தவளைப் பார்க்க சந்துருவிற்கு நிம்மதியாக இருந்தது.

''என்னடி - பத்து நிமிஷம் லேட்டா வரே?''- அமுதா கேட்டாள்.

''ஏன், அத்தானுக்கு பசிச்சிருச்சா?''

''எனக்குப் பசிக்குது!"

''எனக்குத்தான் இன்னும் சரியா பசிக்கவே இல்லையே!''- சந்துரு சொன்னான்.

சர்க்கரை தொட்டு இரண்டே இரண்டு இட்லி மட்டும் சாப்பிட்டான் சந்துரு

''இன்னும் ஒண்ணே ஒண்ணு வச்சுக்கோங்க..''

''வேணாம் அமுதா. இப்பத்தானே ஹார்லிக்ஸ் சாப்பிட்டேன். அப்புறம் பத்து மணிக்கு ஆரஞ்சு ஜூஸ் வேற தருவே ..''

''அப்பத்தானே அத்தான் கொஞ்சமாவது எனெர்ஜி இருக்கும். பாருங்க, நாலே நாள்ல எப்படி ஒன்னு இளைச்சிட்டீங்கன்னு...

''என்னிக்குத் தான் ஆபிஸ்க்குப் போகப் போறேனோ?''

மீதம் இருந்த இட்லிகளை சாப்பிட்டு காப்பி குடித்த அமுதா. ''நந்தா, நீ கொஞ்சம் இவரைப் பார்த்துக்க, நான் விட்டுக்குப் போயிட்டு வேகமா வந்திடறேன்" என்றாள்.

—ஜலக்கென்று அருகில் இருந்த நீர்துறையில் ஒரு மீன் தண்ணீர் மட்டத்திற்கு மேல் துள்ளி உயர்ந்து விழுந்தாற் போன்ற கவனத்தைக் கொடுத்தது— இந்தச் சொல் சந்துருவிற்கு.

''எதுக்குக்கா வீட்டுக்குப் போயிட்டு வரேன்னு சொல்றே?''

''வீட்ல போய் குளிச்சிட்டு வந்திடறேனே...''

''என் - நாலு நாளா இங்கேதானே குளிச்சே?''

''மார்னிங்ல இருந்து அவுட் ஆஃப் டோர். அதான்- வீட்ல போய் நல்லா குளிச்சிட்டு வந்திடறேனே... என்னமோ - இங்கே இருக்கிற பாத்ரும்ல குளிச்சா - குளிச்ச மாதிரியே இல்லை... அதான் இன்னிக்கி வீட்டுக்குப் போயிட்டு வந்திடலாம்னு பாக்கறேன்...''

''சரி போயிட்டு சீக்கிரமா வா. நீ வந்ததும் நான் கலாக்ஷேத்ரா வரைக்கும் போக வேண்டியிருக்கு.''

''சரியா ஒன் அவர்ல வந்திருவேன்...''

''போறப்ப காருக்கு பெட்ரோல் போட்டுக்க.''

''நீங்க தூக்கம் வந்தா தூங்குங்க. இல்லேன்னா நந்தாகூடப் பேசிட்டு இருங்க... நான் ஒன் அவர்ல வந்திடறேன்.''

''ரெண்டு மணி நேரம் கழிச்சிக்கூட வா! எனக்கெந்த ஆட்சேபணையும் கிடையாது!''- என்றான் சந்துரு ஷேவ் செய்யப்படாத கன்னத்தைத் தடவியவாறே.

பாத்திரங்களையும் சில துணிகளையும் சேகரித்துக் கொண்டு அமுதா அறையை விட்டு வெளியேறினாள்.

''நீங்க தூக்கம் வந்தா தூங்குங்க அத்தான்!''

''தூக்கமெல்லாம் வரலைம்மா... சும்மா சும்மா தூங்கி போரடிச்சுப் போச்சி... எப்படா ஆபிஸ்க்கு போவோம்னு இருக்கு...''

''நேத்திக்கு ஈவினிங் உங்க ஃப்ரண்ட் சுஜா உங்களைப் பாக்கறதுக்கு வந்திருந்தாங்க போலிருக்கே?'' -நந்தா கேட்டாள்.



''உனக்கு யார் சொன்னா?''

''நேத்திக்கி நான் வீணைக்ளாசுக்கு போயிட்டு இருந்தப்ப வழியில பார்த்தேன். அப்பத்தான் சொன்னாங்க... நீங்க சரியாவே முகம் கொடுத்துப் பேசலையாம். ரொம்ப வருத்தப்பட்டு சொன்னாங்க...''

''வேற என்ன சொன்னா?''

''இன்னிக்கி பாம்பே போறதா வேற சொன்னாங்க... அவங்களோட பாலா ஜூன்ல வராராம். வந்ததும் மேரேஜாம்... கண்டிப்பா என்னை வரணும்னு நேத்திக்கே சொல்லிட்டாங்க...''

''அப்ப என் சார்பாவும் நீயே போயிட்டு வந்திடு—''

''உங்களுக்கு அவங்க மேல என்ன கோவம்?''

''பெரிசா கோபம் ஒண்ணும் கிடையாது. எரிச்சல் தான்! மனுஷங்க ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு மாதிரி தான் இருப்பான்! எல்லாம் மகாத்மா காந்தி கிடையாது! அதைப் புரிஞ்சுக்க மாட்டேன்கிறா. எல்லாரும் அவளை மாதிரியே இருக்கணும்னு நெனைக்கிறா! நடக்கிற காரியமா அது...!''

—தொடர்ந்து இன்னும் பேசப் போகிற நிலைக்கு மனத்துள் உயர்ந்த சந்துரு சட்டென்று மௌனமாகி விட்டான். சில நிமிடங்கள் கழித்துச் சொன்னான்:

''ஸாரி நந்தா! சுஜா பத்திப் பேசினாலே எனக்கு மூட் அவுட் ஆகிற மாதிரி இருக்கு... ப்ளீஸ், வேற ஏதாவது பேசலாம்...''

''உங்களுக்கு ரெண்டு கேஸெட் எடுத்திட்டு வந்தேன் அத்தான்!''

''என்ன கேஸட்ம்மா?''

''ஒண்ணு டி.வி. கோபாலகிருஷ்ணன். இன்னொன்னு மகாராஜபுரம் சந்தானம்...''

''கேஸெட் கேக்கறதுக்கும் மூட் இல்லை நந்தா!''

''மூடு இருக்கும்போது கேளுங்க...''

சந்துரு பதில் சொல்லாமல் அவளையே பார்த்தான். பல நாட்களாக அவன் எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் இன்று கிடைத்திருக்கிற மாதிரித் தெரிந்தது. தேவையற்ற பழைய நினைவுகளை கண்களில் பிரதிபலித்துக் காட்டுகிற மெலிதான வன்மத்துடன் முயற்சி செய்து லேசாக சிரித்துக் கொண்டான்.

''என்னத்தான், நீங்களாவே சிரிச்சுக்கறீங்க?''

சந்துரு நந்தாவின் இந்தக் கேள்வியை அந்த விநாடியே பற்றிக் கொண்டான்.

''ஒண்ணுல்ல; நீ காலேஜ்ல படிச்சிட்டு இருந்தப்ப டெய்லி உன்னைப் பாக்கிறதுக்காக அந்த 9-20 பஸ்ஸுக்காக மந்தைவெளி பஸ் ஸ்டாண்ட்ல காத்திட்டு இருப்பேனே- அதை நெனச்சிப் பார்த்தேன். சிரிப்பு வந்தது- அதான்...''

சொல்லிவிட்டு நிறுத்தினான். கணப் பொழுதில் மின்சார விநியோகம் நின்றாற் போலிருந்தது. தனித்த ஏரி நீரில் ஏதோ ஓர் வஸ்து சன்னமான ஒலியில் விழுந்தாற் போன்ற கண்களுக்குத் தெரியாத அலை அவர்களைச் சுற்றிலும் பரவியது. ஒருமித்தாற் போல விரிந்து கிடந்த சுத்தமான நீல வானத்தில் அழுக்குத் துண்டம் போல் மேகத் துணுக்கு வந்திருந்தது. வயல்வெளி ஒற்றை கொக்கு என நந்தா மிகத் தனிமையில் சலனமில்லாமல் நின்றாள்.

''அதெல்லாம் உன் ஞாபகத்ல இருக்கா இல்லையா நந்தா?''

என்று சந்துரு கேட்ட கேள்விக்கும் அவளில் அசைவில்லை. ஆனால், உள் மனத்தில் மட்டும் சிறிது எச்சரிக்கையாகிக் கொண்டாள்.



''எனக்கென்னமோ, அதையெல்லாம் மறக்கவே முடியலை நந்தா. அடிக்கடி மனசுக்குள் நினைச்சுப் பார்த்துப்பேன். எங்கே நீ கொஞ்சம் முன்னாடியே போயிடுவியோன்னு வீட்டை விட்டு எட்டே முக்காலுக்கெல்லாம் கிளம்பி பஸ் ஸ்டாண்டுக்கு வந்திருவேன். ஒவ்வொரு நிமிஷம் போறதும் ஒவ்வொரு யுகம் போறது மாதிரி இருக்கும். என்னிக்காவது ஒரு நாள் நீ வராமல் போயிட்டா அன்னிக்கி பூராவுமே ஒரு மாதிரி டல்லா இருப்பேன். அதே சமயத்ல வேற பசங்க யாராவது உன்னைப் பார்த்தாக்க அந்தப் பசங்க மேல பயங்கரமா கோவம் வரும்.- அதெல்லாம் ஒரு காலம். இல்லே?''

நந்தா பேசாமலேயே தரையைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தாள். இதுவரை கண்டிராத பாதையில் பயணமாகிற புலன்கூர்மை அவளில் பொழிந்து நின்றது. தன் மனவெளியில் அழியாத வானவில்லாகப் பதிந்திருக்கும்- அந்த நந்தாவை எதிரில் நின்ற நந்தாவில் கண்டு கொண்டிருக்கும் பரவசத்துடன் சந்துரு அவளையே சில நிமிடங்கள் மௌனமாக பார்த்துக் கொண்டிருந்தான்.

பின், ''என்ன- ஒண்ணுமே சொல்லமாட்டேன்கிறே?'' என்றான்.

நந்தா பேசாமலேயே நின்றாள்.

''அதெல்லாம் உனக்கு- ஞாபகம் இருக்கா இல்லையா?''

நந்தா தலை குனிந்தவாறே நின்றாள்.

''என்னால அதையெல்லாம் மறக்க முடியலை நந்தா. ஒவ்வொரு நாளும் காலேஜ்க்கு என்ன ஸாரி கட்டிட்டு வந்திருக்கே என்கிறதைக்கூட இப்பவும் என்னால நெனைச்சிப் பார்த்துக்க முடியுது. அப்படின்னா பார்த்துக்க, நான் எவ்வளவு சீரியஸா இருந்

திருப்பேன்னு... ஒரு நாள் நீ காலேஜ்க்கு போகாமே இருந்து, அன்னிக்கி உன்னைப் பார்க்க முடியாமே போச்சுனாக்க- எரிச்சல் எரிச்சலா வரும். உன்னைப் பார்க்க ஆரம்பிச்ச ரொம்பக் கொஞ்ச நாள்லேயே- எனக்கு தெரிஞ்சு போச்சி- எனக்கு உன்கிட்டே காதல் வந்திருச்சின்னு... ஆமா நந்தா! ரொம்ப சீரியஸாவே உன் மேல் எனக்கு அப்ப காதல் வந்தது. நிஜமாவே காதல் வந்தது. என் காதலை உன்கிட்டே எப்படியாவது தெரிவிச்சிடணும்னு ஆசையும் பட்டேன். எந்த வழியில் தெரிவிக்கலாம்னு ப்ளானும் பண்ணினேன். ஆனா, நான் ஒரு நல்ல ப்ளான் பண்ணின அதே சமயத்ல நீ காலேஜுக்கு பஸ்ஸில் போறதை நிறுத்திட்டு கார்ல போக ஆரம்பிச்சிட்டே... அந்த மாற்றத்தை நான் எதிர் பார்க்கவே இல்லை. கார்ல போற பெண்ணை எப்படிப் பார்க்க முடியும், எங்கே போய் அப்ரோச் பண்ண முடியும்... போச்சு. என் காதலை உன்கிட்டே தெரிவிக்க முடியாமலேயே போச்சு. உன்னைப் பார்க்கவும் முடியாம போச்சு. ஆனாலும், உன்னை என்னால் மறக்க முடியாமலே இருந்தது கொஞ்ச நாளைக்கு. வெளி உலகுக்குத் தெரியாத ஒரு அழகான தீவு மாதிரி உன் ஞாபகம் அப்பப்ப எனக்குள் வந்து வந்து போயிட்டு இருந்தது. அப்புறம் நாளாக நாளாக கொஞ்சம் கொஞ்சமா உன் ஞாபகம் வர்றதே மறந்து போயிடுச்சி. ஆனா, திடீர்னு மறுபடியும் மூணு நாலு வருஷம் கழிச்சு அந்தத் தீவு என் கண் முன்னால வந்து நின்னது நந்தா. நான் கனவில்கூட நெனைச்சிப் பார்க்கலை மச்சினி என்கிற உறவில் நீ மறுபடியும் என் வாழ்வில் குறுக்கே வருவேன்னு... உண்மையில் உன்னை அன்னிக்கி என் ஆபிஸ்ல முதல் தடவையா பார்த்ததும் ரொம்ப ரொம்ப த்ரில்லாயிட்டேன். முதல்ல உள்ளுக்குள் பயங்கர சந்தோஷமாத்தான் இருந்தது. ஆனா, அடுத்த நிமிஷமே பயந்தும்



நடுங்கிட்டேன். என்னடா இது. அழகான தீவில்- ஒரு பூதம் இருக்கேன்னு...! என்னால உன் முகத்தைத் தைரியமா நிமிர்ந்து பார்க்க முடியலை. சகஜமா பேச முடியலை. வேர்த்து விருவிருத்துட்டேன். கல்யாண நிச்சயார்த்தத்தையே நிறுத்திடலாமான்னு கூட நெனைச்சேன். உன்னை என் மச்சினியா பார்த்துக் கிட்டே என்னால உங்க வீட்டு மாப்பிள்ளையா வந்து வாழ முடியுமான்னு எனக்கே சந்தேகமாகவும் பயமாகவும் இருந்தது.- இத்தனை வருஷம் கழிச்சு, நான் ஆசைப்பட்ட உன்னைச் சந்திச்சது சந்தோஷம் தான். ஆனா, மச்சினி என்கிற ரிலேஸன்ஷிப்பை என்னால தாங்கவும் முடியலை. அந்தக் கோணத்தில் உன்னை ஃபேஸ் பண்ணவும் முடியலை... ரொம்ப தர்மசங்கடமா போயிடுச்சி எனக்கு.. என்ன பண்றதுன்னு தெரியாமே குழம்பினேன். நீயே போய் உங்க வீட்டில் அமுதாவுக்கு இந்த மாப்பிள்ளை வேண்டாம்னு சொன்னாலும் சொல்லிடுவியோன்னு கூட நான் மனசுக்குள் கொஞ்சம் எதிர்பார்த்தேன். உன் மேல் எனக்கு ஏற்பட்ட காதலைத் தான் அன்னிக்கி நீ தெரிஞ்சுக்க முடியாமே போச்சே தவிர, நான் உன் பின்னாடியே கொஞ்ச நாள் சுத்திச் சுத்தி வந்து சைட் அடிச்சதெல்லாம் உனக்குத் தெரியாத விஷயம் கிடையாது. தன்னை ஒருத்தன் அத்தனை சீரியஸா சைட் அடிச்சிட்டு, அவனே இன்னிக்கி வந்து தன்னோட அக்காவைக் கல்யாணம் பண்ணிக்கப் போறதை எந்தப் பெண் தாங்குவாள்? ஆனா, நீ கொஞ்சம் கூட என் பழசையெல்லாம் பாதர் பண்ணிக்கவே இல்லை. ரொம்ப ரொம்ப ஆச்சர்யமான விஷயம் இது. அந்த ஆச்சர்யத்தை என்னால் தாங்கவே முடியலைம்மா. ஸிம்பளி ஐ ஃபெல் இன் லவ் வித் யூ- அகேய்ன்... சொல்லு நந்தா! ப்ளீஸ் டெல் மி. ஏன் நீ என்னோட பழசையெல்லாம் கடுகளவு கூட பொருட் படுத்தலை? எப்படி- உன்னால கொஞ்சம் கூட

காம்ப்ளெக்ஸ் இல்லாமே பேசிப் பழக முடிஞ்சது? என்னால முடியலைம்மா. நெஜமாவே முடியலை. வெளிக்கு நான் உன்கூட ரொம்ப சகஜமா பேசிட்டு இருக்கிற மாதிரி நடிக்கத்தான் செய்தேனே தவிர- உள்ளுக்குள் நான் என்னோட அந்தக் காதல் தீவுக்குள்ளே தான் நீந்திக்கிட்டு இருந்தேன்... ஓடி வந்து என்னால் கரையேறவும் முடியலை! அப்படியே நீஞ்ச முடியாமே மூழ்கிப் போயிடவும் முடியலை! சுருக்கமா சொன்னா- என் நிலைமை இருதலைக் கொள்ளி எறும்பு போல ஆயிடுச்சும்மா நந்தா. ஏன் எனக்குள் மட்டும் இந்தக் குழப்பம்? ஏன் இந்தக் கல்மிஷம்? ஏன் உனக்குள் இந்தக் குழப்பம் எதுவும் இல்லை? எப்படி நீ மட்டும் கல்மிஷம் இல்லாமே இவ்வளவு இயல்பா இருக்கே ..? சொல்லுவியா- மனம் திறந்து? ப்ளீஸ் நந்தா! ஏன் நீ என்னுடைய கடந்த காலத்தைப் பொருட் படுத்தலை என்கிறதை என்கிட்டே இன்னிக்காவது சொல்ல மாட்டியா? ப்ளீஸ் நந்தா! ப்ளீஸ்...''

வெகு நேரத்திற்கு அசைவற்று நின்று கொண்டிருந்த நந்தா சந்துருவை துளித் துளியாக ஏறிட்டுப் பார்த்தாள். இமைகளை ஒரு முறை தீர்க்கமாக மூடித் திறந்தாள். சந்துருவிற்கு பதில் சொல்லப் போகிற தயார் நிலை அவளின் நெஞ்சுக் கூட்டின் பாவனையில் தோற்ற மளித்தது.

## 22

நந்தா சொன்னாள்:

''நான் காலேஜ்ல படிச்சிட்டு இருந்தப்ப கார் இல்லாமே பஸ்ல போயிட்டு இருந்தப்ப நீங்க என்னைப் பார்க்கிறதுக்காக பஸ் ஸ்டாண்ட்ல காத்திட்டு இருந்தது, என்னையே சுத்திச் சுத்தி வந்தது எல்லாமே இன்னிக்கும் என் ஞாபகத்ல இருக்கத்தான் செய்யுது. இல்லேன்னு



சொல்லலை நான். ஆனா - ஐயோ! இவரா நம் அக்காவைக் கட்டிக்கப் போறார்னு உங்களை முதல் முதலா உங்க ஆபீஸ்ல வந்து பார்த்தப்போ நினைச்சி அதுக்காகவும் நான் பயந்திடவும் இல்லை. முன்னமே உங்களை எனக்குத் தெரியும்னு உடனே வீட்ல போய் யார்கிட்டேயும் சொல்லிடவும் இல்லை. ஏன்னாக்க, என்னிக்கோ ஒரு சமயத்ல என்னை நீங்க சுத்திச் சுத்திச் வந்ததையெல்லாம் நான் ரொம்பசீரியஸா எடுத்துக்கலை! எதனாலேன்னு கேட்டீங்கன்னா, எனக்காக பஸ் ஸ்டாண்ட்ல காத்திட்டு இருந்தது நீங்க மட்டுமில்லை! இன்னும் எத்தனை எத்தனையோ பாய்ஸ் என்னைப் பார்த்து என்னையே சுத்திச் சுத்தி வந்திருக்காங்க! அவங்களையும் நான் சீரியஸா எடுத்திட்டது கிடையாது. ஏன்னாக்க, அதெல்லாம் ஒரு 'இளம்வயசோட இயல்பான பகுதின்னு நெனைச்சி எல்லோரையுமே நான் இக்னோர் பண்ணிட்டேன்...''

''என்னையுமா இக்னோர் பண்ணினே?...'' சந்துரு மிகவும் ஆற்றாமையுடன் கேட்டான்-குறுக்கிட்டு.

''யெஸ்.''- நந்தா தாட்சண்யம் இல்லாமல் சொன் னாள்.

''அதாவது என்னையும் மற்ற பசங்க மாதிரி-ஜஸ்ட், உன்னை ஒரு சைட் அடிக்கிற விடலைப் பையன் என்கிற ரீதியில் தான் இக்னோர் பண்ணினே. இல்லையா?''

''யெஸ்.''-நந்தா கண்களை மூடிக்கொண்டு சொன் னாள்.

''ஆனா, நான் உன்னை ஜஸ்ட் - ஒரு விடலைப் பையனாட்டம் வெறுமே சைட் அடிக்கலையே...''

"அது உங்களைப் பொறுத்த விஷயமா இருக்கலாம்..."

"ரியல்லி ஐ ஃபெல் இன் லவ் வித் யூ நந்தா..."

நந்தா பேசாமல் இருந்தாள்.

"என் காதலை உன்கிட்டே எப்படியாவது தெரிவிச்சிடணும்னு துடிச்சிருக்கேன் நந்தா. நேரிலேயே ஒருநாள் சொல்லிடலாமான்னு யோசிச்சிருக்கேன். இல்லே—லெட்டர் மூலமா தெரிவிக்கலாமான்னு குழம்பியிருக்கேன்... எப்படி, எங்கே, எப்போ - காதலைத் தெரிவிக்கலாம் என்கிறதை நான் முடிவு பண்றதுக்குள்ளே—சட்டுனு நீ பஸ்ல வரதை நிறுத்திட்டே... அத்தோட போச்சி! உன்னைப் பார்க்கிறதுக்கே எனக்கு சான்ஸ் கிடைக்காமே போச்சி. ஸோ, என் காதலை உன்கிட்டே தெரிவிக்கத்தான் முடியாமே போச்சே தவிர-உன்மேல் நான் சீரியஸா காதல் வயப்பட்டேன் என்கிறது மட்டும் நிஜம். இதுக்கு என்ன சொல்றே...?"

"சொன்னதையே தான் சொல்றேன். வெறுமே என்னை நீங்க சைட்தான் அடிச்சிருந்தாலும் சரி, இல்லே-சீரியஸா காதலிச்சிருந்தாலும் சரி, ரெண்டுமே நீங்க மட்டுமே சம்பந்தப்பட்ட விஷயம் மட்டும்தான்! உங்களோட விஷயத்துக்கு நீங்கதான் பொறுப்பே தவிர நான் கிடையாது எந்த விதத்திலும்."

"உன்னை நான் பொறுப்பேத்துக்கச் சொல்லலைம்மா! நான் உன்னை ரொம்ப சீரியஸா லவ் பண்ணினேன்னு சொல்ல வரேன்..."

நந்தா சந்துருவை துளிக் கூட கண்டு விடாமல் வேறெங்கோ வெறித்துப் பார்த்தபடி நின்றாள். அவளின் முகம் லேசாக சிவந்திருந்தது.



"...ஆனா, என்னை நீ முதல் முதலா ஆபீஸ்ல வந்து பார்க்க வந்த அன்னிக்கி-என்னைப் பார்த்ததும் ஒரு நிமிஷம் கொஞ்சம் அதிர்ந்துபோய் நின்னுட்டியே...?"

"ஸாரி, அதை அதிர்ச்சின்னு சொல்ல முடியாது. அட, இவரைப் பார்த்திருக்கிறோமே என்கிற மாதிரியான ஒரு ஆச்சர்யம்தான் அது..."

"நம்பச் சொல்றியா என்னை?"

"அதிர்ந்து போயிருந்தாக்க - உடனே வீட்ல, அட்லீஸ்ட் எங்க அக்காகிட்டேயாவது போய் சொல்லியிருப்பேனே. இதிலிருந்தே தெரிஞ்சுக்கோங்க - நான் அதிர்ச்சி அடையலை என்கிறதை...!"

"அப்படி இல்லையே. ஜஸ்ட் இவரை இதற்கு முன்னாடி அடிக்கடி பஸ்ல பார்த்திருக்கேன்னு- ஒரு இன்ஃபர்மேஸன் என்கிற அளவிலாவது அமுதாகிட்டே மட்டுமாவது நீ சொல்லியிருக்கலாமே...நான் சொல்றேன்-மனசுக்குள் நீ சீரியஸா நெனைச்சதாலேதான் உங்க அக்காகிட்டே கூட இந்த விஷயத்தைச் சொல்லலை...!"

நந்தா கொஞ்சம் கடுமையான தொனியில் பதில் சொன்னாள்.

"நோ. யூ ஆர் ராங். சத்தியமாவே உங்களை நான் சீரியஸா அப்பவும் எடுத்துக்கலை. ஆனா, உங்களை முன்னாடியே அடிக்கடி பார்த்திருக்கேன்னு எங்க அமுதக்காகிட்டே மட்டும் சொல்லியிருந்தேன்னு வச்சுக்கோங்களேன்- உடனே அதை எங்க அக்கா ரொம்ப சீரியஸா எடுத்திட்டிருப்பா! எங்கே பார்த்தேன், எப்படி பார்த்தேன்னு என்னை குடைஞ்சு குடைஞ்சு கேட்டுத் துளைச்சிருப்பா. சொல்ல முடியாது. எதையாவது கற்பனை பண்ணிச் சந்தேகமே பட்டாலும் பட்டிருப்பா. எங்க அக்காவைப் பத்தி எனக்குத் தெரியும். ஸோ, அவகிட்டே ஒரு நியூஸ் என்கிற மாதிரி கூட நான்

சொல்லாமே விட்டதுக்குக் காரணம்-அக்காதான். என் வாழ்க்கையில் எங்க அமுதாக்கா ரொம்பவும் முக்கிய மானவ. நானே சீரியஸா எடுத்துக்காத ஒரு விஷயத்தைப் போய் விளையாட்டாக் கூடச் சொல்லி அவ மனசை கலங்க வைக்கிறதுக்கு நான் தயார் கிடையாது. ஷி இஸ் மை விட்டில் மதர். இந்த உணர்வு என்னுடையது மட்டும் இல்லை. ஒரு நல்ல அக்கா கிடைச்சிருக்கிற எல்லா பெண்களுக்குமே இருக்கிற பொதுவான உணர்வு இது. அதுமட்டுமில்லை, அம்மாகிட்டே கூட இண்டிமேஸி ஒரு அளவுக்குத்தான் பெண்களுக்கு இருக்கும். ஆனா— அக்காகிட்டே இருக்கிற அந்நியோந்நியம் இருக்கே- அதுக்கு ஈடு இணையே கிடையாது. அந்த அந்நியோந் நியத்தை கெடுக்கறதுக்கும் நான் தயாரில்லை... அதனாலேதான், நானே இக்னோர் பண்ணிட்ட விஷயத் தைப் போய் சீரியஸா அவகிட்டே சொல்லாமே விட்டது...''

''இங்கேதான் நந்தா— ஒரு முக்கியமான லாஜிக் உதைக்குது!'' என்றான் சந்துரு

பேச விரும்பாத பொருளைப் பேசிக் கொண்டிருக்கிற அமைதியின்மை நந்தாவின் கண்களில் தோன்றி யிருந்தது.

''உனக்கு உன் அக்காவோட மனசை கலங்க வைக் கிறதுக்கு இஷ்டம் கிடையாதுன்னு சொல்றே. அமுதா தான் உன்னோட லிட்டில் மதர்னு சொல்றே...அந்த லிட்டில் மதரைக் கல்யாணம் செய்துக்கப் போறவன் ஒரு காலத்துல உன்னை சைட் அடிச்சவன் என்பது கொஞ்சம் மோசமான விஷயம் இல்லையா?''

''எங்க அக்காவுக்கு அது கொஞ்சம் கஷ்டமான விஷயம்தான். ஆனா எனக்கு அந்தக் கஷ்டம் கிடையாது.''



''இது உன் அக்காவோட கல்யாணம்தான்! உன்னோடது இல்லை.'' - சந்துரு ஆக்ரோஷத்துடன் சொன்னான்.

''அதுக்குக் காரணம் இருக்கு. அமுதக்காவுக்கு கல்யாணத்துக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சு மூணு வருஷம் கழிச்சுத்தான் உங்களோட சம்பந்தம் உறுதி ஆச்சு. அதுக்கு முன்னாடி எத்தனையோ வரன்கள் வந்து வந்து— ஒண்ணும் சரியா வரலை. அப்பாவுக்கு ஆண் பிள்ளைகள் இல்லாமே போயிட்டதால — வீட்டோட மாப்பிள்ளையா இருக்கச் சம்மதிக்கிற வரன்களாத்தான் தேடினார், அதுக்காக நிறைய படிக்காத, நல்ல உத்யோகத்தில் இல்லாத வரன்களையும் அவரால் ஏத்துக்க முடியலை. கடைசியில், நீங்கதான் எல்லா விஷயத்திலேயும் அப்பாவுக்கு பிடித்த மாதிரி இருந்தீங்க. எங்க அக்காவுக்கும் உங்களைப் பிடிச்சுப் போய், உடனே நிச்சயதார்த்தத்துக்கு நாள் குறிச்சிட்டாங்க... எல்லாருக்கும், எல்லா விதத்திலும் பரிபூர்ண திருப்தி தந்திருக்கிற உங்களை — என்னிக்கோ என்னை நீங்க சைட் அடிச்சிருக்கீங்க என்கிற ஒரே காரணத்துக்காக மிஸ் பண்றதுக்கு என் மனசாட்சி இடம் தரலை. அதனாலேயும்தான் முதல்லேயே சொன்ன மாதிரி—இப்ப வும் உங்களோட பழசை நான் இக்னோர் பண்ணினது... ஐ கன்சிடர்—யுவர் பாஸ்ட் ஆக்ட் இஸ் நாட் ஏ ஸின்...''

''எனக்கும் அது தெரியும். இட் இஸ் நாட் ஸின். இட் இஸ் லவ்...''

நந்தா இறுக்கத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

''அதுமட்டும் இல்லை. இன்னிக்கும் எனக்குள்ளே அந்தக் காதல் செத்துப் போயிடாமே உயிரோட இருக்கு ஸ்டில்— ஐ லவ் யூ நந்தா. ஐ லவ் யூ வெரிமச்...''

நந்தா வேதனையுடன் கண்களை மூடிக்கொண்டு சொன்னாள்:

''ஸாரி! ஐ திங்க் — திஸ் இஸ் ஸின்!''

இதைக் கேட்டதும் சந்துருவிற்குள் கோபம் பளீரென பொங்கியது. மிக ஓங்கிய குரலில் சொன்னான்:

''பாவம் கிடையாது. பாவம் கிடையாது. எப்படிச் சொல்றே — பாவம்னு! ஐ நோ — ஐ'ம் நாட் ஏ ஸின்னர். எனக்குத் தெரியும் — நான் பாவி கிடையாது. நான் ஒண்ணும் — எந்தத் தப்பான ஆசைக்கும் உன்கிட்டே கையேந்தி நிற்கலை. அதே மாதிரி அமுதாவுக்கு எந்த விதத்திலேயும் துரோகம் செய்யறதாகவும் நினைக்கலை நான். அவளையும் நான் நேசிக்கத்தான் செய்றேன். ஐ லவ் ஹர் வெரிமச். அதே சமயத்ல உன்னையும் என் மனசார விரும்பறேன். நீயும் எனக்கு வேண்டியிருக்கே நந்தா. நெஜமாவே உன்னோட காதலும் எனக்கு வேண்டியிருக்கு.''

''ஸாரி அத்தான்! போக முடியாத தீவுக்கு வழி கேக்கறிங்க நீங்க...'' நந்தா விசனத்துடன் கூறினாள்.

''ஏன், மனைவி இருக்கும்போதே இன்னொருத்தியையும் காதலிக்கிற கல்யாணம் செய்துக்கற ஆண்கள் இல்லையா நந்தா?''

''அதுக்காக நீங்களும் அந்த மாதிரி ஆண்கள்ள ஒருத்தரா இருக்கணுமா?''

''ஏன், இருக்கக்கூடாதா?''

''அதுதான் உங்க விருப்பம்னா — தாராளமா இருந்திட்டுப் போங்க. தட் இஸ் யுவர் ஒன் மேட்டர். ஆனா— உங்களோட இந்தப் பாபகரமான விருப்பத்துக்கு நான் சம்மதிக்கவோ உடன்படவோ போறதில்லை. அதை மட்டும் நல்லா ஞாபகத்ல வச்சுக்கோங்க."

''என்னிக்குமே சம்மதிக்கப் போறதில்லையா?'' - சந்துரு நிஜமான துக்கத்துடன்தான் கேட்டான்.



''என்னிக்குமே கிடையாது- நெவர் ஐ ஸே!''-நந்தா மிக உறுதியுடன் சொன்னாள்.

சந்துரு தலை குனிந்துவிட்டான். கண்ணெதிரில் தெரியும் வனப்பான தீவு கைக்கு எட்டாத தூரத்தில் வீற்றிருப்பது தெரிந்தது. மௌனமாக கண்களை மூடியபடி மெதுவாக படுக்கையில் சாய்ந்து கொண்டான். உடலும் மனமும் மிகவும் களைத்திருந்தன. பிடரியில் கைகளைக் கோத்தபடி நந்தாவையே பார்த்தான். நந்தாவும் சஞ்சலம் இல்லாமல் அவனையே பார்த்தாள்.

''நான் ரொம்ப ரொம்ப ஸாப்ட் ஜெண்ட்டில்மேன் நந்தா!''—மிகவும் நெகிழ்ந்த குரலில் சொன்னான் சந்துரு

நந்தா பேசாமலேயே நின்று கொண்டிருந்தாள்.

''ஏதோ எனக்கு மைத்துனியா வந்திருக்கிற பெண் கிட்டே நான் தப்பா நடந்துக்க முயற்சி பண்ற காரியமில்லை இது...''

அப்போதும் நந்தா மௌனமாகவே அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நான் காதல் வயப்பட்ட பெண் எனக்கு அநியாயமா மைத்துனியா வந்திட்டா...! அதுதான் ப்ராப்ளம். ஆல்ரைட். நான் காதல் வயப்பட்டுட்டேன் என்கிறதுக்காக ஒரு பெண் என்னை லவ் பண்ணிடணும் என்கிறது சட்டமாயென்ன?! அதுவும் இல்லாமே எனக்குத்தான் கல்யாணம் வேற ஆயிடுச்சே! இனிமேயென்ன இன்னொரு காதலும் கல்யாணமும்... அதெல்லாம் பயங்கரப் பாவம்! பாவிகளின் செயல்! நெஜமா நானெல்லாம் அந்த மாதிரியான காரியமெல்லாம் செய்யக்கூடாதுதான். என்னவோ திடீர்னு புத்தி மழுங்கிப் போயிருச்சி! எனக்கு! எம். பி. ஏ. படிக்கவும் அறிவில்லாமே போயிருச்சி! ஸாரி மிஸ் நந்தா! ஐ ஃபீல் வெரி ஸாரி ..தெரியாதனமா உங்க மனசை நான் புண்படுத்தியிருந்தாக்க தயவு செஞ்சு

என்னை மன்னிச்சிடுங்க... உங்களுக்கு எற்கனவே என்னை இக்னோர் பண்ணித்தான் நெறைய பழக்கம் இருக்கே...! ஸோ-இன்னிக்கி வரைக்கும் நான் உங்க கிட்டே நடந்திருக்கிற நடத்தை எல்லாத்தையுமே மறு படியும் இக்னோர் பண்ணிடுங்க. இனிமே நான் உங்க ளோட வழிக்கே வரமாட்டேன்...நீங்களும் என்னோட வழிக்கு வராதீங்க...!''

நெஞ்சில் ஆற்றாமை கவிய, உணர்வுகளில் தோல்வி சுழல, அறிவில் வன்மம் பொங்கி எழும்ப, சந்துரு எழுந்து போய் தண்ணீர் குடித்துவிட்டு வந்து நன்றாகப் போர்த்தி படுத்து கண்களை மூடிக்கொண்டான்.

ஆடாமல் அசையாமல் அவனையே கண்டு கொண் டிருந்த நந்தா கீழே அவர்களின் 'கார் வந்து நிற்கும் ஓசையை உணர்ந்து கொண்டாள். சட்டென தனது முகபாவத்தை எளிதாக்கிக் கொண்டாள். அமுதாவை எதிர்நோக்க இலகுவாகத் தயாராகி நின்றாள். கதவைத் தள்ளித் திறந்து கொண்டு அமுதா மிக வேகமாகப் பிரவேசித்தாள்.

''என்னடி இவளே! இவ்வளவு லேட்டா வரே...நான் தான் கலாக்ஷேத்ராவரை போகணும்னு சொன்னேனே...'' எல்லா உணர்வுகளையும் மறைத்துக் கொண்டு நந்தா கேட்டாள்.

''ஸாரி நந்தா. அம்மாகூட பேசிட்டே இருந்தேன். டைம் போனதே தெரியலை. அத்தான் தூங்கறாரா?''

''ஆமா. நல்லா தூங்கறார்!சரி, நான் கிளம்பட்டுமா?''

''கலாக்ஷேத்ராவுக்கா போறே?''

''இல்லை. அதான் நேரமாயிருச்சே. வீட்டுக்குத்தான் போறேன்.''

''சரி நீ கிளம்பு...''



தூங்குவது போல் பாவனை செய்தபடி சந்துரு கண் களை மூடிப் படுத்திருக்க, கதவைத் திறந்து அவசர அவசரமாக வெளியேறிய நந்தாவின் கண்களில் இருந்து அவனையும் மீறி இரண்டொரு கண்ணீர் துளிகள் உதிர்ந்து சிதறி விட்டன...

## 23

அரைமணி நேரத்திற்கும் மேலாக தூங்குவது போலவே பாசாங்கு செய்து கொண்டிருந்த சந்துரு பெரியதாய் சோம்பல் முறித்தபடி எழுந்து உட்கார்ந் தான்.

''என்ன அத்தான்; நல்ல தூக்கமா?'' — அமுதா கேட்டாள்.

''மணி என்னம்மா?''

''பதினொண்ணு''

'நந்தா எங்கே?''

''அவ போயாச்சி-அப்பவே...''

''என்னிக்கி அமுதா டிஸ்ஜார்ஜ் பண்ணுவாங்களாம், ஃபீவர்தான் விட்ருச்சே...?''

''ஜுரம் விட்டாயென்ன, வந்தது டைபாய்ட் டாச்சே... ரெண்டு நாள் அப்சர்வ் பண்ணிட்டுத்தான் டிஸ்சார்ஜ் பண்ணுவாங்க...''

''போரடிக்குது... எப்படா வீட்டுக்குப் போவோம்னு இருக்கு.''

"ஆரஞ்சு ஜூஸ் தரட்டுமா - சாப்பிடறீங்களா?"

"தா..."

பெரிய கண்ணாடி டம்ளர் நிறைய அமுதா ஆரஞ்சுச் சாறு தந்ததை துளித் துளியாக உறிந்து குடித்தான். நந்தாவுடன் சிறிது நேரம் முன்பு நடந்தவை மறு காட்சியாக அவனுடைய மனத்துள் ஓடிக் கொண்டிருந்தது. சந்துருவிற்கு வருத்தம் எதுவும் இல்லை; ஏமாற்றமாக இருந்தது... எத்தனை பெரிய கல்விச் சிறப்புகள் பெற்றவன் அவன்! அதற்காகவாவது, ஓர் கௌரவ அங்கீகாரமாகவேனும் அவனின் காதலை நந்தா அங்கீகரித்திருக்கலாமே... காதலை அங்கீகரிக்கையிலேயே கூடவா கற்பு போய் விடப் போகிறது...! நாட்டில் கௌரவ டாக்டர்கள் இருக்கிறார்கள். கௌரவ ஆசிரியர்கள், இருக்கிறார்கள்... அதுமாதிரி, கௌரவ காதலனாக ஒரு மனிதன் சும்மா ஒரு கௌரவத்திற்காக பாவம், இருந்து விட்டுப் போகிறான்...! அவனென்ன- நந்தாவை கையைப் பிடித்தா இழுத்தான்?!

சந்துரு காலி டம்ளரை அமுதாவிடம் நீட்டினான். ஓர் யோசனையுடன் அவளையே நோக்கினான்.

"என்னங்க?"- குறிப்புணர்ந்து அமுதா கேட்டாள்.

"நான் ஒண்ணு சொல்றேன்; அதிர்ச்சி அடைஞ்சிட மாட்டியே..." சந்துரு பீடிகையோடு கேட்டான். அவன் அப்படிக் கேட்டதுமே அமுதா அதிர்ச்சியுடன் கணவனைப் பார்த்தாள்.

"எனக்கு நாலைஞ்சு நாளாவே மனசு சரியில்லை அமுதா.. என்னோட வாழ்க்கையில ஏதோ- சம்திங் ராங்னு தோணுது. பார்- எவ்வளவோ சந்தோஷமா ஆடம்பரமா நடந்திருக்க வேண்டிய நம்ம கல்யாணம் அட்ரஸ் இல்லாமே நடக்க வேண்டியதா ஆயிடுச்சி. வரவேற்பும் கிடையாது. ஒண்ணும் கிடையாது. எங்க



வீட்ல இருந்து ஏதோ கடமைக்கு ரெண்டு மூணு பேர் வந்தாங்களே தவிர- யாரோட முகத்திலும் சந்தோஷம் கிடையாது. நாமாவது ஹனிமூன் போனோமான்னு கேட்டா அதுவும் கிடையாது இன்னும் எங்கப்பா ஆஸ்பிட்டல்லதான் இருக்கார். ஒரு கை கால் விளங்காமே போயிடுச்சி. எங்கப்பா ஒண்ணும் உத்தம உதாரண புருஷன் இல்லைதான். ஆனாலும், இத்தனை வருஷத்ல வேற எந்த விஷயத்லேயும் எதுக்காகவும் அவரை நான் எதிர்த்து ஒரு வார்த்தைகூடப் பேசினது கிடையாது. அவமரியாதையா பேசி அவரோட மனசைப் புண்படுத்தினதே கிடையாது. ஆனா அன்னிக்கி உங்கப்பா கிட்டே ஒரு லட்ச ரூபாய் கேட்டார் என்கிறதுக்காக எவ்வளவு மோசமா அவர் கிட்டே நடந்துக்கிட்டேன். அவர்தான் அவ்வளவு மோசமா நடந்துக்கிட்டார்னா நானுமா அவரை மாதிரியே அப்படி கேவலமாவா நடந்துக்கணும்... அவர் ஒண்ணும் வரதட்சணை மாதிரி கேட்கலையே லட்ச ரூபாயை... என் ஸேலரியில் இருந்து ஒரு அட்வான்ஸ் மாதிரிதானே கேட்டார்... அதுவும் எங்க வீட்டை ரிப்பேர் பண்றதுக்குத்தானே கேட்டார். அதுக்குப் போய் நான் ஏன் அவ்வளவு மோசமா ரீயாக்ட் பண்ணி அவரோட ஹெல்த்தையே அஃபெக்ட் பண்ணணும்... நெஜமா எனக்கு இப்ப அப்படித்தான் தோணுது அமுதா- நான் அப்படி நடந்துக்கிட்டதாலேதான் அவருக்கு ப்ளட் ப்ரஷர் பயங்கரமாகி ஆஸ்பிட்டல்ல அட்மிட் ஆகி, அடுத்தடுத்து என்னென்னவோ காம்ப்ளிகேஷன்ஸ் எல்லாம் ஆகி, எக்கச்சக்கமான பணம் செலவாகி, வீட்ல எல்லாரோட நிம்மதியும் வேற போய் இந்த லட்சணத்ல நான் மட்டும் கொஞ்சம்கூட விவஸ்தையே இல்லாமே ஜாலியா கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு, அதுக்கும் மேலே வீட்டோட மாப்பிள்ளையா வேற உங்க வீட்ல வந்து வெட்கமில்லாமே உட்கார்ந்துக்கிட்டு வேளா வேளைக்கு

ஹார்லிக்ஸூம் ஆப்பிள் ஜூஸூம் குடிச்சுக்கிட்டு இருக்கறதை நெனைச்சாலே என்னவோ போல இருக்கு! என் மனசாட்சியே என்னை வாட்டி வதைக்குது அமுதா. பேசாமே உன்னையும் அழைச்சுக்கிட்டு எங்க வீட்டுக்கே போயிடலாம்னு இருக்கு! என்னா, இனிமே எங்க அப்பாவால் எந்த அழிச்சாட்டியமும் பண்றதுக்கெல்லாம் வழி கிடையாது. அவரோட சேப்டர் அவ்வளவுதான். இருக்கிற வரைக்கும் கை கால் விளங்காமே இப்படியே பெட்லேயே கிடக்கிறதைத் தவிர இனிமே அவருக்கு-நோ லைப்ஃப். அதனால பழசையெல்லாம் மறந்திட்டு-பேசாமே நாம ரெண்டு பேரும எங்க வீட்டுக்கே போயிடலாம்னு நெனைக்கிறேன். என்ன சொல்றே...?''

-சந்துரு மிக மிகச் • சாதுரியமாக பழிவாங்கும் வ்யூகத்திற்கான தளத்தை ஏற்படுத்துவதற்கான அஸ்திவாரத்தை அமுதாவின் எதிரில் ஆரம்பித்து விட்டிருந்தான். அந்த ஆரம்பத்தில் அமுதாவின் வேறொரு அஸ்திவாரம் பலமாக ஒரு முறை அதிர்ந்து குலுங்கியது. அந்த மனக் குலுங்கலுடன் கணவனை ஏறிட்டுப்பார்த்து விழித்தாள்.

''என்ன- ஒண்ணுமே சொல்லமாட்டேன்கிறே?''

அமுதா மௌனமாகவே நின்றாள். அந்த அதிர்ச்சியில் இருந்து அவளால் விடுபடவே முடியவில்லை.

''எங்க வீட்டுக்கு வர பயமாயிருக்கா உனக்கு?''

இதற்கும் அமுதா பதில் சொல்லவில்லை,

''வாயைத் திறந்து சொல்லேன். சும்மா கல் மாதிரி நின்னுட்டு இருந்தா என்ன அர்த்தம்?''

''இதை நீங்க எங்க அப்பா கிட்டேதான் பேசணும்.'' -திக்கித் திணறியபடி சொன்னாள்.

''எனக்குப் பெண்டாட்டி நீதான். உங்கப்பா இல்லை...'' கடுமையான தொனியில் சொன்னான்.



''எந்த வீட்ல வாழ்றது என்கிறதை முடிவு செய்ய வேண்டியது நான்தான். உங்கப்பா கிடையாது''

''இல்லையே. வீட்டோட மாப்பிள்ளையா இருக்கச் சம்மதிச்சித்தானே என்னைக் கல்யாணம் பண்ணிக்கவே சரி சொன்னீங்க?'' அமுதா-மெல்லிய குரலில் கேட்டாள்.

''அப்ப சொன்னேன். இப்ப வேணாம்னு தோணுது. கல்யாணத்துக்கு முன்னாடி மேரேஜ் ரிஸப்ஷன் ஈவினிங் ஏழு மணிக்குன்னுதான் இன்விடேஸன்லேயே ப்ரிண்ட் பண்ணியிருந்தோம். ப்ரிண்ட் பண்ணினபடி ரிஸப்ஷன் வச்சோமா? கிடையாதே!''

''திடீர்னு உங்கப்பா உடல்நிலை ரொம்ப சீரியஸா ஆயிட்டதாலே- ரிஸப்ஷனெல்லாம் வேண்டாம்னு நீங்க தான் சொன்னீங்க...''

''இப்பவும் அதையேதான் காரணம் சொல்றேன். எங்கப்பா பக்கவாதம் வந்து படுத்த படுக்கை ஆயிட்டார். இந்த நிலைமையிலே நான் வீட்டோட மாப்பிள்ளையா உங்க வீட்ல வந்து இருக்கறதுக்கு விரும்பலை! அப்படி இருக்கிறது தர்மமும் இல்லை!''

சந்துரு மிகவும் எதிர்பாராமல் வாழ்க்கையை கடுமையாக்குவதை அமுதா திகைப்புடன் உணர்ந்தாள். திடீரென்று இவனின் மாற்றத்திற்கான காரணத்தையும் அவளால் இனம் காணமுடியவில்லை. எதுவும் சொல்ல முடியாமல் அவனையே பார்த்தாள்.

''என்ன, முழிச்சி முழிச்சிப் பார்க்கிறே .. என்னடா திடீர்னு இப்படிப் பேச ஆரம்பிச்சிட்டானேன்னு யோசிக்கிறியா? என் மனசாட்சியை என்னாலேயே தாங்க முடியலை அமுதா... பார், எங்கப்பாவை அவமதிச்ச பாவத்துக்குத்தான் நம்மால ஹனிமூன் கூட போக முடியலை... அதுமட்டுமா, நல்லா இருந்த எனக்குப் போய் திடீர்னு டைபாயிட்...! என்னோட உயிருக்

குயிரான ஃப்ரண்டா இருந்த சுஜாவும் என்கூட சண்டை போட்டுக்கிட்டு பம்பாயிக்குப் போயிட்டா...! நானும் எத்தனைதான் தாங்குவேன் சொல்லு...! அதனாலதான் பாக்கறேன் - எங்க வீட்டுக்கே போயிடலாம்னு... அப்படிப் போயிடறதுதான் எங்க அப்பாவுக்கு நான் செஞ்ச பாவத்துக்கு பிராயசித்தமும் கூட...!"

பேசி முடித்த களைப்பு ஆட்கொள்ள சந்துரு மறுபடியும் கண்களை மூடி படுக்கையில்நீட்டி நிமிர்ந்துபடுத்துக் கொண்டான். நந்தாவுடன் நடந்த உரையாடல் போரில் தாழ்ந்து போய் விட்டிருந்த அவனின் தராசை சமநிலைப் படுத்த முனைந்திருப்பதின் திடீர் கோணம் அவனுக்கே மிகவும் திருப்தியாக இருந்தது. சந்துருவிற்கு நந்தாவின் காதல் கிடைத்துத்தான் ஆக வேண்டும் என்ற காட்டு எரிதலெல்லாம் கிடையாது, ஏதோ ஒரு அவனின் அகங்காரத்திற்கு அவனுடைய காதலை நந்தா அங்கீகரித்தல் தேவைகொண்டிருக்கிறது. அந்த அந்தஸ்து அவனுக்கு வேண்டியிருக்கிறது! —அந்த அந்தஸ்து கிட்டாத மனது வேறொரு கோணத்தில் தன் அகந்தையை படமெடுத்துக் காட்டுகிறது. அமுதாவிற்கும்கூட திடீரென தலை தூக்கிய ஒரு பாம்பின் படத்தைப் பார்க்க நேரிட்டாற் போல்தான் இருந்தது.

வீட்டோடு மாப்பிள்ளையாக வாழ முழுமையாக சம்மதித்து வந்தவன் ஏதோவொரு காரணத்தைக் காட்டி ஒப்பந்தத்தை முறிக்கிறான். ஒரு வகையில் இது துரோகம். மோசடி கணவன் என்பதற்காக இவனின் துரோகத்தை கேள்வி கேட்கக் கூடாது. இவனின் மோசடியை மோசடியென்று சுட்டிக்காட்டி விடக்கூடாது இவன் எங்கே வாழக் கூப்பிட்டாலும் மறுக்காமல் பின் போக வேண்டும் ராமன் இருக்கும் இடம்தான் அயோத்தி காலம் காலமாக வரைந்து வார்ப்புகளாக வார்த்து வைத்து விட்டார்கள்...



என்ன சொல்வதென்றே விளங்காமல் அமுதா திகைத்துப் போய் நின்றபோது அறைக்கதவு தட்டப் பட்டது. அமுதா போய் கதவைத் திறந்தாள். மருத்துவ மனையைச் சேர்ந்த ஒரு பணிப்பெண் நின்றுகொண்டிருந் தாள்.

"அமுதா என்கிறது நீங்களா மேடம்?"- அந்தப் பெண் கேட்டாள்.

"யெஸ்."

"உங்க வீட்ல இருந்து உங்களுக்கு ஒரு போன் வந்திருக்கு."

"இதோ வரேன்..."

என்னமோ ஏதோவென்ற பயத்துடன் அமுதா டெலிபோன் இருக்கும் இடத்திற்கு விரைந்து போனாள்.

"ஹலோ..."

"அமுதாவா... நான் அம்மா பேசறேன்."

"என்னம்மா...?"

"நம்ம நந்தா அங்கே ஆஸ்பத்ரிக்கு வந்துட்டு வேற எங்கேயும் போனாளா?"

"கலாக்ஷேத்ரா போகணும்னு முதல்ல சொன்னா. ஆனா, நான் திரும்பி வர்றதுக்கு லேட்டாகி விட்டதாலே நேரா வீட்டுக்குத்தான் போகப்போறதா சொல்லிட்டுக் கிளம்பிப் போனா... ஏன்?"

"என்னன்னு தெரியலை. வந்ததும் வராததுமா அவளோட ரூமுக்குள்ளே போய் உட்கார்ந்து அழுதுகிட்டிருக்கா...கேட்டா ஒண்ணும் சொல்லமாட்டேன்கிறா... அதான் உன்னைக் கேட்கலாம்னு போன் பண்ணினேன்..."

''இங்கேயிருந்து போகும்போதுகூட நல்லாத்தானே போனா...''

''மாப்பிள்ளை எதுவும் கேலி கீலி பண்ணினாரா—எதுக்காகவாவது?''

''தெரியலையேம்மா. நான் லேணா அவரைக் கேட்டுப் பார்க்கிறேன்... மத்தியான சாப்பாட்டைக்கூட நந்தாகிட்டே கொடுத்து அனுப்பாதீங்க. அவளை டிஸ்டர்ப் பண்ண வேண்டாம்... டிரைவர் கிட்டேயே கொடுத்து விட்டுடுங்க...''

ரிசீவரை ஒருவித அச்சத்துடன்தான் அமுதா வைத்தாள். புயல் வீசப் போகிற செய்தியைக் கேட்ட ஓர் அசாதாரண நிசப்த வெளி சூழ்ந்தாற் போலிருந்தது. இன்னொரு நிசப்த புறத்தை நோக்கி நடப்பதாக தோன்றியது அவளுக்கு. திறக்கக் கூடாதொரு கதவை திறந்து விடுவோமோ என்ற பயத்தோடேயே போய் அறையின் கதவைத் திறக்கப் போனவள், கதவைத் திறக்காமல் ஒரு நிமிடம் நின்றாள். வீட்டில் நந்தா அழுது கொண்டிருப்பதை சந்துருவிடம் சொல்வதா வேண்டாமாயென்று யோசித்தாள். எங்கோ ஓர் இலை மறைவில் அமர்ந்து மர்மப் பறவை விகற்பமாகக் குரல் கொடுப்பது போன்ற எதிர்பாராத மனக்குரல் அவளுள் அச்சத்துடன் ஒலித்தது இங்கிருந்து வீட்டுக்குப் போன நந்தா என்றும் இல்லாமல் அவளுடைய அறையில் உட்கார்ந்து அழுது கொண்டிருக்கிறாள். தான் வீட்டுக்குப் போய் திரும்பியிருக்கும் சில மணி நேரங்களில் சந்துரு அவனின் அப்பா வீட்டுக்குத் திரும்பிக் குடி போய்விடலாம் என்ற மன மாற்றத்திற்கு உள்ளாகி இருக்கிறான். ஒரே தருணத்தில் நிகழ்ந்திருக்கும் இந்த இரண்டு விஷயங்களும் வெவ்வேறு பின்னணிகளின் வேறு வேறு வெளிப்பாடுகள் தானா? இல்லை—ஒரே பின்னணியின் இரு வேறுவிளைவுகளா? அமுதா எச்சரிக்கையுடன் யோசித்தாள்.



பயப்படாமல் யோசித்தாள். சந்துரு நந்தாவிடம் தவறாக நடந்து கொண்டிருப்பானா? என்ற சந்தேகத்தை யோசித்துப் பார்ப்பதை அவளால் தவிர்க்கவே முடியவில்லை. அந்தச் சந்தேகமே அவளைச் சினம் கொள்ள வைத்தது. அவளின் சந்தேகம் உண்மையாகவும் இருக்குமானால்?

அமுதா படாரென்று அறைக் கதவைத் திறந்தாள்.

அவள் உள்ளே நுழைந்ததுமே தொலைபேசிச் செய்தியை என்னவென்று அவசரப்பட்டு கேட்டுவிடக் கூடாது என்ற ஜாக்கிரதை உணர்வுடன் ஒரு பத்திரிகையை கர்ம சிரத்தையுடன் வாசிக்கிற பாவனையைக் காட்டியபடி செருக்காக அமர்ந்திருந்தான் சந்துரு. அவனாகக் கேட்கிறானா •பார்க்கலாம் என்ற திட்டத்துடன் அமுதாவும் ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு மௌனமாக உட்கார்ந்து கொண்டாள்.

## 24

நந்தா தன்னுடைய அறைக்குள்ளேயே இருந்தாள். அவளுக்கு அவமானமாக இருந்தது. எத்தனை மேன்மையுடன் சந்துருவுடன் உறவைப் பின்னியிருந்தாள். என்ன அழகுடன் சிநேகிதத்தை மலர வைத்திருந்தாள். அத்னையையும் சில நிமிடங்களில் சிதைத்துச் சின்னா பின்னப் படுத்தி விட்டானே... அத்துமீறல் எவ்வளவு எளிதாக இவர்களுக்குக் கை வந்து விடுகிறது... பெண் இவர்களின் காதலுக்கும் காமத்திற்கும்தான்... இவர்களின் காதலைப் பெறுவதே பெண்களுக்கு பெரும் பாக்கியம் ஆகும். இவர்களின் மனத்தில் காதல் தோன்றிவிட்டால்

பெண்குலம் உடனே நன்றியுடன் கையேந்தி இவர்களின் காதலைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பெற்றுக் கொள்ள முடியாவிட்டால் இந்தக் கதாநாயகர்கள் வில்லன்களாக உருமாறுவார்கள்! பெண் என்பவள் புரிந்து கொள்ளவே முடியாதவளாக பட்டம் சூட்டப் படுவாள். அவளின் மனது கடலினும் ஆழமானது என்ற வஞ்சப் புகழ்ச்சிக்கெல்லாம் உள்ளாவாள்...!

நினைக்க நினைக்க நந்தாவிற்கு மனம் குமுறிக் கொண்டு வந்தது. எனக்கொரு கணவர் வந்து அவர் அமுதாவிடம் காதல் வயப்பட்டால் இவர் ஒப்புக்கொள் வாரோ என்று ஆத்திரத்துடன் யோசித்துப் பார்த்தாள். இனி எப்படி இந்த வீட்டிற்குள்ளேயே நெருடல் இல்லாத மனோகர நிலையில் அன்றாட வாழ்வை எதிர்கொள்வது யென்று எண்ணிப் பார்த்தாள். சந்துருவால் பிரளயம் எதுவும் நடந்துவிடப் போவதில்லை. நேரிடையான வன்முறைகளில் இறங்கிடவும் ஓர் நேரிய திடம் வேண்டும். அவளுக்குத் தெரியும் -சந்துருவிற்கு அந்த மனோதிடம் கிடையாது. அவன் விஷக்கிருமி இல்லை. நவ நாகரிகமான விஷமி! விஷமத்தைத்தான் தாங்கிக் கொள்ள முடியாது- நந்தாவால்.

நந்தா அமுதாவை நினைத்துப் பார்த்தாள். அமுதா பால் போல் பொங்கிவிடக் கூடியவள். பொங்கி வீணாகிப் போனாலும் பரவாயில்லை; கொதித்து விடுபவள். விஷயம் அவளுக்குத் தெரிய நேர்ந்தால் துள்ளி எழுந்து விடுவாள். எந்த உச்சத்திற்கும் ஏறிக் கொள்பவள். ஆகையால் விஷயம் அமுதாவிற்குத் தெரிந்து விடவே கூடாது. அமுதாவிற்குத் தெரியாமலேயே விஷயம் மறைக்கப்பட்டுவிட்டது என்பதாலேயே சந்துருவிற்கு ஓர் அசட்டுத் துணிச்சல் மீண்டும் வந்துவிடவும் கூடாது. உண்மையை வெளியிட்டு விடாததை நந்தாவின் பல வீனமாக அவன் கையாள்கிற சூழலும் ஏற்படலாகாது.



உண்மையை அநாகரிகமாக பகிரங்கமாக எல்லோர் முன்னிலையிலும் போட்டு உடைத்துவிடவும் கூடாது; சந்துருவையும் எச்சரிக்கையுடன் தூரத்துக் கோட்டில் நிறுத்தி நிற்க வைக்க வேண்டும். தன்னையும் காப்பாற்றி அமுதாவையும் காப்பாற்றியாக வேண்டும்.-நந்தா கண் கலங்காமல் யோசித்தாள். ஆடவர்கள் ஒரு வேளை பெண்கள் விஷயத்தில் இப்படி சிறுபிள்ளைத் தனமாகத் தான் நடந்து கொள்வார்களோ?!

சிந்திக்கச் சிந்திக்க நந்தாவிற்கு சந்துருவின் மேல் ஏற்பட்ட அதிர்ச்சியும் சினமும் குறைந்து வற்றின. இனி நடக்க வேண்டியது என்னவென்றுதான் யோசிக்க வேண்டும். என்ன பண்ணலாம் என்று அவள் யோசித்த போது அவளின் அம்மா உள்ளே வந்தாள்.

"என்னம்மா?"

"அழுகையெல்லாம் நின்னுருச்சா?"

"பொழுதன்னிக்குமா அழுதிட்டு இருப்பாங்க?"

"சரி. இப்பவாவது சொல்லேன். எதுக்கு அழுதேன்னு..."

"வர்ர வழியில லேசா ஒரு சைக்கிள் மேலே காரை இடிச்சிட்டேன்... சைக்கிளுக்கு எதுவும் ஆகலை. ஆனா சைக்கிள்காரன் பயங்கரமா சண்டைக்கு வந்துட்டான். என்னை ரொம்ப அசிங்கம் அசிங்கமா கெட்ட வார்த்தை யால் எல்லாம் திட்டினான். தாங்க முடியலை என்னால. வழியெல்லாம் அழுதுக்கிட்டுத்தான் வந்தேன்..."

"இதை வந்த உடனே சொல்லியிருக்க வேண்டியது தானே..."

"சொல்ல முடியாமேதான் அழுதுக்கிட்டு வந்தேனே ...அந்த நேரத்ல எப்படிச் சொல்றது?"

"இல்லை நந்தா... பொம்பளைப் புள்ளைங்க எதுக்குக் காரணம் சொல்லாவிட்டாலும், அழறதுக்கு

மட்டும் காரணத்தை உடனே பெத்தவ கிட்டேயாவது சொல்லிடணும்... இவ்வளவு நேரம் என்னென்ன நெனைச்சி பயந்தேன் தெரியுமா?''

''இப்படியே பொம்பளைபிள்ளைன்னு சொல்லிட்டே இருங்க...''

''சரி, நீ இரு. மாப்பிள்ளைக்கும் அமுதாவிற்கும் நான் போய் சாப்பாடு கொடுத்திட்டு வரேன்...''

''அப்பா சாப்பிட்டாங்களா?''

''சாப்பிட்டாச்சு... நீயும் போய் சாப்பிடு...''

'எனக்கு இப்பப் பசிக்கலை. பசிச்சதும் போய் சாப்பிடறேன்.''

அம்மா போன அப்புறம் வெகுநேரம் கழித்துத்தான் நந்தா போய் சாப்பிட்டாள். சாப்பிட்டுக்கொண்டிருந்த போதுதான் ஒரு யோசனை அவளுடைய மனத்தில் பளிச்சிட்டது. சாப்பிட்டுவிட்டு வந்து தனிமையில் அந்த யோசனையை தீவிரமாக சிந்தித்தாள். அனைத்து விஷயங்களையும் சமனப்படுத்தி விடும் மார்க்கம் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. எழுந்து நின்றாள். கண்ணாடியில் தன் உருவத்தை முழுமையாகக் கவனித்துக் கொண்டபின் அப்பாவைத் தேடி ஹாலுக்குப் போனாள்.

''அப்பா! நான் ஒண்ணு சொல்வேன்— அதைக் கேட்டு என்னை நீங்க கேலியெல்லாம் பண்ணக் கூடாது...'' என்ற பீடிகையுடன் ஆரம்பித்தாள்.

''என்னம்மா இது! என்னிக்கும் இல்லாத பழக்கமாயிருக்கு. இப்படியெல்லாம் நீ எதுக்கும் பீடிகை போட மாட்டியே...'' என்று மகளை ஆச்சரியத்துடன் பார்த்தார் பெருமாள்சாமி.



''என்னப்பா பண்றது. விஷயம் என் கல்யாண சமாச்சாரம் ஆச்சே...'' முகத்தை நிஜமாகவே மலர்த்திக் கொண்டுதான் நந்தா சொன்னாள்.

''உன் கல்யாண சமாச்சாரமா...?'' பெருமாள்சாமி இனிய அதிர்ச்சியுடன் கேட்டவாறு மகளை எதிட்டுப் பார்த்தார்.

''யெஸ்...''

'சொல்லு சொல்லு! அப்பா என்ன பண்ணணும் உன் கல்யாண விஷயமா?''

''இப்பவே நீங்க என் கல்யாணத்துக்காக வரன் பார்க்கிறதுக்கு ஆரம்பிக்கணும்...''

பெருமாள்சாமிக்கு நிஜமாகவே நம்பத்தான் முடியவில்லை. சங்கீதப் பயிற்சியெல்லாம் ஒரு சிறப்புடன் முற்றுப்பெறும் வரைக்கும், குறைந்தது இன்னும் இரண்டு வருடங்களுக்குத் தனக்குத் திருமணமே வேண்டாம் என்று கறாராகச் சொல்லியிருந்த மகளா வரன் பார்க்கச் சொல்கிறாள் என்ற ஆச்சரியத்தில் நந்தாவையே பார்த்தார்.

''என்ன பதில் சொல்லாமே என்னையே பாக்கறீங்க?''

''அப்பாவுக்கு ஒரு சின்ன சந்தேகம்...!''

''என்னப்பா சந்தேகம்?''

''நந்தாவுக்கு நிஜமாவே அப்பாதான் வரன் பார்க்க ஆரம்பிக்கணுமா, இல்லை-நந்தாவே வரன் பார்த்து நிச்சயம் பண்ணிட்டாளா?''

''நந்தா அந்தக் கஷ்டமெல்லாம் படவே மாட்டா... அவ அப்பாதான் அந்தக் கஷ்டத்தையும் பட்டாகணும்.''

"நேத்திக்கி வரைக்கும் நந்தா இன்னும் ரெண்டு வருஷத்துக்குத் தனக்குக் கல்யாணம் வேணாம்னு சொல்லிட்டிருந்தாளே..."

"நந்தாவுக்கு இன்னிக்கித்தான் புத்தி வந்தது... பொம்பளைப் பிள்ளைங்க காலா காலத்ல கல்யாணத்தைப் பண்ணிக்கிறதுதான் நல்லதுன்னு தெரிஞ்சது!"

"அப்பாவுக்கு கை கொடு..."

பெருமாள்சாமி வாத்சல்யத்துடன் மகளின் கையைப் பற்றி குலுக்கினார். அவருக்கு மிகமிக சந்தோஷமாக இருந்தது. இப்போதுதான் கஷ்டப்பட்டு வரன் பார்த்து மூத்த பெண்ணின் திருமணத்தை முடித்து சற்றே ஒரு சுமையை இறக்கி வைத்திருக்கிறார்...இப்போது அடுத்த பெண்ணுக்கு வரன் பார்க்க வேண்டிய புதிய சுமை... ஆனால் இனிய சுமை...

"அப்பா உனக்கு ஃபர்ஸ்ட் க்ளாஸ் மாப்பிள்ளையா பார்த்துத் தரேன்— நம்ம அமுதாவுக்குப் பார்த்துத் தந்த மாதிரி..."

"அதுக்காக அத்தான் மாதிரி மீசை இல்லாத மாப்பிள்ளையாக பாத்துடாதீங்க... எனக்கு மீசை இருந்தாத்தான் பிடிக்கும்..."

அப்போது போர்டிகோவில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

"அம்மா வந்துட்டா போல் தெரியுது," என்றார் பெருமாள்சாமி.

அம்மாவுடன் அமுதாவும் வந்ததைப் பார்த்த நந்தா சட்டென்று எச்சரிக்கை அடைந்தாள்.

"அமுதா! நம்ம நந்தா உடனே என்னை அவளுக்கு மாப்பிள்ளை பார்க்கச் சொல்லிட்டா..." சந்தோஷமான செய்தி என்ற முறையில் பெருமாள்சாமி குதூகலத்துடன் செய்தியை அவசர அவசரமாக வெளியிட்டார்.



வேறொரு எதிர்பாராத செய்தியைக் கொண்டு வந்திருந்த அமுதாவும் அவளின் அம்மாவும் இந்த மகிழ்வான தகவலை கிரகிக்கிற நிலையில் இல்லாததால் சிறிது பிரமையுற்று நின்றனர்.

"என்னக்கா, நீயும் வந்திட்டே — அத்தானை விட்டுட்டு?" -நந்தா கேட்டாள்.

"அம்மாவைக் கேளு." - அமுதா எரிச்சலுடன் சொன்னாள்.

நந்தா அம்மாவைப் பார்த்தாள்.

"என்ன! நம்ம நந்தா என்னை உடனே அவளுக்கு மாப்பிள்ளை பார்க்கச் சொல்லிட்டானு சொல்றேன்— ஒருத்தரும் கண்டுக்க மாட்டேங்கிறீங்களே...?"பெருமாள் சாமி ஆச்சரியத்துடன் கேட்டார்.

"அமுதா மாப்பிள்ளை அங்கே ஒரு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கார். ஆஸ்பிட்டல்ல இருந்து டிஸ்சார்ஜ் ஆன அப்புறம்—அவர் இங்கே வர போறதில்லையாம்... அவரோட அப்பா வீட்டுக்குப் போயிடப் போறாராம்..."

பெருமாள்சாமிக்கு மனைவி சொன்னது புரியவில்லை.

"அப்பா வீட்டுக்குப் போயிடப் போறார்னா...?"

"நம்ம வீட்ல வந்தெல்லாம் வீட்டோட மாப்பிள்ளையா இருக்க மாட்டாராம்..."

பெருமாள்சாமி மேலும் புரியாமல்தான் மனைவியைப் பார்த்தார்.

நந்தாவிற்குள் பளிச்சென்று கற்பூரவில்லை பற்றி வெளிச்சம் காட்டியது போலிருந்தது. தோற்றுப்போன ஆடவன் வேறொரு தடத்தில் பழி வாங்கத் தயாராகிறான். இந்த வ்யூகத்தை நந்தா எதிர்பார்க்கவில்லை. சந்துருவை

நினைத்துப் பார்த்தாள். அவளின் இந்த விஷமம் அவளின் சுயமரியாதையின் மீது வீசப்படுகிற சவுக்கடியாகத் தோன்றியது. ஆண்— பெண் என்ற பேதம் அக்கணம் அவளுக்கு ஆபாசமாகவும் அபச்சாரமாகவும் தெரிந்தது. மௌனமாக அமுதாவைப் பார்த்தபடி உள் மனத் தயார் நிலையில் நின்று கொண்டிருந்தாள்.

''வீட்டோட மாப்பிள்ளையா இருக்கறதுக்கு சம்மதிச்சுத்தானே கல்யாணத்துக்கு சரி சொன்னார்?''-பெருமாள்சாமி எந்த உணர்வையும் காட்டிக் கொள்ளாமல் கேட்டார்.

''அதென்னமோ இப்ப அவரோட மனசாட்சி உறுத்துதாம். இனிமே நம்ம வீட்ல வந்து இருக்கப் போறதில்லையாம்.. கறாரா சொல்லிட்டாரு ... உங்ககிட்டே இதைச் சொல்லச் சொல்லித்தான் அமுதாவையும் என்கூடவே அனுப்பியிருக்கார்...எல்லாத்தையும் அவகிட்டேயே பேசிக்கோங்க...என்னைக் கேட்காதீங்க... ஒரு பொண்ணுக்குக் கல்யாணத்தை பண்ணி முடிச்சதிலேயே இந்தப் பாடுபட வேண்டியிருக்கு. அதுவும்— அதென்ன கல்யாணம் மாதிரியா நடந்தது? என்னமோ நம்ம தலையெழுத்து... இந்த லட்சணத்ல நந்தா பொண்ணுக்கும் கல்யாணத்தை பண்ண வேண்டியிருக்கு- என்ன நடக்கப் போகுதோ...'' அதற்கு மேல் பேச முடியாமல் குரலடைக்க அமுதாவின் அம்மா வேகமாக உள்ளே போய்விட்டாள்.

பெருமாள்சாமி கன்னத்தில் கை வைத்தபடி அமர்ந்திருந்தார். அமுதாவும் நந்தாவும் ஒருவரை ஒருவர் தீர்க்கமாகக் கண்டபடி நிசப்தமாக நின்றார்கள். இருவரின் மனங்களும் ஒலி வேகத்தில் மௌனமாகப் பயணமாகிக் கொண்டிருந்தன.

பெருமாள்சாமி வருத்தத்துடன் சொன்னார்''—இப்பத்தான் நந்தா வந்து கல்யாணம் பண்ணிக்கறதுக்கு



சம்மதம்னு சொல்லி சந்தோஷமா பேசிக்கிட்டிருந்தா... அந்த சந்தோஷத்தை அஞ்சு நிமிஷம்கூட நான் அனுபவிச்சிருக்க மாட்டேன். அதுக்குள்ளே— இப்படியொரு செய்தியை வந்து சொல்றியேம்மா... இப்ப நான் போய் உன் மாப்பிள்ளையை சமாதானம் பண்ணுவேனா; இல்லே—இவளுக்கு மாப்பிள்ளை பார்க்கப்போவேனா... ஏன் மாப்பிள்ளை திடீர்னு இந்த முடிவுக்கு வந்திட்டார்— அதுவும் கல்யாணமான ஒரே மாசத்தல...? நாம் ஏதாவது அறியாமே அவரோட மனசை புண்படுத்திட்டோமா...? அப்படி ஏதாவது நடந்திருந்தாகூட மனசுவிட்டு என்கிட்டே பேசலாமே அவர்? தப்பு எதுவும் நம்ம பக்கம் இருந்தாலும் அவர்கிட்டே நானே மன்னிப்புக் கேட்டிடுவேனே...அதை விட்டுட்டு இப்படி திடீர்னு நம்ம வீட்ல வந்து இருக்க மாட்டேன்னு சொன்னா என்ன அர்த்தம்? நாளைக்கு விஷயம் நாலு பேருக்குத் தெரிஞ்சு நம்மை வந்து கேட்டா நான் என்ன பதில் சொல்வேன் - அவங்களுக்கெல்லாம். ஏன் மாப்பிள்ளை இப்படிப் பண்றார்? அவங்க வீட்டுக்குப் போயிடணும்னு ஏன் திடீர்னு சொல்றார்? அதுக்கு என்ன உண்மையான காரணம்...?"

மகள் மேல் இருக்கும் பாசத்தில் ஏறக்குறைய பொருமிப் புலம்பி விட்டார் பெருமாள்சாமி.

சட்டென்று அமுதா அவரின் அருகில் சென்று மண்டியிட்டு அமர்ந்து அப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

''தயவுசெஞ்சு நீங்க மட்டும் இந்த விஷயத்ல கொஞ்சம்கூட உணர்ச்சி வசப்படாதீங்கப்பா ... உங்க உடம்புக்கு ஆகாது. நான் பாத்துக்கறேன் இந்த விஷயத்தை. எனக்கு எது சரின்னு தோணுதோ அது மாதிரி நடந்துக்கிறேன். நான் ஒண்ணும் அவர்கூடபோய் மாமியார் வீட்ல இருக்க முடியாதுன்னு சொல்லலை. எங்கே வாழ்ந்தாலும் உண்மையா பொய் இல்லாமே

வாழணும். அதான் என்னோட தர்மம். உங்களோட மனநிலைக்காக வீட்டோட மாப்பிள்ளையா இருக்கச் சம்மதிக்கிற மாப்பிள்ளையாகப் பார்த்தோம். இவரும் சம்மதிச்சுத்தான் நம்ம வீட்டுக்கு மாப்பிள்ளையா வந்தார். இப்ப திடீர்னு என்ன நடந்ததுன்னு தெரியலை— பேச்சு மாறுகிறார். அதுக்கு ஏதோவொரு காரணமும் சொல்றார். ஆனா – அவர் சொல்ற காரணம் எவ்வளவு தூரத்துக்கு நிஜம்னு தெரியலை. முதல்ல அதைத் தெரிஞ்சுக்கிட்ட அப்புறம்தான், அதுக்குத் தகுந்தபடி தான் நாம் நடந்துக்கணும் ...அதாவது நான் நடந்துக் கணும்...! ஸோ—ப்ளீஸ்! இந்த விஷயத்தை என்கிட்டே விட்டுடுங்க...நான் கவனமா டீல் பண்ணிக்கிறேன்...''

பெருமூச்சு விட்டபடி பெருமாள்சாமி பதில் சொல் லாமல் கண்களை மூடிக்கொண்டார்... அமுதா மெதுவாக எழுந்து நின்றாள். வியர்த்திருந்த முகத்தைத் துடைத்த வாறே நந்தாவை கவனித்துப் பார்த்தாள். நந்தாவும் கவனக்குறைவற்ற தன்மையுடன் சகோதரியை நோக்கினாள்...

'நந்தா, உன்கூட நான் தனியா பேசணும், வா. உன் ரூமுக்குள் போயிடலாம்," என்றாள் அமுதா.

மௌனமாக ஒருவரை ஒருவர் கண்ட சகோதரிகள் நடந்து மெதுவாக தனி அறைக்குள் சென்றார்கள். மறுகணம் அமுதா அறைக் கதவைச் சாத்தி தாழிட்டுக் கொண்டாள்...

## 25

நந்தா சிறிது நேரம் சகோதரிக்கு முதுகைக் காட்டிய படி நின்றாள். ஓர் தாட்சண்யம் இல்லாத உண்மை சட்டென கரிய மேகத்தின் நிழல் போல தன்னைச் சுற்றி



கவிந்துவிட்டதை அவளால் உணர முடிந்தது. சந்துரு வின் சிறுபிள்ளைத்தனமான வெளிப்பாட்டால் நேர்ந்து விட்ட பாதிப்புகளை சமனப்படுத்துகிற முயற்சிக்கு தான்பிள்ளையார் சுழி போட்டிருக்கிற அதே தருணத்தில், சந்துரு மற்றுமொரு விபத்தின் தாக்கத்தை இயக்கி யிருப்பது அவளை மிகவும் சிலிர்ப்பு மிகுந்த கூர்மைப் படுத்தி இருந்தது. உதடுகளை இறுகக் கடித்தபடியே மௌனமாக நின்றாள்...

"சொல்லுடி செல்லம்! தீடீர்னு வந்து அப்பாகிட்டே உன் கல்யாணத்துக்கு மாப்பிள்ளை பார்க்க நீ சொல்ற துக்கும், திடீர்னு அத்தான் அவங்க வீட்டுக்குப் போயிட லாம்னு என்னைச் சொல்றதுக்கும்- பொதுவான காரணம் எதுவும் இருக்கா இல்லையா?''—அமுதா பொங்கி விம்மும் மனத்துடன் நந்தாவின் பின்னால் நின்றபடி கேட்டாள். பிறகு தங்கையின் முதுகைத் தொட்டு தன் பக்கம் திருப்பி னாள். நந்தாவின் கண்கள் மெலிதாகச் சிவந்து ஆனால் வெறுமை பூண்டிருந்தன.

''அத்தான் உன்கிட்டே எதுவும் தப்பா நடந்துக்க முயற்சி செய்தாரா?''-அமுதா மிகவும் தயங்கித் தயங்கிக் கேட்டாள்.

நந்தா இல்லை என்பதாக தலையை அசைத்தாள்.

''அப்புறம்...?''

"தப்பான ஒரு வாழ்க்கைக்கு அவசியமே இல்லாமே ஆசைப்பட்டுட்டார்..."

''புரியறாப்புல சொல்லு செல்லம்.''

''அவருக்கு நானும் வேணுமாம் அமுதாக்கா. என் னோட காதல் வேணுமாம்...பார்! எவ்வளவு ஈஸியா என் கிட்டே நடந்துக்கிட்டார்னு...எப்படி என்னைக்கேவலப் படுத்திட்டார்னு பார்... எத்தனை ஆசையா அத்தான் அத்தான்னு இருந்தேன்..."

நந்தாவின் குரல் பொருமியது. கண்கள் இன்னும் சிவந்து விட்டன.

ஏதோவொரு விகற்பத்தை மனத்துள் எதிர்பார்த்திருந்தாலும், அது உண்மைதான் என்று நிருபணம் ஆகிற தருணம் மனது அதிர்ந்து பொங்கியது. உடல் அதிவிரைவாக சுவாசித்தது.

"இதை ஏன் நீ உடனே என்கிட்டே சொல்லாமே ஒண்ணுமே நடக்காததுபோல கிளம்பி வந்தே?" அமுதா சற்று கோபத்துடன் கேட்டாள்.

நந்தா பேசாமல் நின்றாள்.

"அதனாலேதான் வீட்டுக்கு வந்ததும் உன் ரூமுக்குள் உட்கார்ந்து அழுதியா?"

நந்தா மௌனமாகவே இருந்தாள்.

"கார்ல வரும் போது சைக்கிள் ஒண்ணை இடிச்சுட்டேன்; அதுக்காக சைக்கிள்காரன் கெட்ட வார்த்தை சொல்லித் திட்டினான்னு அம்மாகிட்டே இதில் பெரிய பொய் வேற... ஏன், அத்தானைக் காட்டிக் குடுத்திடக் கூடாதே என்கிற பயமா உனக்கு?"

"அந்த பயமில்லைக்கா... அதைச் சொல்லி உன் மனசைக் கஷ்டப்படுத்திடக்கூடாதேன்னு பயந்தேன். நம்ம வீட்ல இருக்கிற நம் எல்லோருக்குள்ளும் இருக்கிற அருமையான 'ஹார்மனி' சிதைஞ்சு போயிடக் கூடாதேன்னு பயந்தேன்..."

"அப்படி இல்லடி செல்லம். இன்னிக்கி உன் காதலை கேட்டவர், நாளைக்கு வேற ஒருத்தியோட காதலைக் கேட்க மாட்டார்னு என்ன நிச்சயம்?"

ஒரு நிமிடம் கசப்புடன் யோசித்தபின் நந்தா சொன்னாள்: "இல்லை அமுதாக்கா... அத்தான் என்னோட காதலைக் கேட்டது வந்து இன்னிக்குத்தான்.



அவரோட காதலைத் தெரிவிச்சதும்—எதிர்பாராமே இன்னிக்குத்தான். ஆனா, அத்தான் மூணு வருஷத்துக்கு முன்னாடியே என்மேல காதல் வசப்பட்டிருக்காராம். என்கிட்டே அவரோட காதலை அப்பவே சொல்லிடணும்னு நெனைச்சிருக்காராம்...முடியாமே போச்சாம்..."

சட்டென மொழி தெரியாத திரைப்படம் பார்க்கிறார் போலிருந்தது அமுதாவிற்கு.

"மூணு வருஷத்துக்கு முன்னாடியா?"— விளங்கிக் கொள்ள முடியாமல் கேட்டாள்.

பின்னோக்கு பாணி திரைப்படம் போல- அத்தனை விபரங்களும் அமுதாவின் முன்னிலையில் சொற் காட்சிகளாக விவரித்துச் சொல்லப்பட்டன. நந்தாவால் உணர்வு வயப்படாமல் எடுத்துக் கூறப்பட்டன. -திரைப் படம் முடிந்து விட்டாலும், அதைப் பார்த்த பிரமை கலையாத பாவனையில் சகோதரிகள் இருவரும் பல நிமிடங்களுக்கு தீவிரமாக ஒருவரை ஒருவர் கண்டபடி மிகவும் இறுக்கமாக நின்று கொண்டிருந்தனர்.

அமுதா என்ன நினைத்துக் கொண்டாளோ, தன் கழுத்தில் சூழ்ந்து தொங்கிய தாலிமணிகள் கோக்கப்பட்ட புத்தம் புதிய பொன்சரடை குனிந்து பார்த்தாள். முதல் இரவு கழிந்த அதிகாலைப் பொழுதிலேயே சந்துரு தூக்கத்தில் நந்தாவின் பெயரைச் சொல்லிப் புலம்பியதை மிகுந்த துக்கத்துடன் நினைவு கூர்ந்தாள். தாலி கட்டியிருக்கும் இந்த ஒரு மாத காலத்திலேயே கணவனில் தன்னுடைய முக்கியத்துவம் இரண்டாம் நிலையில்தான் இருக்கிற உண்மை அமுதாவின் உணர்வுகளில் பஞ்சுப் பொதியில் பாய்ந்த தீ போல கண நேரத்தில் எரிந்து அவளின் காதலைச் சாம்பலாக்கியது.

"நான் ஏதாவது தப்புப் பண்ணிட்டேனாக்கா?"— சகோதரியின் மௌனமான முக பாவனையைக் கண்டு

தாளமாட்டாமல் நந்தா கேட்டாள். அவளின் விழியோரங்களில் நீர் ததும்பிப் பளபளத்தது.

"தெரியலை நந்தா! சட்டுனு எதுவும் புரியாத சூனியத்தைப் பார்க்கிற மாதிரியிருக்கு...திடீர்னு ரொம்பத் தனியா நிக்கறாப் போலயிருக்கு..."

"மூணு வருஷத்துக்கு முன்னாடி அத்தான் என் பின்னாடி வந்ததையெல்லாம் இக்னோர் பண்ணினது மாதிரி, அவர்தான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறவர்னு எனக்குத் தெரிஞ்சப்பவும்- பழசை பொருட்படுத்தாமே, உன்கிட்டே சொல்லாமே இக்னோர் பண்ணியிருக்கக் கூடாதோன்னு இப்பத் தோணுது..."

"எல்லா ஆம்பளைங்களுமே இந்த விஷயத்லே நம்ப முடியாதவங்களாத்தான் இருப்பாங்களாடி நந்தா..." அமுதா பயத்துடன் கேட்டாள்.

"எனக்கு அழுகை அழுகையா வருதுக்கா."

சொல்லும்போதே நந்தா உடைந்து போய் அமுதாவின் தோள்களில் சாய்ந்து கொண்டாள். அவளின் கண்களிலிருந்து நீர் வடிந்தது. தங்கையைக் கனிவோடும் ஆதரவோடும் அமுதா மென்மையாக அணைத்துக் கொண்டாள். வாழ்வின் எதிரில் புயல் மூண்டிருப்பதாகவெல்லாம் எண்ணி அமுதாவின் மனம் அஞ்சவில்லை. கனமான புகை மண்டலம் சூழ்ந்திருப்பதாகத்தான் தெரிந்தது -ஆனாலும் நெருப்பு இல்லாமல் புகையாதே...

அமுதா நந்தாவை அரவணைத்தபடியே நின்றாள். நெருப்பின் வேகத்தை, வீச்சை அவளால் அனுமானிக்க முடியவில்லை. மெழுகுவர்த்தித் தீயாக இருந்தால் ஊதியே அணைத்து விடலாம். இது அப்படியும் தெரியவில்லை. சமையல் வாயுக் கசிவில் எங்காவது எப்படியாவது தீவிரமாகப் பற்றிக்கொள்கிற ரகசியத் தீ போல் தெரிந்தது. அந்த ரகசிய நெருப்பின் ஜுவாலைதான்—



இனி வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க மறுக்கிற போக்கு. இவனின் சிறுபிள்ளைத்தனமான மனப் போக்குக்கு மைத்துனி உடன்படவில்லை என்றதுமே மாமியார் வீடே தேவையில்லை என்ற நிராகரிப்பு... விளையாட்டுக்கு ஒப்பவில்லையென்றால் வினை...!

"என்னக்கா பண்ணப் போறே...?" - நந்தா கேட்டாள்.

"நீதான் சொல்லேன்—என்ன பண்ணலாம்னு...?"

"நான் வேணா கல்யாணம் பண்ணிட்டு மாமியார் வீட்டுக்கு போயிடறேன்... நீயும் அத்தானும் இங்கேயே இருங்க..."

தங்கையின் பாசத்தில் அமுதாவின் மனம் கரைந்து விட்டது. நெகிழ்ச்சியுடன் நந்தாவின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

"பைத்தியம்! இப்ப பிரச்சினை நம்மில் யார் மாமியார் வீட்டுக்குப் போறது என்கிறது கிடையாது..."

"பெரிசா கத்தி கித்தி அத்தான்கிட்டே சண்டை எதுவும் போட்டுடாதே. அப்பாவோட ஹார்ட் ப்ராப்ளம் -தாங்காது அதையெல்லாம்..."

"இருக்கலாம்டி செல்லம். அப்பாவுக்கு ஹார்ட் ப்ராப்ளம்தான். ஆனா! எனக்கு இது லைஃப் ப்ராப்ளம்... இல்லையா?"

"தடாலடியா எதுவும் பண்ணிடாதே."

"அதுக்காக அவரை ஒண்ணுமே கேட்காமலே இருந்திடவும் கூடாதும்மா. இது எங்களோட தாம்பத்ய வாழ்க்கை. எதையும் அவரும் நானும் சேர்ந்துதான் தீர்மானம் பண்ணணும்... அவர் பின்னாடியே நானும் போகிற ஊர்வலம் இல்லே-தாம்பத்ய வாழ்க்கை. நானும் அவரும் கைகோத்துப்போகிற ஒருங்கிணைந்த பிரயாணம்

இது...ஐ'ம் நாட் ஹிஸ் ஃபாலோயர்! ஜஸ்ட் ஐ'ம் ஹிஸ் லைஃப் பார்ட்னர்; பெஸ்ட் கம்பேனியன்... புரியுதா?''

நந்தாவிற்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. மூன்று வருடங்களுக்கு முன்பு ஒரு ஆடவனில் அரும்பிய இளம்பிராய உணர்வுகள் எப்படி முதிர்ச்சி அற்ற தன்மைகளாக தங்கள் குடும்ப வாழ்வின் குறுக்கே முட்சுவராக எழும்பி விட்டது என்பதை அவளால் நம்பவே முடியவில்லை. வாழ்க்கையின் ஒவ்வொரு கணுவுமே ரகசிய மூளைகளை பதுக்கி வைத்திருக்கிற நுட்சுமம் அவளின் இளம் மனத்தை அச்சுறுத்தவே செய்தது. –அதுவும் அந்த ரகசிய மூளை அவளுக்கும் அமுதாவிற்கும் இடையே தலைதூக்கி விட்டதுதான் மிகக் கொடிய துக்கமாகவும் நந்தாவில் வியாபித்தது.

''அத்தானை என்னிக்கு டிஸ்சார்ஜ் பண்ணப் போறாங்களாம்?''

சூழலின் கனத்தை இலகுவாக்குவதற்காக நந்தா கேட்டாள்.

''நாளை மறுநாள்...''

''டிஸ்சார்ஜ் பண்ணினதுமே நேரா அவங்க வீட்டுக்குப் போயிடுவாராமா?''

''அப்படித்தான் சொல்றார்.''

''நீ?''

''இன்னும் நான் முடிவு பண்ணலை நந்தா...மாமியார் வீட்டுக்குப் போறதில் எனக்குப் பயமில்லை... அவர் கூடப் போறதுக்குத்தான் பயமாயிருக்கு. ஒரு கணவன் கிட்டே ஒரு மனைவிக்குக் கிடைக்கிற 'இமோஷனல் செக்யூரிட்டி' திடீர்னு இவர்கிட்டே எனக்குக் குறைஞ்சு போயிட்ட மாதிரி இருக்கு. கணவன் என்கிற அந்நியோந்நியம் கொஞ்சம் காயப்பட்டு, ஒரு ஆண் என்கிற பயம் கலந்த அந்நியத் தன்மை ஏற்பட்டுட்ட மாதிரியிருக்கு...''



''இதுக்குப் பயந்துதான் யார்கிட்டேயும் இதைப்பத்தி மூச்சுகூட விடக்கூடாதுன்னு நெனைச்சேன்.''

''உண்மையை ஆயுளுக்கும் மறைச்சிட முடியாதுடி செல்லம்... நெனைச்சுப் பார்த்தா இப்ப இவர் மேல இன்னொரு சந்தேகம்கூட வருது எனக்கு. கொஞ்ச நாளா இவர் இவரோட ஃப்ரண்ட் சுஜாதாகூட பேசறதைபழகறதை திடீர்னு விட்டுட்டாள் ... அவகிட்டேயும் ஏதாவது தப்பா நடந்திருப்பாரோன்னு சந்தேகமா இருக்கு எனக்கு...''

''அவங்க எப்பவும் போலத்தானே அத்தான்கிட்டே பேசறாங்க..?''

''இந்த மனுசன் சரியா பேசறது இல்லையே... உன்னை மாதிரி அவளும் வெளியில் சொல்வானேன்னு கௌரவமா இவர் செஞ்சதை இக்னோர் பண்ணியிருந்தாலும் பண்ணியிருக்கலாம்...''

''இப்ப எனக்குக் கல்யாணம்னு நெனைச்சாலே: பயமாயிருக்கு அக்கா.''

அமுதா பெருமூச்சு விட்டபடி சொன்னாள் ''பார்! ஒண்ணுமே இல்லாமே போயிருக்க வேண்டிய விஷயத்தைப் போய் எப்படி இவர் காம்ப்ளிகேட் பண்ணிட்டார்னு...''

''நான் வேணும்னா அத்தான்கிட்டே மன்னிப்புக் கேட்டுடட்டுமா?''—சகோதரியிடம் இருக்கும் அளவற்ற பாசத்தில் நந்தா கேட்டுவிட்டாள்.

—இந்தக் கேள்வி ஓர் எரி நட்சத்திரம் போல அமுதாவின் அறிவில் குறுக்கிட்டுப் பாய்ந்தது. விடை காண முடியாத கணிதத்திற்கு விடை கிடைத்துவிட்டாற்

போலிருந்தது. சகோதரத்வத்தோடு நந்தாவின் கரங்களைப் பற்றிக்கொண்டாள்.

''பைத்தியம்! நீ எதுக்காக அவர்கிட்டே மன்னிப்புக் கேட்கணும். நீயா தப்பா நடந்தே...? தப்பா நடந்தது அவர்தானே...?''

சில நிமிடங்களுக்கு அமுதா மௌனமாக யோசித்து விட்டுத் தொடர்ந்து சொன்னாள்:

''ரொம்பப் பெருந்தன்மையா நடந்திருக்கிற உன்கிட்டே தப்பா நடந்ததுக்காக அவரை உன்னிடம் வந்து மன்னிப்புக் கேட்கச் சொல்றேன் பார்... அப்படி அவர் மன்னிப்புக் கேட்டுட்டார்னா... அவர்கூட காட்டுக்கே வேணும்னாலும் நான் போகத் தயார்...''

''அவர் வந்து என்கிட்டே மன்னிப்புக் கேட்பாராடி?'' —நந்தா பயந்தும் விருப்பமில்லாமலும் கேட்டாள்.

''மன்னிப்புக் கேட்டுத்தான் ஆகணும்டி நந்தா...''

''கேட்க முடியாதுன்னு சொல்லிட்டார்னா...?''

அமுதா இதற்கு பதில் சொல்லவில்லை. ஆனால் அவளின் கண்களில் ஓர் பதில் மௌனமாக வீரத்துடன் ஒளிர்ந்து கொண்டிருந்தது.

## 26

''என்னது, நந்தாகிட்டே... நான் போய் மன்னிப்புக் கேட்கணுமா? விளையாடுறீங்களா என்கிட்டே...?''—சந்துரு உடல் பலவீனத்தையும் மீறி உரக்கக்கேட்டான்.

''நாங்க ஒண்ணும் விளையாடலை உங்ககிட்டே... என் தங்கைகிட்டே விளையாட்டுத்தனமா பேசி தப்பா



நடந்துகிட்டது நீங்கதான்...''—அமுதாவும் உரக்கவே பதில் சொன்னாள்.

''என்ன தப்பா நடந்துக்கிட்டேன்—அவகிட்டே?''

''அவகிட்டே நீங்க பேசி நடந்து கொண்டதுக்கு வேற என்ன அர்த்தமாம்?''

''என்னமோ உன் தங்கை கையைப் பிடிச்சி நான் இழுத்திட்ட மாதிரிதான்—பேசறே நீ வந்து.''

''நீயும் எனக்கு வேண்டியிருக்கு நந்தான்னு சொன்னதுக்கு அர்த்தம்— மனசால் நீங்க அவளோட கையைப் பிடிச்சு இழுத்ததுக்குத்தான் சமம்...''

''ஆஹா! பெரிய்ய 'சைகாலஜிஸ்ட்... கண்டுப் பிடிச்சிட்டா...!''

''சும்மா இந்தக் கிண்டலெல்லாம் வேண்டாம்... தப்பை ஒத்துக்கொள்ளுங்க...''

''தப்பு பண்ணியிருந்தாதத்தான் ஒத்துக்கணும்...''

''மச்சினியை பார்த்து ஐ லவ் யூன்னு சொல்றது தப்பு இல்லாமே பெரிய வேதமாக்கும்...?''

''இன்னிக்குத்தானே மச்சினி... மூணு வருஷத்துக்கு முன்னாடி?''

''சொன்னது மூணு வருஷத்துக்கு முன்னாடி கிடையாதே...!''

''மூணு வருஷத்துக்கு முன்னாடியே சொல்ல நெனைச்சதுதான் என்னோட காதல்... ஆனா சந்தர்ப்ப வசத்தால் நந்தாகிட்டே சொல்லமுடியாமே போயிருச்சி... அவ்வளவுதான்...''

''இருக்கலாம்... ஆனா இன்னிக்கி மச்சினியா வந்துட்டபின் ஐ லவ் யூனு வந்து சொல்றது அநாகரிகம்.''

"எனக்குத் தோணலை அநாகரிகமா...! தோணியிருந்தா அதை நந்தாகிட்டே நான் சொல்லியிருக்கவே மாட்டேன். அப்படியெல்லாம் அநாகரிகமா நடந்துக்கிற அளவுக்கு நான் ஒண்ணும் தெருப்பொறுக்கி இல்லை அமுதா! ஐ'ம் எஜுகேட்டட்... சும்மாயில்லை...எம்.பி.ஏ. படிச்சிருக்கேன்! ஒரு அருமையான பொறுப்பான வேலைல இருக்கேன்...! எனக்குத் தேவை கிடையாது - எவகிட்டேயும் போய் அநாகரிகமா நடந்துக்கிறதுக்கு...! ஐ லவ் நந்தா...இதைச் சொல்றதுக்கு எனக்கொண்ணும் வெட்கம் கிடையாது. ஸ்டில் ஐ லவ் ஹர்... அதுமட்டுமில்லை. எனக்கும் அவளோட காதல் வேணும்னு தோணுச்சி...ஸோ, கேட்டேன் அவளை...தட்ஸ் ஆல்..."

"அதை நான் இருக்கும் போது அவளை நீங்க கேட்டிருந்தா நல்லவர்... ஆனா, நீங்க நான் இல்லாத நேரம் பார்த்துத்தானே கேட்டிருக்கீங்க... ஏன்? அது தப்புன்னு உங்களுக்கே தெரிஞ்சதாலேதானே?"

"இங்கேதான் நீ தப்பு பண்றேம்மா... தப்புன்னு நெனைச்சிருந்தா... இதை இல்லை, எதையுமே நான் செய்திருக்க மாட்டேன்! அந்த அளவுக்கு சுயமரியாதை உள்ளவன் நான்! - எனக்குத் தெரியும்- நான் யார்னு ... அதே போல காதல் என்கிறது பாவம் இல்லேன்னும் தெரியும் எனக்கு. ஐ நோ- லவ் இஸ் நாட் ஸின்..."

"நீங்க ஆயிரம்தான் சொன்னாலும் மச்சினியை காதலிக்கறதும், அவளோட காதலைக் கேக்கறதும் பாவம்தான்..." -அமுதா பொறுக்க மாட்டாமல் கத்தினாள்.

"உனக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான்... மச்சினியையும் கல்யாணம் பண்ணின பசங்களே— இந்தக் காலத்ல ஆயிரக்கணக்கில் இருக்கானுங்க...! அது தெரியாமே நீ வந்து பேசறே என்கிட்டே...!"



தனக்குத் தெரியாத பொய்யை மிகப்பெரிய உண்மை போல அகங்காரத்துடன் சொன்னான் சந்துரு.

"யாராவது வேறு எந்தக் காரணத்திற்காகவாவது அந்த மாதிரி பண்ணியிருக்கலாம். அதையெல்லாம் சொல்லி உங்க நடத்தையை நியாயப்படுத்தாதீங்க..."

-"இப்ப நீ என்ன சொல்றே?" - தீர்மானமான தொனியில் சந்துரு கேட்டான்.

"வீண் கௌரவமெல்லாம் பார்க்காமே நந்தாகிட்டே மன்னிப்புக் கேட்டுடுங்க... நீங்க அவகிட்டே நடந்து கொண்டது நிச்சயமா தப்புதான்."

"நோ. மை ஹேண்ட்ஸ் ஆர் க்ளீன்! ஸோ -நான் போய் யார்கிட்டேயும் மன்னிப்பெல்லாம் கேட்க வேண்டியதில்லை."

"ஸாரி, இவ்வளவு ஈகோவோட பேசி நம்ம ரெண்டு பேரோட வாழ்க்கையை அநியாயமா நாசம் பண்ணிடாதீங்க..."

"இப்ப ஈகோவோட பேசறது நீதானே தவிர நான் கிடையாது. அதுவும் இல்லாமே ஆண் என்கிறவன் கொஞ்சம் அப்படி இப்படித்தான் இருப்பான். பொம்பளைங்கதான் அனுசரிச்சுப் போகணும்...! மச்சினியை கல்யாணம் பண்ணினவன் இருக்கானோ இல்லையோ. பெண்டாட்டி இருக்கறப்பவே இன்னொருத்தியை கல்யாணம் செய்துக்கிட்டு வாழறவன் எத்தனை பேர் இருக்கான்... சொல்; அந்த மாதிரி எவளையாவது இழுத்துக்கிட்டு வந்து அவளையும் ஏத்துக்கணும்னு நான் உன்னை நிர்ப்பந்தமா பண்ணினேன் .?! வாழ்க்கையில் முதல் முதலா காதல்வயப்பட்ட பெண்கிட்டே திடீர்னு இப்பத்தான் என் மனசைத் திறந்து காட்டறதுக்கு

சந்தர்ப்பம் கிடைச்சது. அவ்வளவுதான்... அதுக்குமேலே நந்தாவோட விரல் நுனியைக்கூட தொடணும்னு நான் நெனைச்சது கிடையாது. ஆனா ஒண்ணு, கொஞ்சம் கசப்பான உண்மைதான். இருந்தாலும் இவ்வளவு தூரம் நீ பேசினதுக்காக சொல்லிடறேன்—என்னோட ஃபர்ஸ்ட் லவ்-அதாவது, என்னோட ஃபர்ஸ்ட் வுமன்-நந்தாதான்! நீ என்னோட செகண்ட் வுமன்தான்...! ஆனா அதுக்காக உன்மேல் எனக்கு அன்பு கம்மின்னோ, உன்னை நான் விரும்பலைன்னோ அர்த்தம் கிடையாது. ஐ லவ் யூ டூ... ஆனா, அதுக்காக எனக்கு எல்லாமே நீதான்னு பொய் சொல்ல விரும்பலை நான்... அதைப் புரிஞ்சுக்க நீ...''

பளீரென ஓர் முக்கிய ஆதாரம் அமுதாவினுள் அறுந்து கொண்டாற் போலிருந்தது. சந்துருவையே வெறித்துப் பார்த்தாள். கணவன் என்ற வடிவத்தை இழந்து, வெறும் கல்வித் திமிர் கொண்ட ஆடவனாக மட்டுமே அவளின் எதிரில் அவன் நின்று கொண்டிருந்தான். ஆதர்ச மனைவியாக அங்கீகரித்து அரவணைக்க வேண்டியவன் ஓர் அபலை ஸ்திரீயாக அவளை அகங்காரத்துடன் இரண்டாம் பட்சத்தில் இறக்கி வைக்கிறான். இது ஆடவனுக்கே உள்ள சுபாவமா? - அமுதாவின் சுயமரியாதை உள்ளுக்குள் ரத்தக்காயம் அடைந்திருந்தது. வெடித்துத் தெறிக்க அவளுள் ஓர் வெடிச்சரம் தீப்பற்றிக் கொண்டாற் போலிருந்தது. இருந்தாலும்— வெடித்துவிட அவள் அவசரப்பட்டுவிடவில்லை... சந்துருவின் சுயரூபத்தை தன் முன்னிலையில் சாட்சியுடன் உரித்துக் காட்டாமல் விடுவதில்லை என்ற கெட்டியான தன்மையுடன் அவனைப் பார்த்துக் கேட்டாள்:

''நீங்க எங்க நந்தாகிட்டே தப்பா நடத்துக்கலைன்னுதானே சொன்னீங்க?''



''இன்னும் எத்தனை தடவை சொல்லணும் அதை?''- சந்துரு ஆயாசத்துடன் கேட்டான்.

''இல்லை - சத்தியமா இல்லை. தப்பா நடந்திட்டோமே என்கிற பயத்திலேதான், குற்ற உணர்ச்சியாலேதான் - இனிமே எங்க வீட்டில் வந்து இருக்கப் போறதில்லை, உங்களோட வீட்டுக்கே போயிடப் போறேன்னு திடீர்னு நீங்க அறிவிச்சது...என் தங்கையை இனிமே ஃபேஸ் பண்ண முடியாதே என்கிற வெட்கத்திலேதான் அப்படி நீங்க சொன்னீங்களே தவிர, உண்மையா உங்க வீட்டுக்குப் போயிடணும் என்கிற ஆசையெல்லாம் கிடையாது உங்களுக்கு...! சும்மா மனசாட்சி அது இதுன்னு என்கிட்டே நீங்க கததான் விட்டீங்க...! - நான் சொல்றேன் - மனசாட்சியே கிடையாது உங்களுக்கு...!''

சந்துருவின் சுயமரியாதையும் ரத்தக் காயப்பட்டு விண் விண்ணென்று தெறித்தது. இன்றைக்கு அறிவுச் சாமர்த்தியத்தில் பெண்களும் ஆண்களுக்கு நிகராகத்தான் உயர்ந்து விட்டார்கள்! சுயமரியாதை வேகத்தில் அவர்களும் தோள்தட்டிப் போர் புரியத்தான் துணிந்து நிற்கிறார்கள்...! - சந்துரு அமுதாவிடம் இந்தப் போர் முகத்தை எதிர்பார்க்கவே இல்லை. எனவே சற்று உள்ளூரத் தயங்கினான். தயக்கம் தோல்வியை நோக்கிச் சரிய வைத்துவிடக் கூடாதுயெனும் கல்விப் பார்வையோடு கணக்கிட்டான். ஆயிரம்தான் இருந்தாலும் நான் ஆண்தான்! இவள் பெண்தான் என்ற தேவையற்ற சிலிர்ப்பை உள்ளுக்குள் சலசலக்க வைத்தான். அந்த சலசலப்பை காட்டிக்கொள்ளாமல் மிக மிகப் பொய்யான அமைதியுடன் கேட்டான்...

''ஆமாம், நீ சொன்னது மாதிரி எனக்கு மனசாட்சியே கிடையாதுதான்... அதுக்கு நீ என்ன பண்ணப் போறே இப்ப...?''

7535
2796011

"மறுபடியும் உங்களை அதே கேள்விகளைக் கேட்கிறேன். அதுக்கு மட்டும் மனசாட்சியோடு பதில் சொல்லிடுங்க - போதும்..." — சில தீர்மானங்களை நெருங்குகிற கட்டுக்கோப்புடன் அமுதா சொன்னாள்.

"தாராளமா சொல்றேன் - கேள்." -சந்துருவும் எதற்கும் துணிந்த குரலில் கூறினான்.

"நந்தாகிட்டே நீங்க நடந்துக்கிட்டது - அநாகரிக மானதுதானே?"

"உன்னுடைய பார்வையில்- அது அநாகரிகம்தான்."

"அவகிட்டே தப்பா நடந்துட்டோமேன்னு பயந்து தானே உங்க வீட்டுக்குப் போயிடலாம்னு திடீர்னு பேச்சை மாத்தினீங்க?"

"ஸாரி, இதுவும் உன்னோட்ட பார்வைதான், உண்மை அது கிடையாது."

"நந்தாதான் - நீங்க சொன்ன மாதிரி யுவர் ஃபர்ஸ்ட் வுமன்?"

"யெஸ். ஆனா இது ஒரு ஆக்ஸிடெண்ட்... நாட் மை ஆம்பிஸன்!"

"இப்பவும் உங்களுக்குள்ளே - இந்த எண்ணம் இருக்கத்தான் செய்யுது?"

"உண்மைகள் என்னிக்கும் அழிஞ்சு போற தில்லை...!"

"அப்போ-இன்னமும் நான் உங்களோட செகண்ட் வுமன்தான்...?"

"நான் உன்னை அப்படிச் சொன்னது - உன்னை அவமானப்படுத்துற எண்ணத்தில கிடையாது."

"ஸாரி-இரண்டாவது பெண்மணின்னு சொன்னதே எனக்கு அவமானம்...!"



உள்ளுக்குள் பற்றி எரிகிற வெடிச்சரம் வெடித்துச் சிதறப் போகிற பாவம் அமுதாவின் கண்களில் தீப்பொறி யாக மின்னியது.

"நீ அதை அவமானமா எடுத்துக்கிட்டா அதுக்கு நான் ஒண்ணும் பண்ணமுடியாது..."

"இதுதான் உங்களோட முடிவான தீர்மானம்?"

"யெஸ்."

"இனிமே நீங்க எங்க வீட்டுக்கு வந்து வாழப் போறதில்லை, உங்க வீட்டுக்குத்தான் போயிடப் போறீங்க?"

"யெஸ்."

"என் தங்கை 'நந்தாகிட்டேயும் நீங்க மன்னிப்புக் கேட்கறதா இல்லை?"

"யெஸ். கேட்கறதா இல்லை..."

"அப்போ உங்ககூட உங்க வீட்ல வந்து வாழறதா எனக்கும் அபிப்பிராயம் இல்லை..."

ஒற்றைப் பெருவெடியாக அமுதாவின் குரல் உரக்க ஒலித்தது.

அப்போது அறைக் கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது. அமுதா மெதுவாக நடந்து போய் கதவைத் திறந்தாள். அவர்கள் வீட்டுக் கார் டிரைவர் நின்று கொண்டிருந்தார்.

'என்ன டிரைவர்?" -அமுதா கேட்டாள்.

"சந்துரு ஐயாவுக்கு ஒரு லெட்டர் வந்திருக்கு. அய்யா குடுத்துட்டு வரச் சொன்னாங்க," என்று சொல்லி டிரைவர் காகித உறையை நீட்டினார். சந்துரு வேகமாக வந்து உறையைப் பெற்று அவசரமாகப் பிரித்தான்.

அவனின் அலுவலகத்தில் இருந்து வந்திருந்த அந்தக் கடிதத்தில் உடனடியாக அவன் பணியில் இருந்து வேலை நீக்கம் செய்யப்படுவதாக குறிப்பிட்டிருந்தது...

## 27

யாரும் எதிர்பாராமல், மந்தைவெளியில் இருக்கும் தங்களுடைய வீட்டிற்கு தன்னுடைய உடைமைகளுடன் சந்துரு ஒருநாள் காலை திரும்பி வந்துவிட்டான். யாருடைய கேள்விகளுக்கும் அவன் சரியான பதில் சொல்லவில்லை.

''திருப்பித் திருப்பி என்னை எதுவும் கேக்கா-தீங்கம்மா... மாமியார் வீட்டோட போய் இருக்கற தெல்லாம் எனக்கு சரிப்பட்டு வரலை...''

''ஒனக்கு சம்மதப்பட்டுதானே கல்யாணம் செய்துக் கிட்டே?'' -மூத்த சகோதரன் என்ற மரபிற்காக தேவேந்திரன் குறுக்கிட்டுக் கேட்டான்.

''அப்ப சம்மதிச்சேன். இப்ப அந்த லைஃப் வேணாம்னு தோணுது.''

''இது ரொம்ப பொறுப்பில்லாத பேச்சு சந்துரு...''

''ஒனக்கு அவங்க வீட்ல போய் இருக்கறது சரிப் படலைன்னா, அமுதாவை இங்கே கூட்டிட்டு வந்திடு...'' —சந்துருவின் அம்மா சொன்னாள்.

''அவளுக்கு இங்கே வந்து இருக்கிறது சரிப் படாதாம்...''



''அந்தப் பொண்ணு எப்படிம்மா இங்கே வரும்... அவங்களோட முதல் கண்டிஷனே இவன் அங்கே போய் இருக்கணும் என்கிறதுதானே...?'' - தேவேந்திரன்.

''யாராவது ஒருத்தர் விட்டுக் கொடுக்கத்தான் செய்யணும்... ரெண்டு பேருமே வீம்பு பிடிச்சா?''

''இந்த நேரத்ல போய் அப்பா ஆக்டிவ்வா இருக்க முடியாமே பெட்ல இருக்கார் பார் - அதான் உன் அதிர்ஷ்டம்...''

''நான் போய் அமுதாகிட்டே பேசிப் பாக்கட்டுமா?'' -தேவேந்திரன் மனைவி செல்வராணியும் தன்னுடைய பங்கிற்கு குறுக்கிட்டாள்.

''வேண்டாம் அண்ணி... அப்படியெல்லாம் போய் சமரசம் பேசித்தான் 'வாழணும் என்கிற தேவை எனக்குக் கிடையாது...''

'இல்லேப்பா சந்துரு. ஒண்ணுமே இல்லாத விஷயத் துக்கு மனஸ்தாபப்பட்டுகிட்டு ஒருத்தரை ஒருத்தர் பிரிஞ்சு வாழ்றது சின்னபுள்ளைத் தனமானது... அதுவும் கல்யாணமாகி ரெண்டே மாசத்ல...''

''ஸாரிம்மா...என்னால ஒரேயடியால்லாம் வளைஞ்சு குடுக்க முடியாது... அதனால தயவுசெஞ்சு யாரும் என்னை வற்புறுத்தாதீங்க...''

''உன்னை வற்புறுத்தலை... அமுதாவைப் போய் பாத்துப் பேசிட்டு வறோம்னு சொல்றோம்...''

''இல்லை... இந்த விஷயத்ல யாரும் தலையிட வேண்டாம்னு நெனைக்கிறேன்...'' என்றான் சந்துரு.

''நாங்கள்ளாம் தலையிட்டுத்தான் உன்னோட இந்தக் கல்யாணமே நடந்தது. அதை ஞாபகம் வச்சிக்க சந்துரு....'' தேவேந்திரன் எரிச்சலுடன் சொன்னான்.

சில கணங்கள் மௌனமாக இருந்தபின் சந்துரு சொன்னான்: ''சரி, போய் அவகிட்டே பேசிப்பாருங்க... அவளையும் இங்கே வந்திடச் சொல்லுங்க...நான் மட்டும் இனிமே எந்தக் காரணத்தைக் கொண்டும் அவங்க வீட்ல போய் வாழ்றதா இல்லை...''

சொல்லிவிட்டு சந்துரு வேகமாக தன்னுடைய அறைக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொண்டான்.

பெண் விஷயத்தில் ஆடவனின் மனம் விநோதமானது. எந்தப் பெண்ணிடத்தில் எப்பேற்பட்ட எண்ணங்கள் அவனுள் எழுந்தாலும் அவனின் எண்ணங்கள் யாவும் எந்த மறுப்புக்கும் இடம் இல்லாமல் அங்கீகரிக்கப்பட்டுவிட வேண்டும்... இல்லாத பட்சத்தில் அவனுக்குக் கோபம் வந்துவிடும்! குரோதம் தோன்றி விடும்! அதிலும் அந்த ஆடவன் சற்று அதிகமான கல்வித் தகுதி பெற்றவனாக வேறு இருந்துவிட்டால் கோபத்தின் நீர்மட்டமும் அதிகரித்துக் கொள்கிறது! சந்துருவும் எம்.பி.ஏ. மாப்பிள்ளை ஆயிற்றே...! கோபமும் மிக அதிகமாக வந்துவிட்டது. அந்தக் கோபத்தை இன்னும் அதிகமாக்கியது வேலையில் இருந்து நீக்கப்பட்டது.

''சரி, ஏன் வேலை போச்சு?'' – அவனின் அம்மா மறுநாள் கேட்டாள்.

"என்னைக் கேட்டா...?'' -சுள்ளென்று எரிந்து விழுந்தான்.

''வேற யாரைப் போய் கேட்கச் சொல்றே?"

''அந்த கம்பெனிகாரனைப் போய் கேளுங்க...''

''நான்தான் போய் கேக்கறேன்..''

"வேற எங்கேயும் அப்ளிகேஷன் போட்டிருக்கியா?" -தேவேந்திரன் கேட்டான்.

''கொஞ்ச நாள் நான் எந்த வேலைக்கும் போறதாயில்லை..."



"செலவுக்கெல்லாம் பணத்துக்கு அப்புறம் என்ன பண்ணுவே?''

'வீட்டுச் செலவுக்கு எப்படிப் பணம் தருவேன்னு தானே கேக்கறே?"—சந்துரு இப்படி திருப்பிக்கேட்டதும் தேவேந்திரனும் விட்டுக் கொடுக்காமல் பதில் சொன்னான்:

"அப்பாவுக்குமட்டும் டாக்டர் மருந்துன்னு எவ்வளவு செலவாகுது தெரியுமா?''

''யாரும் பயப்பட வேண்டாம். எப்பவும் வீட்டுக்கு நான் தர்ர ரெண்டாயிரம் ருபாயை கரெக்ட்டா தந்திருவேன்.''

தேவேந்திரனுக்கு அப்பாடா என்றிருந்தது. சந்துருவிற்கு ஆவேசமாக இருந்தது. செலவுக்குப் பணம் தரா விட்டால் வீட்டில்கூட உறவு பேதங்கள் வந்துவிடும் போலிருக்கிறது. யோசித்து யோசித்துப் பார்த்தபோது அவனுக்கும்கூட தான் ஏன் உண்மையில் வேலை நீக்கம் செய்யப்பட்டோம் என்பதை அறிந்துகொள்ளவே முடியவில்லை. அடிப்படையில் அது ஒரு பழிவாங்கல் தான் என நினைத்தான். அவனுக்கும் யாரையாவது பழி வாங்க வேண்டும் போலிருந்தது! உடனே அவனின் நினைவில் அமுதாவும் நந்தாவும்தான் தோன்றினார்கள். பெரிய்ய நந்தா! பெரிய்ய அமுதா! பணத்திமிர் பிடித்த பெண்கள்! இவர்களுடைய வீட்டிற்குப் போய் மதிகெட்டு வீட்டு மாப்பிள்ளையாகப் போய் சேர்ந்தேனே...! என்னைச் சொல்ல வேண்டும்...! உண்மையில் என் புத்தியை அடிக்க வேண்டும் துடைப்பத்தால்...!

-சந்துரு மானசீகமாக தன்னைத் தானே துடைப்பத்தால் உதைத்துக் கொண்டான். அவனுக்கு தாங்க முடியாத அவமானமாக இருந்தது. நந்தா என்ற பெண்மீது காதல் வயப்பட்டதில் நேர்ந்துவிட்ட தலைக்

குனிவை வெட்கத்துடன் நினைத்து நினைத்துப் பார்த்தான். ஆவேசம் மூண்டது மனத்தில்.

'சனியன்! எத்தனையோ வருஷத்துக்கு முன்பே பார்க்க முடியாமல் போனவள் அப்படியே பார்க்க முடியாதவளாகவே போயிருக்கக் கூடாதா? திடீரென்று ஏன் இப்படி மைத்துனியாக வந்து மானத்தைக் காற்றில் பறக்க வைக்க வேண்டும்?! சரி, வந்ததுதான் வந்தாள், பேசாமல் வாயை மூடிக்கொண்டு இருந்திருக்க வேண்டியது தானே... என்னத்திற்காக உளறிக் கொட்டி அமுதாவிடம் என்னை இப்படிக் காட்டிக்கொடுக்கணும்?! நான் போய் அவளிடம் மன்னிப்புக் கேட்கணுமாம். ஏன், அவள் என்னை மன்னித்து மௌனமாக இருந்திருக்கலாமே? நானும் பேசாமல் • இருந்திருப்பேன்... யாருக்கும் எதுவும் தெரியாமலேயே போயிருக்கும். சிற்சில விஷயங்களை சிற்சில சமயங்களில் யாரிடமும் சொல்லிவிடாமல் இருப்பதுதான் விவேகம்! - அந்த விவேகம் இல்லையே நந்தாவிற்கு...! தண்டோரா போட்டு வெளியிட்டு விட்டாள் விஷயத்தை... கேட்கணுமா? அந்த நந்தாவிற்கு மேல் அவளுடைய அக்காகாரி! உடனே வந்துவிட்டாள் தங்கைக்காரிக்கு பரிந்துகொண்டு... மன்னிப்புக் கேட்க வேண்டுமாம்... பெரிய இந்திய தேச ஜனாதிபதி இவள்... இவள் சொன்னதும் உடனே நான் மன்னிப்புக் கேட்டுவிட வேண்டும்... அத்தனை ராங்கி. இவள்களுக்கு இருக்கிற ராங்கி எனக்கு மட்டும் இருக்காதாயென்ன...? நான் மன்னிப்புக் கேட்க முடியாது...'

-பலவாறாக எண்ணி எண்ணி சந்துரு மனம் புழுங்கிப் போய்க் கிடந்தான். திரும்பத் திரும்ப அமுதாவையும் நந்தாவையும் நினைத்து நினைத்து உழன்றான்.

இரவு நேரங்களில் பாலுறவுத் தேவை வேறு அவனுள் புரண்டு புரண்டு சுழியிட்டது. சில வாரங்கள் தொடர்ச்சி



யாக அமுதாவிடம் பகிர்ந்து கொண்ட படுக்கை அறைக் கேளிக்கைகள் ஞாபகத்தில் வந்து அவனைத் துன்புறுத்தின. அமுதாவின் இளமை பொதிந்த உடல் தோற்றங்கள் அலைக்கழித்தன. நெற்றியில் புறங்கையை ஊன்றியபடி ஏக்கத்துடன் படுக்கையில் குப்புறப் படுத்துக்கொண்டான். இச்சையுடன் அமுதாவின்மேல் கவிந்துகொள்ள அவனுடைய உடம்பின் ஒவ்வோர் அணுவும் விம்மிப் பொங்கின. தாபத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் சந்துரு படுக்கையில் புரண்டபடி இருந்தான். - நீண்ட பல இரவுகளுக்குப் பிறகு தான் இழப்பின் கனம் அவனுக்குப் புரியத் தொடங்கியது. நந்தாவை அடைய முடியாத ஏமாற்றம்கூட இப்போது அவனுக்குப் பெரியதாகத் தோன்றவில்லை. அமுதாவை இழந்துவிட்ட இழப்புதான் கொடிதாகத் தெரிந்தது. வாழ்க்கையில் மைத்துனி இல்லாமல் இருந்துவிடலாம். மனைவி இன்றி இருந்துவிட முடியுமா?

திரும்ப திரும்ப இந்தக் கேள்வியையே மனத்துள் கேட்டுக் கொண்டிருந்தான் சந்துரு. அவசரப்பட்டு அமுதாவுடன் முரண்பட்டுக் கொண்டது பிழையாகத் தெரிந்தது. நந்தாவிடம் காதலைத் தெரிவித்ததுகூட தப்பில்லை, அதற்காக அவளிடம் மன்னிப்புக் கேட்க அமுதா சொன்னதை மறுத்துவிட்டதுதான் தவறு என்பதும் புரிந்தது. மறுபேச்சுப் பேசாமல் மன்னிப்புக் கேட்டிருக்கலாம். விஷயம் வேறு யாருக்கும் தெரியாமலேயே போயிருக்கலாம். மன்னிப்புக் கேட்பதில் அவமானம் ஏதும் கிடையாது. இப்போதைய நிலைதான் அவமானத்திற்கு உரியது. விசனத்திற்கு உரியது. மன்னிப்பை ஆத்மபூர்வமாகக்கூடக் கேட்டிருக்க வேண்டியதில்லை. வெறும் உதட்டளவில் கேட்டுவிட்டு சும்மா இருந்திருக்கலாம். உதட்டளவில் மன்னிப்புக்

கேட்டுவிட்டு நெஞ்சுக்குள் காதலை மறைத்து வைத்திருந்தால் யாருக்குத் தெரியும்? என் நெஞ்சைக் கிழித்தா உண்மையைப் பார்த்துவிடப் போகிறார்கள்?! உள்ளே ஒன்றும் வெளியில் ஒன்றுமாக சகல சுகங்களோடும் இந்திரா நகரில் ஆனந்தமாக வாழ்ந்துக் கொண்டிருக்கலாமே— மனைவியோடும் மச்சினியோடும்...! எந்தக் கோட்டையை பிடிப்பதற்கு இப்படி வறட்டுஜம்பத்துடன் தனியாக உட்கார்ந்து கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருக்க வேண்டும்...

சந்துரு யோசித்து யோசித்துப் பார்த்தான். அமுதாவின் மூலம் கிடைக்கக்கூடிய அத்தனை சுகபோகங்களுக்காகவும் நந்தாவிடம் மன்னிப்புக் கேட்டுவிட அவனின் அகங்காரம் கொஞ்சம் கொஞ்சமாக இளகிக் கொண்டிருந்தது. அதே நேரத்தில் தன்னுடைய காதலை வலிமையுடன் மறுத்து விட்ட நந்தாவை மட்டும் பழி வாங்குகிற வன்மமும் அறிவில் முள்ளாக முளைத்துக் கொண்டிருந்தது. அமுதா அறிய உதட்டளவில் மன்னிப்புக் கேட்டுவிடுவது. நந்தாகூட அறியமுடியாமல் ஏதாவது ஒரு வழியில் அவளைப் பழி வாங்கக் காத்திருப்பது. வெளியே பரிவுச் சொற்கள். உள்ளே பகைமை எண்ணங்கள்...

-இதுதான் வெற்றிகரமான வாழ்வு இயல் என்ற அறிவுக் கர்வத்தோடு சந்துரு எழுந்து உட்கார்ந்தான். நந்தாவிடம் எப்போது எப்படி மன்னிப்புக் கேட்பதென்று நினைத்துப் பார்த்தான். சட்டென்று வழி புலப்படவில்லை. சில தினங்களில் தீர்மானிக்கலாம் என்ற பெருமூச்சுடன் கண்களை மூடிப் படுத்துக் கொண்டவனின் உடல் உணர்வுகள் விரைவில் அமுதாவுடன் கொள்ள இருக்கிற பாலுறவிற்காக அப்போதே மானசீகமாக முனைந்து நின்றன...

# 28

சென்னை நகரத்து ஜூலை மாத வானம் மாலை ஆறு மணி ஆகியும் வெம்மையாகவே வெளிறிக் கிடந்தது. உஷ்ணம் தாங்காமல் கடற்கரையில் ஜனசமூத்திரம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. இரண்டு குழந்தைகளும் சற்று தூரத்தில் விளையாடிக் கொண்டிருக்க, புல்வெளியில் மனைவியுடன் அமர்ந்திருந்தான்தேவேந்திரன்

அப்போது அவனுடைய அலுவலக நண்பன் பசுபதி வந்தான்.

''வாய்யா பசுபதி, என்ன நீயும் பீச் பக்கம் வந்திட்டே?''

''வீட்ல ரொம்ப போரடிச்சது. அதான் கிளம்பி வந்திட்டேன்.''

''உட்கார் உட்கார்'' என்றான் தேவேந்திரன்.

''நீங்க ஃபாமிலியோட வந்திருக்கீங்க...'' பசுபதி இழுத்தான்.

''அட உட்கார்யா!''

பசுபதி சற்றுத் தள்ளினாற் போல உட்கார்ந்து கொண்டான்.

''வீட்ல அப்பால்லாம் எப்படி இருக்கார் தேவேந்திரன் ஸார்?''

''அவர் பாட்டுக்கு இருக்கார். நிற்க வைத்தா நின்னுப்பார். படுக்க வைத்தா படுத்துப்பார். ஒரு பேச்சு கிடையாது. முன்னேல்லாம் எங்க வீட்ல குழந்தைகளோட சப்தமோ ஆட்டமோ ஒருதுளிக்கூட கேட்காது.

ஊசி விழுந்தாக்கூட கடப்பாரை விழற மாதிரி சப்தம் கேக்குதேன்னு எரிஞ்சு விழுவார். இப்ப எந்த ரியாக்ஷனும் கிடையாது. கிரிக்கெட் டெஸ்ட் மேட்ச்ல பௌலிங் பண்ற பசங்க-விக்கெட் அவுட் விக்கெட் அவுட்னு தூள் கிளப்பற மாதிரி கூச்சல் போட்டாலும் இம்மிகூட அலட்டிக்காமே பரப்பிரம்மமா அம்பையர் நிப்பாரே-பாத்திருக்கியா...?! அப்படியொரு பரப்பிரம்மமா இருக்கார் எங்கப்பா...! யாருக்குமே இப்ப அவரால் எந்தத் தொந்தரவும் கிடையாது. வீடே நிம்மதியா இருக்கு..."

"உங்க தம்பி சந்துரு எப்படி இருக்கார்? அவர்கூட மனைவிகூட ஏதோ சண்டை போட்டுட்டு மாமியார் வீட்ல இருந்து கோவிச்சுக்கிட்டு வந்துட்டார் எனகிற மாதிரி அன்னிக்கி ஒருநாள் சொன்னீங்களே...?"

"அதுதான் பெரிய மர்மமா இருக்கு பசுபதி. என்ன நடந்ததுன்னு டீடெய்லா தெரியலை. ஆனா- என்னமோ நடந்திருக்கு...! சந்துரு பயல் அவனோட மச்சினிகிட்டே ஏதோ தப்பா நடந்துக்கிட்டான்னு கேள்வி...! ஆனா அது எவ்வளவு தூரத்துக்கு உண்மைன்னுதான் தெரியலை..."

"உங்க தம்பி அப்படியெல்லாம் நடந்துக்கிற மனுஷர் இல்லையே தேவேந்திரன் ஸார்... படித்த நல்ல ஜென்டில்மேன் ஆச்சே அவர்...!"

"நீ ஒண்ணு... இந்தஒரு விஷயத்ல மட்டும் யாரையும் நம்ப முடியாது பசுபதி. சான்ஸ் கிடைச்சா எவனும் ஒரு கை பாக்கிறதுக்குத் தயாராத்தான் இருக்கான்...! அதுவும் வீட்டோட மாப்பிள்ளையா போய், நல்லா வேளை வேளைக்கு விதவிதமா சாப்பிட்டுக்கிட்டு, பக்கத்திலேயே லட்சணமா ஒரு மச்சினிக்காரி தாவித்தாவி குதிச்சுக்கிட்டிருந்தா எவன்தான் சும்மாயிருப்பான்...! அது அது இருக்க வேண்டிய இடத்ல இருக்கணும் பசுபதி.



பஞ்சையும் நெருப்பையும் பக்கத்ல பக்கத்ல வைச்சா— நெருப்பு பஞ்சைப் பார்த்துக்கிட்டு சும்மா இருக்குமாக்கும்?!"

"என்னங்க என்னங்க, அங்கே பாருங்களேன் உங்க தம்பி சந்துரு வரார்"-என்றாள் தேவேந்திரனின் மனைவி.

சந்துரு தூரத்திலேயே புல்லில் உட்கார்ந்து கொண்டான், தேவேந்திரனைக் கவனிக்காமல் தூரத்துக் கடலையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"பாத்தியா பசுபதி, பயல் எப்படி தேவதாஸ் மாதிரி தாடியெல்லாம் வச்சிருக்கார் பார்...!"

"பாவம் ஸார், பார்த்தாலே பரிதாபமா இருக்கார். நல்லா இளைச்சு வேற பேர்யிருக்கார்."

'எல்லாம் நேரம் பசுபதி. நேரம்! திடீர்னு அவனை வேலையை விட்டு வேற டிஸ்மிஸ் பண்ணிட்டாறுங்க. அதுக்கும் காரணம் தெரியலை. வேற வேலைக்காவது போறானான்னு பார்த்தா-அதுவும் போகப் போற மாதிரி தெரியலை. ஸ்கூட்டரையும் பணத்தேவைக்காக வித்துட்டான். இவனுக்கு சுஜாதான்னு ஒரு கிராப் தலைக்காரி ப்ரண்டா இருந்தா. அவளுக்குப் போன மாசம் கல்யாணம். அந்தக் கல்யாணத்துக்கும் இவன் போகலை. சுத்தமா என்னமோ ஆயிட்டான் போயேன்...!"

"நீங்க சொன்ன மாதிரி எல்லாம் நேரம்தான் ஸார்!',

அப்போதுதான் தேவேந்திரன் மனைவி கவனித்தாள், தூரத்தில் ஒரு மரத்தின்கீழ் அமுதாவும் நந்தாவும் உட்கார்ந்திருந்தார்கள்.

'அய்யோ...! அங்கே பாருங்களேன், அங்கே பாருங்களேன்... யார் யார் உட்கார்ந்திருக்காங்கன்னு..." என்றாள் பரபரப்புடன்.

"எங்கே, எங்கே?"

"அதோ- அந்தப் பூவரசம் மரத்துக்குக் கீழே..."

தேவேந்திரன் அந்த மரத்தின் கீழ் பார்த்தான். அவனுடைய கண்கள் ஆச்சர்யத்தால் விரிந்தன.

"அடடே...! நம்ம சந்துரு பயலோட கதாநாயகியும் வில்லியும்...!"

"சந்துரு அவங்களை பார்க்கலை போலத் தெரியுது!"

"அதுங்களும் அவனைப் பார்க்கலை..."

"விதி எப்படி விளையாடுது பாருங்க தேவேந்திரன்!"

விதி விளையாடித்தான் விட்டது! சுற்றிலும் பராக்குப் பார்த்துக் கொண்டிருந்த நந்தா எதிர்பாராமல் தூரத்தில் புல்வெளியில் உட்கார்ந்திருந்த சந்துருவை கவனித்து விட்டாள். ஒரு நிமிஷம் சந்துருதானாயென்று நிச்சயித்து விட்டு மெல்லிய குரலில் அமுதாவை அழைத்துக் காட்டினாள். சகோதரிகள் இருவருமே வருத்தத்துடன் சந்துருவைப் பார்த்தார்கள். சிறிதும் எதிர்பாராமல் சந்துருவும் அவர்களைப் பார்த்துவிட்டான்.

வார்த்தைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட தருணம் இது. விவரிப்புக்கெல்லாம் உட்படாத மனோசித்திரம் இது. சந்துரு ஆற்றாமையுடன் அவர்களையே பார்த்த படி அமர்ந்திருந்தான். தாடி வளர்ந்து தளர்ந்து போயிருந்த அவனின் தோற்றம் சகோதரிகளை மிகவும் ஆழமாகத் தாக்கிவிட்டது. துக்கத்தைத் தாங்க முடியாமல் நந்தா சட்டென முகத்தை முழங்கால்களில் புதைத்துக் கொண்டாள். அந்தக் காட்சி சந்துருவின் மனத்தில் கூரிய அம்பாக தைத்தது. அவனின் மனம் பொருமியது. தீயவனாய் வாழ்ந்து விடுகிற சில நிமிடங் கள்கூட எத்தகைய இம்சையை வாழ்வில் விரித்து விடுகின்றன... நல்லவனாக மட்டுமே வாழ்ந்திருந்த



நாட்களின் மென்மையான சுகம்தான் எத்தகையது... சந்துருவின் மனம் சற்றே வெட்கப்பட்டது. குற்றத் தன்மையுடன் ஒடுங்கியது. அமுதாவைக் காணக் காண காதல் பொங்கியது. அமுதாவின் விலகாத பார்வையிலும் அவளின் மனசு தெரிந்தது. சந்துரு மெதுவாக எழுந்து நின்றான்.

"என்னய்யா பசுபதி, என் தம்பி திடீர்னு அதுகளைப் பார்த்து எழுந்து நிக்கறான்...?" - தேவேந்திரன் கிண்டலாகக் கேட்டான்.

சந்துரு மெதுவாக சகோதரிகளை நோக்கி பயந்தும் தயங்கியும் நடந்தான். ரகசியமாக அமுதா நந்தாவை நெருடியிருப்பாள் போலும். நந்தாவும் முகத்தை நிமிர்த்துப் பார்த்தாள். சந்துரு அருகில் வரவர சகோதரி களாலும் உட்கார்ந்திருக்க முடியவில்லை. அவர்களும் எழுந்து நின்றுவிட்டார்கள். ஒரு மிகக் கொடிய நிமிடம். மூவரும் என்னவென்றே உணர முடியாத மனோநிலையில் நின்றார்கள்

"வணக்கம் அத்தான்" - நந்தாதான் முதலில் வாய் திறந்து சொன்னாள்.

"எப்படியிருக்கேம்மா நந்தா?"- சந்துரு மிகவும் உணர்வு வயப்பட்டு குரல் அடைக்கக் கேட்டான்.

"நல்லாயிருக்கேன் அத்தான்."

"பீச்சுக்கு வந்தீங்களா ரெண்டு பேரும்?" - அமுதாவைப் பார்த்தபடி கேட்டான்.

"உட்காருங்க அத்தான்!" - என்றாள் நந்தா.

மூவருமே மெதுவாக அமர்ந்து கொண்டார்கள். யாரும் சிறிது நேரத்திற்குப் பேசவில்லை.

"ப்ளீஸ், ஏதாவது பேசுங்க அத்தான்!" - நந்தா தான் கள்ளங்கபடம் இல்லாமல் சிணுங்கினாள்.

சந்துரு அவளை ஏறிட்டுப் பார்த்தான். கர்ப்ப கிருஹத்துத் தீபாராதனையைக் கண்டாற் போலிருந்தது. நந்தாவின் மனவெண்மை அவளுடைய கண்களில் நிலா வெளிச்சம் போல பரவியிருந்தது. அந்த வெண்மையக்

காணக்காண சந்துருவின் மனம் கூசியது. உதட்டளவில் மட்டும் மன்னிப்புக் கேட்டுவிடலாம் என்ற கயமை எண்ணம் கூனிக் குறுகி, கடுகாக சிறுத்து சிலகணங்களில் அவனின் மனவெளியில் காணாமல் போனது. நந்தாவின் குலையாத மனமேன்மை அவனின் மனக்கறையை கழுவிக் களைந்தது. மழைச்சாரலில் தூசுகள் அகன்றன. சூரியனுக்கு ஒப்பாக மலர்கள் பிரகாசித்தன. மிக உரிமையுடன் ஒரு பூவை எடுத்துக்கொள்வது போல நந்தாவின் கையை மென்மையாக பற்றிக் கொண்டு மெல்லிய குரலில் சந்துரு பேசினான்.

''என்னை மன்னிச்சிடும்மா நந்தா. நினைக்க நினைக்க எனக்கே கேவலமாயிருக்கு. ரொம்ப ரொம்ப ஸாரிம்மா. கொஞ்ச நாள் நான் என் சுய அறிவிலேயே இல்லை. பைத இன்ஃப்ளுயன்ஸ் ஆஃப் ஸம் டெவில் தான்- அந்த மாதிரி மோசமால்லாம் நடந்திட்டேன். நீங்க ரெண்டு பேருமே என்னை மன்னிச்சிடணும்...''

''அப்படியெல்லாம் சொல்லாதீங்க அத்தான்'' என்றாள் நந்தா குரல் தழுதழுக்க.

''இல்லைம்மா! எந்தக் கல்மிஷமும் இல்லாமே என் கிட்டே நீ பழகினதுக்கு கடைசியில் எப்படி நான் உன்கிட்டே நடந்துகிட்டேன்னு பார். அஃப்கோர்ஸ், என்னிக்கோ எனக்கு உன்மேல காதல் வந்தது உண்மைதான். ஒருவிதத்ல அது வெளிப்படுத்த முடியாமலே போனதும்தான். இன் ஏ வே- நானே உன்னை மறந்து போனதும்கூட உண்மைதான். ஆனா, எதிர்பாராமே மறுபடியும் நீ என் லைஃப்ல மைத்துனியா வந்ததும் எப்படி உடனே நிலைமையை கொஞ்சம்கூட சுயமரியாதையே இல்லாமே துஷ்ப்ரயோகம் பண்ற துக்குத் துணிஞ்சிட்டேன் பார். தயவுசெஞ்சு என்னை மன்னிச்சிடும்மா நந்தா...''

''அதையெல்லாம் மறந்திடுங்க...'' அமுதா ஆறுத லுடன் சொன்னாள்.

''எனக்கு உங்களை வந்து பார்க்கணும் போலவே இருந்தது அத்தான். ஆனா, உங்க வீட்டுக்கு நான் வந்தா என்கூட நீங்க பேசுவீங்களோ மாட்டீங் களோன்னு பயந்திட்டு பேசாமே இருந்திட்டேன்'' என்றாள் நந்தா.



சந்துரு உருகிக் கரைந்து போனான். கயமை கரைந்து போய்விடுவதில்தான் எத்தனை நிம்மதி... தந்திரமும் அகந்தையும் ஆவியாகி விடுவதில்தான் என்ன சுகம் ஆனந்தம்... சந்துரு மிகுந்த திருப்தியுடன் பெருமூச்சு விட்டான்.

''இப்பத்தான் நான் பழைய நானாகியிருக்கேன்... எவ்வளவு அபத்தமா வாழ்க்கையை நாசம் பண்றதுக்கு இருந்தேன்...'' என்றான் உண்மையுடன்.

''உங்களுக்கு ஒரு ந்யூஸ் அத்தான். நாளைக்கு ஒருத்தர் என்னைப் பெண் பார்க்கிறதுக்கு வரார்...'' நந்தா கொஞ்சம் வெட்கத்துடன் சொன்னாள்.

''ரொம்ப சந்தோஷம் நந்தா...'' சந்துரு மனநிறை வுடன் சொன்னான்.

''பெண் பார்க்க வர்ரது-' ஒரு ஃபார்மாலிட்டிக்காகத் தான்... பெண் பார்க்க வரப்போகிறவரை நந்தாவுக்குத் தெரியும். நந்தாவையும் அவருக்குத் தெரியும்.'' என்றாள் அமுதா.

''அப்ப லவ் மேரேஜ் மாதிரியா?''

''அய்யய்யோ... அப்படியெல்லாம் கிடையாது. அவர் எங்களுக்கு தூரத்து உறவு. அதனால் தெரியும்.''

''உனக்கு என்னோட அட்வான்ஸ் வாழ்த்துகள் நந்தா!''.

''தாங்ஸ் அத்தான். நாமெல்லாம் மறுபடியும் இவ்வளவு சீக்கிரமாவே ஒண்ணு சேர்ந்ததுக்கு கடவுளுக் குத்தான் நாம் நன்றி சொல்லணும்.''

''குறிப்பா திருவந்திபுரம் பெருமாளுக்குத்தான் சொல்லணும்!''

''ரெண்டுநாள் முன்னாடிதான் அந்த ஊர் கோயிலுக் குப் போயிருந்தோம் அத்தான், அப்போதான் தேவநாத பெருமாள்கிட்டே எங்க அம்மா வேண்டிக்கிட்டாங்க...''

''ஒரு விஷயம் அமுதா!'' - சந்துரு தயங்கினான்.

''சொல்லுங்க,''

''கொஞ்ச நாளைக்கு நாம் ரெண்டு பேரும் எங்க வீட்லேயும் இருக்கலாம். எங்க அப்பா ஆயிரந்தான் கெட்டவரா இருந்தாலும், இன்னிக்கி கை கால் விளங்காமே, வாயும் பேச முடியாமே இந்த வயசான காலத்தில் அவரும், அவரால் எங்க அம்மாவும் படற கஷ்டத்தைப் பார்க்கப் பார்க்க எனக்கு மனசே தாங்கலை நான் அன்னிக்கி கொடூரமா ரீயாக்ட் பண்ணினதாலே தான் அப்படி ப்ரஷர் அதிகமாகி, பாத்ரூம்ல மயங்கி விழுந்து என்னென்னமோ ஆயிடுச்சி. அதனால நாமும் கொஞ்சநாள் எங்க வீட்ல இருந்தே அவருக்கும் அம்மாவுக்கும் சேவை செய்யலாம்.''

''தாராளமா வரேன். நோ ப்ராப்ளம்'' என்றாள் அமுதா.

''சரி வாங்க முதல்ல எங்க அப்பாவைப் பார்த்து விஷயத்தைச் சொல்லிடலாம்'' என்றாள் நந்தா.

''ஒயெஸ்!''

அமுதாவை முதலில் எழவிட்டு, பின் அவளின் கையைப் பற்றியபடி எழுந்து கொண்டான் சந்திரு. மூவரும் கைகோத்தவாறு காரை நோக்கி நடந்தார்கள்.

தூரத்தில் இருந்து இந்தக் காட்சியைப் பார்த்த தேவேந்திரன் மலைத்துவிட்டான்.

''என்னங்க தேவேந்திரன் திடீர்னு மூணு பேரும் கையைக் கோத்துக்கிட்டு கிளம்பிட்டாங்க...?'' பசுபதியும் ஆச்சர்யமாகிக் கேட்டான்.

''ராணி, ராணி வா! உடனே வீட்டுக்குப் போய் சந்துரு அமுதாவோடேயும் நந்தாவோடேயும் சேர்ந்து கார்ல கிளம்பிப் போறான்னு அம்மாகிட்டே சொல்லிட லாம். பசுபதி நான் வரேன்யா. நாளைக்கு ஆபிஸ்ல பார்ப்போம்'' என அவசரமாகச் சொல்லிவிட்டு தேவேந்திரன் மனைவியோடும் குழந்தைகளோடும் அவனுடைய ஸ்கூட்டர் நிற்கும் இடம் நோக்கி வேகமாக நடந்தான்.

பசுபதி புல்வெளியில் நீட்டி நிமிர்ந்து படுத்தான். கோடைகால மாலைவேளை அதிநீண்ட நிழல்களைப் பரப்பி மெதுவாக விடைபெற்றுக்கொண்டிருந்தது...

• • •

7535
2796011